# பாரத யாத்திரை

(படங்களுடன்)

## வட இந்தியா யாத்திரை

ஆக்கியோர்

ஸ்ரீ. த. க்ரு. பாரத்வாஜர்

அனுவாதி

ஸ்ரீ. பு. கோ. ஸ்ரீனிவாசன், B.Sc.,
அரசாங்க உயர்தரப்பள்ளி,
பெங்களூர்.

பாரத யாத்ரிக
366, எஸ்ப்ளனே

# முன்னுரை

உலகில் எந் நாட்டினருக்கும், எம்மதத்தினருக்கும், ஈசனில்லை என்போருக்குங் கூட புண்ய-யாத்திரைத் தலங்களுண்டு, அவ்விடங்களுக்கு யாத்திரையாகச் செல்வோரு முண்டு. நம் இந்தியாவில் இவ்வித தலங்கள் மிக அதிகம். பல கிளை மதங்களின் பிறப்புக்கிடமான இவ்விந்தியாவில் தலங்க ளதிக மிருப்பதி லாச்சரிய மென்ன விருக்கிறது? யாத்திரை செய்வோரனைவரும் தம் யாத்திரைத் தலங்களின் மகிமை, மகிமைக்குக் காரணம், அங்கு செய்ய வேண்டிய காரியங்க ளிவற்றைத் தெரிந்து கொண்டிருப்பின் யாத்திரை செய்ததன் பலன் சரியாகக் கிடைப்பதுடன் யாத்திரை சரிவர நிறைவேறியதென்ற மனச் சந்துஷ்டியு முண்டாம். இவற்றைத் தெரிவிக்கும் நோக்கத்துடனேயே சில வருட காலமாய் யாத்திரை விஷயத்தில் மிகுந்த அக்கரை யெடுத்துக் கொண்டு நடத்தி வரும் 'பாரதயாத்ரீகர் சங்கத்தினர்' முதன் முதலில் கன்னட பாஷையில் புத்தகமொன்றை இயற்றுவித்தனர்.

பிரசாரம் செய்வதென்றால் பலருக்குந் தெரியும் பல பாஷைகளிலும் செய்வ தவசியம். இதனைக் கொண்டு தமிழிலும், தமிழ் மக்களுக்குப் பயன்படும் வண்ணம் இவ் யாத்திரை விஷயங்களடங்கிய புத்தகத்தை எழுத நினைத்த சங்கத்தார் அவ்வேலையில் என்னை நியமித்தனர். அதன் படி இது எழுதப்பட்டது.

இப் புத்தகத்தில் வந்துள்ள பெயர்கள் எல்லாம் கூடியவரை அவ் வப்பிராந்தியங்களில் வழங்குவதை போன்றே எழுதப்பட்டுள்ளன. உதாரணமாக 'மந்திர்' மந்திர மென்று கோயில்களைக் குறிக்கப் பட்டுள்ளது. இது வட இந்தியா யாத்திரை மட்டு மடங்கியது. மற்றைய ஸ்தலங்களைக் கொண்டவேறு பாகங்களும் வெளிவரும்.

இப்பிரயத்தனத்தைக் கைக் கொண்ட சங்கத்தினரது கார்யங்களெல்லாம் இனிது நிறைவேறப் பரம்பொருள் துணை புரிவாராக.

சாமராஜபேட்டை, கல்யாணபுரி,
பகுதான்ய௵ மாசிமீ 29௳.

ஆக்கியோன்.

---

# பிரசுரிப்போர் வந்தனங்கள்.

---

இப்புத்தகத்தின் படங்களுக்குத் தம் படங்களை உப யோகித்துக்கொள்ள அனுமதி கொடுத்த கீழ்க்குறித்த ரயில்வே கம்பெனியாருக்குப் பிரசுரிப்போர் வந்தனங்களை அர்ப்பணம் செய்கின்றனர்:—

1. இந்தியன் ஸ்டேட் ரயில்வே (Indian State Rys.)
2. க்ரேட் இண்டியன் பெனின்ஸுலா ரயில்வே (G. I. P. Ry.)
3. ஈஸ்ட் இண்டியன் ரயில்வே (E. I. Ry.)
4. பெங்கால் நாக்பூர் ரயில்வே (B. N. Ry.)

---

# பொருளடக்கம்

## 1. விஷயாரம்பம்.

தேச யாத்திரையினுத்தேசம்; வ்யவஹார திருஷ்டி பரதகண்டத்தின் விஸ்தாரம், சுரூபம்; அத்தியாத்தும உயர் திருஷ்டி; யாத்திரை உற்சவங்களின் பலன்; யாத்திரை ஸ்தலங்களெவை:— யாத்திரையின் ஏற்பாடு; யாத்திரை சாமான்கள்; வேறு சாமான்கள்; சில்லரை பணங்காசு, கடைசி வார்த்தை; தற்போதைய சௌகரியங்கள்; இப்புத்தகத்தின் நோக்கம்; யாத்திரீகரின் திருஷ்டி. ... 1-23

## 2. பண்டரிபுர யாத்திரை.

ஈச்வர சுரூபம்; துங்கபத்ரா நதி (மந்த்ராலயம்); பண்டரிபுரம்; புண்டலீக விட்டலன்; பூலோக வைகுண்டம் தேவாலய வர்ணனை; பண்டரிபுர வர்ணனை; பண்டரி; தரிசன பலன்; கோபாலபுரம். ... 23-42

## 3. சரித்திரப் பிரசித்திபெற்ற நகரங்கள்.

புனாநகரம்; வேறிடங்கள் (அளந்தி, தேஹோ); பம்பாய் நகரம்; அரசாங்க, பொதுக் கட்டடங்கள்; தேவாலயங்கள்; சௌபாதி, மஹாலக்ஷ்மி, போரிபந்தர், குலாபா. .... 42-52

## 4. நாஸிக் (பஞ்சவடி), த்ரியம்பகேச்வர யாத்திரை.

நாஸிக் மகத்துவம்; த்ரியம்பக மகத்துவம்; கோதாவரியின் வரலாறு; கோதாவரியின் மகிமை; இதிகாச நாஸிக்; நாஸிக்-க்ஷேத்திரமும் வம்சாவளியும்; நாஸிக்கின் கட்டடங்கள்; நாஸிக்-பஞ்சவடி தீர்த்தங்கள்; நாஸிக்-பஞ்சவடி

தேவாலயங்கள்; முக்ய கோயில்களின் வர்ணனை; த்ரியம்பக க்ஷேத்திரம்; த்ரியம்பகத்தின் தீர்த்தம்-கோயில்கள்; துவஜபர்வம்; ப்ரம்ம கிரிப் பிரதக்ஷிணம். ... 52-87

5. ஹோஷங்காபாத், போபால், உஜ்ஜயினி, க்வாலியர்.

ஹோஷங்காபாத்; நர்மதையின் மகிமை; நர்மதை-விஞ்ஞான ஆராய்ச்சி; போபால்; உஜ்ஜயினி-பழைய-தற்காலத்திய; சீரிழந்த ஸாஞ்சி; க்வாலியர் நகரம், பார்க்கத்தக்க இடங்கள். ... 87-104

6. ஆக்ரா நகரும் உலகத்திலேயே அழகிய கட்டடமும்.

ஆக்ரா நகரம்; தாஜ்மஹல்; வேறிடங்கள்; கட்டடங்கள். .... 105-110

7. மதுரை (வட), ப்ருந்தாவன க்ஷேத்திரங்கள்.

மதுரை நகரம்: மதுரை நகரின் ஆகர்ஷணை; வ்ரஜ மண்டலம்; மதுரைக் கோயில்கள்; வன யாத்திரை ப்ருந்தா வனம்; பரஸானு, நந்த, தீரஸமீரம்; கோவர்த்தனம், மஹா வனம்; கோகுலம்; பலதேவர் கிராமம். .... 110-123

8. தில்லி (இந்த்ரப்ரஸ்தம்), குருக்ஷேத்ரம் (ஸ்தானேச்வரம்).

தில்லி (இந்த்ரப்ரஸ்தம்) சரித்திரம்; காணத்தக்க இடங்கள்; குருக்ஷேத்திரம் (ஸ்தானேச்வரம்) 123-130

9. ஹரித்வாரம் (கங்கத்வாரம்), ரிஷீகேசம் நைமிசாரண்யம்.

பஞ்சதீர்த்த ஸ்னானம்; ஹரித்வாரம், ஹரத்வாரம், கங்காத்வாரம், கநகல; தீர்த்தம்-ஆலயங்கள்; ரிஷீகேசம்; நைமிசாரண்யம் (நேமிஸாரம்) ... 130-144

10. லக்னோ (லக்ஷ்மணபுரி), அயோத்தி, நந்திக்ராமம்.

லக்னோ (லக்ஷ்மணபுரி); அயோத்தி; தீர்த்தம், ஆலயங்கள், நந்திக்ராமம். ... 145-151

## 11. பிரயாகை (அலஹாபாத்), சித்ரகூடம் (சிகரம்).

ப்ரயாகையின் தொன்மை; இன்றைய ப்ரயாகை. அலஹாபாத்; தீர்த்தவிதி; ப்ரயாகை மகத்துவம்; மாக-கும்ப மேளங்கள்; தீர்த்தங்கள்-ஆலயங்கள்; சித்ரகூடம்; பரிக்ரம விதி. ... 151-174

## 12. மோக்ஷபுரி (காசி), ஸாரநாத்.

காசியின் பழைமை; யாத்திரை விதி; பிரசித்த ஆலயங்கள்; வேறு பழைய கோயில்கள்; இன்றைய காசி ... 174-194

## 13. கயை, புத்தகயை க்ஷேத்திரங்கள்.

கயை க்ஷேத்திரம், சரித்திரம்; ச்ரார்த்த மஹாத்மை- உத்தேசம்; தரிசிக்கத்தக்க ஆலயங்கள்; கயா வாளிகள்; தர்மாரண்யம்; புத்தகயா. ... 195-207

## 14. அரண்மனைகளின் நகரம்—கல்கத்தா.

அரண்மனைகளின் நகர்; யாத்திரீகரின்-கல்கத்தா. 208-215

## 15. புவனேச்வரம், ஜகன்னாதபுரி (பூரி).

புவனேச்வரக் கோயில், இதிகாசம்; ஏரி, கிரி; ப்ராசீன ஜகன்னாதம்; பூரியினாலயங்கள், சாக்ஷீ கோபாலம்; கோணார்க்க. ... 215-230

---

# அனுபந்தம்

---

த்வாதசஜ்யோதிர்லிங்கங்கள்; ஸப்தபுரிகள்; அஷ்ட விநாயகர்; நான்குதாமங்கள்; த்ரிஸ்தளி; பஞ்ச மஹா ஸரோவரங்கள்; பஞ்சகேதாரம்; பஞ்ச பதரி; பஞ்சப்ரயாகை; பஞ்ச மஹா தத்வம்; சதுராயுத க்ஷேத்திரங்கள்; தேவியின் மூன்ற றைப் பீடங்கள்; தத்தக்ஷேத்திரங்கள்; ... 231-233

# படங்கள் அட்டவணை

1. பண்டரிபுரத் தேவாலயங்களின் காட்சி.
2-3. பீமாநதியின் மேல் தோற்றம் (பண்டரிபுரம்).
4. பண்டரிபுரம் ஸ்ரீகோபாலக்ருஷ்ணர் கோயில்.
5. புனா நகரத்தின் பார்வதி தேவாலயத்தினொரு காட்சி.
6. பார்வதி தேவாலயம் இன்னொரு தோற்றம்.
7. ஜி. ஐ. பி. ரயில்வே கம்பெனியின் விக்டோரியா டர்மினஸ் ஸ்டேஷன் பம்பாய்.
8. "ப்ரின்ஸ் ஆப் வேல்ஸ்" ம்யூஜியம் (பலவித பொருட் காட்சிசாலை) பம்பாய்.
9. நாஸிக் நகரத் தேவாலயங்களின் தோற்றம்.
10. ஸுந்தரநாராயணர்கோயில், நாஸிக் நகரம்.
11. கங்காத்வாரம் (கோதாவரி மூலம்), ப்ரம்மகிரி, (த்ரியம்பகேச்வரம்).
12. த்ரியம்பகேச்வராலயம், த்ரியம்பக் (நாஸிக்).
13. நர்மதைநதி காட் (துறை), (ஹொஷங்காபாத்).
14. அஹமதாபாத் அரண்மனை, போபால்நகரம்.
15. ஸாஞ்சியின் அசோகஸ்தூபி மேற்குவாசல்.
16. ஸாஞ்சிஸ்தூபியின் வடக்கு வாசல்.
17. க்வாலியர் நகரக் கோட்டை.
18. "ஜயவிலாஸ்" அரண்மனை, க்வாலியர்.
19. தாஜ்மஹல், ஆக்ராநகரம்.
20. யமுனையில் தாஜின் பிரதிவிம்பம்.
21. மதுரையில் ஸ்ரீக்ருஷ்ணர் கோயிலின் மஹாத்வாரம்.
22. விச்ராமகாட் யமுனைநதி (மதுரை).
23. ஸ்ரீரங்கனாதர் கோயில், ப்ருந்தாவனம்.
24. ஸ்ரீகோவிந்ததேவ மந்திரம், ப்ருந்தாவனம்.

25. தில்லியிலுள்ள ஷாஹ்ஜஹான் கோட்டை.
26. தில்லிநகரில் வைஸ்ராயினரண்மனை.
27. தில்லி குதுப்மினர் ஸ்தம்பம்.
28. தில்லியிலுள்ள ஜயசிம்மன் யந்த்ர, மந்த்ர, ஜ்யோதிஷ யந்த்ராலயம்.
29. குருக்ஷேத்திரம் ஸூர்யகுண்டத்தின் ஸ்னானக்காட்சி.
30. ஸ்ரீ ஹரிபாயரி காட் (ப்ரம்மகுண்டம்), ஹரித்வாரம்.
31. மஹாராஜா ஸ்ரீராமர் கோயில் (அயோத்தி).
32. த்ரிவேணிசங்கமம் ஸ்னானக்காட்சி, (ப்ரயாகை).
33. மந்தாகினிக்கரையின் மனோஹரத்தோற்றம்.
34. ஸ்ரீ துலஸீதாஸரின் பர்ணசாலை.
35. ஸ்ரீவிச்வநாதர் கோயில், காசி.
36. பண்டித மதனமோஹனமாளவியாஜியின் இந்து விச்வ (சர்வகலாசாலை) வித்யாநிலயத் தோற்றம்.
37. கயையிலுள்ள விஷ்ணுபத மந்திரம்.
38. ஸ்ரீபுத்தகைக் கோயில், கயை.
39. ஸ்ரீகாளி கோயில், காளிகாட், கல்கத்தா.
40. கல்கத்தாநகரிலுள்ள ஸ்ரீபதரீதாஸ் ஜைனக்கோயில்.
41. இ. ஐ. ரயில்வே கம்பெனியின் ஹௌரா ஸ்டேஷன், கல்கத்தா.
42. புவனேச்வர தேவாலயங்களின் காட்சி.
43. ஸ்ரீபுவனேச்வரர் (லிங்கராஜர்) கோயில், புவனேச்வரம்.
44. ஸ்ரீகேதாரேச்வரர் ஆலயம், புவனேச்வரம்.
45. பிந்துஸரோவரத் (ஏரி) தின் நடுவிலுள்ள ஆலயங்கள், புவனேச்வரம்.
46. ஸ்ரீஸத்யாவதி கோயில், சாக்ஷிகோபால்.
47. ஸ்ரீஜகன்னதாலய மஹாத்வாரம்.
48. ஸ்ரீஜகன்னதர் கோயில் காட்சி, பூரி.

மனிதனுக்குப் புதுமையில் மோஹமுண்டு. இது உள்ள நிலைமையைக் காட்டிலும் மேலான தாயிருக்கவேண்டுமென்பதில்லை. எத்தனை தனவந்தர் தம்வீட்டு அறுசுவை யுண்டி ாமல் அடுத்த வீட்டு ஆனந்தராயரின் அடைருசியைப் ன்றனர்! இவ்வளவேன்? வீட்டில்செய்யும் சிற்றுண் காபி, டீ, ருசியாமல் "கோமலவிலாஸ்", "இராம ஜலஞ்சு ஹோம்" தேடிப் புறப்படுவோர் எத்தனை நாளுக்கு நாள் விருத்தியடையும் காபி க்ளப்பிலிருந்து தெரியவரும். இப்புது மோஹத்தினல் மேனாட்டில் கம் குடிகள் கெடுகின்றன. பக்கத்திலிருப்பதில் முண்டாய் அன்பேற்படுகிறது. இதில் திருப்தி யுண் உடனே அதிருப்தி தலைகாட்டும். தொடர்ச்சியாய் தாபம், வீட்டுக் கலகங்களுண்டாகும். முடிவில் பகை ், வஞ்சகமும், கணவன் மனைவி பிரிதலும் ஏற்படுகின்றது! இதனுபாயமென்ன? இருக்கும் ஸ்திதியிலேயே புதுமையை எவ்வித முண்டாக்கலாம்? உலகமெவ்விதம் சௌக்கியமாயிருக்கும், என்பனவற்றை யாலோசித்து நம்முன்னோர் பண்டிகைகள், விரதங்கள், உபநயனம், கல்யாணம் முதலியனவற்றை ஏற்படுத்தியுள்ளனர். இவைகளினல் ஆஹாரம் மாறுபடுவதல்லாமல் கொஞ்சகால மேனும் உலக விஷயம் மறந்துபோகும். இதன்றி பஜனை, புராணம், உற்சவாதி பொதுக்காரியங்களிலீடுபட்டு மனது உலக வியாபாரத்தைமறக்கும். நம்முன்னோர் தம்ஒவ்வொரு காரியத்திலும் முன்பின் தர்ம சம்பந்தத்தை வைத்துத் தற்கால பாரதமக்கள் யாத்திரை யாகவாவது நீண்ட பிரயாணம் செய்து வரட்டுமென விதித்தனர். இவ்யாத்திரை மனதுக்குச் சந்தோஷமுண்டு செய்வதும், ஒரே இடத்தி

இவ்வித வைபவம் நிறைந்த தேசம்பூராவும் ஜனங்கள் மனதில் நன்கு பதியவேண்டிப் பூர்வீகர்கள் மிகப்பிரயத்தனம் செய்தனர். ஆரியர் முக்யமாய் இயற்கையின் சக்தியைப் பூஜிப்பவர்கள். தமது விளைநிலங்களுக் காதாரமாய், வியாபாரத்துக்குச் சாதகமாய், பலதேசங்களிலிருந்து இறக்குமதி ஏற்றுமதிக்கனுகூலமாய், நாகரீகம் பரவக்காரணமான பஞ்சாப் நதிகளின் பேருபகாரத்தைக் கண்டு அவைகளை வணங்கினர். அந்நதிக்கரைகளில் க்ஷேத்திரங்களை ஏற்படுத்தினர். இவ்விதம் நம்முன்னோர்களாகிய ரிஷிகள் தேச வணக்கத்தைத் தெய்வ வணக்கமாய் மாற்றி, அதனை மத தர்மாசரணையாய்ப் பிரசாரம் செய்து—

इमं मे गंगे यमुने सरस्वति ।
शुतुद्रिस्तोमं सचता परुष्ण्या ॥
असिक्न्या मरुद्वृधे वितस्तयार्जिकीये शृणुह्या सुषोमया ॥

ऋग्वेद २०—७५

என்ற நதிஸ்தோத்திரத்தைத் தினமும் சொல்லி எல்லா பாரதமக்களும் தம்நாட்டின் உருவத்தைத் தியானிக்க வேண்டுமென விதித்தனர். ஆரியர் தமதெல்லையான விந்திய மலையைக்கடந்து தக்ஷிணத்தில் பரவின உடனே அவர்கள் தேசத்தாயின் சுரூபமதிகரித்து ருக்வேதத்தின் மேற்கூறிய ஸ்தோத்திரத்துக்கு,

गंगे च यमुने चैव गोदावरि सरस्वति ।
नर्मदे सिन्धु कावेरि जलेऽस्मिन् सन्निधिं कुरु ।

என்ற பாடாந்தரமேற்பட்டது. விசாலமான இந்நாட்டின் ரூபம் ஜனங்களின் மனதில் பதிய, ஆரியர் வேண்டிய பிரயத்

டால் அவை சரியானவையாயும் பிரயோஜனமுள்ளவை யாயுமாகமாட்டா என்பதை மறக்கக்கூடாது. அனேகாயிரம் வருஷங்களாய் இன்றுவரை ஒரு ரீதியாய் நடந்துவரும் நம்பாரத இதிகாசத்தில் பல கேடுகள், அன்னியராட்சி, ஜனங்களின் ஒற்றுமை கலகங்கள், சாமர்த்தியம், பலமின்மை முதலியவற்றையும் நம் பாரதநாடு பார்த்திருக்கிறது. ஆயினும் இந்துஸ்தானத்தின் பழமை யழிந்துவிடவில்லை. சுபிக்ஷத்திலும், துர்ப்பிக்ஷத்திலும் (பஞ்சம்) பாரதநாடு பாரதநாடாகவே இருக்கின்றது. இதற்குத்தன் ஆரியத்தின் மறவு கொஞ்சமுமில்லை. பாரதத் தாயின் வயிற்றில் கோடிக் கணக்கான பிராணிகளும், மதசித்தாந்தங்களும் பிறந்தன. ஆயினும் இம்மாதாவின் ஜென்மம் உண்டான காலத்தை எந்த இதிகாசமும் நிர்ணயிக்கும் சாமர்த்தியத்தை உடைத் தாயில்லை. இவ்வித பரிசுத்தமான இதிகாசத்தை அஸ்தி வாரமாகக் கொண்டு நிலைத்துள்ள, உலக மெச்சும் தன்மை யதான பாரத யாத்திரையைச் செய்து, நம் பூர்வீகரின் மேன்மையை எண்ணி, அவர்களினற்புதச் செயல்களில் நின்ற எழிலைக்கண்டு, பழைமையின் பெருமை, இப்போதைய தாழ்ந்த நிலையிவற்றை யோசித்து நம் பாரத மக்களில் கடமையில் உறுதியும் உலக ஞானமுமேற்படுமென்பதை வேறு சொல்லவேண்டியதில்லை.

இதுவரை உலக வியவஹார திருஷ்டியில் தேச யாத்திரையினவசியம் சொல்லப்பட்டது. வெறுப்புற்ற

**அத்தியாத்தும உயர் திருஷ்டி.**

மனத்துக்கும் பற்பல விசித்திரங்களடங் கிய தேச யாத்திரையினுல் எவ்வளவு இதமுண்டென்பதும் தானே புலப்படும். இனி இவ்யாத்திரையினுல் அத்தியாத்தும உயர்ச்சிக்கிட

முண்டா பார்ப்போம். முன் சொன்ன ஆர்யரின் திருஷ்டியில் அத்தியாத்தும திருஷ்டியும் அடங்கியுள்ளதாவென அறியவேண்டும். இத்தேசத்தை முன்னோர்கள் விந்திய மலையின் வடக்கிலுள்ளதைத் தபோபூமியெனவும் தக்ஷிணத்தைக் கர்மபூமியெனவும் இரண்டாகப்பகுத்துப் பெயரிட்டிருக்கிறார்கள். ஓரிடத்தில் ஒரு ஊதுவர்த்தியை வைத்தால் அது எரிந்து சாம்பலானபின்னும் அதன் மணம் சுற்றிலும் பரவி, கொஞ்சகாலம்வரை மனதுக்கு அதன் பிரபாவத்தை சூக்ஷ்மமாய்த் தெரிவிக்கிறது. அதுபோல எங்கேனும் காந்தத்தை வைத்தால் அது சுற்றிலுமுள்ள உலோகத்தை இழுக்கும். அவ்விதமே தபோதனர் தவம் செய்தவிடத்தில் அவர்கள் தபஸ்ஸின் பிரபாவம் சுற்றிலும் பரவி அவ்வெல்லைக்குள் வந்த எல்லா ஜீவன்கள் மேலும், சிருஷ்டியின்மேலும் ஒருவித சூக்ஷ்மமான அத்தியாத்தும பரிணாமத்தை யுண்டுபண்ணும். இவ்வத்தியாத்தும வரைக்குளகப்பட்ட எந்தப்பிராணியும் அதன் பரிணாமத்தை யடையாமலிருக்க முடியாது. இதற்குதாரணங்கள் நம் பழைய நூல்களில் மலிந்துகிடக்கின்றன. உற்சாகத்துடன் வேட்டையாடிவந்த துஷ்யந்தன் கண்வமுனிவரின் தபோவனத்தைச் சமீபத்தவுடன், அங்கு பரஸ்பரம் பகைகொண்ட பிராணிகள் தம்பகையை மறந்து சினேகத்துடன் இணைந்தும் ஆடிக்களித்துமிருக்கக்கண்டு தன் கொலைத்தொழிலை விட்டுப் பரிசுத்த மனத்தினனாய்க் கண்வரைத் தரிசிக்கச்சென்றான். தபோ பூமியின் பிரபாவமப்படிப்பட்டது. அவ்விதஸ்தலங்களின் தரிசனத்தினாலேயே மனிதன் தன் மனத்திலுள்ள கொடிய நினைவுகளைக் கணமேனும் மறந்து ஸத்யம், அன்பு, பரோபகார முதலிய விஷயங்களில்மனதைச்செலுத்துவான்.

பின் அவன் அவ்வெல்லைக்குளிருக்கும் வரையிலாவது மனது அத்தியாத்தும விசாரத்தில் மூழ்கும். மேலும் சாமான்யமாய் அவ்விடங்கள் சாந்திமயமாயும் இயற்கையழகோடும் விளங்குவதனால் உலக வியாபாரங்களில் வெறுப்புற்ற மனதுக்குக் கொஞ்சகாலமேனும் சாந்தமும் சமாதானமுமுண்டாகாமலிராது.

யாத்திரை உற்சவங்களின் பலன்.

மனிதன் மனத்தில் யாத்திரை, உற்சவங்களின் பரிணாமத்தை நினைத்தே நம்முன்னோர் இல்லறத்துக்குமுன் காசியாத்திரையை வித்தையின் அங்கமாய் விதித்தனரெனப் புலப்படுகின்றது. முதலிற் கூறியபடி புது மோஹத்திலகப்பட்டு மனது புதுமையின் சோதனையில் தத்தளிக்காமலிருக்கவும், மனதைத்திடப்படுத்தவும் யாத்திரையவசியமெனச் சொல்லலாம். தற்போதைய பள்ளிகளில் நாம் பெறும் கல்வியானது சாமான்யமாய் நமக்கு துரபிமானம், விசாலமற்ற மனம், பிறர்க்குபதேசம் செய்யும் பாண்டித்யம், தானே பெரியன் தன்னைப்போல் கல்லாதவர்கள் தாழ்ந்தவரென்ற உணர்ச்சி இவற்றை நிலைக்கச் செய்கிறது. இந்தத்தீய உணர்ச்சி ஒழிய யாத்திரையைக்காட்டிலும் வேறு ஔஷதமே கிடையாதென்னலாம். யாத்திரையில் மனிதன் பல ஜாதி மனிதர்களைச் சந்திக்கிறான். அப்போது அவர்களின் நடையுடை பாவனைகளைப்பார்த்து அவன் மனதிலும் புது எண்ணங்கள் தோன்றும். மேலும் ஆங்காங்கு நடைபெறும் கல்விமான்கள் கூட்டத்தைத் தரிசித்து, அங்கங்கு கிடைக்கும் பெரிய பண்டிதர்களின் ஸஹவாஸத்தால் மனதிலுள்ள மமதை, துரபிமானங்கள் நீங்கப்பெறும். பல தேசங்களின் பல ஸ்தாபனங்கள்,

ஜனங்கள், பல நடையுடைபாவனைகள், பற்பல ஆஹாரங்கள், ஆச்சர்யமான பற்பல இயற்கையழகு இவைகளால் மனதில் கேவலம் புத்தகப்படிப்பினாலுண்டாகும் துரபிமானம், கிணற்றுத்தவளை யுணர்ச்சி இவை தொலைந்து, மனம் விசாலமாய் மனிதனிருதயத்தில் பிறர் விஷயத்தில் ஸஹானுபூதி, தாராளம், சிநேகம், அன்பு முதலிய நல்லுணர்ச்சிகளும் கஷ்டங்களைச் சகித்துக் கொள்ளுதல் முதலான நற்குணங்களுமேற்படும். மற்றும் பற்பலரின் ஆசார வியவஹாரங்களை தம் ஆசார வியவஹாரங்களோடு ஒப்பிட்டுப் பார்த்துத் தன் ஸமாஜம், தேசத்தின் பெருமைகளில் ஒருவித நல்ல அபிமானம் ஏற்படும். இவ்விதம் அனுபவத்தினாலேற்பட்ட பரந்த நோக்குடைய மனிதன் இல்லறத்தைக் கைக்கொண்டு சமுசார யாத்திரையை நல்வழியில் நடத்துவான். இதனையறிந்தே நம்முன்னோர் தூர யாத்திரை அல்லது அவ்வப்போது நடக்கும் உற்சவாதிகளுக்காவது போய்வர வேண்டுமென்று அதனை ஒரு தர்ம விதியாயேற்படுத்தியுள்ளார்கள். ஆனால் அவர்களின் அப்பெரிய உத்தேசத்தை யறிந்து உற்சவங்களுக்கோ, யாத்திரையாகவோ செல்வோரிப்போது எத்தனைபேரிருக்கின்றனர்! நம் பூர்வீகர்கள் விதித்துள்ள யாத்திரைஸ்தலங்கள் இவ்வுத்தேசத்தை எம்மட்டில் நிறைவேற்றுமென்பதைப் பார்ப்போம்.

ஆர்யதர்மத்தின் பற்பல மார்க்கங்களுக்கனுகுணமாய் அவ்வந்த மார்க்கத்தினர் அவர்களின் உத்தேச தேவர்களின் முக்ய ஸ்தலங்களைத்தரிசிக்க வேண்டுமெனச் சொல்லப்பட்டிருக்கிறது. அம்முக்யஸ்தலங்கள் கீழ் வருமாறு:—

**யாத்திரை ஸ்தலங்கள் எவை.**

அஷ்டவினயகர், நான்கு தாமம், பனிரெண்டு ஜ்யோதிர்

லிங்கம், ஸப்தபுரி, தேவீ பீடம், பஞ்ச மஹா ஸரோவரங்கள் (ஏரிகள்), பஞ்சகேதாரம், பஞ்சபதரி, த்ரிஸ்தளி, பஞ்சப்ர யாகை, பஞ்ச மஹாதத்வம், சதுராயுதம் முதலியன*. இந்த க்ஷேத்திரங்களில் எந்த உபாஸனு தேவதையை உத்தேசித்து யாத்திரையை முற்கொண்டாலும் நாம் இந்தியா பூராவையும் பார்க்கவேண்டிவரும்: நம் தேச சகோதரைப்பார்த்துப் பழகவேண்டியும் அவ்விதமே தேசத் தின் பல்வேறு பாகங்களின் மேன்மையையும் இயற்கை யழகினையும் கண்டு களிக்கவேண்டியும் வரும். சில விடங்களில், சிலவாச்சரியங்கள் கண்ணிற்படலாம். சாமான் யமாய் அப்படிப்பட்ட இடங்களே யாத்திரை ஸ்தலங்களாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. சிலவிடங்களில் ஆகாயத்தை யளாவும் கோபுரங்களுள்ள உயர் தேவாலயங்களிருக்க வேறிடங்களில் மனதைக்கவரும் படைப்பின் எழில் விளங்கும். சிலவிடங்களில் நாம் கண்திறந்து பார்க்க வேண்டுமென்றே கடவுள் மகிமையைக்காட்டிலும் ஸ்தல மஹிமை விசேஷமாயுள்ளது. யாத்திரைகளில் நான்கு தாமங்களின் யாத்திரையே அதிக புண்யம் தரக்கூடியதாம். ஏனெனில் அவை இந்தியாவின் நான்கு திக்குகளிலும் எல்லைகளைப்போன்றுள்ளன. அவ்விதமே கங்கா தீர்த்தத் தை இராமேசுவரத்தில் சேர்த்து, இராமேசுவர மணலைக் கொண்டுபோய் கங்கையிலும், த்ரிவேணியிலும் சேர்க்க வேண்டுமென்றிருக்கிறது. எனவே, இந்த நான்கு தாம யாத்திரை செய்யவேண்டுமென்ற விதி சாஸ்திரத்திலேற் பட்டிருக்கிறது. இவ்விதிகளை யெல்லாம் யோசித்தால் மனிதனின் மனம் விசாலமடையவும் இவ்யாத்திரை எவ்வளவு பிரயோஜனப்படுமென்பது தெளியப்படும்.

---

* விவரம் பின்னல் காண்க.

யாத்திரை செய்வோர் முதலில் தம் சரீர ஆரோக்யத்தை நன்றாய்க் காப்பாற்றிக்கொள்ளவேண்டும். அவர்களுக்கு திடம்வேண்டும். எனின் முதன் முதலில் குளிர்ந்த நீர் ஸ்நானத்தை அப்பியசிக்கவேண்டும். வெகு தூரம் நடப்பதையும்—அவசியமேற்படின் பாரத்தைச் சுமந்து நடக்கும் பழக்கத்தையும் கொண்டுவரவேண்டும். வெயில், தாகம், மழை, காற்று இவைகளைப் பொறுத்துக்கொள்ள வேண்டும். வெறுந்தரையிலோ, கம்பளி அல்லது பாய் மேலோ படுத்தவுடன் தூங்கும் சமயமேற்படின் அதனையும் செய்யவும், ஒரே வேளை சாப்பாட்டுடனிருக்கவும் பழக வேண்டும். யாத்திரீகரனைவரும் இதனை நன்கு பழகியிருத்தலவசியம். இதில்லாவிடில் தேகாரோக்யம் இல்லாமற் போவதுடன் யாத்திரை சரியாயும் சுகமாயும் நடைபெறாது. இவ்வளவேயல்லாமல் அது கஷ்டமுண்டுசெய்வதாய் யாத்திரை செய்பவனுக்கும் கூடவிருப்போருக்கும் தொந்தரையுண்டுசெய்யும். ஆனமையின் தேகத்தையும் மனதையும் திடப்படுத்திக்கொண்டபின் யாத்திரைக்காக—மஹாயாத்திரைக்காக—பாரதநாட்டின் தரிசனத்துக்கு எதெதனைக்கொண்டு செல்ல வேண்டும், எவ்வளவு சாமான் கொண்டு செல்லவேண்டுமென்பதை நிச்சயித்துக்கொள்ளவேண்டும். இதற்கு, முதலில் நாம் உத்தேசித்திருக்கும் க்ஷேத்திரங்களைக்கொண்ட படத்தையோ அல்லது க்ஷேத்திரத்தின் வர்ணனைகொண்ட புத்தகத்தையோ தேடிக்கொள்வதவசியம். இதற்கு 'பாரத யாத்திரீகர் சங்கத்தினரின் பாரத யாத்திரைக்கிரந்தமாலை புத்தகங்களும் உதவிபுரிவனவாம்.

யாத்திரையின் ஏற்பாடு.

யாத்திரை சாமான்கள்.

மேலும் எந்த ரயிலில் பிரயாணம் செய்யவேண்டுமோ அது சம்பந்தப்பட்ட கால அட்டவணை (Guide) கையி லிருக்கவேண்டும். கூட சரியான மணிகாட்டும் கடிகார மிருந்தால் அனுகூலமதிகம். பை கொள்ளும்படியான, சுமார் ஒரு சேர் ஜலம்பிடிக்கும் உயரமான பாத்திரம் கையிலிருந்தால் அது, ரயிலில் தண்ணீர்சாப்பிடவோ, பால் முதலானவைகளை வாங்கி வைத்துக்கொள்ளவோ, சமயங் களில் கை காலலம்பவோ (சௌசம்), சௌகரியமாயிருக்கும். இப்பாத்திரம் ஜெர்மன் ஸில்வர் அல்லது ஈயம் பூசப்பட்ட தாயிருப்பின் நல்லதாம். பிரயாணத்துக்கு இரும்புக் கைப் பெட்டி (Trunk) யைக்காட்டிலும் தோற்பை அதிக அனு கூலமானது. யாத்திரையில் அனேக இடங்களில் கூலிக் காரர் கிடைப்பதருமையாதலாலும் கிடைத்தாலும் கொஞ்ச தூரம் சுமக்க அதிகக்கூலி கேட்பதனாலும், நாம் கொண்டு போகும் தோற்பை ரயிலின் கணக்குப்படி 15-20 சேருக் கதிகமாயிராமலிருப்பின் அதனைச்சுமந்து செல்ல யாத்திரீ கருக்கு அதிக சிரமமிராது; மேலும் இரயிலதிகாரிகளாலும் தொந்தரவேற்படாது. இவ்விதம் மூட்டை ஒருவன் சுமக்கும்படியானதாயின் யாத்திரீகன் அதனைச்சுமந்து செல்லத்தயாராகவிருப்பதைக்கண்டால் கூலிகள் நியாயமான கூலிக்குச் சுமந்து செல்லத்தாமே முன்வருவர்! ரயில்வே ப்ளாட்பாரத்தில் ஒரு ஆள் சுமக்கும் ஒரு சுமைக்கு ஒரு அணு கூலி விதிக்கப்பட்டுள்ளது. ரயில் கூலிகளில் அதி காரம் (License) பெற்று நம்பர் கொண்டுள்ளோருண்டு. அந்த நம்பரைக் குறித்துக்கொண்டு அவனிடம் சாமானைக் கொடுத்து, நாம் எந்த வண்டிக்குப் போகவேண்டுமென்ப தனைச்சொல்லிவிட்டால், அவன் சாமானை எடுத்துக்கொண்டு

காலத்துக்குச் சரியாய் அவ்விடத்தில் காத்திருப்பான். ரயில் கூலிகள் சிலசமயங்களில் ஸ்டேஷனைச்சுற்றியிருக்கும் கம்பியினடியில் நுழைந்து செல்வார்கள். மற்றையோர் அவ்விதம் செய்வது கூடாது. ஆதலால் கூட்டத்தில் போவதற்கும், ரயிலில் சரியான இடமேற்படுத்திக்கொள்ளவும், குறித்த பிளாட்பாரத்தில் குறித்த வண்டியில் போயுட்காரவும் இக்கூலிகள் மிகுந்த உதவியாயிருப்பர். ரயில் கூலிகள் ரயிலெல்லையைவிட்டு வெகுதூரம் வரமாட்டார்கள். அதற்கு வேறு கூலியாட்களைத் தேடிக்கொள்ளவேண்டும். அவ்வித கூலிகளும் ரயிலடியிலேயே கிடைப்பார்கள். சாமான்யமாய், ரயில் ஸ்டேஷனுக்குச்சமீபமாய்ச் சத்திரங்களுண்டு. அவைகளுக்கு வாடகையும் சிலசமயம் கொடுக்கவேண்டியதில்லை. சில விடங்களில் தங்குமிடங்களுக்கு (முசாபர் கானு) வாடகை கொடுக்கவேண்டி வரும். அவ்விடங்களில் வேறு அறைகளுடன் தனியாயிருக்க வசதியுண்டு. அங்கு திருடர்களின் உபத்திரவமும் அதிகமிருக்காது. ஆதலால் கூடியவரை யாத்திரீகர் 'முசாபர் கானு' வை உபயோகப்படுத்திக்கொள்வது நலமாம்.

வேறு சாமான்.

பாரத யாத்திரையில் அவசியமாய் வேறொரு சாமானிருக்கவேண்டும். அது நான்கு முழநீளம் மூன்று முழ அகலமுள்ள மெழுகுத் துணியாம். வெய்யிற்காலத்தில் மெழுகுள்ள பக்கத்தை மேலாக்கியும் மழைக்காலத்தில் அதைக்கீழாகவும் போட்டுக்கொண்டு உட்காரவும் படுக்கவும் அது உபயோகப்படும். பிரயாணத்தில் நமக்கு எங்கும் நல்ல இடமகப்படாது. சிலவிடங்களில் கீழே ஈரமாயும்

மேல் சொட்டக்கூடியதாயுமிருக்கும் அறைகள் அகப்படலாம். அச்சமயங்களில் மெழுகுத்துணியினுலாகுமுதவி கம்பளி முதலியவற்ருலேற்படாது. அவை ஈரத்தில் நனைந்து போய்விடும். கூட கம்பளி, கீழ்விரிப்பு முதலிய கம்பளத்தால் செய்யப்பட்டவை, தேக ரக்ஷணத்திற்கு இருக்கவேண்டியதவசியம். இவைகளையும் நனையாமல் வைத்துக்கொள்ள மெழுகுத்துணி அவசியம். கூடுமாஞல் மெழுகுத்துணியில் தைத்த பெரிய முழுச்சட்டை (Over Coat) வைத்திருந்தால் நல்லது. மழை காலத்தில் இதனை உபயோகிக்கலாம். இன்னம் சமையலுக்காக ஒரு டப்பியில் அடங்கும்படியான தட்டு, வட்டில் முதலியவற்றையும் ஒரு தவலையையும் எடுத்துக்கொள்ளவேண்டும். தவலை கிணற்றில் நீர் முகந்துகொள்ளவும் அன்னம் வடிக்கவும் அனுகூலப்படும் வண்ணமிருத்தல் நல்லது. ஒரு இரும்புக்கரண்டியும் அடைக்கல்லும் வேண்டும். சுமார் 20—25 மார் நீளமுள்ள பருமனன்லாத நூற்கயிற்றையும் கூடுமாஞல் ஒரு ஸ்டவ், அதற்குத்தேவையான ஊசி முதலிய சாமான்களுடன் கொண்டுசெல்லலாம். சில சௌகரியமற்ற இறங்குமிடங்களில் இவையெல்லாம் அவசியமானவை. இவைகளோடு ஓரிரண்டு நாளைக்கு வேண்டியவளவு அரிசி, பருப்பு, உப்புப்புளி சாமான்களும் இருக்கவேண்டும். ரஸம் சாம்பார்பொடி, சட்டினிப்பொடிகளையும் டப்பிகளில் தனியாய் வைத்துக்கொள்ளவேண்டும். வட இந்தியாவில் இவை அகப்படா. இவைகளிருக்குமாஞல் வெறும் ரொட்டி, சப்பாத்திகளைமட்டிலும் செய்துகொண்டு காலந்தள்ளலாம்.

பிரயாணத்திற்கென நாம் கொண்டுபோகும் பணத்தை

யெல்லாம் ஒரே இடத்தில் வைத்துக்கொள்ளக்கூடாது.

சில்லரை, பணங்காசு.

பணத்தைக்காலணு, ஓரணு, இரண்டணு, நாலணு சில்லரையாயும் ரூபாய், நோட்டுக் களாகவும் மாற்றிக் கொள்வதவசியம். தாமிரநாணயம் சிலவழிந்தபடியெல்லாம் சில்லரைமாற்றிக் கொண்டு அவஸர சந்தர்ப்பங்களில் உபயோகிக்கவேண்டும். இல்லையாயின் ரூபாய்க்குப் பதினைந்தணுவும், பத்து ரூபாய் நோட்டுக்கு ஒன்பதே ரூபாயும் சில்லரையாகப் பெற வேண்டிய சமயங்களேற்படும். சில்லரை கேட்டால் கடைகளில் வட்டம் பிடிப்பதுண்டு. ஆதலால் எந்தச் சாமானை வாங்கினாலும் மிகுந்த சில்லரைபூராவும் கைக்கு வரும் நாணயத்தைமட்டிலும் முறிக்கவேண்டும். சில் லரைக்கு வட்டங்கொடுக்கும் பிரயாணிகள் அனேகருண்டு. நாம் பிரயாணம் எவ்வளவு தூரம் செய்யப்போகிறோம், நம்மிடத்திலுள்ள பணமிவ்வளவு என்ற உளவை யாரிடமும் வெளியிடக்கூடாது. 'பணத்துக்கு என்ன ஏற்பாடு செய் திருக்கிறீர்கள்?' என்று சில யாத்திரீகர் அல்லது வேறு யாராவது கேட்கலாம். அப்போது அவர்களிடம் 'வேண்டும் போது தருவித்துக் கொள்கிறேன்—எவ்வளவு தூரம் பிர யாணம் செய்வேனென்ற நிச்சயமில்லை' எனச்சொல்ல வேண்டும். நாம் யாத்திரீகர்களல்லரென நினைக்கும்வண்ணம் நடிக்கவேண்டும். நம் சாமான்களெவை, எங்குள்ளன வென்றே யாருக்கும் தெரியலாகாது. எல்லா வியவஹாரங் களிலும் — முக்யமாய்ப் பணவிஷயத்தில் — எம்மட்டில் இரகசியமிருக்கிறதோ அவ்வளவு மேன்மையுண்டு. சட் டையில் இரண்டு மூன்று சிறிய, பெரிய உள்பைகள் தைத்து அவைகளில் அவச்யமான கடிதங்கள், ஒருநாலைந்து ரூபாய்

சில்லரை வைத்துக்கொள்ளவேண்டும். இதில் திருட்டு பயமில்லை. பிரயாணத்தில் அஜாக்கிரதையினால் தம்மிட முள்ள எல்லாவற்றையும் பறிகொடுத்து ஈனஸ்திதியடையும் ஜனங்களை நாம் பார்க்கலாம். ஆதலால் நாம் இரண்டு மூன்று ரூபாய்களை இடுப்பில் இடுக்கியிருந்தால் இப்படிப் பட்ட சமயங்களில் ஒரு ரூபாய் செலவுசெய்து ஊருக்குத் தந்தியடிக்கவும், மிகுந்தது பணம் வருமட்டும் செலவுக்கும் மிக உதவியாயிருக்கும். மேலும் பிரயாணத்தின் நடுவே இவ்வித நம் தந்தி அல்லது கடிதம் கிடைத்தவுடன் பண மனுப்பும்படி நம்பிக்கையான இரண்டு அல்லது மூன்று பேர்களிடத்தில் வேண்டிய பணம் கொடுத்து ஏற்பாடு செய்திருக்கவேண்டும். இது வேண்டியபோது அவர்கள் நமக்குப் பணமனுப்ப அனுகூலமாயிருக்கும். தவிற, நம்மிட மிருக்கும் பணத்தை, தோல் அல்லது துணிப்பையில் அரிசி முதலிய சாமான்களுடன் மறைத்து வைத்திருப்பது மேல். சாமான் பை கெட்டித்துணியில் தைத்துக்கொள்ளவேண்டும். நம் விலாசமுள்ள காகிதம் நாலைந்து வைத்துக்கொள்ளுதல் நலம். இது நமக்குவரும் பணத்தை வாங்கிக்கொள்ளத் தபாற்காரனுக்கோ அல்லது சில சமயங்களில் போலீசார் ஸஹவாசமேற்படின் அவர்களிடத்திலோ நம்மடையாளத் தையும் கௌரவத்தையும் சரிவரத்தெரிவிக்க அனுகூல மாயிருக்கும்.

சாமான்யமாய் ஒருவரே யாத்திரை செய்யும்போது ஏற்படும் கஷ்டங்களைப் பிரத்தியக்ஷமாயனுபவித்தே சாமான் களின் விவரம் சுருக்கமாய்ச் சொல்லப் பட்டது. இவ்வளவோடு கடைசியாக ஒரு வார்த்தை சொல்லவேண்டியிருக்

**கடைசி வார்த்தை.**

கிறது. யாத்திரை செய்யும்போது கேவலம் விரதத்தோடு கூடியவர்களாயும் சர்வேசுவரன் சிந்தனையில் மூழ்கியு மிருத்தல் வேண்டும். பல நெருக்கடியான கஷ்ட சமயங் களில் கடவுள், தான் உலக முதல்வனென்பதையும் தன்னிருப்பையும் அங்கங்கே காட்டி நம் உறுதியைப் பரீக்ஷிப்பார். கடவுள் உண்டென்ற உண்மை நம் அனு பவத்துக்குவந்து அதனுல் மனது எப்போதும் கடவுளில் நிலைக்கக்கூடியதும் யாத்திரையினுல் நாமடையும் பெருத்த லாபமாம். இதனுல்தான் நான்காவதாசிரமம் (சன்னியாசம்) கொள்ளுமுன்னும், கொண்டபின்னும் யாத்திரை மிக அவசியமென்று உறுதியாய்க் கூறியிருக்கிருர்கள். கடவுள் தியானத்தினுல் மனது சுத்தமாகிறபடி வேறெதனுலும் ஆகாது. இது எப்படி என்பது முன்னதிகாரத்தில் காட்டப் பட்டிருக்கும் கடவுளின் தன்மையை நிரூபிக்கும் பெரியோர் வாக்கிலிருந்து தெளியப்படும். இதுவரை சொல்லப்பட்ட விஷயங்களைச் சரிவர நினைத்து, யாத்திரை செய்ய நிச்சயித்துக் கொண்டு சரீரம், மனது, காசு பணம், காலானு கூலம் இவற்றைப் பார்த்துக்கொண்டு பிறகு யாத்திரை ஆரம்பிக்க வேண்டும். இவ்விதம் செய்யும் யாத்திரை சுகமானதாகாமலிராது.

**தற்போதைய சௌகரியங்கள்.**

மேற்கூறிய யாதொரு கஷ்டங்களுமின்றி சுகமாய் யாத்திரையை முடித்துக் கொள்ள வேண்டுமென்கிற மனதுள்ளவர்களுக்கிப்போது அவகாச மேற்பட்டிருக்கிறது. சுமார் பத்து வருடங்களாகத் தமிழ் நாட்டினராய், இந்தியாவின் எல்லா ரயில்வேக்களின் ஏஜென்டாயுமிருந்து, பரம்பரையாய் விதிப்படியுள்ள பாரத யாத்திரையைச்

சுலபமாயும், சிரமமில்லாமலும், சௌக்கியமாகவும் செய்விக்க ராம் மோஹன் கம்பெனி, 10, தம்பு செட்டித் தெரு, சென்னை, இவர்கள் பிரயத்தனித்திருக்கின்றனர். இப்பெயரைத் தென்னிந்தியாவில் தெரியாதவர்களே இல்லையென்னலாம். இவர்களதேற்பாட்டினால் தக்ஷிணத்தினின்றும் அவ்வப்போது யாத்திரை ஸ்பெஷலி (வண்டி) ல் புறப்பட்டுச் சுமார் 2, 3 மாதங்களில் பாரதநாட்டின் பல க்ஷேத்திரங்கள், காட்சிகளை தரிசித்து மகிழ்ந்து சுகமாய்த் திரும்பியோர் சுமார் 25,000 ஜனங்களாம். ஆனமையின் ஒருபயமும் யோசனையுமின்றிச் சௌக்கியமாய் யாத்திரை செய்து பலனடைய வேண்டுவோர் இவர்களது ஏற்பாடு, இதன் விவரங்கள் முதலியவற்றை மேல்கண்ட விலாசத்துக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம். மெஸர்ஸ் ராம் மோஹன் கம்பெனியின் கிளைஸ்தாபனங்கள் பெங்களூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, இப்பட்டணங்களில் உள்ளன. இக்கம்பெனியாரின் மூலம் இந்தியாவின் எந்தப்பாக யாத்திரைக்கும் சுலப கட்டணமுள்ள (சார்ஜ்) "ஸ்டாண்டர்ட் ஸர்குலர் டூர் டிகெட்ஸ்" பெறலாம். விவரங்களுக்குக் கம்பெனியாருக்கு எழுதினால் அவர்கள் சந்தோஷத்துடன் உடனே எல்லா விவரங்களையும் தெரிவிப்பார்கள். இக்கம்பெனி ஸ்பெஷலில் செய்த யாத்திரையின் சௌகரியங்களை எல்லோரும் ஒரே மனதாய்ப் புகழ்ந்திருக்கின்றனர். மேலும் வருடா வருடம் தென்னிந்தியாவில் பல பாகங்களிலிருந்தும் அனேகம் யாத்திரீகர் ராம் மோஹன் கம்பெனியாரின் யாத்திரை ஸ்பெஷலில் பாரத யாத்திரை செய்கின்றனர். இப்புத்தகத்தில் அவர்களின் யாத்திரைக் கிரமத்தையனுசரித்து இடங்கள் வருணிக்கப்

பட்டுள்ளன. இக்கிரந்தத்தின் வேறு பாகங்களில் வட இந்தியா, தென்னிந்தியாவின் பிரசித்திபெற்ற ஸ்தலங்கள் விவரிக்கப்படும்.

தமிழில் இவ்வித யாத்திரை விவரமடங்கிய புத்தகங்கள் அபூர்வம். வேறு பாஷைகளில் உண்டெனினும் அவை வேறு நோக்கங்கொண்டு எழுதப்பட்டன வாகும். இப்போது உபகாரச் சம்பளம் பெற்ற உத்தியோகஸ்தரும், உபாத்திமார்களைக் கொண்ட மாணவர்களும் ரயில்வே கம்பெனியார், ராம் மோஹன் கம்பெனியாராலேற்படுத்தப்பட்ட சௌகரியங்களை உபயோகித்துக்கொண்டு பிரயாணத்தைச் செய்ய முற்பட்டுள்ளார்கள். இவர்களுக்குச் சரியான வழி, விவரமடங்கிய புத்தகம் கிடைப்பதில்லை. ஏனெனில் உள்ள சில புத்தகங்கள் சில செல்வரான பிரயாணிகர்களாலோ, தாமிருக்கும் ஸ்தல மஹத்துவத்தை வர்ணிக்கும் அர்ச்சகர்களாலோ அல்லது பத்திரிகை நிருபர்களாலோ எழுதப்பட்டனவாகும். தனவந்தராலெழுதப்பெற்ற புத்தகங்கள் அவர்களுக்கு ஸஹஜமான ஆடம்பர விஷயங்கள் நிறைந்தும், பத்திரிகை நிருபர்களெழுதியவை காவியமயமாய் அல்லது இதிகாச வரலாற்றுடன் கூடியுமிருப்பதனால் இவைகளில் நிஜமெது, கற்பனையெது வென்பது அறிதல் கடினம். மற்றையோர் எழுதுவதிலோ அவரவர்கள் ஸ்தல விசேஷமே பெரிதாய் விவரிக்கப்படுவது ஸஹஜம். ஆனமையின் அவைகளிலும் நிஜ விஷயம் தெரியவராது. நடுத்தரத்தவர்கள் யாத்திரையிலுண்டாகும் கஷ்டங்களெவை, அவை பரிகாரமாவதெவ்விதம், முக்ய முக்ய யாத்திரைகளின் புராண மஹத்தென்ன, அதற்கனுகுணமாய் யாத்திரைகளை

இப்புத்தகத்தின் நோக்கம்.

யேற்படுத்திய பூர்வீகரின் உத்தேசம் யாதாயிருக்கலாம், யாத்திரையில் அவசியமான தார்மிக விஷயங்களெவை, அக்கம்பக்கத்தில் இதிகாச ஸ்தலங்களும் படைப்பின் அழகுக் காட்சிகளும் எங்குள்ளன என்ற இவ்வித விஷயங்களைக் கூடுமான அளவு விவரிப்பதே இப் புத்தகத்தின் நோக்கமாம். இந்த உத்தேசம் எம்மட்டில் நிறைவேறியுள்ள தென்பதை வாசகர்களே யாத்திரீகராய் நிச்சயிக்கவேண்டும்

யாத்திரீகரின் த்ருஷ்டி.

இப்புத்தகத்தைப் படிப்பதனுல் யாத்திரையில் மனம் சென்று, அப்படிப்பட்டவர் தர்ம த்ருஷ்டியினுலோ, யாத்திரையில் இப்போதேற்பட்டுள்ள அனுகூலங்களுக்காகவோ யாத்திரை செய்ய முற்படலாம். இவர்களுக்குபயோகமான ஓரிரண்டு விஷயங்களை இங்கு தெரிவித்தலவசியம். யாத்திரை விஷயமாகப் பூர்வீகரின் உத்தேசம் இப்படிப் பட்டதா யிருக்கலாமென முன்னமேயே சொல்லப்பட்டிருக்கிறது. யாத்திரையின் பலன் சரியாய்க் கிடைத்து யாத்திரீகருக்கு ஞானபிவிருத்தியும் மனச் சாந்தியும் ஏற்பட்டு மனம் விசாலமடைய வேண்டுமெனின், அவர்கள் தார்மிக விதியோடு இதிகாச-புராணம், படைப்பின் விசித்திரம், மனிதன் தொழில்திறமை, ஜனங்களில் நடையுடை பாவனைகள் முதலான விஷயங்களையுமறிந்து கொள்ள வேண்டும். மேலும் அவைகளில் இடத்தை யொட்டினவை யெவை, அனுகூலத்துக்குள்ளவை யெவை, ஜாதி விசேஷமுள்ளவை யெவை, தார்மிகமானவை யெவை, கேவலம் அபிமானமுடையன யாவை என்பனவும்; தார்மிகமானவைகளில் அத்யாவசிய மென்னப்படுபவையின் மூல தத்வம்

யாதென்பதும் யோசித்து அறியத்தக்கன. தெரியவில்லை என்று விட்டுவிடக்கூடாது. மனிதன் ஸர்வஜ்ஞன் (எல்லாந் தெரிந்தவன்) ஆக முடியாது. அதனால் அவன் எல்லா விடங்களிலும் எல்லா ஜனங்களிடமும் கூடுமானவரை விஷயத்தைக் கிரஹிக்கவேண்டும். அதைத் தன் அனுபவ மாகிய உரைக்கல்லில் உரைத்துப் பார்க்கவேண்டும். தர்ம விதிகளை யறியாமல் தூஷித்தல் கூடாது. வேதங்கள் பொருளற்ற மந்திர மூட்டைகள்; புராணங்கள் இறந் தோரின் சரிதம் எனத் தூற்றி அவைகளை நாசப்படுத்தி யிருப்பின், ஆரியரின் மூலஸ்தானம் வடதுருவம், சாலி தியாவின் அஸுரபதங்களுக்குள்ள ஒற்றுமை, இப் போது தெரிந்துள்ள பாபிலோனியரின் நாகரீக முதலிய விஷயங்கள் நம் புராணங்களுடன் எம்மட்டில் சம்பந்தப் பட்டுள்ளன முதலிய விஷயங்களையும் நாம் தெரிந்து கொள்வதே அசாத்தியமாம். ஆனமையின் பூர்வீகரின் ஸ்தாபனங்களைக் காப்பாற்றவேண்டும். அவைகளினுப யோகம் காலாந்தரத்தில் எப்போதேனும் புலப்படும் என்பதை மறக்கலாகாது. குல தர்மம், ஆசாரத்தின் விஷயமும் அப்படியேதான். சமுசாரத்தில் கூட அனேக மனிதர்களின் சம்பந்தமும் வெவ்வேறு விஷயங்களும் நேரும். ஆதலால் சமுசாரத்துக்கு யாத்திரை யென்ற பெயரிடப்பட்டுள்ளது. அவ்வளவேயன்றி யாத்திரைகளி லெல்லாம் சமுசார யாத்திரையே மிகக் கடினமானதெனச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ் யாத்திரை ஏழை முதல் சீமான் வரை ஒரே விதமானதும் சுக துக்கங்கள் கலந்தது மாயுள்ளது. இச்சமுசார யாத்திரையில் கொஞ்சம் ஓய்வு ஏற்படவேண்டும். மேலும் மனதிலேற்பட்ட சிரமம் தீர

வேண்டுமென்றே குடும்ப பரிவாரத்துடன் தீர்த்த யாத்திரை செய்ய வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கின்றது. இதனால் யாத்திரை செய்த எல்லார் மனத்திலும் ஒருவித நன்மை யுண்டாய் லோக—சமுசார யாத்திரை சுகமாக வேண்டு மென்பதே யாத்திரையின் முக்ய உத்தேசமாம். இவ் யாத்திரையினால் மனிதன் மனதிலுள்ள துரெண்ணங்கள், கோபதாபங்கள், லோபகுணம், த்வேஷ முதலியவை அனேகமாய்க் குறையும். நம்மில் "காசிக்குப் போய் அவர் என்ன விட்டார்" எனக் கேட்பதொரு வழக்கமிருக் கின்றது. அங்கு விட்டு வரவேண்டியது மேற்கூறிய துரெண்ணம் முதலியவை யல்லாமல், நமக்குப் பிடிக்காத கத்தரி, வெண்டைக் காய்களை யல்ல. இவ்வித தூர்குணங் களை விடுதல் சமுசார யாத்திரை சுகமே நடக்க அத்தியா வசியமானபடியால் அதற்காகவேனும், சமுசாரிகள் யாத் திரை செய்து அதனாலவர்களுக்குக் கிடைக்கும்படியான எல்லா சுகங்களும் கிடைக்கட்டுமென்பதே நம் கோரிக்கை.

---

## 2. பண்டரீபுர யாத்திரை

यं ब्रह्मा वरुणेन्द्ररुद्रमरुतः स्तुन्वन्ति दिव्यैस्तवैः ।
वेदैस्साङ्गपदक्रमोपनिषदैर्गायन्ति यं सामगाः ॥
ध्यानावस्थित तद्गतेन मनसा पश्यन्ति यं योगिनो ।
यस्यांन्तं न विदुस्सुरासुरगणा देवाय तस्मै नमः ॥१॥

यं शैवास्समुपासते शिव इति ब्रह्मेति वेदान्तिनः ।
बौध्या बुध्य इति ह्महूर इति वा झोरास्टरस्यानुगाः ॥
माशीह्येति यहूदिनो जिन इति ध्यानस्थतीर्थङ्कराः
क्रैस्ता येसुरिति प्रभुस्स विजयेत तुर्कस्य पैगम्बरः ॥२॥

**ஈசுவர சுருபம்.**

நம் யாத்திரையில் அனேக இடங்களில், அனேக சமயங்களில் ஈசுவரன் தன் படைப்புத் திறனையும் இருப்பையும் காட்டியருளுவானென முன்பே சொல்லியிருக்கிறோம். அப்படிப்பட்ட ஈசுவரன் யார்? என்று நம் பூர்வீகரான ஆரியர் மேற் கண்ட சுலோகத்தில் கீழ்வரும் விதமாய்த் தோத்தரித்துள்ளனர்:—“பிரம்மா, வருணன், இந்திரன், மருத்துக்கள் முதலான தத்துவங்களின் அதிபதியென யாரை அழகிய ஸ்தோத்திரங்களால் துதிக்கின்றனரோ, ஸாம கானம் செய்வோர் வேதம், உபநிஷத்துக்களினால் எவரைத் துதிக்கின்றனரோ, எவரை யோகிகள் தியானத்தில் மூழ்கிக் காண்கின்றனரோ, எவர் முடிவு தேவதானவர்களெவரும் அறியக்கூடாததோ அந்த எல்லாத் தத்துவங்களின் மூலத்துக்கும் நமஸ்காரம்!”. இரண்டாம் சுலோகத்தினர்த்தம் சுலபமாய்த் தெரியலாம். இதிலிருந்து மனித வர்க்கத்தில் தெய்வமொன்றுண்டென்று தெரிந்த சமயத்தில் தெய்வம் ஒன்றே, எல்லா தருமங்களும் ஒன்றேயாயிருந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. காலக்கிரமத்தில் பௌத்தம், ஜைனம், க்ருஸ்தவம், இஸ்லாம், ஸரதுஷ்ட்ரம் (பார்சி) முதலான தர்மங்கள் அங்கங்கு உண்டாய் மூலதர்மம் பிரிவடைந்தது. மூல தர்மத்தின் முக்ய தத்துவங்களை மனதில் கொண்டு தம் புத்திபலத்தால், அவ்வவ்விடங்களின் இருப்புக்கனுகூலமாய் அவைகளைப் பிரசாரம் செய்த அந்தந்த இடத்தின் அறிஞர், அவ்வத்தர்மங்களின் மூல ஸ்தாபகரெனப் பெயர் பெற்றனர். பிறகு மூலதர்மத்தில் மறவேற்பட்டு, பிரசார தர்மம் பிரபலப்பட்டபடியெல்லாம் அவரவர் ஆசார வியவஹார பேதங்களினால் பரஸ்பரம்

துவேஷமுண்டாயிற்று. இத்துவேஷத்திற்கு அந்தந்த ஆசார வியவஹார பேதங்களில் அவரவர்களுக்கிருக்கும் அபிமானமே காரணமல்லாமல், தர்மத்திலோ, தெய்வத்திலோ பேதமில்லை. அதனால் இரண்டாம் சுலோகத்தில் "நீங்கள் பைகம்பர் (மகம்மது நபி) என்னுங்கள், சிவன், பிரமன், இயேசு என்ற எப்பெயர் கொண்டேனும் கூப்பிடுங்கள்—அவையெல்லாம் ஒருவனுக்கே சேரும்" என்ற கருத்துக் காணப்படும். எனில் நன்மை தீமைகள், உருவங்கள் விகாரங்களே இல்லாத ஈச்வர சுரூபம் எல்லா தர்மங்களுக்கும் பொதுவானதாம். அவ்வித தெய்வத்தின் யாத்திரையை எங்கு செய்வது? அதற்கு இடமில்லை, சாதனமில்லை; மேலும் அவ்வித சுரூப தியானம் மனதுக்கும் சமாதானமுண்டுசெய்வதில்லை. ஆதலால் வைதிக தர்மத்தில் இராமன், க்ருஷ்ணன், கணபதி விஷ்ணு, சங்கரன் முதலியவர்களை முக்ய சக்தி அல்லது சமுதாயத்தின் தத்துவங்களாய்க்கொண்டு, அதை ஈச்வரனின் அம்சாவதாரம் அல்லது சுரூபமென மதித்து, அவர்களின் பூஜை, அர்ச்சனையைச் செய்து, அச்சக்திகளின் மூலஸ்தான யாத்திரை செய்ய வேண்டுமென்ற விதியேற்பட்டது. 'என்னில் பக்தியை வைத்து எந்த தேவரைப் பூஜித்தாலும் அது என்னையே சாரும்' என்று பகவானே கீதையில் சொல்லியுள்ளார். இவ்விதம் பற்பல தேவதைகளின் பூஜை ஸர்வேச்வரன் ஒருவனையே சாருவதெவ்வித மென்பதைத் தெரிந்து, அத்தேவனின் பலவித ரூபங்களைக் காண தீர்த்த யாத்திரையைக் காட்டிலும் சிறந்த சாதனமில்லை.

சாதாரணமாய்த் தென்னிந்தியா, கர்நாடக பாகத்தி

லிருந்து காசியாத்திரை செய்வோர் எம். எஸ். எம். (M. S. M. Ry.) ரயில்வே குந்தகல் (Guntakal) ஜங்ஷன் மூலம் ராய்ச்சூர் மார்க்கமாய் போவது வழக்கம். குந்தகல் ஸ்டேஷனிலிருந்து ராய்ச்சூர் நோக்கி சுமார் 58 மைல் தூரம் போனவுடன் துங்கபத்ரா நதி என்ற ஸ்டேஷன் கிடைக்கும். காசியாத்திரை செய்வோரெல்லாம் இங்கு இறங்குவார்கள். இந்த ஸ்டேஷனுக் கருகிலேயே துங்கபத்ரா நதி ஓடுகிறது. ராம் மோஹன் கம்பெனி யாத்திரை ஸ்பெஷல் இங்கு நிற்கும். இங்கு எல்லா ஜாதியாரும் தங்க 'லோகல் பண்டு' தருமசாலையும், ராமசாகர ஸ்ரீனிவாச ராயரின் சத்திரமும் உள்ளன. தென்னிந்தியாவின் யாத்திரீகர் இங்கு தங்கி இந்நதியில் மூழ்கித் தம் காசியாத்திரை விதியை ஆரம்பிப்பார்கள். இந்த ஸ்டேஷனின் கிழக்கில் சுமார் 9 மைல் தூரத்திலுள்ள 'மஞ்சாலை' (மந்த்ராலயம்) என்றவிடத்தில் மிகப் பிரசித்திபெற்ற ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் தேவாலயமுள்ளது. மஞ்சாலையும், துங்கபத்திரைக் கரையிலிருக்கிறது. இந்த ஸ்டேஷனிலிருந்து அங்கு செல்லச் சரியான வழி உண்டு. வண்டிகள் வாடகைக்கு அகப்படும். இந்த ஸ்டேஷனிலிருந்து சுமார் 3, 4 பர்லாங்கு தூரத்தில் கர்நாடகத்தில் பிரசித்திபெற்ற தர்சனக்காரரும், பிரபல வைத்தியருமான ஸ்ரீ தாராநாத் அவர்களின் ப்ரேம வித்யாபீடம், ப்ரேம மெடிகல் காலேஜ், ப்ரேம மெடிகல் சர்வீஸ் ஆஸ்பத்திரிகளிருக்கின்றன. இங்கு பல மேனாட்டு தர்சனக்காரரும், பண்டிதர்களும், டாக்டர்களும் வந்து சுற்றிலுமுள்ள 40, 50 கிராமங்களுக்கும் கிராமத்தாருக்கும் பண்டித தாராநாதரும் அவர் சீட

துங்கபத்ரா நதி, மஞ்சாலை. (மந்த்ராலயம்)

வர்க்கத்தினரும் செய்யும் சேவையைக் கண்டு ஆனந்தித்து, பண்டிதரிடம் வாதித்துத் தம் ஞானக்குறையைப் பூர்த்தி செய்து கொண்டு போவார்கள். வெயில் விடுமுறை நாட்களில் ப்ரேம வித்யா பீடம் பல யூனிவர்சிடி உபாத்யாயர்கள், மாணவர்களால் நிறம்பியிருக்கும். ப்ரேம வித்யா பீடம் பழைய குருகுலத்தின் வழியைப் பின்பற்றி நடப்பதனால் அங்கு, அழகானதும் உன்னதமுமான கட்டடமெதுவும் இல்லை. ஞானக்குறையுள்ளவர்களை வரவேற்க எப்போதும் தாராநாதரின் கைகள் நீண்டேயிருக்கும்

**பண்டரிபுரம்.**

துங்கபத்ரை, மந்த்ராலயங்களில் தம் வேலைகளை முடித்துக்கொண்ட யாத்திரீகர், முன்னால் பிரயாணப்பட்டு ராய்ச்சூர், வாடி, ஹாட்கி, (Hotgi) ஷோலாபூர் மார்க்கமாய்க் குருட்வாடி ஜங்ஷனை யடைவர். அங்கு நின்றும் பண்டரிபுரம் போக பார்சி லைட் ரயிலுக்கு வண்டி மாற வேண்டும். இவ்வண்டியில் எப்போதும் பண்டரி யாத்திரீகரின் கூட்டம் அதிகம். பிரதிமாத தசமி, துவாதசிகளில் கூட்டம் மிக அதிகம். இரயில் குருட்வாடியிலிருந்து ஷோலாபூர் ஜில்லாவைச் சேர்ந்து, தாலுக்காவான பண்டரீபுரத்தை யடையும். இந்த க்ஷேத்திரம் பீமா நதிக்கரையிலுள்ளது. யாத்திரீகர் பண்டரிபுரம் ஸ்டேஷனில் இறங்கி ஊருக்குள் (சுமார் ஒரு மைல்) போக வண்டி வசதியுண்டு. ஊரையடையுமுன் பீமா நதி எதிர்ப்படும். இந்நதி இந்த க்ஷேத்திர தெய்வமான பாண்டுரங்கனை வணங்குவதே போல் அர்த்த சந்திர வடிவமாய் இந்த க்ஷேத்திரத்தை வளைத்துக்கொண்டு பிரவஹிப்பதனால் இப்பாகத்தில் அதற்குச் சந்திரபாகை என்ற பெயரேற்பட்டிருக்கிறது.

இந்நதி விஷ்ணுபாதம் அல்லது கோபாலபுரமென்ற இரு பிரசித்திபெற்ற இடங்களிலிருந்து பார்க்க மிக அழகாய்த் தோன்றும். வெயிற்காலத்தில் இந்நதியில் ஜலம் குறைந்திருப்பதனுல், இதன் தரையிலுள்ள தேவாலயங்களும், சாதுக்களின் சமாதிகளும் நன்ருய்த் தெரியவரும். மேலும் தேவாலயங்கள் உறுதியாய்க் கட்டப்பட்டிருப்பதனுல் மழை காலத்தில் வெள்ளத்தினுல் இவைகளுக்கு ஒரு உபத்திரவமும் ஏற்படுவதில்லை. இங்குள்ள புண்டலீகன் தேவாலயம் மழை காலத்தில் பிரவாஹத்தில் மூழ்கியிருப்பினும் அதன் சிகரம் மட்டில் மேலே தெரியவரும். இத்தேவாலயம் விட்டல தேவாலயத்திலிருந்து சுமார் 500 கஜ தூரத்திலுள்ளது. இங்கு தங்க தருமசாலைகள் அனுகூலமாயிருக்கின்றன. வேறு சிலர் இங்குள்ள பண்டா ஜனங்களோடு தங்குவர். அப்படித் தங்குவோர் இவர்கள் சொல்லும் ஸ்தல மஹிமை, கர்மவிதி முதலியவைகளை அதிகமாக கவனிக்காமல் தம் கடவுள் தரிசனத்தை முடித்துக் கொண்டு அவர்களுக்குத் தம் சக்தியின்படி ஏதேனும் வெகுமானம் கொடுக்கலாம். இந்த க்ஷேத்திரத்துக்கு வரும் பல யாத்திரீகர்களுக்கும் இப்போதைய மின்சார விளக்குகள் முதலிய சௌகரியங்களுமுள்ள காடகீ மஹாராஜா அல்லது மராட்டா தர்மசாலை என்பது வெகு அனுகூலமாயும் சுகமாயு மிருக்கின்றது. இது ஸ்டேஷனிலிருந்து சுமார் 4 பர்லாங்கு தூரத்திலுள்ளது. இதன் பக்கத்திலேயே தபால், தந்திசாலை, கடைகள் இவையிருக்கின்றன.

புரந்தரதாஸர், துகாராம், ஞானதேவர் முதலானோர்

தோத்திரத்துக்குப் பாத்திரனாய் இந்த க்ஷேத்திர தெய்வமான ஸ்ரீ விட்டலரின் விஷயமாய் இவ்விதமான ஐதீக மிருக்கின்றது.—வெகு காலத்துக்குமுன் புண்டலீகனென்ற ஓர் பிராமணன் தன் கிழத் தாய்தந்தையருக்கு இமிசை செய்து வந்தான். காலக்கிரமத்தில் அவன் மனது நேர்ப்பட்டு அவன் தந்தை தாய் சேவையிலீடுபட்டிருந்தான். ஒரு நாள் தன்மேல் கோபித்துக்கொண்டு தன்னை விட்டுப் போன ருக்மிணியைத் தேடி ஸ்ரீ க்ருஷ்ணன் இத்தலத்துக்கு வந்தான். இங்கு தாய் தந்தையரைப் பக்தியால் சேவை செய்துகொண்டு அதிலேயே மூழ்கியிருந்த புண்டலீகனைப் பார்க்க அவன் வந்தான். கடவுள் வந்து நின்றிருந்தும் புண்டலீகன் தன் தந்தையின் பாதத்தைத் தேய்த்துக் கழுவும் செங்கல் துண்டொன்றைப் போட்டு, 'நான் வரும் வரை அதன் மேல் நின்றிரப்பா' எனச் சொல்லிமறுபடி தன் சேவையில் ஈடுபட்டான். கடவுளும் இப்போதும் அந்தச் செங்கல்லின் மேல் தான் ருக்மிணியைத் தேடிவந்த ஸ்திதியிலேயே, எனின் கைகளை இடுப்பின் மேல் வைத்த வண்ணம் நின்றிருக்கிறார். இவ்விதம் பக்தராஜனான புண்டலீகன் வந்த கடவுளை மறுபடி வைகுண்டம் போக விடாமல் தானிருந்தவிடத்தையே வைகுண்டமாய் மாற்றினான். அனேக வருடங்கள் யாக, யோக சாதனைகளினாலும் கிடைக்கப் பெறாத ஈச்வரனின் பிரத்யக்ஷம் இந்த க்ஷேத்திரத்தில் சுலபமாயேற்படும்வண்ணம் புண்டலீகன் தன் பக்தியினால் செய்தான். இந்த க்ஷேத்திரத்தில் தம் பக்தியினாலேயே கடவுளைப் பிரத்தியக்ஷமாய்க் கண்ட அனேக ஸாது, பக்தர்களின் சரிதங்களை பக்தவிஜயத்தில்

(ஓரக்குறிப்பு: புண்டலீக விட்டலன்.)

தெரிந்து கொள்ளலாம். இவ்விதம் தம் பக்தர்களுக்கு தரிசனமளித்து அவர்களை ஆனந்த சாம்ராஜ்யத்தில் மூழ்குவித்த ஸ்ரீ விட்டலர், ருக்மிணிக்கு முதலில் சாங்க தேவனென்பான் கோயில் கட்டுவித்தானெனச் சொல்வர். புண்டலீக மந்திரமும் (கோயில்) அதே சமயத்தில் ஸ்தாபிக்கப்பட்டதாம். இந்த க்ஷேத்திரம் அதற்கு முதலே புண்ணிய க்ஷேத்திரமாயிருந்த குறிப்புக்களைக் கண்டு சாலீவாஹனது சபையில் சேனுதிபதியாயிருந்த இராம சந்திர ஸதாசிவன் இங்கு நிலைபெற்றிருந்த மல்லிகார்ஜுனர், (இத்தேவாலயம் விட்டலர் கோயிலின் மஹா த்வாரத்தி லுள்ளது) விட்டலர், ருக்மிணிக்கு ஆலயங்கள் கட்டுவித்தா னென்ற வேறோர் ஐதீகமுமுளது. வரவர இக்கோயில்கள் பிரசித்தியடைந்து சாதுக்களில் முதன்மை பெற்றவர்களான நாமதேவர், கோராகும்பர், நரஹரி ஸோனர், துகாராம், ராமதாஸ், புரந்தரதாஸ் முதலியோரை ஆகர்ஷித்தது. இப்போது முக்ய தேவாலயத்தில் விளங்கும் விட்டல மூர்த்தியின் தலைமேல் சிவலிங்கமுள்ளது. இம்மூர்த்தி அடியில் சிதிலப்பட்டுள்ளதெனவும் இது பௌத்தமூர்த்தி யெனவும் சிலர் கொள்வார்கள். ஆனல் ஆதி ஜகத்குரு வென்னப்பெற்ற ஸ்ரீ சங்கராசாரியர் இங்கு வந்து, விட்டலர் தரிசனத்தினல் சந்தோஷமடைந்து இவ்விதம் துதித் துள்ளார்:—

महायोगपीठे तटे भीमरथ्या ।
वरं पुण्डरीकाय दातुं मुनीन्द्रैः ॥
समागत्य तिष्ठन्तमानन्दकन्दं ।
परब्रह्मलिङ्गं भजे पाण्डुरङ्गम् ॥ १॥

तटिद्भासमं नीलमेघावभासं ।
रमामंदिर सुंदरं चित्प्रकाशम् ॥
वरंत्विष्टकायां समन्यस्तपादं ।
परब्रह्मलिङ्गं भजे पाण्डुरङ्गम् ॥२॥

प्रमाणं भवाब्धेरिदं मामकानां ।
नितम्बः कराभ्यां धृतो येन तस्मात् ।
विधातुर्वसत्यै धृतो नाभिकोशः ।
परब्रह्मलिङ्गं भजे पाण्डुरङ्गम् ॥३॥

स्फुरत्कौस्तुभालङ्कृतं कण्ठदेशे ।
श्रियाजुष्टकेयूरकं श्रीनिवासम् ।
शिवं शान्तमीड्यं वरं लोकपालं ।
परब्रह्मलिङ्गं भजे पाडुरङ्गम् ॥४॥

शरच्चन्द्रबिम्बाननं चारुहासं ।
लसत्कुण्डलाक्रान्तगण्डस्थलान्तम् ॥
जपारागबिम्बाधरं कंजनेत्रं ।
परब्रह्मलिङ्गं भजे पाण्डुरङ्गम् ॥५॥

किरीटोज्वलत्सर्वदिक्प्रान्तभागं ।
सुरैरर्चितं दिव्यरत्नैरनर्घैः ॥
त्रिभङ्गाकृतिं बर्हमाल्यावतंसं ।
परब्रह्मलिङ्गं भजे पाण्डुरङ्गम् ॥६॥

विभुं वेणुवादं चरन्तं दुरन्तं ।
स्वयंलीलया गोपवेषं दधानम् ॥
गवां बृन्दकानन्दनं चारुहासं ।
परब्रह्मलिङ्गं भजे पाण्डुरङ्गम् ॥७॥

अजंरुक्मिणीप्राणसंजीवनं तं ।
परंधाम कैवल्यमेकं तुरीयम् ॥
प्रसन्नं प्रपन्नार्तिहं देवदेवं ।
परब्रह्मलिङ्गं भजे पाण्डुरङ्गम् ॥८॥

स्तवं पाण्डुरङ्गस्य वै पुण्यदं ये ।
पठन्त्येकचित्तेन भक्त्या च नित्यम् ॥
भवाम्भोनिधिं तेऽपि तीर्त्वान्त्यकाले ।
हरेरालयं शाश्वतं प्राप्नुवन्ति ॥

ஸ்ரீ சங்கராசாரியரைப்போன்ற வேதாந்திகளே ஸ்ரீ விட்டல மூர்த்தியைப் பார்த்து பக்தி பரவசராய் இத்தோத்திரத்தைச் செய்தனரென்றால் பக்தர்கள் தம்மை மறந்து போவதிலாச்சரியமென்னவிருக்கிறது! இங்குள்ள விட்டலமூர்த்தி கர்நாடகத்திலிருந்து வந்ததெனச் சொல்வர்.

பூலோக வைகுண்டம்.

கன்னடநாட்டின் இவ்விட்டலமூர்த்தி புண்டலீகனின் தாய்தந்தை பக்திக்கு மெச்சி பண்டரிபுரத்தில் நிலைத்து கர்நாடகம், மஹாராஷ்ட்ரம், குஜராத் பிராந்தியங்களினின்றும் பக்தர்களை ஆகர்ஷித்து அவ்வூரையே பூலோக வைகுண்டமாய் மாற்றியுள்ளாரெனச் சொல்லுகின்றனர். அங்கு போய்ப் பார்த்தால் இந்த வார்த்தை நிஜமென்பது புலப்படும். யாத்திரை காலமாகட்டும், வேறு காலமாகட்டும் அங்கு எப்போதும் பஜனைகோஷ்டிகள், கொடிகள் ஊர்வலம், கைதட்டுதல், மிருதங்கத்வனி, ஹரிநாமசங்கீர்த்தனமும் முழங்கும். சிலவிடங்களில் பஜனை செய்வோரின் கூட்டம் பக்திப் பரவசத்திலாழ்ந்திருக்கும். அதனைப் பார்ப்போரின்

மனமு மதேவிதமாகும். சந்திரபாகையில் காலையில் அனேகர் ஸ்நானம் செய்திருப்பர். பலர் கடவுள் தரிசனத்துக்குப் போவர். பிச்சைக்காரர்கள் நிறைந்திருப்பர். யாத்திரீகர் அங்கங்கு கூடிப் பஜனை செய்வர். அங்குள்ள கீர்த்தனகாரர் எந்த ஜாதியினராயினும் துகாராம் முதலியோரைப்போல் சாது உடைகளைத் தரித்திருப்பர். இவர்கள் கூட்டத்தின் நடுவே இருப்பர். ஒருபக்கத்தில் தாளக்காரர், சேமக்கலங் கொட்டுவோர் நின்றிருந்தால் வேறொருபக்கத்தில் மத்தளக் காரர் நின்றிருப்பர். கீர்த்தனையில் நாமதேவர், துகாராம் முதலிய சாதுக்களின் ஆன்ற வசனங்களைச் சொல்லுவர். கதைகள் ஒரே மாதிரியிருப்பினும் நடுநடுவே பெரியோர் வாக்குகளும் விட்டலர், ருகுமாயி நாமங்களும் முழங்கப் பெறும். இவ்விதம் நெடுக கீர்த்தனைக்காரர் கூட்டமே மண்டியிருக்கும். கேட்கும் ஜனங்கள் எரியும் வெயிலில் மணலில் உட்கார்ந்தும் கீர்த்தனையில் மூழ்கியிருத்தலைப் பார்த்தாலெவர்க்கும் ஆச்சரியமுண்டாகாமலிராது. இக் கூட்டத்தில் ஸ்திரீ, புருஷ உணர்ச்சியில்லை. கணக்கற்ற ஜனங்கள் வருவதும் போவதுமாயிருப்பார்கள். கடை வீதியில் பொரி, கடலை, கற்பூரம் குவியல் குவியல்களாகக் காணப்படும். தேவாலயத்தின் பக்கத்திலுள்ள கடைகளில் பூமாலை, துளசிமணிமாலை வியாபாரம் வெகுவாய் நடக்கும். ஸ்ரீ விட்டலரின் கோயிலில் பகற்பொழுதில் எள் விழ இடமில்லாமல் பக்தர்கள் நிறைந்திருப்பர். கோயிலின் சபா மண்டபத்தில் எப்போதும் கீர்த்தனம், நர்த்தனங்கள் நடந்துகொண்டேயிருக்கும்.

ஸ்ரீ விட்டலின் தேவாலயத்துள் பிரவேசிக்கக் கிழக்

கிலும் வடக்கிலும், மும்மூன்றும், மற்ற திசைகளிலொவ்வொன்றுமாக வாயில்களுண்டு. கிழக்கு வாசலுக்கு நாமதேவர் வாசலென்ற பெயர். இங்கிருந்து பனிரெண்டு படிகளேறிப் போகவேண்டும். முதற்படி பித்தளைத் தகடடித்ததாய், இருமருங்கிலும் பக்த நாமதேவரின் உருவமுள்ளது. இவ்விடத்தில்தான் நாமதேவர் சமாதியடைந்தது. அடுத்த படியின்மேல் பக்தர்கள் யாரும் காலடி வைப்பது கிடையாது. நாமதேவர் படியின் மேற்படியில் பதினன்கு மனிதர்களுருக்கொண்ட பெரிய தகடு போர்த்தப் பெற்றிருக்கின்றது. நாமதேவர் சமாதியடைந்தபோது அவருடைய கூட்டாளிகளுள் பதினன்குபேர் அவரையனுசரித்தார்களென்பதற்கு இது, நிதரிசனமெனச் சொல்வர். ஸ்ரீ விட்டலர் (பாண்டுரங்கர்) தேவாலயம் 350 அடி நீளம், 170 அடி அகலமுமுள்ளது. படியேறிப் போனவுடன் முதலில் முக்தி மண்டபமகப்படும். அது குறுகியதாயுள்ளது. அதன் இருபக்கங்களிலும் மும்மூன்றறைகளிருக்கின்றன. இவைகளின்மேல் நகாரி அறையிருக்கின்றது. இடது பக்கத்தறையொன்றில் அழகிய சித்திவிநாயகமூர்த்தி யுண்டு. முக்திமண்டபத்தினின்றிரங்கி நான்கு படிகள் தாண்டியதும் 120 அடி நீளம் 60 அடி அகலமுள்ள முற்றமகப்படும். இதனிருபக்கங்களிலும் மேடைகளிருக்கின்றன. இதன் முன்னால் மரத்து மண்டபமிருக்கின்றது. சாதுர் மாஸத்தில் அங்கு எப்போதும் பஜனை நடக்கும். அதன் பக்கத்திலேயே இரண்டு சமாதிகளிருக்கின்றன. இம் மண்டபத்தின் வெளியில் 30 அடி உயரமான தீபமாலைகளுண்டு. பக்கத்தில் போதலேபுவா என்ற சாதுவின்

தேவாலய வர்ணனை.

சமாதியைக் காணலாம். அதற்கு முன்னுள்ள மரத்தின் சபாமண்டபத்தில் கருடன், மாருதி விக்ரஹங்களிருக்கின்றன. கருடவிக்ரஹம் ஸ்ரீ பாண்டுரங்கரின் எதிரேயிருக்கின்றது. ராமதாஸ ஸ்வாமிகள் ஸ்தாபித்த சிறந்த பலபீம விக்ரஹம் வலப்பக்கத்திலிருக்கின்றது. அங்கிருந்து படிகளேறிப் போம்போது மூன்று துவாரங்களுள்ள பிராகாரம் காணப்படும். அவைகளில் நடுத்துவாரத்துக்குப் பித்தளைத்தகடு போர்த்தி இருபக்கங்களிலும் ஜயவிஜயரின் விக்ரஹங்களை வைத்திருக்கின்றனர். இவ்விக்ரஹங்களின் பக்கத்தில் ஸரஸ்வதி, கணபதியின் மூர்த்திகளிருக்கின்றன. இத்துவாரத்தின் வழியாய் உள்ளே சென்றதும் 41 அடி அகலம் 45 அடி நீளமுள்ள பதினறு கால் மண்டபமகப்படும். கால்கள் கல்லினலாயவை. அவைகளில் இரண்டாம் வரிசையில் இரண்டாம் கம்பத்துக்கு வெள்ளி, தங்கத் தகடடித்திருக்கின்றனர். இக்கம்பத்தின் மேல் கருட விக்ரஹமிருக்கிறது. இது கருட கம்பம். ஸ்ரீ பாண்டுரங்கரின் தரிசனத்துக்குமுன் இக்கம்பத்தைக் கட்டிக்கொள்ளும் வழக்கமிருக்கின்றது. இம்மண்டபத்தின் மேற்கே உள்ளே போக வெள்ளிவாசலிருக்கிறது. அதன் முன் வரிசையான கம்பங்களுள்ள மண்டபமும், அதன் தெற்கில் யானை விக்ரஹமுள்ள வாசலுமுண்டு. மடியுடனிருப்பவர்கள் இவ்வாசல் வழியாய் உள்ளே செல்வர். வடக்குச் சுவற்றிலோர் பெரிய அறையுண்டு. இதில் வெள்ளிக்கட்டிலும், அதிக விலைபெறும் படுக்கையுமிருக்கின்றன. முன்னே சில அடிகள் தூரத்தில் ஸ்ரீ விட்டலரின் கர்ப்பக்ருஹமகப்படும். இது சுமார் 8 சதுர அடி விஸ்தீர்ணமுள்ளது. இதற்குக் கதவொன்றைத்தவிர வேறு

இவளைப்பற்றிய ஒரு கட்டுக் கதையுண்டு. அது பின் வருமாறு:—இவள் ச்யாமா என்னும் கணிகையின் மகள். அழகாயும், சங்கீதம், நாட்டியங்களில் வல்லவளாயுமிருந்தாள். சாது ஜனங்களின் கிருபையினால் இவள் விட்டலரின் பஜனையில் மூழ்கி, 'மங்கவேட' வென்ற பிரஸித்தியான தாமாஜிபந்த் என்னும் பக்தரினது ஊரினின்றும் இங்கு வந்து நிலைத்தாள். இவளது அழகு முதலாய குணங்கள் பிதர் சமஸ்தான நவாப் செவியில்விழ, அவன் இவளைத் தன்னிடம் கூட்டிவரச் சேவகர்களையனுப்பினான். ராஜ தூதர்களினின்றும் தப்பித்துக்கொள்ள அவள் ஸ்ரீ விட்டலரின் தேவாலயத்துட்புகுந்து, அவரைச் சரணடைந்தாள். அப்போது விட்டலர், கிருபையினால் அவளைத் தன்னில் ஐக்கியப்படுத்திக்கொண்டார். பிறகு அங்கு வீழ்ந்திருந்த அவள் களேபரமிருந்த விடத்தில் ஓர் மரம் தளிர்த்தது" என்பதாம். இதற்குச் சமீபத்தில் வலது பக்கத்தில் ஸ்ரீ வெங்கடேசரின் சிறு தேவாலயமிருக்கின்றது. அதைப் பிரதக்ஷிணம் செய்துகொண்டு முன்னே சென்றால் மஹாலக்ஷ்மி தேவாலயமகப்படும். வெள்ளைச் சிலையிலுள்ள (சலவைக்கல்) இவ்விக்ரஹம் வெகு அழகியது. அக்கம் பக்கங்களில் பல சிறு தேவர்களிருக்கின்றனர். ருக்மிணி தேவியின் கோயில் ஸ்ரீ விட்டலர் கோயிலின் பின்பக்கத்திலுள்ளதென முன்பே கூறியிருக்கிறோம். இம்மூர்த்தி இக்காலத்ததாய், கர்ப்ப கிருஹத்தில் இதனிருபக்கங்களிலுள்ள அறைகளில் 'ஸத்யபாமா', 'ராஹி' தேவிகளுளர். ருக்மிணிதேவியின் பூசாரிக்கு 'உத்பாத்' ரென்ற பெயருண்டு. சபாமண்டபத்தின் படியேறிப் போனதும் அரச மரமொன்றகப்படும். அதற்கு 'ஸுவர்ணச்வத்த'மென்ற

பெயரிடப்பெற்றிருக்கின்றது. இதைச் சுற்றிலும் பல தேவர்களின் மூர்த்திகளிருக்கின்றன. அங்கு நின்றும் பதினாறுகால் மண்டபம் வந்த உடன் ஸ்ரீ விட்டலரின் பாதுகைகளைக் காட்டுவார்கள். அவ்விடத்தில்தான் நாமாஜீ பந்துக்குக் கடவுள் தரிசனமேற்பட்டதாம். பிறகு முக்தி மண்டபத்தைத் தாண்டி வெளியில் வந்ததும் வலப்பக்கம் ஒரு ஆலமரத்தெதிரில் 33 கோடி தேவர்களின் கோயிலுண்டு. அத்தேவர்களினர்ச்சகர் இராமானுஜர் வழியினர். விட்டலர் கோயில் பிராகாரத்தைவிட்டு நாமதேவரின் படியிறங்கிப் பிரதக்ஷிணம் செய்யக் கிழக்கே திரும்பியதும் முதலில் கால பைரவரின் தேவாலயமெதிர்ப்படும். அதன் பக்கத்திலேயே கணபதியின் சிறிய கோயிலொன்றுண்டு. பைரவரின் கோயிலுக்குக் கிழக்கே சாகம்பரி தேவியின் ஆலயமிருக்கின்றது. இவ்வாலயமும், முன் சொல்லப்பட்ட மல்லிகார்ஜுனராலயமும் புராதனமானவை. அதற்குச் சமீபமாய் ஹோள்கர் மஹாராஜனரண்மனையும் அவன் கட்டுவித்த ராமமந்திரமுமிருக்கின்றன. மந்திரத்திலுள்ள விக்ரஹங்கள் வெகு சுந்தரமானவை. இதற்குச் சமீபமாய் ஸ்ரீமதி பாயஜாபாய் கட்டுவித்த முரளீதர தேவாலயமு மரண்மனையுமிருக்கின்றன. இதைச் சேர்ந்ததாய், இரண்டாம் பேஷ்வா பாஜீராவ் ஸ்தாபித்த வெள்ளைச் சிலையாலான மஹாதேவ மூர்த்தியிருக்கின்றது. சந்த்ரபாகைக் கரையிலுள்ள புண்டலீகன் கோயிலைப்பற்றி முன்பே கூறியுள்ளோம். அப்புண்டலீகன் கோயிலில் ஒரு சிவலிங்கமிருக்கின்றது. அந்த லிங்கத்துக்குப் பித்தளை முகக் கவசமணிவித்து அதனை நகை, வஸ்திரங்களால் அலங்கரித்துள்ளார்கள். புண்டலீகன் கோயிலின் தெற்கே ஆரூடு

மிடத்தில் விஷ்ணு பாதமிருக்கின்றது. அங்கொரு சிறிய கோயிலுள்ளது. பிரவாஹ காலத்தில் அது மூழ்கிப் போகும். பண்டரீ யாத்திரையையே செய்வோர் கயையிலுள்ள விஷ்ணு பாதத்திற்போல் இங்கு சிராத்தங்களைச் செய்வது வழக்கம். இவ்விடத்துக்கு வேணுவாதமென்றும் பெயருண்டு.

**பண்டரிபுர வர்ணனை.**

பண்டரிபுரத்தின் பழைய இடத்தில் காசியைப் போன்று, தெருக்கள் குறுகிச் சிறிய சந்துக்களைப்போன்றுள்ளன. இவற்றின்மூலம் வண்டிகள் கூடச் செல்லமுடியாது. இப்போது பண்டரீபுரம் விசேஷமாய்ப் பெருகியிருக்கிறது. புதிதாயேற்பட்ட பாகங்களில் தெருக்கள் அகலமாயிருக்கின்றன. சில அரண்மனைகளும், சில பெரிய மனிதர் தமக்காகவும் தம் ஜனங்களுக்காகவும் கட்டியதும், வேறு சிலர் பொது ஜனங்களுக்காகவுமாய்க் கட்டுவித்த பெரிய பெரிய தர்மசாலைகளும் இங்கிருக்கின்றன. புராதன கால வீடுகள்மட்டும் விசித்திரமானவை. இவ்வூரில் ஜல வசதி நன்றாயிருக்கிறது. இங்கு குங்குமம், கந்தப்பொடி செய்யும் தொழிற்சாலைகளுண்டு. எங்கு பார்த்தாலும் நல்ல மணம் வீசும். இங்கு முக்யமான பிரசாதங்கள்—குங்குமம், கந்தப்பொடி, பொரி, ரவிக்கைத்துண்டு, வளையல்.—இவை இங்கேயே செய்யப்பட்டு ஏராளமாய், மலிவாயக் கிடைக்கும்.

பண்டரிபுரம் வந்தவர்கள் இங்குள்ள காட்சிகளைக் காணின், பூர்வீக சாது ஜனங்கள் இதனை நிஜமாக

**பண்டரி தரிசன பலன்.**

வைகுண்டமாக மாற்றி இருப்பதாகக் காணும். ஹரிநாம சங்கீர்த்தனம் தவிர இங்கு வேறெதுவும் கேழ்க்கக் கிடைக்காது. இந்நகரத்தைவிட்டு ஸ்ரீ விட்டலரும் சந்திர பாகையும் போய்விட்டால் இங்கொன்றுமிராது. இவ்விடத்துக்கு துகாராம், ஞானதேவர் முதலிய மஹாராஷ்டிர சாதுக்களையனுசரிப்போரும், கர்நாடகம், மத்ய இந்தியா, குஜராத், பரோடா முதலான பிராந்தியங்களிலுள்ளோரும் யாத்திரை செய்கின்றனர். 'ஸ்ரீ விட்டலரைத் தரிசிக்க வேண்டும்! அரங்க மேடையில் நர்த்தனம் செய்யவேணும்' என்று ஓர் மஹாராஷ்டிர பக்தன் பாடியுள்ளான். யாத்திரீகர் ஒருதரமேனும் விட்டலர் கோயில் மண்டபத்திலுள்ள கல்லின்மேல் நர்த்தனம் செய்வார்களானல் பக்தரின் மஹிமை மனதில் எவ்வித பரிணாமத்தை உண்டாக்குகிறதென்பதையறிவர். யாத்திரீகர், யாத்திரை விதியெல்லாம் முடிந்தபின் இந்த மண்டபத்துக்கு நர்த்தனம் செய்ய வருவர். ஆடி, கார்த்திகை மாத ஏகாதசித் திருநாளில் 'பண்டரிபுரத்தில் காலரா பரவியிருக்கிறது. அதனல் உற்சவம் நிறுத்தப்பட்டிருக்கிறது' என அரசாங்கத்தார் பிரகடனம் செய்வர்; மேலும் இச்சமயத்தில் ஸ்பெஷல் ரயிலும் விடுவதில்லை. சாதாரண வண்டிக்குக்கூட பண்டரீபுரத்துக்கு டிக்கெட் கொடுப்பது கிடையாது. சில கிருஸ்தவப் பாதிரிமார் தம் கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டு—"இதென்ன தெய்வமய்யா உங்களது? இங்குள்ளது வெறுங்கல், நிஜமான தேவன் ஆகாயத்திலுளன். அவனைப் பஜித்துப் பூஜியுங்கள்" என்று போதிப்பர், இவ்வளவிலும் வெகு தூரத்திலிருந்து ஜனங்கள் பக்கத்து

மென்ற சிற்றூருண்டு. அங்கு கோபாலக்ருஷ்ணன் ஆலயம் முக்யமானது. அதனக்கம்பக்கத்தில் ஐந்தாறு ஆலயங்களிருக்கின்றன. அங்குள்ள கணேசன் தேவாலயத்தருகில் ஒரு பெரிய நீர்ச்சுனேயிருக்கிறது. அது யசோதை தயிர் கடைந்துகொண்டிருந்த பாத்திரமென்பர்! ஆடி, கார்த்திகைப் பௌர்ணமி தினம் இங்கு பெரிய திருவிழா நடக்கும். பண்டரிபுர யாத்திரிகர் இங்கும் வந்து கோபால கிருஷ்ணராலயத்திலுள்ள வேணு கோபாலரின் தரிசனம் செய்துகொண்டு, கடைசியில் ஸேவா ஸமாஜ ஆஸ்பத்திரி, அநாதாலயங்களேப் பார்த்துக்கொண்டு முன் செல்வர்.

கோபாலபுரம்.

---

## 3. சரித்திரப் பிரசித்திபெற்ற நகரங்கள்

**ப**ண்டரீபுர தரிசனமுடித்த யாத்திரீகர் குருட்வாடி ஸ்டேஷனடைந்து அங்கு பம்பாய் ரயிலேறிப் புனவை யடைவர். இந்தப் பிரசித்திப்பெற்ற நகரம் முளா, முடா நதிகளின் சங்கமத்திலுள்ளதும், இதே பெயருள்ள ஜில்லாவின் முக்ய பட்டணமுமாம். இது எம். எஸ். எம். (M. S. M.) ஜி. ஐ. பி. (G. I. P.) ரயில்வேகளின் ஜங்ஷன். மேலும் இது பம்பாய் அரசாங்கத்து இராஜதானி. 18ம் நூற்றுண்டில் பேஷ்வாக்களின் இராஜதானியாய் இது பிரசித்திபெற்றது. அதற்குமுன் இது ஒரு சிறிய கிராமம். இப்போது இந்நகரத்தின் ஜனசங்கியை சுமார் $2\frac{1}{2}$ லக்ஷமாகும். இவ்விடத்திலிருந்து நான்கு மைல் தூரத்திலுள்ள

புனு நகரம்.





6. பார்வதி தேவாலயம் இன்னொரு தோற்றம்.

கர்கி என்பது ஆங்கிலேயரின் தண்டு. (Cantonment). இங்கு 'ஸிடி', 'காம்பெ'ன்ற இரண்டு பாகங்களிருக்கின்றன. 'ஸிடி' பழைய காலத்ததும், 'காம்ப்' நவீன காலத்துமாதிரியுமாயுள்ளது. இது, யாத்திரை ஸ்தலமென்ற பிரஸித்தியில்லாவிடினும் பேஷ்வாக்களின் பழைய ராஜதானியென்றும், காலஞ்சென்ற லோகமான்யதிலகரின் வாஸஸ்தானமென்பதும் எல்லோருக்கும் தெரிந்தது. ஆயினும் இங்கு பார்க்கவேண்டிய தேவாலயங்களும், மூர்த்திகளுமுண்டு. இவைகளில் (1) பேஷ்வா நானுசாஹிப் காலத்தில் (1763) த்ரியம்பகேச்வரத்து கௌதமாச்ரமத்திலிருந்து கொண்டுவந்து ஸ்தாபித்த ஸ்ரீராம மந்திரம் (துளஸீபாகம்)—இதிலுள்ள விக்ரஹங்கள் சலவைக் கல்லினுல் செய்யப்பட்டுப் பார்வைக்கு வெகு மனோஹரமானவை—(2) பேலபாக் விஷ்ணு தேவாலயம், ஜோகேச்வரி, கஸ்பாபேட்டை கணபதி, ஆற்றங்கரையிலுள்ள ஓங்காரேச்வரர், ரவிவாரப்பேட்டை சோமேச்வரர், சுக்ரவாரப்பேட்டை ராமேச்வரர், ராஸ்தேவாடத்திலுள்ள இராமர் கோயில் —இவை பார்க்கத்தகுந்தவை. மற்றும் இங்குள்ள அரசாங்க, பொதுக்கட்டிடங்களில் கௌன்ஸில் ஹால், டெக்கன் காலேஜ், ஸிவில் இன்ஜினீரிங் காலேஜ், எரவாடா ஸெண்ட்ரல் ஜெயில், பைனுன்ஸ் பில்டிங்க், ஸஸூன் ஆஸ்பத்திரி, ரே ம்யூஜியம், பர்குஜன் காலேஜ், அக்ரிகல்சரல் (வியவசாய) காலேஜ், சிவாஜி மில்டரி ஸ்கூல், ஸர் பரசுராம் பாவ் காலேஜ், மீடியராலஜிகல் (வாயுமண்டலம் பரீக்ஷை செய்யுமிடம்) ஆப்ஸர்வேடரி, பண்ட் கார்டன்ஸ் (தோட்டம் பார்க்கத் தகுந்தவையாம். இங்குள்ள குதிரைப் பந்தய மைதானமும் பேர்போனது. இங்கே மார்க்கெட்டில்

மாதுளை, அத்திப்பழங்கள் விசேஷமாயகப்படும். பொதுக் கட்டிடங்களில் காலஞ்சென்ற ஸ்ரீமதி ரமாபாய் ரானடே, ஜி. கே. தேவதர் இவர்களின் முயற்சியினால் ஸ்தாபிக்கப்பட்ட பிரசித்தமான மஹிளா ஸேவாஸதனம் ஒன்று. இங்கு பட்டு, நூலாலைகளிருக்கின்றன. இங்கிருந்து காய்கறி, பழங்கள் வாகின் வாகினைப் பம்பாய் முதலிய பட்டணங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இதற்கெனவே வெஜிடபல் ஸ்பெஷல் வண்டிகள் விடப்படுகின்றன. இங்குள்ள நானுபேட்டை, பவானிபேட்டைகளில் லக்ஷக்கணக்கான ரூபாய் பொறுமான தானியவகைகள் வியாபாரமாகின்றது. மேலும் இங்கு பட்டுப்புடவை, வேஷ்டி, சரிகை வஸ்திரங்கள், ஜோடுகள், தாமிரப்பாத்திரங்கள் தயாராகின்றன. இப்போது பார்க்க வேண்டிய இடங்களில் பிரபாத் கம்பெனியாரின் பிரபாத் ஸ்டுடியோ வென்ற பேசும் படக்காட்சி சாலையுமொன்று. இதனை வேண்டுவோர் முதலில் அனுமதிபெற்றுப் போய்ப் பார்க்கலாம். இந்நகரத்துக்கு நைருதி (தென்மேற்கு) திக்கில் 6, 7 பர்லாங்கு தூரத்தில் பர்வதி என்ற சிறு குன்றிருக்கிறது. அங்கு பர்வதி (பார்வதி) தேவாலயமும், விஷ்ணு, கார்த்திகஸ்வாமி களினாலயங்களுமிருக்கின்றன. இவ்வாலயங்களுக்குப் பர்வதி ஸம்ஸ்தானத்தாரால் விடப்பட்ட மானிய நிலங்களிலிருந்துவரும் வரும்படி, பஞ்சாயத்தாரால் நன்கு தேவாலயங்களுக்குச் செலவிடப்படுகின்றது. இக்குன்றிலிருந்து நகரத்தோற்றம் மிக அழகாயிருக்கும். சதுச்ருங்கி என்ற இன்னொரு குன்று இந்நகரின் வடக்கே இரண்டு மைல் தூரத்திலுள்ளது. அங்கு சதுச்ருங்கி தேவியின் கோயிலுண்டு. தேவி நவராத்திரி காலத்தில் அங்கு பெரிய கூட்டம் சேரும். இந்நகரத்திலிருந்து

யாத்திரீகர் ஜி. ஐ. பி. வண்டியேறி, அங்கிருந்து 119 மைல் தூரத்திலுள்ள பம்பாய்க்குப் பிரயாணம் செய்வர்.

பம்பாய் நகரம்.

புனவிருந்து புறப்பட்டோர் வெகு வேகமாய்ச் செல்லும் ஜி. ஐ. பி. ரயிலில், மேற்குத்தொடர்ச்சி மலைகளைக் குடைந்து செய்யப்பட்டிருக்கும் குகைகளினூடே, நாலைந்து மணி நேரத்தில் பம்பாயையடைவர். இங்கு வருவோர் சாதாரணமாய் ஸி. பி. டாங்க் தெருவிலுள்ள ஹீராபாக் சத்திரம், மாதவபாக் சத்திரம், மேலும் ஸுகாநந்த சத்திரத்திலும் தங்குவார்கள். இப்பெரிய நகரம் சுமார் 22 சதுர மைல் விஸ்தீர்ணமுள்ளதாய், அரபிக்கடலோரத்திலிருக்கின்றது. இது 300 வருடங்களுக்குமுன் போர்த்துகீசியருக்குச் சொந்தமாயிருந்து, 1661ம் வருடம் போர்த்துகீசிய அரசகுமாரிக்குச் சீதனமாய் அவளை மணந்த இரண்டாம் சார்ல்ஸ் என்ற இங்கிலாந்து அரசனைச் சேர்ந்தது. 1668ல் அவ்வரசன் ஈஸ்ட் இண்டியா கம்பெனிக்கு வருடமொன்றுக்குப் பத்துப் பௌன் வாடகைக்கு ஒப்புவித்தான். இப்போது இங்கு அப்பணத்துக்கு ஒரு சதுரகஜ பூமியகப்படாது. 1782-83லிருந்து இது விருத்தியடையவாரம்பித்து, இப்போது ப்ரிடிஷ் சாம்ராஜ்யத்தின் இரண்டாம் பெரிய பட்டணமெனப் பெயர் பெற்ற கல்கத்தாவுடன் போட்டி போடுகிறது. மேற்கு சமுத்திரக்கரையிருப்பதால் இந்தியாவின் மற்ற நகரங்களைக் காட்டிலும் வியாபாரத்தில் முதன்மை பெற்றுள்ளது. வேறு நாடுகளிலிருந்து இங்குவரும் சாமான்களுக்கும், இங்கிருந்து வெளியேறும் சாமான்களுக்கும், இதுவே துறைமுகமாம். அதனால் உள்நாடு, வெளிநாடுகளுடன் வியாபாரம் செய்யும்



7. ஜி. ஐ. பி. ரயில்வே கம்பெனியின் விக்டோரியா டர்மினஸ் ஸ்டேஷன் பம்பாய்.



"பிரின்ஸ் ஆப் வேல்ஸ்" ம்யூஜியம் (பலவித பொருட்காட்சிசாலை) பம்பாய்.

இந்நகரம் பூராவும் பார்க்கத்தக்கதேயாயினும், விசேஷமாய்ப் பார்க்கவேண்டிய கட்டடங்களும் சில உண்டு. அவைகளிற் சிலவற்றைக் குறிப்போம்:—

**அரசாங்க-பொதுக் கட்டடங்கள்.** குலாபா லைட் ஹௌஸ் (கலங்கரை விளக்கம்), குலாபா மெமோரியல் சர்ச், எல்பின்ஸடன் தெருவிலுள்ள டெளன் ஹால், லைப்ரரி (புத்தகசாலை), ம்யூஜியம், மிண்ட் (நாணயமச்சடிக்குமிடம்), பப்ளிக் ஒர்க்ஸ் ஆபீஸ், ஜெனரல் போஸ்ட் ஆபீஸ், ஹை கோர்ட், ப்ரின்ஸெஸ் டாக் பாக்டரி, ராஜாபாய் (யூனிவர்சிடி) டவர் (கோபுரம்)—லைப்ரரி, ஸஸூன் மெகானிக் இன்ஸ்டிட்யூட், ஸர் கோவாஸ்ஜி யூனிவர்சிடி ஹால். விக்டோரியா டர்மினஸ் ஸ்டேஷன், ஜி. ஐ. பி. ரயில்வே தலைமை ஆபீஸ், முனிஸிபல் ஆபீஸ், க்ராண்ட் மெடிகல் காலேஜ், ஜெ. ஜெ. ஆஸ்பத்திரி, ராணிபாகிலுள்ள பசுசாலை, ஹாங்கிங் (Hanging) கார்டன், எல்பின்ஸ்டன் கார்டன், முதலியனவாம்—இந்நகருக்குச் சமீபமாய்ப் பார்க்கத்தக்க இடங்களில் காராபுரி, கெனரி-குகைகள், விஹாரங்கள், துளசி தலாவ்—இவை முக்யமானவை. இவ்விடங்களுக்குப் போகப் படகிலோ, ரயிலிலோ இரண்டு மூன்று மணி பிரயாணம் செய்யவேண்டும்.

இப்பட்டணத்துக் கதிதேவதையாய், இது பிரசித்திக்கு வருமுன்னிருந்தே பிரசித்தியடைந்துள்ள பம்பாய் தேவியின் மந்திரம் பாயதொணி என்ற

**தேவாலயங்கள்.** விடத்திலுள்ள சதுக்கத்திலிருக்கின்றது. இவ்வாலயத்தில் வேறு தேவதைகளின் விக்ரஹங்களுமிருக்கின்றன. இங்கு வந்துபோகும் ஜனங்களினால் இதற்கு நல்ல வரும்படியுண்டு. பிரதி செவ்வாய்,

வெள்ளிக்கிழமைகளில் இங்கு தரிசனத்துக்கு விசேஷமாய் ஜனங்கள் வருவார்கள். இதற்குச் சமீபத்தில் பூலேச்வர நாதரின் அழகிய கோயிலிருக்கின்றது. இங்கு குஜராதிப் பிராமணர் வில்வம் பூக்களைக்கொண்டு ஜனங்களைச் சூழ்ந்து கொண்டு, அவர்களினிடமிருந்து பணத்தைப்பெற எப்போதும் கையை நீட்டிக்கொண்டு உட்கார்ந்திருப்பர். வயிற்றுப் பிழைப்புக்காக பக்தர்களை எதிர்பார்ப்போரிவர். அங்கிருந்து கிர்காம் பின்ரோட்டில் சென்றால் மாதவ பாக்கிலுள்ள லக்ஷ்மீநாராயணர் கோயிலிருக்கிறது. இக் கோயிலிலுள்ள வெள்ளைச்சிலையில் செய்யப்பெற்ற மூர்த்தி பார்க்க அழகானதும் தரிசிக்கத்தக்கதுமாம். கிர்காமிலுள்ள டாகுரத்வார மந்திரமும் நன்றாயிருக்கிறது. இவையேயன்றி வேறு பல தேவாலயங்களுமிங்குள்ளன.

குலாபா ஸ்டேஷனிலிருந்து புறப்பட்டுக் கடற்கரையோரமாகவே செல்லும் பி. பி. ஸி. ஐ. ரயிலில் சர்ச் கேட், மரீன் லைன்ஸ், சர்னீ ரோட், ஸ்டேஷன்களைத் தாண்டும்போது மேற்குப் பக்கத்தில் நமக்குக் காணப்படும், ஜனங்கள் நடமாடும், மைதானத்துக்கு சௌபாதி என்ற பெயர். இம் மைதானம் குலாபாவிலிருந்து வாளுகேச்வரம்வரையில் அர்த்த சந்திர வடிவில் வியாபித்திருக்கிறது. இங்கு சாயங்காலத்தில் காற்றுவாங்க அனேகர், ஸ்த்ரீபுருஷர்கள் வருகிறார்கள். சௌபாதியிலிருந்து வாளுகேச்வரம்போகும் ரஸ்தா முடிவடையுமிடத்துக்கு வலப்பக்கத்தில் பாபுலநாத தேவாலயத்துக்குச் செல்லும் மார்க்கமகப்படும். அங்கிருந்து பார்த்தால் உயரவிருக்கும் அவ்வழகிய ஆலயத்தைக் காணலாம். பாபுலநாத தேவாலயத்துக்கு நூறு படிகளை

சௌபாதி.

னெட்டாம் நூற்றுண்டிலிருந்தே பிரசித்திபெற்றுள்ளதெனத்தெரிகிறது. இக்கோயில் முதலில் சிறியதாயிருந்து இப்போது அபிவிருத்தியடைந்து விசாலமாயிருக்கிறது. இதன் கர்ப்பகிருஹத்தில் சுமார் $1\frac{1}{2}$ முழ உயரமுள்ள மேடையின்மேல் அழகிய பிரபாவளேயின் நடுவே மூன்று சிலா (கல்) விக்ரஹங்களிருக்கின்றன. இவைகளில் நடுவிலுள்ளது மஹாலக்ஷ்மியும் வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலும் மஹா காளி, மஹா ஸரஸ்வதியுமாம். மஹாலக்ஷ்மி நான்கு கைகளோடு புலி வாஹனத்திலிருக்கிருள். மஹா காளி மஹிஷாஸுர வாஹனத்திலும் மஹா ஸரஸ்வதி மயில் வாஹனத்திலுமிருக்கின்றனர். கர்ப்பக்ருஹத்துக்குக் கொஞ்ச தூரத்தில் கல்லின் ஒரு புலியை உட்காருவித்து வெள்ளித்தகடு போர்த்தப் பெற்றிருக்கிறது. வருடா வருடம் சித்திரா பூர்ணிமையில் இங்கு விசேஷ உற்சவம் நடைபெறும். நவராத்திரியிலும் வைபமாய் உற்சவம் நடத்துகின்றனர். மஹாலக்ஷ்மி கோயிலின்பக்கத்தில் பஞ்சாயதன மந்திரமுள்ளது. அங்கு ஹரிநாராயணர், ஸ்ரீவிஞயகாதித்யர், நாகலேச்வரர், ரமேச்வரி, மயூரேச்வரரென்ற பஞ்சதேவதைகளின் மூர்த்திகளுண்டு. மஹாலக்ஷ்மி மேட்டிலிருந்து சுற்றுக் காட்சிகள் வெகு நேர்த்தியாயிருக்கும்.

இங்கு போரிபந்தர், குலாபாக்கள், ஜி. ஐ. பி., பி. பி. ஸி. ஐ. ரயில்வேகளின் முடிவு (Terminus) ஸ்டேஷன்கள்.

**போரிபந்தர், குலாபா.** இவ்விரண்டு ரயில்களும் வேறு வேறு மார்க்கங்களில் போனலும் தாதரில் இரண்டும் சந்திக்கும். போரிபந்தரிலிருந்து ஜி. ஐ. பி. 'லயனில்' மைலுக்கொன்ருய் ஆறு

ஸ்டேஷன்களிருக்கின்றன. குலாபாவிலிருந்து தாதர்வரை பி. பி. ஸி. ஐ. ரயிலில் ஏழு ஸ்டேஷன்களிருக்கின்றன. தாதரிலிருந்து இவை பிரிந்து வெவ்வேறு திக்குகளிற் செல்லும். காலைமுதல் ராத்திரிவரை இவ்விரண்டு மார்க்கங்களிலும் பத்து நிமிடங்களுக்கொருமுறை ரயில் போக்குவரத்துண்டு. இந்த சௌகரியங்களன்றி, ட்ராம், டெலிபோன் சௌகரியங்களுமிருப்பதனால் பம்பாயில் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்கு யாதொரு தடங்கலுமின்றிச் செல்லலாம். பட்டணம் இவ்வளவு பெரிதாய், ஜனம் நிறைந்திருப்பினும் அங்குள்ள வ்யவஸ்தையை (ஒழுங்கு)ப் பார்த்துத் தெரிந்துகொள்ளவேனும் பம்பாய் போகவேண்டும்.

---

## 4. நாஸிக் (பஞ்சவடி), த்ரியம்பகேச்வர யாத்திரை

नासिकंच प्रयागंच पुष्करं नैमिशं तथा ।
पञ्चमंच गयाक्षेत्रं षष्ठं कुत्र न विद्यते ॥

ब्रह्माण्ड पुराणे

गोदायाः सन्निधौ पुण्यं नासिकं नासिकोपमम् ।
यत्र माहेश्वरं लिङ्गं कपालेश्वर नामकम् ॥
वरुणारुणयोर्मध्ये यत्र गोदावरी नदी ।
तत्क्षेत्रं क्रोशमात्रंतु वाराणस्या यवाधिकम् ॥

स्कान्दपुराणे

एकतः सर्वतीर्थानि त्र्यंबकक्षेत्रमन्यतः ।
तुलया तोलयत्धाता त्र्यंबकंतु विशिष्यते ॥
त्र्यंबकक्षेत्र माहात्म्यं वक्तुं शक्तो न कश्चन ॥

पद्मपुराणे

काशी पुरो च केदारो महाकालोऽथ नासिकम् ।
यंबकं च महाक्षेत्रं पंचदीपा इमे भुवि ॥

देवी भागवते—अ २१ श्लोक ३२

**நாஸிக் மகத்துவம்.**

மிக அமூல்யமான பூமியின் உலோக, ரத்னங்களைக் காட்டிலும் உயர்ந்தவையெனப்பெற்ற அனேகம் உயிர் தேவாலயங்களும், துருவனைப்போல் நிலையான பதவியைத் தரும் புண்ய க்ஷேத்திரங்களும், பஞ்சப்ராணங்களால் சேதனத்தைக்கொண்டுள்ள மனித சரீரத்தை 'அஜராமர'மாய்ச் செய்யும் தீர்த்த ஸ்தானங்களும் நம் இந்தப் பாரதநாட்டில் அனேக இடங்களிலிருக்கின்றன. எல்லா ஜீவராசிகளையும் அனுக்கிரகிக்கவெனவவதரித்த பாரதகண்டத்தின் பூர்வீகர்களான ரிஷிகள், தீர்த்த ஸ்னானங்களினிடங்களையும், அவற்றின் அனேகவிதமான மஹத்துவத்தின் ஞானத்தையும், உலகத்தாரும் பாமரருமான முமுக்ஷுக்களின் வெளிக்கண்ணுக்குத் தெரிவிக்கும் மஹத்தான காரியத்தைப் புராணரூபத்தில் செய்து வைத்திருக்கின்றனர். அவைகளிலொன்றான ப்ரமாண்ட புராணத்தில் "இவ்வுலகில் அனேக தீர்த்தங்களிருக்கின்றன. ஆனால் அவைகளில் நாஸிக், ப்ரயாகை, புஷ்கரம், நைமிசம், கயை என்ற இவ்வைந்து க்ஷேத்திரங்கள் மிகப்பிரசித்திபெற்றவை. இவைகளை விட்டு ஆறாவது தீர்த்த க்ஷேத்திரமில்லை" என்று சங்கரன்

தன் புத்திரனுன ஸ்கந்தனுக்குக் கூறியிருக்கிருன். மேலும் “அவயவங்களிலெல்லாம் நாஸிகை (மூக்கு) முக்யமாயிருப்பதைப்போன்று பூதலத்தில் நாஸிக் க்ஷேத்திரம் முக்யமானது. இங்கு மாஹேச்வரலிங்கம் கபாலேச்வரரெனப் பிரசித்தியாயிருப்பதன்றி, அருண, வருண, கோதாவரி நதிகளும் சங்கமமாகின்றன. அதனுல் இது காசியைக் காட்டிலும் திலேயளவு அதிக மகத்துவமுள்ளதென ஸ்காந்த புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்காந்த வாமன புராணங்களில் இவ்விதம் இது சொல்லப்பட்டுள்ளது—“பச்சிம (மேற்கு) வாஹினியான யமுனே, உத்தர (வடக்கு) வாஹினியான கங்கை, தக்ஷிண (தெற்கு) வாஹினியான கோதாவரி, பூர்வ (கிழக்கு) வாஹினியான பயோஷ்ணி நதிகள் புண்யத்தைக் கொடுப்பவைகள். கோதாவரி தக்ஷிண வாஹினியானவிடத்தில் தானம் செய்வது சாமான்யமாய்க் கிடைக்கக்கூடாததும் புண்யந் தருவதுமானது. நர்மதைக்கரையில் தவம் செய்வது மேன்மையானது; ஜான்ஹவி (கங்கை)க்கரையில் மரணம் உத்தமம்; குரு க்ஷேத்திரத்தில் தானம் உத்தமம். ஆனுல் கோதாவரிக் கரையில் இம்மூன்றையும் செய்வது நல்லது.” இப்படி புராணப் பிரமாணங்களேப் பார்த்தால் கோதாவரிக் கரையிலுள்ள நாஸிக், த்ரியம்பக் க்ஷேத்ரங்கள் வெகு புண்யமானவையோடுகூட ச்ராத்த முதலான கார்யங்களும் இங்கு மேன்மையாவனவெனச் சொல்லப்பட்டிருக்கிறது.

த்ரியம்பக மகத்துவம்.

ஒரு காலத்தில் ப்ரம்மன் தராசினெருதட்டில் எல்லா தீர்த்தங்களேயும் இன்னென்றில் த்ரியம்ப க்ஷேத்திரத்தையும், நிறுக்க த்ரியம்பக தீர்த்த மஹிமையே அதிகமாயிற்ரும். அதனுல் த்ரியம்பகத்தின் மஹிமையை வர்ணிக்க

யாரும் சமர்த்தர்களல்லரெனப் பத்ம புராணத்தில் சொல்லப் பட்டிருக்கின்றது. மேலும் காசி, கேதாரம், உஜ்ஜயினி, நாஸிக், த்ரியம்பகேச்வரமென்ற இவ்வைந்து க்ஷேத்திரங் களும் ஐந்து தீபங்கள் என்றால்—ஸித்திஸ்தானங்களென்று தேவி பாகவதத்தில் சொல்லப்பட்டுளது. அதனால்தான் ஸ்ரீ சமர்த்த ராமதாஸ ஸ்வாமிகள் இங்கு காயத்திரி ஜபம் செய்து சித்தியடைந்தனர். அவ்விதமே ச்ருங்கேரி பீடத்தின் ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய சச்சி தானந்த ஸ்வாமிகளும், ப்ரம்மானந்த ஸ்வாமிகளும் இங்கேயே சமாதியடைந்தார்கள். பலவேறு தபஸ்விகளும் இந்தப் புனிதமான க்ஷேத்திரத்தில் தம் தேஹங்களைவிட்டனர். இதனால் இவ்விரண்டு க்ஷேத்திரங்களும் வணங்கத்தக்க வையும், புண்யந்தருவனவும், ச்ராத்த முதலிய கர்மங்களுக்கு மிக மேலானவையுமாம்.

**கோதாவரியின் வரலாறு.**

மேற்கூறிய நாஸிக், த்ரியம்பகேச்வரங்களுக்கு விசேஷ பெருமையுண்டாகக் காரணம் கோதாவரியே என்பதிற் சந்தேகமில்லை. எல்லாம் வல்ல இறைவன் ப்ரதிவி, அப்பு, தேஜசு, வாயு, ஆகாச மாகிய ஐம்பெரும் பூதங்களையுண்டாக்கி அவைகளிலொவ்வொருவித விசேஷ சக்தியை வைத்திருப் பதனால் வேதங்களின் கால முதலிவற்றுக்கு தேவதா ஸ்வரூப கௌரவமேற்பட்டுள்ளது. இக்காரணத்தினால் பெரிய பிர வாஹம் தேவதா ரூபமென்று ஜனங்களிடை எண்ண முண்டாயிருக்கிறது. இப்பிரவாஹங்களிலெல்லாம் கௌதமீ கங்கை எல்லா வனுதனிகளுக்கும், வணங்கத்தக்கதும், பூஜிக்கத்தக்கதுமாயுள்ளது. இக்கௌதமீ கங்கை எவ்வித முற்பத்தியாயது, காரணமென்ன? என்ற விஷயம்பற்றிப்

புராணங்களினின்று இதனையறியலாம்:— "ஸ்ரீ சங்கரர்-பார்வதியின் விவாஹ காலத்தில் விவாஹத்தைச் செய்விக்கப் பிரம்மதேவர் வந்திருந்தார். ஸப்தபதி (அமிமிதித்தல்) காலத்தில் உலக மாதாவாகிய பார்வதி தேவியின் காற்கட்டை விரலையவர் கண்டார். கண்டவர் மனதில் ஆசையெழவும் அவர் வெட்கமடைந்தவராய் அவ்விடம் விட்டகன்றார். சங்கரர் அதறிந்து அவரையழைத்து, அவர் பாவம் நீங்க த்ரிலோகங்களின் அனேக புண்ய தீர்த்தங்களைக் கொண்ட கமண்டலத்தையளித்தார். அதனைக்கொண்டு தன் பாவத்தைத் தீர்த்துக்கொண்டு மிகுந்ததைப் பிரமன் தன்னிடமே கமண்டலத்தோடு வைத்துக்கொண்டார். வெகு காலத்துக்குப்பிறகு பலி சக்ரவர்த்தி மிகப் பெருமிதத்தையடைந்த காலத்தே, விஷ்ணு வாமன ரூபங்கொண்டு அவனிடம் சென்று மூன்றடி மண் வேண்டிப் பெற்றுத் தன் ஒரு அடியினால் பூமியையளந்துகொண்டான். இன்னோரடி கொண்டு மேலுலகத்தையெல்லாம் அளந்தான். அப்போது தேவர்களெல்லாங்கூடிப் பிரமனிடமிருந்த புனிதமான கமண்டலு ஜலங்கொண்டு அப்பாதத்தைக் கழுவினர். கழுவின ஜலத்தை சங்கரர் தம் முடியில் தரித்துக்கொண்டார். அதுதான் கோதாவரி கங்கையாம். இக்கங்கை சங்கரரின் முடியில் ஒளித்திருப்பது பார்வதிக்குச் சகிக்கவில்லை. ஆகவே இவ்விஷயத்தை மகனான கணபதியிடம் தெரிவித்தார். அச்சமயத்தில் தென் தேசத்தில் மழையில்லாமல் பஞ்சமேற்பட்டிருந்தது. அப்போது கௌதமரின் ஆச்ரமத்தில்மட்டில் அந்த ஸ்திதியேற்படவில்லை. ஆதலால் சமீபத்திலிருந்த எல்லாப் பிராணிகளும் அவராச்ரமம் வந்து நிலைத்தன. கௌதமர் தம் தபோ பலத்

தினால் காலையில் நெல்விதைத்து, மத்தியானம் கதிரறுத்து, அதனைக்குத்தி அரிசியாக்கிச் சமைப்பித்து, எல்லோரையும் உண்பித்து வந்தனர். பார்வதியின் துக்கத்தைப் போக்கக் கௌதம ரிஷியே தக்கவரென நிச்சயித்து, கணபதி பார்வதியின் தாதியான ஜயா என்பவளைப் பசுரூபங்கொண்டு கௌதமரின் நிலத்தை மேயச் சொல்லியனுப்பினான்; தானும் கணேசமுனியென்ற பெயருடன் அவராச்ரமத்தில் தங்கினான். ஜயா பசுவாய்ப் பயிரை மேயத்தொடங்கினாள். கௌதமர் அப்பசுவையோட்டவென ஒரு தர்ப்பத்தை எறிந்தார். அவ்வளவுக்கே முன்னேற்பாட்டின்படி அப்பசு இறந்தது. கௌதமருக்கு கோஹத்தி தோஷமேற்பட்டதென்று ரிஷிகளும் பிராம்மணர்களும் அவரைப் பஹிஷ்காரம் செய்தனர். அப்போது அக்கோஹத்தி தோஷம் நீங்கும் வழியைத் தெரிந்தவர்களைக் கேட்கவும், கணேசமுனி முதலியோர்,—“சங்கரர் முடியிலிருக்கும் கோதாவரி கங்கையைப் பூலோகங் கொண்டுவருவையாயின் பாபம் நீங்குவதோடல்லாமல் பாபிகளும் உய்வார்கள்” என்னவும் கௌதமரும் தவம் செய்து, சங்கரரைச் சந்தோஷிப்பித்து, அவர் முடியிலிருந்த கங்கையை இவ்வுலகிற்குக் கொண்டு வந்தார். அக்கங்கை சிவன் முடியிலிருந்திறங்கி ப்ரம்மாத்ரி —சிகரத்திலுற்பவித்தாள்”—இவ்விதம் பூதலம் வந்ததனால் அந்நதிக்குக் கௌதமி என்றும் கங்கை என்றும் பெயராயிற்று. கங்கையென்றவிப்பெயர் பாகீரதிக்கும் கோதாவரிக்குமாம்.

இக்கோதாவரி—“आद्या सा गौतमी गङ्गा द्वितीया जाह्नवी स्मृता ।” முதலாவது கங்கை கௌதமி என்றும் இரண்

கோதாவரியின் மகிமை.

டாவது ஜான்ஹவி (கங்கை நதி) என்றும் பிரசித்தியாயிருக்கிறது. பிரமதேவரின் கைகளால் பூஜிக்கப்பெற்று, விஷ்ணு பாதத்தினின்றும் புறப்பட்டு, சங்கரர் முடியினின்றும் பிறந்த த்ரிவேதாத்மகவாதி கோதாவரிக்கு வ்ருத்தகங்கா என்ற பெயருண்டு. க்ருதயுகத்தில் இரண்டு லக்ஷம் வருடங்கள் கழிந்தபின்பு மாந்தாதா என்னுமரசன் ஆண்ட காலத்தே கூர்மாவதாரத்தில் ப்ரஹஸ்பதி ஸிம்மராசியில் பிரவேசித்தபோது, மாசி மாதம் சுக்லபக்ஷ தசமி தினம் மத்தியான காலத்தில் இக்கங்கை அவதரித்தாள். இந்த கோதாவரிக்கு ப்ராம்ஹி, வைஷ்ணவி, மாஹேச்வரி, கங்கை, கௌதமி, கோதாவரி, நந்தா, ஸுநந்தா முதலிய பெயர்களுண்டு. இக்காரணம் பற்றிப் பூஜிக்கத்தக்கவையும் பரிசுத்தமானவையுமான தீர்த்தங்களிலெல்லாம் கௌதமீ கங்கை புராதனமும் சிரேஷ்டமுமானது எனவும் இதனை நினைத்தமாத்திரத்தில் எல்லாப் பாவங்களும் நீங்குமெனவும் சொல்லப்பட்டிருக்கின்றது. மேலும் கௌதமரால் கௌதமீ-கங்கை உலக க்ஷேமத்துக்காகக் கொண்டுவரப்பெற்றமையாலும், பாரதீ-கங்கை பகீரதனது பிரயத்தினத்தினால் அவன் முன்னோர் நற்கதியடையவேண்டி இங்கு கொண்டுவரப்பெற்றமையாலும், கௌதமீ கங்கையின் மகிமை பாகீரதி கங்கையின் மகிமையைக்காட்டிலும் அதிகமானது. "தேவகுரு (பிரகஸ்பதி) ஸிம்மராசிக்கு வந்தபோது, அந்நாளில் கங்கா ஸ்நானம் செய்தால் கோடி ஜென்மங்களில் சேர்ந்த பாதகங்கள் தொலையும். எல்லா தீர்த்தங்களும், நதிகளும், சமுத்திரங்களும், க்ஷேத்திரங்களும், அரண்யங்களும், ரிஷியாச்ரமங்களும் ஸிம்மத்தில் குருவிருக்கும்

கின்றன. நாஸிக்கில் பூர்ணுவதாரரான ஸ்ரீ தாசரதி மன்), அனுதியான உபஜ்யோதிலிங்கமாய் ஸ்ரீ கபாலேச் பரர், இவர்களிருப்பதனுல் இது ஹரி ஹராத்மக க்ஷேத்திர மென்ற பெயர் பெற்றுள்ளது. மேலும் தக்ஷிண வாஹினி யான கோதாவரியின் மகாத்மியம் சிராத்த தானங்களுக்கு விசேஷ புண்யங் கொடுக்கக்கூடியதெனப் புராணங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. அவ்விதமே நாஸிக்கில் தக்ஷிண வாஹினியான கோதாவரியும், அருண, வருண முதலிய ஏழு நதிகள் கூடுவதும், ப்ரம்ம தீர்த்தம், ராம தீர்த்தம், அஸ்தி விலய தீர்த்தம் முதலான அனேக தீர்த்தங்களு மிருக்கின்றன. ஸ்ரீ ராமசந்திரன் இங்கு சிராத்த தானங் களைச் செய்து தசரதனைக் கரையேற்றினுன். ஸ்ரீ சங் கரனின் பிரம்மஹத்தி தோஷமும் இங்குதான் நீங்கியது. இறந்தோருக்கு உத்தம கதி கிடைக்கும்பொருட்டு அனேக இடங்களிலிருந்து அஸ்திகளைக் (எலும்பு) கொண்டுவந்து அஸ்திவிலய தீர்த்தத்தில் சேர்க்கின்றனர். அஸ்தி மூன் றரை நாழிகைக்குள் கரைந்துவிடுவதாய் பிரசித்தமா யிருக்கிறது.

**இதிகாச (சரித்திர) நாஸிக்.**

புராணத்தைக்கொண்டு பார்த்தால், 'कृतेतु पद्म नगरं त्रेतायांतु त्रिकण्टकम् । द्वापरेच जनस्थानं कलौ नासिकमुच्यते ॥ என்றால் "க்ருதயுகத்தில் 'பத்மநகர' மென்றும், த்ரேதாயுகத்தில் 'த்ரிகண் டக' மென்றும், த்வாபரத்தில் 'ஜனஸ் தான' மென்றும், கலியுகத்தில் 'நாஸிக்' என்றும் இது நான்கு யுகங்களில் பிரசித்தியானது. சரித்திரங்கொண்டு பார்க்கில், மத்திய ப்ராந்தியத்தில் ப-ஹுத (பரதபுரம்) என்றவிடத்திலுள்ள ஸ்தூபத்தின்

கல் வெட்டிலிருந்து இது க்ருஸ்து பிறப்பதற்குமுன் இரண்டாம் நூற்றுண்டில் பிரசித்தியடைந்திருந்ததெனத் தெரிகிறது. இப்போது இந்நகருக்குச் சமீபமாயுள்ள பாண்டவரின் குகைகளென்று பேர்போன குகைகளில் 18, 19ம் இலக்கமுள்ளவைகளில் கி.மு. 125லிருந்து 100 வரையிலுள்ள கல் வெட்டுக்களில் நாஸிக்கின் பெயரிருக்கின்றது. மேலும் தர்மம், வியாபார த்ருஷ்டியில் இது மிகப் பழைய காலத்திலேயே பிரசித்தியடைந்திருந்ததென்று, க்ரீஸ் தேசத்தின் பெயர்பெற்ற பூகோளக்காரரான டாலெமி (Ptolemy) என்பார் கி.பி. 150ல் எழுதியுள்ளார். பிற்கால சரித்திரத்திலும் இது பேர்போனதாய் சுமார் 1790ம் வருடம் இது மகம்மதியராட்சியில் சிலகாலம் 'குலசனுபாத்' என்ற பெயரையுமடைந்திருந்தது. 1818ல் சிவில் கமிஷனரான காப்டன் ப்ரிக் இதனைக் கைபற்றியபோது இங்கு பேஷ்வாவினதான 76 லக்ஷம் ரூபாய்கள் பெறும்படியான நகைகளும் 12 லக்ஷம் பெறும்படியான வெள்ளிச்சாமான்களுமகப்பட்டதாகச் சொல்லுகின்றனர். பிறகு 1843ல் ஐரோப்பியர் இங்கு செய்த பசுவதையும் 1853ல் ராகோஜி நாய்க்கர் செய்த கலகமும் சரித்திரத்திலுள்ளதாம்.

நாஸிக்-க்ஷேத்ரமும் வமிசாவளியும்.

இவ்வாறு புராண, சரித்திரப் பிரசித்திபெற்ற நாஸிக் நகரம் நாஸிக் ரோட் என்ற ஸ்டேஷனிலிருந்து சுமார் 5 மைல் தூரத்திலுள்ளது. ஸ்டேஷனிலிருந்து நகருக்குள் செல்லத் தார் ரோடிருக்கிறது. குதிரை, மோட்டார் வண்டிகளகப்படும். இந்த ஸ்டேஷனில் யாத்திரீகர் இறங்கியவுடன் இவ்விடத்து கங்காபுத்ரர்கள் (பண்டாக்கள்), யாத்திரீகருடைய பூர்வீகரின் வம்சாவளியை

எழுதிவைத்துள்ள புத்தகங்களுடன் வந்து, "உங்கள் ஊரெது, பெயரென்ன, வம்சம், குல கோத்திரங்களெவை. யார் உங்கள் புரோகிதர், நீங்கள் தங்கப்போவதெங்கே?" என்றிவ்விதமாய் ஒவ்வொருவரையும் கேட்பார்கள். இங்கு வந்த யாத்திரீகர் பண்டாக்களுடன் தங்கினால் அவர்களிடம் தம் பெயர், குலம், கோத்திரங்களை எழுதிக் கொடுப்பார்கள். பண்டாக்கள் அவ்யாத்திரீகர்களுக்கு எல்லா சௌகரியங்களையும் செய்து கொடுத்து, யாத்திரைக் காரியம் முடிந்த பின் அவர்களிடம் சம்பாவனை பெறுவார்கள். இப்படிப் பட்ட யாத்திரிகர் வம்சத்தார் பின்னால் நாஸிக் சென்றால் இந்தப் புரோகிதருடனேயே தங்கும் வழக்கமிருக்கின்றது. அவர்களும் தம் பெயர், குல கோத்திரங்களை எழுதுவிப்பர். ஒருவேளை நம் பூர்வீகர்களின் வம்சாவளி ஒரு பண்டா விடத்திலகப்படவில்லையானால், அது இருக்கும் மற்றொருவ ரிடத்திற்கு நாம் போகவேண்டும். நம்முன்னோரிறங்கி யிருந்த பண்டாவின் பெயர் தெரிந்து சொன்னால் மற்றை யாரும் நம்மிடம் வரமாட்டார்கள். அதில்லையாயின் நாம் யாராயினுமொரு பண்டாவோடு தங்கலாம். இப்பண்டாக் களின்மூலம் அனேகர், தம் வம்சப் பூர்வீகரை அறிந்து கொள்ளும்படியான வம்சாவளியைக் காப்பாற்றும் செயல் நடைபெறுகின்றது. சில அரச குடும்பத்தினரின் பாத்தி யதை முதலான விஷயங்கள் இவ்வம்சாவளியாலேயே ஸ்தாபிக்கப்பட்டதற்கு உதாரணங்களுண்டு. இக்காரியத் துக்காக யாத்திரீகரனேகர் இவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்கள். இவர்களைவிட்டுத் தனியே தங்கவும் நாஸிக்கில் பல சத்திரங்களுள்ளன. கோதாவரியினிரு கரையிலும் பட்டணம் வியாபித்திருக்கின்றது. வெள்ளம்

வந்தபோது நதியைத் தாண்டப் பாலங்கட்டியிருக்கின்றனர். பட்டணத்தில் யாத்திரீகர் தங்கக் கபூர்த்தல தர்மசாலை, திலபாண்டேச்வரத்தின் பக்கத்தில் தேவி மடம் முதலிய இடங்களிருக்கின்றன. பஞ்சவடியிலும் அனுகூலமான பல சத்திரங்களுண்டு. அவைகளில் பட்ஜி மடம், சேணவி மடம், ஸ்வாமி நாராயண மடம், அஜகரபுவா மடம், கேசவ மஹாராஜ மடம், ஸ்ரீ சங்கராசார்யர் மடம், மார்வாடி தர்ம சத்திரம் இவை முக்கியமானவை. தென்னிந்திய யாத்திரீகர் சாதாரணமாய் ஸ்ரீ சங்கராசார்யர் மடத்தில் இறங்குவர். கோதாவரியின் ஒரு கரையிலுள்ள பாகத்துக்கு நாஸிக் பட்டணமென்றும் மற்றொரு கரையிலுள்ள பாகத்துக்குப் பஞ்சவடியென்றும் பெயர். ஆற்றினிருகரையிலும் பித்தளை, தாமிரப் பாத்திரக்கடைகளும் மஞ்சள், குங்குமம், பழம், காய்கறிக் கடைகளுமிருக்கின்றன. நடுவில் ஆறோடு கின்றது. ஒருபக்கலில் சிராத்த பிண்டதானங்கள் நடைபெறும். மற்றொரு பக்கத்தில் ஜபமும் தியானமும் நடக்கிறது. இருகரையிலுமுள்ள கட்டடங்கள் அழகியவையும் மூன்று நான்கடுக்கு மாடிகளுள்ளவையுமாய்க் கண்ணைப்பறிக்குந் தன்மையன. தேவாலயங்கள், மடங்கள், சத்திரங்களும் ஆங்காங்குள்ளன. கங்கையில் வெவ்வேறு தர்ம, வியவஹார நோக்கங்கொண்டேற்படுத்தப் பெற்ற குண்டங்களும், அனேகம் சீமான்கள், அரசர்கள் இவர்கள் கட்டிவைத்த தர்மசத்திரங்கள், கட்டடங்கள், துறைகள் முதலியன விளங்குகின்றன. நகரிலுள்ள ஜனங்கள், வியாபாரிகள், யாத்திரீகரெல்லாம் நதிக்கரையில் கூடுவதால், பட்டணத்தைக்காட்டிலும் ஆற்றங்கரையே பார்க்க அழகியதாம். காலை மாலைகளில் ஜனநெருக்கம் அதிகம். கங்கை

(கௌதமி)யினிருகரையிலுமுள்ள அழகியதாயும், விசாலமாயுமிருக்கின்ற பிரதேசம் வேறெந்த புண்ணிய க்ஷேத்திரத்திலுமில்லையெனச் சொல்லலாம். மழை காலத்தில் இந்த விசாலப் பிரதேசம் ஜலமயமாயிருக்கும்.

நாஸிக்கின் கட்டடங்கள்.

நாஸிக்கிலும் பஞ்சவடியிலுமுள்ள பல தேவாலயங்களும், அங்கு நடைபெறும் உற்சவங்களும் பார்க்கத் தக்கவை. பண்டாக்களின் மூலம் இவற்றைத் தரிசிக்கலாம். ஸ்ரீ ராமசந்திரனின் அவதார கார்யங்களினால் இவ்விடம் மிகப் புனிதமானதோடன்றி, ஸ்ரீராமன் தசரதன் உத்தரக் கிரியைகளை இங்குசெய்து, அவரின் அஸ்தி (எலும்பு)யை இங்குள்ள ராமகுண்டமென்ற தீர்த்தத்தில் சேர்த்தமையால், இந்தியாவின் ஸனாதன தர்மத்தையனுசரிப்போரில் பலரும், அனேக இராஜர்களைச் சேர்ந்தோரும் உத்தரக் கிரியை செய்ய இங்கு வருகின்றனர்; மேலும் அஸ்திகளை ராமகுண்டத்தில் சேர்க்கின்றனர். வெய்யிற் காலத்தில் ஆற்றில் நீர் மிகக் குறைந்துபோகும். வற்றியும் போவதுண்டு. ஆயினும் ராமகுண்டத்தில் போடப்பட்ட எலும்பை அங்கு ஸ்நானம் செய்வோர் எவரும் பார்த்ததோ, தொட்டதோ கிடையாது! இத்தீர்த்தத்தில் ஆச்சர்யமான விசேஷம் இது. எவ்வளவு அழுக்கு விழுந்தாலும் இக்குண்டநீர் எப்போதும் பரிசுத்தமாயும் தெளிவாயுமிருக்கும். அதனால் அதற்கு 'பரமபாவனி' என்ற பெயரேற்பட்டுள்ளது. இங்ஙனமாய்ப் பலவிடங்களில் ஆர்யதர்மத்தின் சாக்ஷிகளிருப்பதனால்தான் இதுவரை அன்னிய தர்மங்கள் பல தடவை அதன்மேல் ஆட்சி செலுத்தினும் அத்தர்மம் கொஞ்சமுங் கெடாமல் கோடிக்கணக்கான இந்துக்களின் இருதயத்தில் தான் நிலைத்து நின்று ஒளிர்கின்றது.

நாஸிக்கில் செய்யவேண்டிய கருமங்களைச் செய்து முடித்தபின், வேறு காட்சிகளைக் காணத் தினமொன்றுக்குச் சுமார் நான்கணு கூலி கொடுத்தால் ஒரு வழிகாட்டி யகப்படுவான். அவனைக் கொண்டு காணவேண்டிய இடங்களை யெல்லாம் பார்க்கலாம்.

**நாஸிக்-பஞ்சவடி தீர்த்தங்கள்.**

நாஸிக் க்ஷேத்திர மகிமைக்குக் கோதாவரியொன்றே மூலகாரணமாயிராமல் அதிலுள்ள தீர்த்தம், தர்ம குண்டங்களும் காரணங்களாம். நாஸிக்கின் மேற்கே சுமார் 6 மைல் தூரத்திலுள்ள **கோவர்த்தன-கங்காபுரம்,** அக்னி மூலையில் சுமார் ஒன்று அல்லது ஒன்றரை மைலிலுள்ள **தபோவனம்** என்ற விடங்களில் கோதாவரியில் அனேக ஸ்னான கட்டங்களிருக்கின்றன. அவைகளில் 24 தீர்த்த குண்டங்கள் முக்கியமானவை. அவைகளில் பதினொரு தீர்த்தங்கள் கோவர்த்தனம், நாஸிக் இவைகளினிடையிலும், பத்து **சுந்தர நாராயணர்** கோயில் படிகளிலிருந்து **முக்தேச்வரர்** கோயில்வரையிலும் இருக்கின்றன. இவைகளில் முதல் பதினொன்று இவை:—(1) **கோவர்த்தனம்**—இது கோவர்த்தனபுரத்தருகிலுள்ளது. இங்கு ஸ்னானம் செய்து கோதானம் செய்தால் ஆயிரம் கோதான பலனுண்டெனச் சொல்வர். இதன் பக்கத்திலிருக்கும் மஹாதேவராலயத் துட்சென்று, தரிசனம் செய்தால் ஸுவர்ணதான பலன் கிடைக்குமாம். (2) பித்ருதீர்த்தம். இது கோவர்த்தன தீர்த்தத்துக்குத் தெற்கிலுள்ளது. இதில் ஸ்னானம் செய்து, பித்ருக்களுக்குத் தர்ப்பணம் செய்வதனால் சொர்க்கம் கிடைக்குமென்ற பாவனையிருக்கிறது. (3) **காலவதீர்த்தம்.** இதன் பலனும் பித்ருதீர்த்தத்தின் மாதிரியே. இங்கு

மலையின் சமீபத்திலிருக்கின்றது. இதனருகில் ஒரு சன் யாசி மடமுண்டு. இதன் ஜலம் காயங்களை ஆற்றுமெனக் கூறுவர். அக்னிதேவனின் ரோகம் இதில் ஸ்னானம் செய்ததனால் தீர்ந்ததென்று புராணங்கூறும்.—நாஸிக்கி னெல்லைக்குள்ளிருக்கும் பத்துத் தீர்த்தங்களில் முக்யமான வையிவை.—(1) சுந்தர நாராயணர் கோயிலின் நைருதி திக்கில் பத்ரிகாசங்கமும் அதனெதிரில் ப்ரம்மதீர்த்தமு மிருக்கின்றன. பத்ரிகாசங்கமத்தருகில் ஒரு சிறிய ஓடை கோதாவரியில் கலக்கிறது. அங்கு நீராடி, ஈச்வரனைத் துதித்தால், மஹாதேவன் பிரத்தியக்ஷமாய் நற்கதியளிப்ப னெனச் சொல்லப்பட்டிருக்கின்றது. ப்ரம்மதீர்த்தத்தில் ஸ்னானம் செய்வதால் புத்தி கூர்மைப்பட்டு விசாலமடையும். 'பிரம்மன் தன் படைப்புத்தொழிலில் தவறேற்படாதிருக்க இங்கு ஸ்னானம் செய்து தியானம் செய்யவாரம்பித்தான். சிவனும் விஷ்ணுவும், அவனிடமிருக்க வந்தனர். சிவன் அக்கரையிலுள்ள பஞ்சவடியில் கபாலேச்வரனானன். விஷ்ணு இக்கரையில் சுந்தரநாராயணனானனெனப் புராணம் கூறுகின்றது'. இங்கு குண்டத்தைத் தோண்டும்போது தோண்டும் இரும்பு பொன்னாயதாம். (2) சுக்லதீர்த்தம். பிரம்மதீர்த்தம், ராமகுண்டம் இவற்றின் நடுவேயுள்ளது. வெள்ளை எள்ளைத் தேய்த்துக்கொண்டு இதில் ஸ்னானம் செய்தால் பாவம் நசிக்கிறதாய்ச் சொல்லுவர். (3) அஸ்தி விலயதீர்த்தம். இது ராமகுண்டத்தின் மேற்கிலுள்ளது. நாஸிக்குக்குவரும் யாத்திரீகர் இதில் இறந்தோரின் எலும்பு களைப் போடுவார்கள். அப்படிப் போடப்பட்ட எலும்புகள் மூன்றரை நாழிகையில் கரைந்து நீராய்ப்போவதான மஹிமை எல்லோருக்கும் தெரிந்த விஷயம். (4) ராம

குண்டம், நாரோ சங்கரர் தேவாலயங்களின் நடுவே ராம கயா தீர்த்தமிருக்கின்றது. அதனெதிரில் அருண, சூர்ய, சக்ர, அச்வினி, தசாச்வமேதமென்கிற பஞ்சமஹா தீர்த்தங்க ளிருக்கின்றன. இவைகளைபற்றிக் கீழ்கண்ட கதையொன் றுண்டு:—“சூர்யனின் மனைவியான உஷைக்குக் கணவனின் தேஜஸ் சகிக்கமுடியவில்லை. அப்போது அவள் தன்னைப் போலவே ஒரு அழகிய ஸ்த்ரீயை உண்டாக்கித் தன் மக்களை அவளிடமொப்புவித்து, இவ்விஷயம் சூர்யனுக்குத் தெரி யாமல் இரகசியமாக வைத்திருக்கவேண்டுமென்று அவ ளிடம் வாக்குப்பெற்ருள். பிறகு உஷை கண்வரிஷியின் பர்ணசாலையடைந்து அங்கு வசிக்கலானுள். இந்நடுவில் இப்புது ஸ்த்ரீயிடம் சூர்யனுக்கு மூவர் மக்களுதித்தனர். அப்போது அவள் உஷையின் மக்களைச் சரியாய்க் கவனிக்க மறந்தாள். மக்கள் தந்தையிடம் முறையிட்டு, அவள் தமது சொந்தத் தாயா என்று சந்தேகங்கொண்டனர். அப்போது சூரியன் விஷயமறிந்துகொண்டு தன் மனைவியைத் தேடிக் கண்வரிஷியினுச்சிரமமடைந்தான். அங்கு அவனைப் பார்த்ததும் உஷை அச்வினி (குதிரை) ரூபங்கொண்டு ஜனஸ்தானத்தை நோக்கி ஒடினுள். சூரியனும் அந்த ரூபம் தரித்து அவளைப் பின்பற்றிப் பிடித்தான். அப்போது அவளிடம் அச்வினீகுமாரர்கள் பிறந்தனர். இவர்கள் தேவ வைத்தியராயினர்: வைத்தியர்களால் பூஜிக்கப்பெற்றவ ராயினர். சூரத் பட்டணத்தின் கிழக்கே ஆறு மைல் தூரத்தில் அச்வினி குமாரர்களின் பெரிய கோயிலிருக் கின்றது. என்று சூரியனும் உஷையும் சேர்ந்தார்களோ அன்று சந்தோஷமான நாளாயிற்று. அருணு, வருணு என்று நாஸிக்கில் பிரசித்திபெற்ற தாபீ, யமுனுவென்ற

சூரிய குமாரிகள் தந்தையைப் பார்க்கவந்தார்கள். பிரம்மனும் சூரியனைக் காணவந்து அவனுக்குத் தன் மக்களான மேதா, ச்ரத்தா, ஸாவித்ரி, காயத்ரி, ஸரஸ்வதி என்றவர்களைக் கலியாணம் செய்வித்தான். சூரியன் அச்வ (குதிரை) ரூபங்கொண்டபோது ஜனஸ்தானம்-பஞ்சவடியில் ஐவர் பிராம்மணர் வேதாத்தியயனம் செய்துகொண்டிருந்தனர். அவர்கள் சூரியனின் அச்வரூபத்தைக் கண்டு பரிகசித்தனர். அப்போது சூரியன் அவ்வடுக்களை (பிராமணச்சிறுவர்) ஐந்து வட (ஆலமரம்) ங்களாயிருக்குமாறு சபித்தான். அவர்களுமவ்வாறேயாயினர். அதனால் இவ்விடத்துக்குப் பஞ்சவடியென்ற பெயரேற்பட்டது. இவ்வட விருக்ஷங்கள் சீதாதேவியின் குகைக்குப் பக்கத்திலிருக்கின்றன. பிறகு ஸ்ரீராமசந்திரரின் தரிசனத்தால் இவ்வைந்து வடங்களும் புனிதமாயின." ராமகுண்டம், மற்றும் பாலாஜி தேவாலயங்களின் சமீபத்திலுள்ள சரஸ்வதியின் நடுவிலுள்ள கோதாவரியின் பாகத்தைப் பிரயாகை அல்லது ஹோமஸ்தளமெனச் சொல்வர். ப்ரம்மன் தன் சக்கரத்தினால் சூரியனின் தேஜஸைக் குறைத்தமையால் இங்குள்ள தீர்த்தத்தைச் சக்கரதீர்த்தமெனச் சொல்லுகின்றனர். இதன் பக்கத்தில் அச்வினீதீர்த்தமிருக்கின்றது. ராமகுண்டம், நீலகண்டேச்வர தேவாலயங்களின் நடுவில் தசாச்வமேதமென்ற புண்ணிய ஸ்தலமிருக்கின்றது. சீதையின் தந்தையான ஜனகமஹாராஜன் சொர்க்கங் கிடைப்பதற்கென இங்கு யாகம் செய்ததாகவும், இங்குள்ள நீலகண்டேச்வர லிங்கத்தை அவரே பிரதிஷ்டை செய்தனரெனவும் சொல்வர். முன்னால் ராமகயாதீர்த்தமிருக்கின்றது. அது நாரோசங்கரர் கோயிலின் எதிரிலுள்ளது. அங்கு

காத்ஜிமந்திரம், கண்ணுடி வீடு, சனிதேவர்மந்திரம், முடா அவர்களின் ராமமந்திரம், லக்ஷ்மண மஹாராஜாவின் ராம மந்திரம், அந்த்ருடகரின் க்ருஷ்ணமந்திரம், தண்டாயுத பாணிமந்திரம், கேசவமஹாராஜா மடம், புண அணுதி வித்யார்த்தி விடுதி (நாஸிக்-கிளை), பாலாஜிமந்திரம், மார் வாடிகளின் ராமமந்திரம், முள் மாருதி மந்திரம். (2) தபோ வனத்தெருவில்—பஞ்சமுகி ஹனுமான், லக்ஷ்மீநாராயண மந்திரம், லக்ஷ்மணஜீ மந்திரம், ராமமந்திரம், அக்ஷய வடம், சூர்ப்பணகி, கபிலாசங்கமம், ஏகநாத மஹாராஜா ஸமாதி. இங்கிருந்து டாகளி மாருதி மந்திரத்துக்குப் போகலாம். (3) நாஸிக் பட்டணத்தின் கோயில்கள்—ஸுந்தர நாரா யணர், ரகுநாதபடஜி மடம், தத்தமந்திரம், உமாமஹேச் வரர், பஞ்சரத்னேச்வரர், கோராராம, யசவந்த மஹாராஜா சமாதி, நீலகண்டேச்வர மந்திரம், முரளீதராலயம், லக்ஷ்மீ நாராயண மந்திரம், தாரகேச்வர மந்திரம், ஸ்ரீ பாலாஜி மந்திரம், திலபாண்டேச்வராலயம், முக்தேச்வர மந்திரம், கர்ப்பூரேச்வர (வீரசைவ) மந்திரம், ம்ருகவ்யாதேச்வர மந்திரம், கபூர்த்தலா அரசனின் ராமமந்திரம், கன்னட அவர்களின் மாருதி மந்திரம், ஜைனச்வேதாம்பர மந்திரம், டோங்கரேயின் கணேசமந்திரம், விச்ராமபாக் க்ருஷ்ண மந்திரம், பத்ரகாளி கோயில், காசாரதேவி மந்திரம், ஜைன திகம்பர மந்திரம், காஜீபுர நாமதேவ தையற்கார விட்டல மந்திரம், காளிகாமந்திரம், ஒடேகரரின் காயத்ரிமந்திரம்— இந்தக் கிரம்படி போம்போது நடுவில் சிறு சிறு தேவாலயங் களிருக்கின்றன.

(1) சுந்தரநாராயணர்—இது நாஸிக்கிலிருந்து பஞ்ச வடிக்கும் போகும்வழியில் விக்டோரியா பாலத்தினருகில்

**முக்கிய கோயில்களின் வர்ணனை.**

கிழக்கு முகமாயுள்ள கோயில். இதற்கு இரண்டு தடவை இடிவிழுந்து தெற்குக் கோபுரம் நாசமடைந்தது. இக்கோயிலில் மூன்று சாலக்கிராமச்சிலை மூர்த்திகளுண்டு. நடுவிலுள்ள நாராயணமூர்த்தி $1\frac{1}{2}$ அடி உயரமானது. இருபக்கங்களிலும் லக்ஷ்மியின் சிறுவிக்ரஹங்களிருக்கின்றன. ஒவ்வொருவருஷ மார்ச்சுமாதம் 20, 21-தேதிகளில் உதயகாலத்தில் சூர்ய கிரணங்கள் நாராயணரின் பாதத்தில் படும் வண்ணம் சமத்காரமாய் இதனைக்கட்டியிருக்கிறார்கள். 1756-ஹு கங்காதர யசவந்த சந்த்ர சூடனென்பான் இக்கோயிலையும் இதனெதிரிலுள்ள கட்டடத்தையும் சுமார் 10-லக்ஷ ரூபாய் செலவு செய்து கட்டினானென்றும், அதற்கு முன் இங்கு கூறிய கோயிலிருந்ததென்றும் கல் வெட்டிலிருந்து தெரிய வருகின்றது. (2) உமாமஹேச்வரர்—இக்கோயில் சுந்தரநாராயணர் கோவிலுக்கு 70-கஜதூரத்திலுள்ளது. கோவிலில் சாலக்கிராமச்சிலை விக்ரஹங்கள் மூன்று இருக்கின்றன. நடுவிலுள்ள மஹேச்வரமூர்த்தி இரண்டடி உயரமானது. வலப்பக்கத்தில் கங்கை, இடப்பக்கத்தில் உமா விக்ரஹங்களிருக்கின்றன. இவைகளை மராட்டியர் கர்ணாடகத்திலிருந்து சூறையாடிக் கொண்டு போயினரெனத்தெரிகிறது. 1758-ல் ஸவாய் மாதவராவ் பேஷ்வாவின் உறவினரிலொருவர் சுமார் 2 லக்ஷ ரூபாய் செலவு செய்து இதனைக்கட்டுவித்ததாகத் தெரிகிறது (3) நீலகண்டேச்வரர்—இத்தேவாலயம் கோதாவரியின் வலது கரையிலிருக்கின்றது. இதில் மிகப்புராதனமான ஒரு சிவலிங்க மிருக்கின்றது. 1747-ல் லக்ஷ்மண சங்கர ரென்ற சீமான் ஒரு லக்ஷ ரூபாய் செலவழித்து

இதனைக் கட்டினார் (4) பஞ்சரத்னேச்வரர்—நீலகண்டேச்வரராலயத்தின் நைருதிதிக்கில் 48-படிகளேறிப்போனால் வீடு போன்றுள்ள தேவாலயமிது. இதிலுள்ள சிவலிங்கம் ஸ்ரீராமர்காலத்தது. ஸ்ரீராமர் தங்கம், பச்சை, இந்த்ரநீலம், மாணிக்கம், முத்து இப்பஞ்சரத்னங்களையும் இத்தேவனுக்கு அர்ப்பணம் செய்தமையால், பஞ்சரத்னேச்வரனென்ற பெயரேற்பட்டதாகச் சொல்வர். 1758ல் யக்ஞேச்வரதீக்ஷித பட்டவர்த்தனனென்பான் சுமார் 15,000 ரூபாய் செலவுசெய்து இப்போதைய கோயிலைக் கட்டினனாம். (5) கோராராமர் — பஞ்சரத்னேச்வராலயத்தின் கிழக்கே சுமார் 10 கஜ தூரத்தி லிவ்வாலயமிருக்கிறது. இங்கு வெள்ளைச் சிலையினால் செய்யப்பட்ட 2½ அடி உயரமுள்ள ஸ்ரீராமர் சீதை லக்ஷ்மணர் பரதர், சத்ருக்னரின் விக்ரஹங்களிருக்கின்றன. கோயிலின் வேறுபாகத்தில் சுமார் நன்னான்கடி உயரமுள்ள எட்டுத்துதிக்கை கணபதி, சிவ பார்வதி சமேதமான மஹிஷாஸுர மர்தினி, கங்கை மாருதி இவ்விக்ரஹங்களிருக்கின்றன. இதை 1782-ல் பேஷ்வாவின் புரோஹித வம்சத்தார் கட்டினார்கள். (6) ஸீதலாதேவி. இது கோரா ராமர் கோயிலின் பக்கத்திலிருக்கின்றது. குழந்தைகளுக் கம்மை போட்டினால் பதினான்காம் நாள் ஜலம் விட்டுப் பதினைந்தாம் நாள் இங்கே அழைத்து வந்து தான தருமம் செய்வர். (7) முரளீதரர். கோரா ராமர் கோயிலுக்குத்தெற்கில் சுமார் 20-கஜ தூரத்திலுள்ளது. இதிலிரண்டுபக்கங்களிலும் கன்றுகளுடன் கூடிய பசுக்களும் நடுவில் புல்லாங்குழல் க்ருஷ்ண விக்ரஹமுமிருக்கின்றன. இக்கோயில் 1828-ல் கட்டப்பட்டது. (8) லக்ஷ்மீநாராயணர். 1896-ல் சேட் கமலாபாய் தேசாய் என்றவர் தம்

கணவன் ஞாபகார்த்தமாய் சுமார் 40,000 ரூ. செலவில் இக்கோயிலைக் கட்டுவித்தார். (9) தாரகேச்வரர் — இது 1780-ல் தாபிக்கப்பட்டது. இதன் சிற்பவேலை அழகானது. (10) ஸ்ரீபாலாஜி. இது கோதாவரி, சரஸ்வதி சங்கமத்திற்குப் பத்துப்பனிரெண்டு கஜ தூரத்தில் கிழக்கு முகமாயுள்ளது இதற்கு மூன்று வாசல்களிருக்கின்றன. நடுவில் பாலாஜி இடது பக்கம் ரமாதேவி, வலது பக்கம் லக்ஷ்மிதேவி இவர்களின் தாமிர விக்கிரஹங்கள் தங்கக்கிரீடத்துடன் திகழ்கின்றன. இத்தேவதைகளின் நகைகள் சுமார் 50,000 ரூ. பெறுமானவை. இக்கோயிலுள்ள விக்ரஹங்கள் வீர வைஷ்ணவரான பாலாஜிபாபா கோஸாய் என்பாரின் பாட்டன் தக்ஷிண தேச யாத்திரை போயிருந்த போது தாமிரபர்ணி நதியிலகப்பட்டன வென்றும் பின்னால் பாபாஜி ஒரு லக்ஷ ரூபாய் செலவழித்து 1771-ல் இக்கோயிலைக் கட்டினாரெனவும் சொல்வர். இக்கோயிலுக்குப் பேஷ்வாவினால் 11 இனும் கிராமங்களளிக்கப்பட்டுள்ளன. அதன்றி, சர்க்காரால் வருஷமொன்றுக்கு 2291 ரூ. கிடைக்கிறது. மேலும் சிந்தியா ஹோள்கர், காயக்வாட், தர்மபூர் முதலான அரச குடும்பத்தினரிடமிருந்து வருஷம் 8,100-ரூ. வருமானமுண்டு இங்கு ஐப்பசியில் நடக்கும் உற்சவம் அழகானது (11) திலபாண்டேச்வரர்—இது 1763-ல் 25,000 ரூ. செலவில் கட்டப்பட்டது. நாசிக்கிலுள்ள சிவலிங்கங்களிலெல்லாம் இதிலுள்ளதே பெரியது. (12) ம்ருகவ்யாதேச்வரர் (முருடேச்வர) கோயில்—இது காயத்ரி, கோதாவரி சங்கமத்துறையில் டில்லி வாசலின் பக்கத்திலிருக்கிறது. இவ்வூர் வாசிகள் இதனை முருகேச்வர ராலய மெனவுமழைப்பர். காயத்ரி, ஸரஸ்வதி, ச்ரத்தா, மேதா, தேவிகளை

ஷணை நடந்தது. காளை நாளை எஜமான் எனக்கு மூக்கங் கயிறு போட வருவான். அப்போது நான் அவனை முட்டிக் கொல்லுவேன்" என்றது. பசு—"அப்படி சொல்லாதே. அதனால் பிரம்மஹத்தி தோஷம் வரும். அது நிவர்த்தி யாவது கஷ்டம்" என்றது. அதற்குக் காளை 'எனக்கு அதனைப் போக்கிக் கொள்ள வழி தெரியும், நானொரு தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தால் அது போய்விடும்' என்று சொல்லிற்று. மறுநாள் மூக்கங் கயிறு மாட்டவந்த தேவ சர்மாவை அது முட்டிக் கொன்றது. அப்போது பிரம்ம ஹத்தி தோஷத்தினால் அதனுடல் கருமையாக மாறிற்று. உடனே அது கோதாவரிக்கரையில் ராமகுண்டத்தினருகி லுள்ள அஸ்திவிலய தீர்த்தத்தில் மூழ்கியெழுந்தது. அப்போது அதனுடல் முன்போல வெண்மையாய் மாறியது. ஆனால் வாயின் கொஞ்சபாகமும், வால் நுனியும் நீர்மட்டத்துக்கு மேலே இருந்தமையால் அவ்விடங்களில்மட்டும் கருமை நின்று விட்டது. இவை களையெல்லாம் பார்த்த சிவனும் நந்தியைத் தொடர்ந்து சென்று அக்குண்டத்தில் ஸ்நானம் செய்து, பிரம்ம ஹத்தி தோஷத்தினின்றும் விடுபட்டான்."—இக்கார ணத்தினால் நந்தி இங்கு ஈசனுக்குக் குரு ஸ்தானத்தி லிருப்பதால், இவ்விடத்தில் ஈச்வரனுக்குமுன் நந்தியில்லை. இக்கோயிலின் முன்னுள்ள ஸோபானங் (படித்துறை) களை க்ருஷ்ணஜி பாடீலபவார் என்பவன் 15,000 ரூபாய் செலவழித்துக் கட்டுவித்தான். மஹாசிவராத்திரி காலத்தில் இங்கு பெரிய உற்சவம் நடக்கிறது. (15) கோதாவரி கோயில்—இது கபாலேச்வரர் கோயிலின் மேற்குப்பக்கத்தில் 1834ல் கட்டப்பட்டது. இக்கோயிலிருக்குமிடத்தை

முதலில் ஆனந்தராஸ்தே என்பான், ஜ்யோதிர் வித்யா பூஷண ராமசந்த்ர கோலபரென்பவருக்குத் தானங்கொடுத்தான். இக்கோயிலுள்ள சுமார் ஐந்தடி உயரமுள்ள பரிசுத்தமானதும் அழகானதுமான வெள்ளைச்சிலை விக்ரஹம், கோலபரின் வேதவித்தையை மெச்சி இந்தூர் மஹாராஜாவால் வெகுமானமாகக் கொடுக்கப்பட்டது. (16) ஸீதாதேவியின் குகை—காளாராமர் கோயிலுக்குச் சமீபமாய், பஞ்சவடி விருக்ஷங்களுக்கருகில் இதிருக்கின்றது. இது, மனிதன் வசிப்பதற்கெனப் பூமியைத் தோண்டிச் செய்யப்பட்டதைப்போலுள்ளது. ஸ்ரீராமசந்திரன் வனவாசத்திலிருந்தபோது ஸீதையை இக்குகைக்குளிருத்தியிருந்தாணும். இக்குகையுள்ளிருந்து வேறிடத்துக்கு வழியிருக்கிறது. அது, ஸ்ரீராமன் புற்படுக்கையின்மேல் தூங்கிக்கொண்டிருந்த 'ராமசேஜ' என்ற மேட்டுக்குச் செல்வதாகச் சொல்லுகின்றனர். இப்போது அவ்வழி அடைக்கப்பட்டிருக்கின்றது. இக்குகை மிக நெருங்கியதாயும், காற்றுப் புக முடியாமலுமிருக்கிறது. ஆனல் உள்ளே பிரவேசித்தால் காற்றில்லாத தொந்தரையே தோன்ருமல் சுகமாயிருக்கக் காணலாம். இது இந்த ஸ்தலத்தின் மகிமை. ராவணன் சீதையை எடுத்துப்போனதிவ்விடத்திலிருந்தே என்று காட்டுவார்கள். இது ஒரு கோசாய் வசத்திலிருக்கின்றது. (17) பராசரரின் கங்கா மந்திரம்—இதிலுள்ள கங்கை விக்ரஹத்தைப் பம்பாயின் பிரசித்த சிற்பியான ரா. ப. மாத்ரெ அவர்கள் செய்து தானம் செய்தார். அது அழகியதும் பார்க்கத்தக்கதுமாம். (18) காளா ராம மந்திரம். பஞ்ச வடியிலுள்ள இராமர் கோயில்களிள் இது முக்யமானது. ஸ்ரீராமர் வனவாசத்

தின் போது எங்கு வசித்தாரோ, அதே இடத்தில் இது கட்டப்பட்டதாகத் தெரிய வருகிறது. இது கட்டச் சுமார் 12 வருஷங்களாயின. தினம் 2,000 கூலியாட்கள் வேலை செய்தனர். 1782-ல் இதனை சர்தார் ரங்கராவ் ஓடகர் என்பவன் முடித்தான். இதற்கு சுமார் 23,00,000 ரூபாய் செலவாயிற்று. சித்திரை மாதத்தில் இங்கு பெரிய உற்சவம் நடக்கும். (19) நாரோசங்கரர் தேவாலயம்—இதற்கு ராமேச்வர தேவாலய மென்றும் பெயருண்டு. இது பாலாஜி—தாமரேச்வர தேவாலயங்களுக் கெதிரில் கோதாவரியின் இடது கரையி லிருக்கின்றது. இதன் கட்டடம் மிக அழகாயும், சிற்பம் சித்திர வேலைகள் மனோஹரமாயு மிருக்கின்றன. நாசிக்கி லுள்ள சித்திர வேலைகளுள் இதுவே தலைசிறந்தது. இக்கோயிலில் ஐந்து கோபுரங்க ளிருக்கின்றன. கோயிலின் முன் பக்கத்தில் ஒரு பெரிய மணி கட்டப் பட்டிருக்கிறது. அதன் மேல் '1721' என்ற இலக்க மிருக்கிறது. அதனால் இது அவ்வருஷத்தில் செய்யப்பட்டதா யிருக்கலாமென ஊகிக்கப் படுகிறது. இதன் சுற்றளவு ஆறடி. இத்தேவாலயத்தை நாரோ சங்கர ராஜ பகதூரென்பான் 1756-ல் கட்டிவைத்தான். இக் கோயிலின் வடக்குப் பக்கத்தில் ஸப்தச்ருங்கி தேவியின் பெரிய மூர்த்தியுள்ள சிறிய கோயிலிருக்கின்றது—இது வரை விவரிக்கப் பெற்ற ஆலயங்களன்றி, கோதாவரியி னிருகரைகளிலும் அனேக சிறு தேவாலயங்களிருக்கின்றன. இங்கு பனிரெண்டு மாதங்களிலும் ஏதேனு மொரு திருநாள், உற்சவம் நடைபெறும்.

நாசிக்கின் சமீபமாய்ப் பார்க்கத்தக்க சிறிய பெரிய ஸ்தலங்களிருக்கின்றன. தண்டகாரண்யம் என்ற பெயர்

**அக்கம் பக்கத்தி லுள்ள ஸ்தலங்கள்**

பெற்ற பாகத்தின் மகத்துவம் புராண, தர்ம திருஷ்டியில் பெருமை பெற்றது. க்ருத யுகத்தில் சூர்ய வம்சத்து இக்ஷ்வாகுவின் குமாரனான தண்டகனென்னு மரசன் ஒரு நாள் வேட்டையாடி பார்க்கவ ரிஷியினுச்ரம மடைந்தான். ரிஷி ஆச்ரமத்தி லில்லை. அங்கு ரிஷியின் அரஜா என்ற மிக அழகான கன்னிகை இருந்தாள். அவள் தனியே இருக்கக் கண்ட வரசன் அவளிடம் மோஹங் கொண்டான். தன் விருப்பத்திற்கிணங்காத அக்கன்னிகையை அவன் பலாத்காரமாய்ச் சேர்ந்தான். அவள் ஒன்றும் செய்யமாட்டாமல் கிடந்தாள். அது கண்ட அரசன், அவ்விடம் விட்டகன்றுன். ஆச்ரமத்தையடைந்த பார்க்கவர் தன் மகளின் நிலையைக்கண்டு ஞானத்ருஷ்டியினுல் நடந்ததைத் தெரிந்து கொண்டு, உன் ராஜ்யத்தோடு நீயும் 7 நாட்களில்பஸ்மமாய்ப் போகக்கடவாய் எனத் தண்டகனைச் சபித்தார். தர்ம யுகத்தில் தர்ம விரோதமான செய்கை அரசனுல் செய்யப் பட்ட படியால், விந்தியம், சைவலம் என்ற பர்வதங்களின் நடுப்ரதேசம் அடர்ந்த காடாய், தண்டகாரண்யம் எனப் பெயர் பெற்றது. பஞ்சவடிக்குக் கிழக்கே சுமார் ஒருமைல் தூரத்தில், கோதாவரிக்கரையில் தபோவன மென்ற தலமிருக்கிறது. பூர்வத்தில் இங்கு அனேக மகரிஷிகள் தபம், யக்ஞ யாகங்கள் செய்து வந்தனர். ஸ்ரீராமன் ரிஷிகளின் யக்ஞ முதலானவைகளைக் கெடுத்து வந்த பல அரக்கர்களை வதைத்த இடமிது. இங்கு தவத்துக்கு யோக்யமான இடங்களும், தேவாலயங்களுமிருக்கின்றன. நாஸிக்கிலிருந்து சுமார் மூன்று மைல் தூரத்தில் சமர்த்த ராமதாஸ ஸ்வாமிகளின் தபோபூமியாய்,

இயற்கை யழகுநிறைந்த டாகளி என்ற ஸ்தலமுள்ளது. நாஸிக் நகரத்தின் தெற்கே ஐந்து மைல் தூரத்தில் பாண்டவ குகைகள் என்ற 24 குகைக் கோயில்களிருக்கின்றன. அவை புத்தர் காலத்தவை என்று அங்குள்ள கல்வெட்டுக்களால் தெரியினும், ஜனங்கள் அங்குள்ள கௌதம புத்தன், போதிஸத்வன், வஜ்ர பாணி, லோகேச்வரன் பத்ம பாணி லோகேச்வரன், புத்த தாராதேவி விக்ரஹங்களையே தர்மர், பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன், ஸ்ரீக்ருஷ்ணன், பீஷ்மன், கர்ணன், த்ரௌபதி விக்ரஹங்களென்பர். அங்குள சிலாசாஸனத்திலிருந்து பல சரித்திர வரலாறுகள் விளங்கும். நாஸிக்குக்குச் சமீபமாய் சாம்பார குகை அல்லது கஜவந்திக் குன்றென்ற ஜைனயாத்திரை ஸ்தல மிருக்கின்றது.

நாஸிக்கின் அக்னிமூலையில் 18 மைல் தூரத்தில் சரித்திரத்திலும், புராணத்திலும் பிரசித்தியான த்ரியம்பக க்ஷேத்திர மிருக்கின்றது. நாஸிக்கிலிருந்து இவ்விடத்துக்குப் போகும் போது 16ம் மைலில் நமக்ககப்படும்.

**த்ரியம்பக க்ஷேத்ரம்.**

பாணகங்கா நதியே த்ரியம்பகத்தின் கிழக்கெல்லையாம். இங்கு வந்தவுடன் தலப்புரோகிதர் வந்து நம் பெயர் முதலியவைகளை விசாரிப்பர். யாத்திரீகர்களிடமிருந்து தலைக்கு நான்கணு வீதம் இவ்வூர் "முனிசிபாலிடியார்" வரி வசூலிப்பர். 1271ம் ஆண்டிலிருந்து இது பல சரித்திரக்காரர்களால் கையாளப்பட்டுப் பெயர்பெற்றுள்ளது. இது முதலில் ஒரு தாலுக்காவாக இருந்த அடையாளங்களிருக்கின்றன. 1818ல் இது ஆங்கிலேயருக்குச் சொந்தமாயிற்று. 1866ல் இங்கு முனிசிபாலிடி ஸ்தாபிக்கப்பட்டது. 1887ல்



11. த்ரியம்பகேச்வராலயம், த்ரியம்பக் (நாஸிக்).



12. கங்காத்வாரம் (கோதாவரி மூலம்), ப்ரம்மகிரி,
(த்ரீயம்பகேசவரம்.)

முதல் இங்கு யாத்திரீகரிடமிருந்து வரிவசூலிக்கப்பட்டு வருகிறது. இவ்விடத்தில் சம்ஸ்கிருத பாடசாலை, வேத பாடசாலை, நூல் நிலையம், வ்யாயாம (தேகப்பயிற்சி) சாலை, பத்திரிகை நிலையம் (Reading Room), தர்மசாலை முதலிய பல பொதுக் கட்டடங்களிருக்கின்றன. நீர்க் குழாய்களிருப்பதனால் இங்கு ஜலக் கஷ்டமில்லை. ப்ரம்மகிரி என்ற குன்றைச் சார்ந்துள்ளது இக்கிராமம். ப்ரம்மகிரியில் கோதாவரி, அஹல்யா, வைதரணை, மற்றும் பச்சிம வாஹினி (மேற்குநோக்கிப் பிரவஹிக்கும்) கங்கை இவை உற்பத்தியாகின்றன. மிகப் பிரசித்திபெற்ற பன்னிரு ஜ்யோதிர் லிங்கங்களிலொன்றாய த்ரியம்பகேச்வரரென்ற ஜ்யோதிர் லிங்கம் இங்குள்ளது. த்ரியம்பகமென்றால் த்ரிநேத்ரமென்று பொருள். இங்குள்ள ஒரே கட்டினுள்ள மூன்று லிங்கங்கள் முக்கண்களைப் போன்றுள்ளன. ஜ்யோதிர் லிங்க தரிசனத்தினால் மேலான புண்யங் கிடைக்குமென்று புராணப் பிரசித்தம். இந்த க்ஷேத்திரத்தையும், இதன் முப்பக்கங்களிலுமுள்ள பிரம்மகிரியையும்பற்றிக் கீழ்க் குறித்த புராண வரலாறிருக்கின்றது.—“ஒருசமயம் பிரமன் தானொருவனே மிக மேம்பட்டவனெனவும், அதனால் சிவ மகிமை தன்னொருவனுக்குமட்டினும் தெரியுமெனவும் நினைத்திருந்தான். அவனது கர்வம் விஷ்ணுவுக்குச் சகிக்கக் கூடாமற்போகவும், தான் எவ்வளவோ தவம் செய்தும் தனக்கே தெரியாமலிருக்கும் சங்கர மஹத்துவம் பிரமனுக் கெவ்விதம் தெரியவருமென்றுகொண்டு பிரமனைக் குறித்து ‘நீ சங்கரன் தலை யெங்குள்ளதென அறிந்துவா, நானவன் பாதத்தைக் கண்டுவருகிறேன்’ எனச் சொன்னான். அப்படியே இருவரது பிரயத்தனமும் எவ்வளவு காலமாயினும்

த்ரியம்பகத்தின் தீர்த்தம், கோயில்கள்.

இந்த க்ஷேத்திரத்தின் முக்யமான தீர்த்தங்கள் இவ்வாறுள்ளன.—(1) குசாவர்த்ததீர்த்தம். கௌதமரிஷி குசத்தைக் (தர்ப்பை) கொண்டு கங்கையைத் தடுத்த காரணத்தால் இதற்கு இப்பெயரேற்பட்டது. யாத்திரீகர் ஸ்நானம், தானம், சிராத்தங்கள் செய்ய இத்தீர்த்தம் மேன்மையானது என்ற கொள்கையிருக்கிறது. (2) கனகலதீர்த்தம். இது குசாவர்த்தத்தின் கிழக்கிலுள்ளது. இதற்குத்தெற்கில் கஞ்சனதீர்த்தமிருக்கின்றது. அந்தணர் இதிலும் மற்றையோர் கனகலதீர்த்தத்திலும் பிண்டத்தைப் போடுவது வழக்கம். (3) கங்காத்வாரம். இது பிரம்மகிரியின் மேலுள்ளது. கங்கையினுற்பத்தியிடமிதுவாகையால் இதற்கு கங்காத்வாரமென்ற பெயராயிற்று. அங்கு கங்கையின் விக்ரஹமொன்றை வைத்து, அதன் கீழிருக்கும் கோமுகமூலம் ஜலம் பிரவஹித்து அடியிலுள்ள குண்டத்தில் விழும்வண்ணம் செய்திருக்கின்றனர். (4) பில்வதீர்த்தம். இது வடக்கில் நீலபர்வதத்தருகிலிருக்கின்றது. இதற்கெதிரில் பில்வகேச்வராலயமிருக்கிறது. (5) நீலபர்வதம். கிராமத்துக்கு வடக்கில் சுமார் அரை மைலிலுள்ள ஒரு சிறிய குன்று. இதன்மேல் நீலாம்பிகை, தத்தாத்ரேயர், நீலகண்டேச்வராலயங்களிருக்கின்றன. இங்கிருந்து இயற்கைக்காட்சி மிக அழகானது. (6) ப்ரயாகைதீர்த்தம். இதனை 1780ம் ஆண்டில் கொடையிற்சிறந்த அஹல்யாபாய் ஹோள்கர் கட்டுவித்தாள். (7) இந்த்ரதீர்த்தம். இதனெதிரில் இந்த்ரேச்வராலயமிருக்கின்றது. இவ்வளவேயன்றி, பல புண்ணியாத்துமாக்களால் கட்டிவைக்கப்பெற்ற ஏரி, குள முதலியவை

யனேகம் இங்கு விளங்குகின்றன — தேவாலயங்களில் முக்கியமானவை இவை:—(1) த்ரியம்பகேச்வரர் கோயில். இதன் சிற்பம் பழமையானது. இதைச்சுற்றி கோட்டையைப்போன்ற மதிட்சுவருண்டு. நடுவில் த்ரியம்பகேச்வரர் கோயிலிருக்கிறது. பக்கங்களிலுள்ள சிறு கோயில்களில் அழகான அஷ்ட பைரவர் முதலானவர் விக்ரஹங்களிருக்கின்றன. நடுவேயுள்ள முக்ய கர்ப்பகிருஹத்தில் கோலக் கல்லா லாக்கப்பெற்ற ஸ்வயம்பூ லிங்க பீடமிருக்கின்றது. மற்றைய இடங்களைப்போல் இதில் இங்கு லிங்க மில்லை. இங்குள்ள பீடத்தின் நடுவில் ஒரு சொம்பு நீர் கொள்ளும் குழியிருக்கின்றது. இதனடியில் பெருங்கொட்டைப் பாக் களவுள்ள ப்ரம்மா, விஷ்ணு மஹேச்வரரின் லிங்கங்களிருப்ப தாகச் சொல்லுகின்றனர். இல்லிங்கத்தின் மேற்பாகத்தி லிருந்து சூக்ஷ்மமாய்க் கங்கை பிரவஹிக்கிறது. அதனல் அப்பள்ளமான இடம் எப்போதும் ஈரமாயிருக்கும். சில வேளைகளில் நீர் கசியும் பிளவி லொரு சத்தம் கேழ்க்கப் படும். அதனை மேகநாதமெனச் சொல்வர். இத்தேவா லயம் பேஷ்வா நாஞ சாஹிப் காலத்தில் (1766) சுமார் 9-10 லக்ஷ ரூபாய் செலவில் கட்டி முடிந்ததென்பர். அரசாங்கத்தாரால் இத்தேவாலயச் செலவுக்கென வருடம் 12,000 ரூ. கொடுக்கப்படுகிறது. த்ரியம்பகேச்வரருக்குச் சொந்தமானதாய் இரத்தினக்கிரீடமொன்றும், பெரிய மரத் தேரொன்று மிருக்கின்றன. இக்கிரீடம் முதலில் மைசூர் அரசனிடமிருந்து, மொகலாயர் காலத்தில் டில்லி சேர்ந்த தென்றும், பிறகு பேஷ்வா பாவ்சாஹிப்பால் புனவுக்குக் கொண்டு வரப்பட்டு அவனல் இத்தேவாலயத்துக்கு அர்ப் பணம் செய்யப்பட்டதெனவும் ஒரு வரலாறிருக்கின்றது.

அக்கிரீடத்துக்குப் படத்தைப் போலுள்ள முத்தின் குச்சு மிக அழகாயிருக்கிறது. யாத்திரீகர் தரிசிக்கவென திங்கட் கிழமை தோறும் இதனை வெளியிலிடுவார்கள். இத் தேவாலயத்தின் ரதம் சுமார் 12,000 ரூ. செலவில் ஸ்ரீமான் விஞ்சூர்கர் தர்மமாய் 1865-ல் முடிக்கப்பெற்றது. அப் போதையிலிருந்து அவர் குடும்பத்தினரே இங்கு ரதோற்சவமேற்பாடு செய்து, அதன் செலவையும் கவனித் துக்கொள்ளுகிறார்கள். ரதோற்சவ தினத்தன்று ஸ்ரீ த்ரியம்ப கேச்வரரின் தங்கத்தாலாய பஞ்சமுகி முகவணிக்கு இக்கிரீடத்தைச் சாற்றி, விசேஷ வைபவத்துடன் பல்லக்கில் ஊர்வலம் செய்வித்து, ஸ்னானம் செய்யக் குசாவர்த்தம் கொண்டு செல்வர். சிவனுக்கு தினப்படி பூஜையில் வெள்ளியாலான ஒரு முகமுள்ள முகவணி யணிவித் திருப்பர். மஹாசிவராத்ரி, வைகுண்ட சதுர்தசி, கிரஹணம் இக்காலங்களில் இங்கு மஹா பூஜை நடைபெறும். இத் தேவாலயந் தவிர இங்கு ஸ்ரீராமமந்திரம், ஸ்ரீகங்காமந்திரம், பரசுராமமந்திரம், ஸ்ரீலக்ஷ்மிநாராயண மந்திரம். நிவ்ருத்த நாதமந்திரம், த்ரியம்பக கோட்டை, கேதாலேச்வர மந்திரம், இந்திரேச்வர மந்திரம், விஷ்ணுமந்திரம், த்ரிஸந்த்யேச்வரர், கஞ்சனேச்வரர், பல்லாள விநயகமந்திரம், ராமேச்வரர், கௌதமேச்வரர், காசி விச்வேச்வரர், ஜ்வரேச்வரர், முகுந் தேச்வரர், த்ரிபுவனேச்வரி, புவனேச்வரி — முதலான அனேக கோயில்களும், தேவர்களுமுண்டு.

பனிரெண்டு வருஷங்களுக் கொருமுறை ஏற்படும் ஸிம்மஸ்தபர்வணியில் ஒருவருஷ காலம் பெரிய திருநாள் நடக்கும். அப்போது கோதாவரி ஸ்னானத்துக்காக கோசாய் பைராகிகளின் 7-8 கூட்டத்தினர் தம்தம் சாமான்

த்வஜபர்வம்.

களுடன் கும்பல் கும்பலாய் ஒருத்வஜபர்வதத்தைச் சாதிக்க இங்கு முதலே தங்குவர். பர்வகாலத்தில் இக் கூட்டத்தார் தந்தம் கொடி, த்வஜங்களுடன் கும்பலாய் விசேஷ வைபவத்துடன், ஊர்வலம் வந்து குசாவர்த் தத்துக்கு நீராடச் சென்றுவருவர். அச்சமயம் ஒவ்வொரு கூட்டத்தின் மத்தியிலும் மஹந்துவும் அவனைச்சுற்றிப் பல வகையான சங்கம், பேரிகை, மிருதங்கம், கொம்பு, டம ருகம், (உடுக்கை) முதலியவைகளை முழங்கிக்கொண்டு நிதானமாய் ஊர்வலம் வருவோர் சிஷ்யர் கூட்டங்களும், பார்ப்போருக்குக் கைலாசத்திலிருந்துதான் சிவகணங்க ளுடன் விபவத்தோடு சங்கரன் ஊர்வலம் வருகிறானோ எனத்தோன்றும். அவ்விதம் வெளிப் பிராந்தியங்களி லிருந்து வரும் கோசாய் பைராகிகளின் கூட்டத்தினரில் சிலர் மடங்களிங்கு இருக்கின்றன. வேறு சிலருக்குத் தற்காலத்தில் மட்டும் ஏற்படும்.

இவ் யாத்திரை விதியில் பிரம்மகிரியைப் பிரதக்ஷிணம் செய்வதும் ஒன்று. இப்பிரதக்ஷிணம் பத்து க்ரோசம் (18 மைல்) உள்ளதெனச் சொல்லுகிறார்கள்.

பிரம்மகிரிப் பிரதக்ஷிணம்.

நன்றாய் நடக்குமொருவனுக்கு ஒரு பிரதக்ஷிணம் செய்ய 3 மணி காலம் வேண்டும். காலையில் தணிந்த வேளையில் குசாவர்த்தத்தில் ஸ்நான, ஜபங்களை முடித்துக்கொண்டு, குசாவர்த்தத்தை வலஞ்செய்து, ஸ்ரீ த்ரியம்பகேச்வரரைத் தரிசித்துப் பின்பு சனி, மாருதித் தெருக்கள்மூலம் பிரயாக தீர்த்தத்துக்குப் போகவேண்டும். பிறகு அதனைச்சுற்றிக் கொண்டு, வெவ் வேறு திசைகளிலுள்ள தெருக்களின் மூலம் சென்று லிங்க வடிவான ஐந்து சிகரங்களுள்ள பிரம்மகிரிப்பிரதக்ஷிணம்

முடிக்கவேண்டும். கடைசியில் மறுபடி த்ரியம்பகேச்வரரைத் தரிசனம் செய்து, குசாவர்த்தத்தையும் வணங்கினால் பிரதக்ஷிணம் முடிந்ததாகும், இவ்விதம் பிரதக்ஷிணம் செய்யும் போது தெற்கு வழியில் ஸரஸ்வதி பாரி, ராமதீர்த்தம், பாணகங்கா, நிர்மலதீர்த்தம், வைதரணி, நாகதீர்த்தம், கௌதமாச்ரமம், தவள கங்கா, சாலீ தீர்த்தம், பத்ம தீர்த்தம், புஜங்க தீர்த்தம், கணேச தீர்த்தம், பில்வதீர்த்தம், நீலாம்பிகாதேவி கோவில், முகுந்ததீர்த்த மென்ற புனிதத் தலங்களும் தீர்த்தங்களுமகப்படும். இப்பிரதக்ஷிணத்தில் ஹரிஹரப்பிரதக்ஷிணே" என்பது 10 க்ரோச தூரமுள்ளது. இதன் வழி வைதரணீ நதிவரை ஒரே வழியாகி, அங்கு வேறு ரஸ்தா பிரிந்து பிரம்ம கமண்டலுதீர்த்தம், ஹரி ஹரதீர்த்த முதலியவற்றைத் தாண்டி நரஸிம்மதீர்த்தத்தி னருகில் வந்துசேரும். இவ்விதம் நாஸிக், த்ரியம்பக் யாத்திரையை முடித்துக்கொண்டு யாத்திரீகர் நாஸிக்கி லிருந்து நர்மதைநதி ஸ்னானத்துக்காக ராம்மோஹன் ஸ்பெஷலேறி ஹோஷங்கா பாத் செல்வர்.

---

## 5. ஹோஷங்காபாத் (நர்மதாபுரம்), போபால், உஜ்ஜயினி, க்வாலியர் யாத்திரை.

गङ्गा कनखले पुण्या, कुरुक्षेत्रे सरस्वती।
ग्रामे वा यदि वाऽरण्ये पुण्या सर्वत्र नर्मदा॥
स्कान्द पुराणे रेवाखण्डे अ. १०३

நாஸிக்கிலிருந்து புறப்பட்ட யாத்திரீகர் டில்லி போகும் ஜி. ஐ. பி. ரயில் மார்க்கமாய் மன்மாட், சாளீசகாம்,

ஹோஷங்கா பாத்.

பசோர், ஜிளகாம், புசாவல் (இது தபதி நதிக்கு 2½ மைலிலுள்ளது), காண்ட்வா, இடார்சி தாண்டி ஹோஷங்காபாத்தில் இறங்குவர். போபால், ஆக்ரா, மதுரா போகும் யாத்திரீக நர்மதை ஸ்னானத்தை இங்கேயே செய்வர். (அன்றி இடார்சியிலிருந்து ஜபல்பூர் மார்க்கமாய் நேரே பிரயாகை செல்வோர் ஜபல்பூரிலிறங்கி அங்கோ அதற்குச் சமீபத்தி லுள்ள மார்பல்ராக்ஸிலோ (பேர்காட் ஸ்டேஷன்) இறங்கி நர்மதை ஸ்னானம் செய்து முன்செல்வர். வேறோரிடத்தில் இது விவரிக்கப்படும்). ஹோஷங்காபாத் ஸ்டேஷன் ஜி. ஐ. பி. ரயில் நேர் மார்க்கத்தில் (Main Line) உள்ளது. ப்ளாட்பாரத்திலிருந்து ஊர் அரை மைலிலிருக்கின்றது. இது இந்தப் பெயருடைய ஜில்லாவின் முக்கிய பட்டண மாகையால் இங்கு, கமிஷனர், டெப்யுடி கமிஷனர் முதலி யோரின் கச்சேரிகளும், பள்ளிகளும், பெரிய தெருக்களு மிருக்கின்றன. இவ்வூரின் வடக்கில் நதியின் அக்கரையில் போபால் ஸமஸ்தானத்தில் எல்லைப்புறமிருக்கின்றது. இது நருமதைக் கரையிலுள்ள ஊர். இதற்குச்சமீபமாய் நர்மதை, பாராதவா, (கரடியா) நதிகளின் சங்கமத்தில் ப்ருந்தாவன மென்ற தீர்த்தமிருக்கிறது. அங்கு முக்யமாய்ச் சங்கரர் மற்றும் இதர தேவர்களினாலயங்களிருக்கின்றன. ஊரிலும் பல கோயில்களும், தர்மசாலைகளுமிருக்கின்றன. நதிக் கரையிலுள்ள துறைகளிலெல்லாம் ஜானகி ஸேடாநிகாட் பெயர்பெற்றது. அதனருகில் நர்மதாதேவியினாலயமும் தர்மசாலையுமிருக்கின்றன. கார்த்திகை பூர்ணிமையில் சங்க மத்தில் பெரிய திருநாள் நடக்கும். இவ்வூருக்கு முதலில் நர்மதாபுரமென்று பெயரிருந்ததாகப் போபாலிலகப்பட்

டுள்ள சாஸனத்தால் தெரியவருகிறது. 12ம் நூற்றாண்டில் மாளவதேசத்து ஹூஷங்கஷாஹனின் காலத்தில் இதற்கு ஹோஷங்காபாதென்ற பெயராயிற்று. சங்கமத்தருகிலுள்ள 'குல்ஜாரிகாட்' டிலிருந்து ஹொஷங்காபாத்தின் துறை, தேவாலயங்கள் இவற்றின் காட்சி அழகாயிருக்கும்.

**நர்மதையின் மஹிமை.**

இந்து தர்ம சாஸ்திரப்படி பாரதநாட்டில் கங்கை, யமுனை, கோதாவரி, ஸரஸ்வதி, நர்மதை, சிந்து, காவேரி இந்நதிகள் மிகப் புனிதமாயவை என்ற பாவனையிருக்கிறது. இவ்வித புனித நதிகளிலொன்றாய நர்மதை நதியின் மஹிமை புராணங்களில் வருணிக்கப்பட்டுள்ளது. ஓரிடத்தில் "கலியுகத்தில் ஸ்ரீநர்மதையை நினைத்த மாத்திரத்தில் பாபங்களும், தரிசனத்தால் மூன்று ஜென்மங்களில் செய்த பாபங்களும், ஸ்னானம் செய்வதனால் ஆயிர ஜன்மங்களின் பாபங்களும், நசிக்கும்" எனச் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்காந்த புராணத்தில் "கனகல க்ஷேத்திரத்தில் கங்கையும். குரு க்ஷேத்திரத்தில் ஸரஸ்வதியும் புண்ணியந்தருவனவாம். ஆனால் நர்மதை கிராமத்திலோ, அரண்யத்திலோ எந்தவிடத்திலாயினும் சரி, அவ்விடத்தில் எப்போதும் புண்ணியந்தரத்தக்கதாம்" எனச் சொல்லியிருக்கிறது. "பகவான் ஸ்ரீசங்கரன் உக்ரதபஸ் செய்துகொண்டிருக்க அவனுடைய தேஜோம்சத்திலிருந்து நர்மதை பிறந்தாள். அதனால் இந்நதியில் நீராடிச் சங்கரனைப் பூஜிப்போருக்குச் சுவர்க்கம் கிடைக்கு" மென மத்ஸ்ய (மச்ச) புராணங் கூறும். கூர்ம புராணத்திலும், இது ருத்திரனின் தேகத்திலிருந்து பிறந்ததெனச் சொல்லப்பட்டிருக்கிறது. சிவபுராணத்தில் "நர்மதை நதி சிவன் ரூபமாயிருக்கிறது. அதனால் இதன்

கரையில் கணக்கற்ற சிவலிங்கங்களிருக்கின்றன" எனச் சொல்லப்பட்டுள்ளது. இக்காரணம்பற்றித்தான் இந்தியாவி லுள்ள பெரும் சிவாலயங்களிலுள்ள சிவலிங்கங்க ளெல்லாம் நர்மதையிலிருந்து கொண்டுவந்தவையாகும். இதனால் 'நர்மதாகே கங்கர, வேஹீ சிவசங்கர' என்று மொழி யேற்பட்டிருக்கிறது. இதன் மகிமை ஸ்காந்த புராணம், வாயு புராணங்களிலுள்ள ரேவா கண்டங்களில் வருணிக்கப்பட்டுள்ளதல்லாமல் வேறாய், 'நர்மதாபுராணமே' செய்யப்பட்டிருக்கின்றது. இந்நதி ரீவா சமஸ்தானத்தின் ஸோஹாகபுரத்தைச் சார்ந்த அமரகண்டகமென்ற கிராமத்தி னருகிலுள்ள ஒரு குண்டத்திலுற்பத்தியாகின்றது. இக் குண்டம் மைகல பர்வதத்தின் மேலிருப்பதனால் நர்மதைக்கு மைகலஸுதையென்றும், சங்கரனின் சரீரத்தினின்றும் பிறந்தமையால் சாங்கரி என்றும் பெயருண்டு. இப்பர்வதம் சங்கரன் தவம் செய்த இடமாம். அமரகண்டகம் சமுத்திர மட்டத்துக்கு 3000 அடி உயரத்திலிருந்து நர்மதையின் உற்பத்தி ஸ்தானமாயிருப்பதால் இந்துக்களுக்குப் பவித்திர மான தீர்த்தஸ்தானமாகும். இந்நதி அனேகம் மலைகாடுக ளூடு செல்வதனால் கரையடங்கலும் இயற்கையழகு விசேஷம். இவைகளின் விவரத்தை 'நர்மதா ரகஸ்யம்' என்ற புத்தகத்தில் விரிவாய்க் காணலாம். இந்நதியின் கரையிலுள்ள சில குன்றுகளில் மணமுள்ள பஸ்பம் கிடைக்கும். இதிலிருந்து நர்மதைக் கரையில் அனேக பெரிய யாகங்கள் பல வருஷகாலம் நடந்து அந்த பஸ்பம் இப்போதைய குன்றின் ரூபத்தைக் கொண்டதென ஊகிக்கப் படுகின்றது. மேலும் இந்நதி உற்பத்தி ஸ்தானமுதல் அரபிக்கடலுடன் கலக்கும்வரை, சுமார் 600 மைல் தூரம்,

13. நர்மதை நதி காட் (துறை), (ஹோஷங்காபாத்).



14. அஹமதாபாத் அரண்மனை, போபால்நகரம்.

சாதாரணமாய் விந்திய, ஸாத்பூராமலைக் காடுகளினூடே செல்வதனால் ரமணீயமான இந்நதியின் கரையில் ஆங்காங்கு அனேக மஹான்கள், சாதுக்கள், முனிவர் தந்தம் தவம் சித்தியடைய நிலைத்துள்ளார்கள். இந்நதிக்கரையிலகப் படும் சாலக்ராமச்சிலைக்குன்று, வெள்ளை மற்றும் நீலச்சிலைக் குன்றுகளிலிருந்து அமூல்யமான அரண்மனை முதலியன கட்டக் கற்களைக் கொண்டுபோகின்றனர். மேலும் இந் நதிக்கரையில்தான் முற்காலத்தில் மிருகண்டு, 'ப்ராதிசாக்ய' மென்ற பெயரால் பிரஸித்திபெற்ற வைதிக வியாகரணம் செய்த சௌனகர், வசிஷ்டர், பிப்பலாதர், கர்தமர், கின்னரர், நசிகேதன், கச்யபர், அத்ரி—முதலான மஹரிஷிகளும் தவம் செய்தனரெனக் கீழ்க் கூறியுள்ள, ஜகத்குரு ஆதி சங்கராசாரியரின் நர்மதா ஸ்தோத்திரத்திலிருந்து தெளிய லாம்:—

ஸ்ரீசங்கரர் இவ்விதம் நர்மதையைத்துதித்து வணங்கி யுள்ளார்.—

सबिन्दु सिन्धु सुस्खलत्तरङ्गभंगरंजितम्
द्विषत्सु पापजातजातकारि वारि संयुतम् ।
कृतान्तदूतकालभूतभीतिहारिवर्मदे
त्वदीयपादपङ्कजं नमामि देवि नर्मदे ॥१॥

त्वदम्बुलीनदीनमीनदिव्यसंप्रदायकम्
कलौमलौघभारहारि सर्वतीर्थनायकम् ।
सुमत्स्य कच्छ नक्र चक्र चक्रवाक शर्मदे ।
त्वदीयपादपङ्कजं नमामि देवि नर्मदे ॥२॥

महागभीरनीरपूरपापधूत भूतलम्
ध्वनत्समस्तपातकारि दारितापदाचलम् ।

जगल्लये महाभये मृकण्डुसूनुहर्म्यदे
त्वदीयपादपङ्कजं नमामि देवि नर्मदे ॥३॥

गतं तदैव मे भयं त्वदम्बुवीक्षितं यदा
मृकण्डुसूनुशौनकासुरारिसेवि सर्वदा ।
पुनर्भवाब्धिजन्मजं भवाब्धिदुःखवर्मदे
त्वदीयपादपङ्कजं नमामि देवि नर्मदे ॥४॥

अलक्षलक्षकिन्नरामरासुरादि पूजितम् ।
सुलक्षनीरतीरधीरपक्षिलक्षकूजितम् ।
वसिष्ठशिष्टपिप्पलादिकर्दमादि शर्मदे
त्वदीयपादपङ्कजं नमामि देवि नर्मदे ॥५॥

सनत्कुमार नाचिकेत कश्यपात्रि षटपदै
र्धृतं स्वकीय मानसेषु नारदादि षटपदैः ।
रवीन्दुरंतिदेव देवराज कर्म शर्मदे
त्वदीयपादपङ्कजं नमामि देवि नर्मदे ॥६॥

अलक्षलक्षलक्षपापलक्षसारसायुधम्
ततस्तु जीवजन्तुतभुक्तिमुक्तिदायकम् ।
विरिञ्चि विष्णु शंकर स्वकीयधाम वर्मदे
त्वदीयपादपङ्कजं नमामि देवि नर्मदे ॥७॥

अहोऽमृतं स्वनं श्रुतं महेशकेशजातटे
किरात सूत बाडबेषु पण्डिते शठे नटे ।
दुरन्तपापतापहारि सर्वजन्तु शर्मदे
त्वदीयपादपङ्कजं नमामि देवि नर्मदे ॥८॥

इदं तु नर्मदाष्टकं त्रिकालमेव ये सदा ।
पठन्तिते निरन्तरं नयान्ति दुर्गतिंकदा

सुलभ्य देह दुर्लभं महेश धाम गौरवम्
पुनर्भवा नरा न वै विलोकयन्ति रौरवम् ॥९॥

இதில் நர்மதையின் வரலாறும் மகிமையும் மிக அழகாய் வருணிக்கப்பட்டுள்ளன. இது பக்தர்கள் தினம் படித்துத் தோத்தரிக்க யோக்யமானது.

நர்மதை விஞ்ஞான ஆராய்ச்சியில் கண்ட மஹிமை.

நர்மதையாறு பாயுமிடத்தைப்பற்றி முன்னமேயே கூறியுள்ளோம். தற்காலத்து விஞ்ஞான சாஸ்திரிகள்கூட பூகோளம் (Geographical) மற்றும் பூகர்ப்பசாஸ்திர (Geological) திருஷ்டிகொண்டு நர்மதையின் ஜலத்தை விஞ்ஞான ரீதியில் (Scientifically) பரீக்ஷித்துள்ளனர். அவர்கள் தீர்மானம் கீழ்க்கண்டவாறு டாக்டர் ரவிப்ரதாபஸிம்ஹ ஸ்ரீநேத் அவர்களால் கூறப்பட்டுள்ளது:—“புனிதமெனப்பெற்ற பல நதிகளிலும் இந்நர்மதையின் ஜலம் விஞ்ஞான த்ருஷ்டியில் மகிமை அதிகம் கொண்டது. இது பாயும் பூமிகுணத்தால் இதில் பாஸ்பரஸ், க்ரோமியம், ஸோடியம், கால்சியம், பாஸ்பேட்டுகள், க்லோரைட்கள் (உப்பு), மக்னீஷியம் உப்புகள், ப்ரோமைட் முதலிய பதார்த்தங்களின் அம்சங்கள் இதிலகப்படுகின்றன. அதனால் அனேக அஸ்தி (எலும்பு) சம்பந்த ரோகங்கள், கர்ப்பவாயு, அபஸ்மாரம் (காக்கை வலிப்பு) இவைகளுக்கு இந்நீரால் மிகப் பிரயோஜனமேற்பட்டிருக்கிறது. ஏனெனில் ப்ரோமைட், பாஸ்பரஸ், க்ரோமியத்தின் உப்புக்களின் பரிணமம் ஸ்னானம் செய்வோர்மேல் ஏற்படுகிறது. மேலும் இந்நதியின் ஜலத்திலுள்ள ஜீவ அணுக்களை நாசம்செய்யும் சக்தியினால் குளிர்

ஜ்வரம், அதிசாரபேதி, அம்மை முதலியவைகள் குணமான தற்கு உதாரணங்களிருக்கின்றன. எலும்புகளைக் கெட்டிப் படுத்தும் தன்மை இந்நீருக்கு உண்டு. இது பாயுமிடத்தின் குணத்தால் இதில் அனேகவிதமான உலோக சத்துக்கள் சேர்ந்துள்ளனவெனச் சொல்லப்பட்டுள்ளது. மனித னெலும்பில் நூற்றில் 33.3 பங்கு (இந்த்ரிய) வீரியமுள்ள வஸ்துக்களும் 66.7 பங்கு உலோகசம்பந்த வஸ்துக்களு மிருக்கின்றனவென இரஸாயன சாஸ்திரத்தால் கண்டுள் ளார்கள். எலும்பினது இறுகியதன்மையும் பலமும் உலோக வஸ்துவினுலேற்பட்டனவாகும். நர்மதை ஜலத்தி லுள்ள சில இரஸாயனப்பொருள்களால் 'கால்ஸினேஷன்' (பஸ்மீகரணம்) ஆகின்றது. என்றால் சூரிய கிரணத்தி னுஷ்ணத்தாலேற்படும் சக்தி அவ்விரஸாயனப் பொருள்கள், எலும்பில் பிரவேசிக்கும் உலோக பதார்த்தங்களை வேறு படுத்துகின்றது. இவ்வுலோக வஸ்துக்கள் கந்தகம், உப்பு முதலான சக்திதரும் தத்துவங்களதிகமுள்ள க்ரானைட், வெள்ளைச்சிலை முதலிய பாஷாண வஸ்துக்களாகின்றன. இதனுல்தான் நர்மதையாற்றில் நமக்குப் பலவித நிறமுடைய பாணலிங்கங்களும் பளபளவென மின்னும் படிகம்போன்ற கற்களுமகப்படும். பாரதநாட்டின் வேறெந்த நதியிலும் இது அபூர்வம்."—இவ்விஞ்ஞான த்ருஷ்டி, புராணத்தில் கூறப்பட்டுள் நர்மதையின் மகிமையை எவ்வளவு அதிக மாக்குகிறதென்று புலப்படும். இவ்வித மகிமைகொண்ட புனித நர்மதையில் மூழ்கிப் பாவங்களையெல்லாந் துலைத்துக் கொண்டு, நிர்மலமாயும் புனிதமாயுமான தேகம், சுத்தமன மிவைகளோடு கூடி ஹொஷங்காபாத்தி (நர்மதாபுரம்) லிருந்து வடக்கே சுமார் 45 மைல் தூரத்திலுள்ள போபா லுக்குச் செல்வர்.

மோக்ஷந்தரத்தக்க ஏழுநகரங்களிலொன்ருன உஜ்ஜயினி க்ஷிப்ரா நதிக்கரையிலுள்ளது. இது பி. பி. ஸி. ஐ., ஜி. ஐ. பி. ரயில்கள் கூடுமிடம். ஸ்டேஷன் பெரியது. துவாபர யுகத்தில் இந்த க்ஷேத்திரத்தில் க்ருஷ்ணன், பலராமன், குசேலன் முதலானோர் சாந்தீபினி மகரிஷியின் வித்யாபீடத்தில் கல்விபயின்றனர். மஹாபாரத காலத்துக்கப்புறம் விக்ரமாதித்யன், பர்த்ருஹரி முதலானோர் இருந்து பிரஸித்தியடைந்தனர். பிறகு 12ம் நூற்ருண்டுவரை இந்நகரில் அனேக மாறுபாடுகளேற்பட்டன. புராதன வரலாறுகளால் இந்நகருக்கு அமராவதி, அவந்திகா, பத்மாவதி, சிவபுரி, விசாலா என்ற பெயர்களிருந்ததாகத் தெரிகிறது. ஸ்ரீசங்கராசார்யரின்காலத்தே அவந்திகா நகரத்தில் ஸுதன்வாவென்ற அரசன் ஆண்டுகொண்டிருந்தான். அவன் ஜைனமதத்தினன். அக்காலத்தில் அவந்திகா விசாலமாயிருந்தது. அவன் அந்நகரின் பெயரை மாற்றி 'உஜ்ஜைன' மெனப் பெயரிட்டான். அன்றுமுதல் அது உஜ்ஜயினி எனப் பிரசித்திபெற்றுள்ளது. விக்ரமாதித்யன் காலத்தே இது மிகப்பிரசித்தியடைந்தது. காளிதாஸன் முதலிய பெரிய கவிகளிங்கே இருந்தார்கள். இப்போது இது கேவலம் ஒரு யாத்திரை ஸ்தலமாயுள்ளது. இங்கு ரயிலடிக்குச் சமீபமாய் சிந்தியா அரசாங்க தர்மசத்திரமிருக்கின்றது. க்ஷிப்ரா நதிக்கரையில் ராமகாட்டின் சமீபமாய் பம்பாய்வாலா தர்மசாலையும் கார்த்திகச் சதுக்கத்தில் வேருெரு தர்மசாலையுமிருக்கின்றன. இங்குள்ள புராதன தீர்த்தஸ்தானங்களில் முக்யமானவை பின்வருமாறு:—(1) ஸ்ரீமஹாகாளேச்வரர் கோயில். முக்ய தேவதை ஸ்ரீமஹாகாளேச்வரர். இது

உஜ்ஜயினி (பழைய).

பிரசித்திபெற்ற பன்னிரு ஜ்யோதிர்லிங்கங்களுள் ஒன்றும். பத்ம புராணப்படி முக்யமான த்ரிலிங்கங்களில் மஹா காளேச்வர லிங்கமொன்றும். 'आकाशे तारकं लिङ्गं पाताले हाटकेश्वरम् मृत्युलोके महाकाल लिङ्गत्रय नमोऽस्तुते ||' எனச் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் விவரத்தை 'த்வாதச ஜ்யோதிர்லிங்க' மென்ற க்ரந்தத்தில் காணலாம். இக் கோயிலில் கோடி தீர்த்தமென்ற தீர்த்தமிருக்கின்றது. இதன் ஜலம் சிலசில வேளை விசேஷங்களில் சிலவேறு நிறங்களாக மாறுவதாய் பிரசித்தம். இங்கு சிவனுக்கு அபிஷேகமானபின், சிதை பஸ்மத்தைப் (சாம்பல்) பூசிப் பிறகு பத்ரம், புஷ்பங்களால் அலங்கரித்து அர்ச்சிப்ப துண்டு. (2) ஹரசித்தீதேவி கோயில். மஹாகாளேச் வரனெதிரில் ருத்ர ப்ரயாக குளத்தின்மேல் ஹரசித்தி (பார்வதி) தேவி கோயிலுளது. இவள் விக்ரமாதித்த மஹா ராஜனின் குலதேவதை. இக்கோயில் விசாலமாயும், உயர்ந் ததாயும், தந்த்ரக் கிரந்தங்களின் பீடஸ்தானமெனப் பிரசித்தி யாயுள்ளது. சிவன் ஸதியின் சரீரத்தை சின்னபின்னப் படுத்தி அங்குமிங்கும் எறிந்தபோது கையினொருபாகம் உஜ்ஜயினியில் வந்து விழுந்தது. அன்றுமுதல் இது புனித இடமாயிற்று. ஒன்பது துர்க்கைகளில் ஹரசித்தியும் ஒரு துர்க்கையெனப்படுவள். (3) 24 கம்பங்களின் கதவு. நகரத்தில் இதொரு புராதனமான பெரிய கதவு. விக்ர மாதித்தன் காலத்ததென்பர். இதனிருபக்கங்களிலும் தேவி யின் புராதன விக்ரஹங்களிருக்கின்றன. (4) கோபால மந்திரம். இது பட்டணத்தின் நடுவில் வெகு அழகாகக் கட்டப்பட்டிருக்கிறது. கதவு, சிம்மாசனத்துக்கு தங்கத் தகடு போர்த்தப்பட்டுள்ளது. இதனை மஹாராணி பைஜா

பாய் கட்டுவித்தாள். இவையன்றி விஷ்ணுகோயில், சித்த வடம், ஸ்ரீநாகசண்டேச்வரர், ஸத்யநாராயணர், ஸ்ரீநாதர், வைகுண்டநாதர் முதலியோர் கோயில்களும் காணத் தக்கவை. அவ்வளவோடில்லாமல் சாந்தீபினிரிஷி ஆச்ரம மிருந்த இடம், பர்த்ருஹரி குஹை (இங்கு பர்த்ருஹரி இராஜ்யத்தை வெறுத்துத் தன் குருவான மத்ஸ்யேந்த்ர நாதரிடம் யோகாப்பியாசம் சொல்லிக்கொண்டான்.), சரித் திரப் பிரசித்திபெற்ற காலியாதஹ-மஹல்—இவைகளும் பிரசித்தமாய்ப் பார்க்கத்தக்கவையாம். ஆனால் புராண, சரித்திரப் பிரசித்திபெற்ற இந்நகரில் புராதனமாகியவையாக நின்றுள்ளவைகளைக் கண்டு, அப்போதைய நகர வைப வத்தை இப்போதுள்ள நிலையோடொப்பிட்டுப் பார்க்க மனம் கரைந்து 'காலாய தஸ்மை நமஃ' என்று சொல்ல லாம்படியாகும்.

உஜ்ஜயினி. (தற்காலத்தைய)

இந்நகரம், 13ம் நூற்றுண்டில் அல்லாவுதீன் கைவச மாயிற்று. 1571-ல் இதனைப் பகதூர்ஷா கைபற்றினன். 1792ல் இது சிந்தியா அரசர்கள் வசப் பட்டு அவர்களின் இராஜதானியாயிற்று. 1810ல் தௌலத்ராவ் சிந்தியா இதனை விட்டு குவாலியரை இராஜதானியாக்கிக்கொண்டான். தற் போது நகரம் நவீன மாதிரியில் கட்டப்பட்டிருக்கிறது. ஸ்டேஷனிலிருந்து சுமார் 2 மைல் தூரத்திலுள்ள குவாலியர் மஹாராஜனரண்மனை அழகானது. இப்போது இங்கு மாளவ தேசத்திற்குச் சேர்ந்த கச்சேரிகளிருக்கின்றன. இந்நகரம் அபீம், தான்யங்கள் வியாபாரத்துக்கு முக்கிய இடமாயுள்ளது. ஆவணி, கார்த்திகை, மாசி மாதங்களில் இவ்விடத்துக்கு அனேக யாத்திரீகர் வருகின்றனர். மஹா



15. ஸாஞ்சியின் அசோகஸ்தூபி மேற்குவாசல்.



16. ஸாஞ்சிஸ்தூபியின் வடக்கு வாசல்.

சிவராத்திரியில் மஹாகாளேச்வரர் உற்சவம் காணத்தக்க காட்சியாம். இந்நகருக்கருகிலுள்ள மங்களேச்வரமென்ற சிவஸ்தலம் மிக அழகாயிருக்கின்றது. இந்த க்ஷேத்திரத்தின் தெற்கில் சுமார் ஐந்து மைல் தூரத்தில் த்ரிவேணீ என்ற பிரயாகை ஸ்தலமுள்ளது. இந்நகருக்கு மேற்கிலுள்ள பைரவ கட என்னுமிடத்தில் பைரவர் கோயிலிருக்கின்றது. பிரயாணிகளுக்கும், யாத்திரீகருக்கும் இங்கு வேண்டிய சௌகரியங்களுண்டு. இங்கு ஜனங்கள் இழந்த வைபவத்தின் ஞாபகார்த்தமாய் வண்டிகள், ஜோடுகளில் கண்ணாடித் துண்டைப் பதிப்பித்துள்ளார்கள். விபவம் நிறைந்த பூர்வத்தில் பச்சை மாணிக்க முதலிய கற்கள் பதித்திருந்தனராம். இப்போது, அதன் பெயர் மட்டில் மிகுந்துள்ளது! நகரின் தெற்கில் உதயபூர் ஜயஸிம்ம ராஜனின் "வாயுமண்டலப் பரீக்ஷை நிலையம்" (observatory) உள்ளது.

உஜ்ஜயினியைத் தரிசித்து, போபால் மார்க்கமாய்த் திரும்பும் யாத்திரீகர் மற்றொரு அரிய சந்தர்ப்பத்தை இழந்துகொள்ளக் கூடாது. போபாலிலிருந்து குவாலியர் போகும்வழியில் 27வது மைலிலும், பிலஸா ஸ்டேஷனிலிருந்து தெற்கில் 5 மைல் தூரத்திலுமிருக்கும் புராதனப் பௌத்த தேவாலயங்களின் சின்னமுள்ள ஸாஞ்சியைத் தரிசியாமலிருக்கக்கூடாது. ஸத்யம், அழகு, சாந்தி, ஆனந்தம் இவற்றைத்தேடி மனிதன், பிறந்த முதலிறக்கும் வரை போராடுவதே அன்று முதலின்றுவரை ஜீவனத்தின் சரித்திரமாகும். இந்த தர்மப் போராட்ட சரித்திரத்தில் சாந்தி-லாப சாதனத்தில் நம் பாரத நாட்டுக்குள்ள கீர்த்தி

சீரிழந்த ஸாஞ்சி.

மற்றெந்த நாட்டுக்கு மில்லையாம். இவ்வனுபவத்தைத் தன்னலங்கொண்டு பாரதநாடு தனக்கென வைத்துக்கொள்ளவில்லை. இன்றும் கண்ணுள்ளவர்களை, ஞானம் வேண்டுமென விரும்புவோரை, சாந்தி-சுகம் வேண்டுவோர்களைத் தன் கை நீட்டி அழைத்தவண்ணமிருக்கின்றது. அன்று பிரசித்திபெற்ற, ஜனம் நிறைந்த, அரண்மனைகள் நிறைந்திருந்த நகரத்தின் சமீபத்திலிருந்த விஹாரமொன்றிலிருந்து புத்ததேவன் ஜனங்களுக்குச் சாந்தி-சுகத்தின் மார்க்கத்தை காட்டினனெனில் இன்று, குன்று-காட்டின் சமீபமாகவுள்ள ஒரு கிராமத்திலிருந்துகொண்டு மஹாத்மா காந்திஜி உலகத்தினரைச் சாந்தி-சுகமடையும் வழியிலிழுக்க எத்தனித்து வருகின்றார். பாரதவர்ஷம் அன்றுமுதல் ஜாதி, குலம், கோத்திர பேதங்களையெண்ணாமல் எல்லோருக்கும் ஜீவனம், கலை, ஸம்ஸ்க்ருதிகளில் காலத்துடன் மாசுபட்டு அழியாத விசித்திரத்தையும், நவீனத்தையும் தன் அவசேஷத் (மிச்சம்) தின்வாயிலாகக் காட்டா நிற்கிறது. அற்புத ரஸத்திலாசைகொண்டு ஸாகஸ ஜீவனம் செய்வோர், உலகத்தின் எப்பாகத்தினராயினு மாகட்டும், பாரதநாடடைந்து அங்கங்கு பிரயாணம் செய்து ஜீவனத்தினுச்சரியம், நவீனங்களில் சாந்தி-சுகங்களைக் காட்டும் கலையின் சேஷத்தைக் காணலாம். இவ்விதம் தரிசிக்க யோக்யமான தலங்களில் புராதன ஸாஞ்சியொன்றும். ஸாஞ்சி தற்போது ஒரு குக்கிராமமாயிருக்கிறது. இக்கிராமத்திற்கு அரை மைல் தூரத்திலுள்ள 'ஸாஞ்சி தோப்பு' என்ற பழைய பௌத்தக் கோயில்கள் தரிசிக்கத்தகுந்தன. கால தர்மத்தால் மண்ணால் மூடப்பெற்ற பழைய நகரங்களில் தனமகப்படுமென்ற பேராசைகொண்டு மனிதன் அவ்வித

நகரங்களைத் தோண்டிப் பூர்வீக சிற்பிகள், கலைவல்லோரின் செயலின் குறிகளை நாசப்படுத்தியுள்ளான். புராதன வஸ்துக்களின் விலையறியாத பழைய நகரசோதனை செய்வோரின் அட்டூழியத்தாலும் பதினைன்கு நூற்றாண்டுகளின் ஆத்மத்யாகத்தின்-பக்தியின் குறிப்பைக்கொண்ட சில கலைநிறைந்த தர்மஸ்தாபனங்கள் நிர்மூலமாயின. இவ்வித அட்டூழியத்தினின்றும் ஸாஞ்சியின் கோயில்களை ரக்ஷிக்க இயற்கையன்னை மரஞ்செடி கொடிகளாகிற போர்வையைப் போர்த்தினாள்! இப்போது போபாலையரசாளும் பேகம் ஸாஹிபா, 1901க்குப் பின் தம் ராஜதானியில் பிளேக் பரவினபோது தம் பரிவாரங்களுடன் ஸாஞ்சியின் சமீபத்தின் பேடவா நதிக் கரையிலுள்ள காட்டில் தங்கினார். அப்போது ஒருநாள் காலையில் உலவச்சென்ற தருணத்தில் பக்கத்திலுள்ள குன்றிலேறி அங்குள்ள பழைய கோயில்களைக் காண நேர்ந்தது. பிறகு அவருடையவும், இந்திய அரசாங்கப் 'பழைய வஸ்து ரக்ஷணைக் கிளை' யினுடையவும் த்ருஷ்டி இதன் பக்கம் திரும்பியதனால் இப்போது ஸாஞ்சியில் எல்லாம் சீரடைந்திருக்கிறது. இங்குள்ள சில சிற்பங்களினுடையவும் சித்திரங்களினுடையவும் மாதிரிகளை அயல் நாட்டார் அநேகர் கொண்டு சென்றுள்ளார்கள். அவைகளையெல்லாம் இங்கு விவரித்தலசாத்தியம். ப்ரத்தியக்ஷமாய்ப் பார்த்து யாத்திரீகர், சோகம்-ஆனந்தப் பெருக்கையடையலாம். மேலும் பிலஸாவிலிருந்து கிழக்கே 17 மைல்களும் மேற்கே 6 மைல்கள் மேலும் தெற்கு வடக்குப் பக்கங்களிலும், கிருஸ்து பிறக்குமுன்னிருந்த, அசோக சக்ரவர்த்தியின் வைபவ காலத்திய பௌத்தக் கோயில்களைப் பார்க்கலாம். அவைகளில் 65 கோயில்களின் சிற்பத்திறம்

அற்புதமுமாச்சரியமுமானது. அவற்றிலும்—ஸாஞ்சியில் 10, பிலசாவின் நைருதிதிக்கில் 8 மைல் தூரத்திலுள்ள ஸாததாராவில் 9, பிலசாவுக்கக்னி மூலையில் 13 மைல் தூரத்திலுள்ள அந்தேரில் 3, பிலசாவுக்கு 8 மைல் தூரத்திலுள்ள போஜபுரத்தில் சுமார் 35 கோயில்கள் கண்கொள்ளாக் காட்சியளிப்பனவாம். உலகின் பல பாகங்களிலிருந்தும் பலர் ஞானம்பெற இங்கு வருவதுண்டெனவும், இது அக்காலத்தில் பேர்பெற்ற வித்யாபீடமாயிருந்ததெனவும் தெரிவிக்கு மடையாளங்களிங்குள்ளன. சீன யாத்திரீகனன பாஹியான் தன் கிரந்தத்தில் அக்காலத்திய இந்த 'ஷாசி-மஹாராஜ்ய' த்தை வர்ணித்துள்ளான். இவ்விடத்துக்குச் செல்லும் யாத்திரீகர் தமது ஆஹார ஏற்பாட்டை முதலே செய்துகொண்டு வருவதன்றி, கூடவும் கொஞ்சம் கொண்டு செல்வது நல்லது.

ஜி. ஐ. பி. ரயில் ஸாஞ்சியிலிருந்து பீன, ஜான்ஸி ஜங்ஷன்கள் மூலமாய் க்வாலியர் செல்லும். இந்நகரம் இப்பெயரைக் கொண்ட சமஸ்தானத்துக்கு இராஜதானியாய், சிந்தியா மஹாராஜனரண்மனை யுடைத்தானதாயிருக்கின்றது. முதலாவதாக இது பிரசித்தமான ப்ராசீன ஜைன யாத்திரை ஸ்தலம். இரண்டாவதாய் இந்து வைபவ காலத்திய (1486-1516) சிற்பத்திறமை விளங்கும் அரண்மனையைக் கொண்டுள்ளது. மூன்றுவதாய் இங்குள்ள கோட்டை மதில் $1\frac{1}{2}$ மைல் நீளம் 300 கஜ அகலமுள்ளதாய்ச் சரித்திரப் பிரசித்திபெற்றதாம். ஜான்ஸிக் கோட்டைக்குப் பதிலாக இக்கோட்டை 1815ம் வருடத்தில் சிந்தியா அரசன் வசமகப்பட்டது. இது உறுதியாயும் மேலேறிப் போகும்

**க்வாலியர் நகரம்.**



17. க்வாலியர் நகரக் கோட்டை.



18. "ஜயவிலாஸ்" அரண்மனை, க்வாலியர்.

படிகளுள்ளதாயுமிருக்கின்றது. கோட்டைக்குள் போக 'யானை வாசல்' என்ற திட்டிவாசலுண்டு. கதவின்மேல் யானையின் அழகிய உருவமிருக்கின்றது. கோட்டையின் மேலிருந்து நகரத்தின் சுற்றுக்காட்சி மனோஹரமாயிருக்கிறது. க்வாலியர் ஸ்டேஷனுக்கருகிலேயே ஹிந்து யாத்திரீகர் தங்க அனுகூலமான தர்மசத்திரமிருக்கின்றது. இதன்றி வேறு 'ஸராயி'களுமிருக்கின்றன. அங்கு தினமொன்றுக்கு 2 அணா 4 அணா வாடகைக்குச் சிறிய பெரிய அறைகளுமகப்படும். நகரம் க்வாலியர் லைட் ரயில்வே ஜங்ஷனாகையால் ரயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்திலேயே சௌகரியமாயிருக்கிறது. இந்நகர் பழைய ஊரென்றும் புதிய ஊர் (லஷ்கர்) என்றும் இருபாகங் கொண்டது.

பார்க்கத்தக்க இடங்கள்.

பழைய ஊர் கோட்டையினடியிலுள்ளது அதில் அக்பருக்கு முன்னிருந்த மஹம்மத் கௌஸின் கோரியிருக்கின்றது. மற்றும் அங்கு மிகப் புராதனமான இரண்டு ஜைனக் கோயில்கள் பார்க்கத்தக்கன. இதில் பத்மநாதன் (ஸாநபாஹூ) என்ற ஆறும் தீர்த்தங்கரரின் ஜைனக் கோயில் மிகப் புராதனமானது. அது இப்போது ஜீர்ணாவஸ்தையிலிருக்கின்றது. ஆயினும் அதில் எஞ்சியுள்ள சில பாகங்கள் இப்போதும் புதிதாய்த் தோன்றுகின்றன. இவற்றின் பழைய சிற்ப வேலையும் நுட்பமும் காண்போர் மனங்கவருவன. இரண்டாவது சித்திரம், சிற்ப மாட்சிமையின் எல்லை யென்னலாம்படியான ஜைன தீர்த்தங்கர தேவர்களின் கூட்டம். இவைகளில் சுமார் நூறு மூர்த்திகள் சுமார் ஒரு ஆள் முதல் 57 அடிவரை உயரங்கொண்டவை. முதலாந் தீர்த்தங்கரரான ஆதிநாதனுருவங்களே அதிகம்.

## 6. ஆக்ரா நகரும் உலகத்திலேயே அழகிய கட்டடமும்.

வட இந்தியாவில் பல அரசவம்சத்தார் ஆண்டு, வாழ்ந்து, அழிந்தனர். ஆனால் அவர்களில் ஒரு வம்சத்தார் மட்டும் காலபுருஷனால் அழிக்க முடியாத அடையாளத்தை ஆக்ராவில் நிறுவிப் போயினர். ஸுல்தான் இப்ராஹிம் லோதியைப் பாபர் 1526ல் பானிப்பட்டில் ஜெயித்தபின், தன் மகனாகிய ஹுமாயூனை ஆக்ரா நகருக்கனுப்பி அதனைக் கைப்பற்றினன். பிறகு அது மொகலாயரின் இராஜதானியாயிற்று. அவ்வம்சத்தரசனான ஷாஹ்ஜஹான் தன் உயிர்க் காதலியான மம்தாஜின் ஞாபகார்த்தமாய் 'தாஜ்மஹல்' ஐக் கட்டுவித்து, உலகின் ஆச்சரியங்களிலொன்றெனப் பெற்ற அவ்வழகிய கட்டடத்தைக் கொண்டமையால் ஆக்ரா நகரத்தின் பெயர் சரித்திரத்தில் அழியாமல் நிலைத்திருக்குமாறு செய்தான். மேலும் ஹுமாயூன் முதலில் இந்நகரின் மேல் படையெடுத்து வந்தபோது, பானிப்பட் யுத்தத்தில் மடிந்த க்வாலியர் அரசனின் மனைவி சாந்தி-ரக்ஷணைக் குறியாக அமூல்யமான பல நகைகளுடன் உலகப்பிரசித்தி பெற்ற கோஹினூர் என்ற ரத்தினத்தையும் அவனுக்குக் கொடுத்தாள். சரித்திரப் பிரசித்திபெற்ற கோட்டையைக் கொண்ட இந்நகரம் அக்பரால் 1558ல் யமுனையின் தென் கரையில் ஸ்தாபிக்கப்பட்டு 1648வரை மொகலாயரின் ராஜதானியாயிருந்தது. இதன் விஸ்தீர்ணம் இப்போது சுமார் 12 மைலளவும் ஜனசங்கியை 2 லக்ஷமுமாம். குவாலியரிலிருந்து புறப்பட்ட யாத்திரீகர் ஆக்ரா கண்டோன்மெண்ட் ஸ்டேஷன் வந்து சேர்வர். இங்கு ஈஸ்ட்

இந்தியா ரயில்வே, பி. பி. ஸி. ஐ. ரயில்வே, ஜீ. ஐ. பி. ரயில் மார்க்கங்கள் கூடும். ஸ்டேஷனில் வண்டி முதலிய சௌகரியமுண்டு. இந்நகரில் யமுனைக்கரையிலுள்ள பலமான சிவந்த கற்களாலாய கோட்டையை முதலில் அக்பர் கட்டினன். இதன்றி இன்றும் கண்ணைக் கவரும் அழகிய அனேக மாளிகைகளையும் கட்டுவித்தான். அவனுக்குப் பிறகு, அவன் பேரனான ஷாஹ்ஜஹான் கோட்டைக்குள்ளிருக்கும் பல படிகக்கல் கட்டடங்களைக் கட்டிப் பெயர் பெற்றான். அவன் தன் சாம்ராஜ்யத்தின் செல்வத்தை அக்காலத்தில் மிக உன்னத நிலையடைந்திருந்த மகம்மதிய சிற்ப நுட்பங்களின் விளக்கத்தையும் உலகுக்கு நிகரில்லாதனவெனக் காட்டும்படியான ஷாஹ்ஜஹானுபாத்தின் ஜும்மா மசூதி—தாஜ்மஹால் இவைகளை கட்டச் செலவழித்து ஆக்ராவை இறவாமற் செய்தான். ஆக்ராவில் கண்டோன்மெண்ட், போர்ட் (கோட்டை) என்ற இரண்டு ஸ்டேஷன்களிருக்கின்றன. இந்நகரின் வீடுகளெல்லாம் சாமான்யமாய்க் கல்லினலாயவை. யாத்திரீகர் தங்க இங்கு வாடகைக்கு இடமகப்படும். கோட்டையின் வடக்கே யமுனையின் அழகிய படித்துறை (காட்) யிருக்கின்றது. அங்கு காட்டின் பிராமணர் வசிக்கிறார்கள். யமுனையில் ஆமைகளதிகம். இத்துறைக்குத் தெற்கே யமுனைக்கு இரண்டடுக்குள்ள பாலங் கட்டியிருக்கின்றனர். கீழ்ப் பாலத்தில் ரயிலும் மேலே எக்கா முதலிய வண்டிகளும் செல்லும். இந்நகரில் வெள்ளி, சித்திரம், கல் வேலைகளும் சரிகை வேலைகளும் அழகாய்ச் செய்கிறார்கள்; மேலும் மிட்டாய் முதலிய தின்பண்டங்களையும் நன்றாய்ச் செய்கிறார்கள்.



19. தாஜ்மஹல், ஆக்ராநகரம்.



20. யமுனையில் தாஜின் பிரதிவிம்பம்.

தாஜமஹாலைப்போன்ற அற்புதமும், மனோஹரமும், கற்பனை செறிந்ததுமான அன்பினறிகுறியை இன்றுவரை உலகத்திலெங்கும் யாரும் கட்டியது கிடையாது. புனிதமாய் யமுனைக்கரையில் பகலிலொரு வகை, இரவிலொரு வகை, நிலவிலொருவகையாய் விளங்கி ஜயபுர ஸங்கமரின் (வெள்ளை) சிலையால் கட்டப்பட்டுள்ள அழகியதான இம் மறுவற்ற கட்டடத்தைப் பார்த்தமாத்திரத்தானே யாத்திரீகர் மோகங்கொள்வர். மொகல் சக்ரவர்த்தி மனைவியான மம்தாஜமஹாலின்மேல் வைத்திருந்த அன்பின் நிகரற்ற மேலான பாவனை இத்தாஜமஹாலது உருக்கொண்டதென்னலாம். 1629ம் வருடம் தன் 38ம் வயதில் மம்தாஜ இறந்தாள். அரசியின் பிரிவால் சக்ரவர்த்தியின் இருதயத்துக்குப் பெரிய இடிவிழுந்தமாதிரியாய்ச் சிலதினங்களுக்குள் அவன் தலைமயிர் நரைத்துவிட்டது. அன்றுமுதல் அவன் தாஜமஹால் கட்டவாரம்பித்தான். இதனைக்கட்ட தினமும் 20 ஆயிரம் வேலையாட்கள் 20 வருடகாலம் வேலைசெய்தனர். இதற்குச் சுமார் 30 கோடி ரூபாய்கள் செலவாயின. (இதில் பல செலவுகள் சேர்க்கப்படவில்லை.) இக்கட்டடம் இவ்விதம் ஒப்பற்றதும், அழகியதுமான ஞாபகார்த்தமாயேற்பட்டதைப் பற்றிப் பின்வரும் வரலாறிருக்கின்றது. மம்தாஜபேகம் பிரசித்திபெற்ற நூர்ஜஹானின் அண்ணனான அஸப்கானின் மகள். நூர்ஜிஹான் தந்தையான மிர்ஜாகயாஸ் பர்ஷியன். ஜீவனத்துக்காக அவன் தேஹராவிலிருந்து இந்தியாவந்து, இங்கு இதமதுத்தௌலா என்ற பெயரோடு பிரசித்தி பெற்றான். மம்தாஜை இன்னொரு கலைஞன் பிரீதித்து வந்தான். ஆனால் அரசவையில் மம்தாஜின் பாட்டனும்

தாஜ்மஹால்.

தகப்பனும் பிரசித்திபெற்றிருக்க, இளவரசனுன ஷாஹ்ஜஹானின் அன்புக்குறியவளாய் 1615ல் மம்தாஜுக்கும் ஷாஹ்ஜஹானுக்கும் மணம் நடந்தது. அப்போது அவளை முதலில் காதலித்திருந்த கலைஞன் தான் மணஞ்செய்து கொள்ளாமல் மம்தாஜையே நினைத்துக்கொண்டு நாளைக் கழித்துக்கொண்டு, அவள் ஞாபகார்த்தக் கட்டடத்தில் தன் நிர்மலமும் மறுவற்றதுமான அன்பு நிலைக்கவேண்டுமெனத் தவித்துக்கொண்டிருந்தான். மம்தாஜின் மரணத்துக்குப் பிறகு அவன் ஷாஹ்ஜஹானிடம் போய்த் தன் மனத்தி லுள்ளதைத் தெரிவித்தான். அப்போது சக்ரவர்த்தி தன் மனைவிக்கு ஒப்பற்ற ஞாபகார்த்தமானதொன்றைக் கட்டுவிக்க வேண்டுமென யோசித்துக்கொண்டிருந்தமையால் அதனைக் கட்ட அக்கலைஞனையே நியமித்தான். அவனும் எவ்வித லாபத்தையும் எதிர்பார்க்காமல் 20 வருஷகாலம் அந்நிகரற்ற ஞாபகச் சின்னத்துக்காக உழைத்தான். அவனின் தவப்பயனும், ஷாஹஜஹானின் நிர்மலமான அன்பின் பயனுமாய்த் தாஜ் உருக்கொண்டு இன்று உலகத்திலே ஆச்சரியமானதாயிருக்கிறது. இது 312 அடி நீளம், அகலம் மற்றும் 18 அடி உயரமான தளத்தின்மேல் கட்டப் பட்டிருக்கின்றது. இதனொருபக்கத்தில் யமுனையும் இன்னொருபக்கத்தில் உத்யான வனமும் இருக்கின்றன. இத் தளத்தின் நடுவில் 186 அடி நீள-அகலமாய் வெளியிலிருந்து பார்த்தால் ஒரே அறையைப்போல் தோன்றக்கூடியதான சலவைக் கல்லினாலாய தாஜ்மஹலிருக்கின்றது. இதன் மத்தியிலிருக்கும் பெரிய கும்பவின் (கும்மட்டம்) குறுக்களவு 58 அடி, உயரம் 80 அடி. இதனைச்சுற்றி வேறு நான்கு கும்மட்டங்களும், 16 கம்பங்களுமிருக்கின்றன.

இக்கட்டடத்தில் கீழ்க்கண்டவிதம் 9 அறைகளுண்டு.— நடுவில் 1, நான்கு திக்குகளிலும் 4, நான்கு மூலைகளில் 4.— நடுவிலுள்ள அறையில் மம்தாஜ், ஷாஹ்ஜஹான் இவர்களின் கோரிகள்மாதிரி அழகாய்ச் செதுக்கப்பட்டுள்ளன. அவ்வறையின் கீழுள்ள நிலமாளிகையில் நிஜமான கோரிகளிருக்கின்றன. இக்கட்டடத்தில் பற்பல கற்களில் பலவித நிறங்கொண்ட கல் சித்திரங்களையும், எழுத்துக்களையும் பூ-பழங்களையும் கடைந்திருக்கும் சிற்பம் அழகியதும், ஆச்சரியமானதுமாம்.

ஆக்ரா கோட்டையும் பார்க்கத்தக்கதாம். இக்கோட்டை அக்பர், ஜஹாங்கீர், ஷாஹ்ஜஹான் இவர்களின் சிரமப்பயனுயுள்ளது. இக்கோட்டையில் மோதி (முத்து) மசூதி, தர்சனீ தர்வாஜா, மீனுபஜார், தர்பார்கண்ட, திவானேஅம், ஜஃரோகா, நகீனுமஸ்ஜித், மச்சீபவன், மீனுமசூதி, ஹமாம் சாஹி, திவானேகாஸா, ஸமனபுரஜ், அங்குரிபாக், காஸ் மஹல், ராஜாஜவஹரசிம்மன் குடை, ஸீஸ்மஹல், ஜஹாங்கீரிமஹல் முதலிய அனேக சரித்திரப் பிரசித்திபெற்ற கட்டடங்கள் கோட்டையின் அழகை அதிகரிக்கச் செய்கின்றன.

வேறிடங்கள், கட்டடங்கள்.

இவைகளேயன்றி ஸிகந்தரிலுள்ள அக்பர் சமாதி ஆக்ராவிலிருந்து 5 மைல் தூரத்திலிருக்கின்றது. ஜஹாங்கீர் 1613ல் 15 லக்ஷ ரூபாய் செலவுசெய்து இவ்வழகிய ஞாபகார்த்தமான கட்டடத்தைக் கட்டுவித்தான். மேலும் ஆக்ராவிலிருந்து 23 மைல் தூரத்தில் பதேபூர்சிக்ரி என்ற சரித்திரப் பிரசித்திபெற்ற இடமிருக்கிறது. ஷேக் ஸலீம் சிஸ்தி என்ற பக்கிரியின் கிருபையினல் தில்லி பாதுஷாவான அக்பருக்குப் பிள்ளைப் பேறுண்டானமையின்

அம்மகானின் கட்டளைப்படி அக்பர் இப்பட்டணத்தைக் கட்டினான். இங்கும் அனேக சரித்திரசம்பந்தக் கட்டடங்களும், ஷேக் சலீம் சிஸ்தியின் தர்காவும் காணத்தகுந்தவை. ஆக்ராவிலிருந்து இவ்வூருக்கு பஸ்-ரயில் போக்குவரத்துண்டு.

---

## 7. மதுரை (வட), ப்ருந்தாவன க்ஷேத்திரங்கள்.

अयोध्या मथुरा माया काशा काञ्ची अवन्तिका ।
पुरी द्वारावता चैव सप्तैताः मोक्षदायिकाः ॥

மோக்ஷந்தரவல்ல ஸப்தபுரிகளி (ஏழுநகரங்கள்) லொன்றாய மதுரை நகரம், அதேபெயர் கொண்ட ஜில்லாவின் முக்யபட்டணமாய், யமுனையின் மேற்குக்கரையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. இது பி. பி. ஸி. ஐ., ஜி. ஐ. பி. ரயில்கள் கூடுமிடமாம். ரயில் ஸ்டேஷன் பெரியது. மதுரா, கேண்ட் என்ற ஸ்டேஷன் பி. பி. ஸி. ஐ. மீடர் கேஜ் லைனிலுள்ளது. இந்நகரில் பிரயாணிகளும் யாத்திரீகரும் தங்குவதற்கனுகூலமாக, நகரின் பல பாகங்களிலும் துறைகளிலுமாகச் சுமார் 40 சத்திரங்கள் கட்டப்பெற்றிருக்கின்றன. அவைகளில் முக்யமானவை யிவை:—(1) ராஜா அவாகர் தர்மசாலை. இதில் சுமார் 4,000 யாத்திரீகர் தங்கலாம். நகருக்குள்ளிருக்கின்றது. (2) பெங்காளித் துறையருகில் ராணி திலோயி தர்மசாலை யிருக்கின்றது. இங்கு சுமார் 2,000 யாத்திரீகர் தங்கலாம். இவையன்றி ஸிந்தி, குஜராதி, பஞ்சாபி, ஜப்பல்பூர்வாஸி, சேட் கோகுலதாஸ்

**மதுரை நகரம்.**

தேஜ்பால், மார்வாடி, காளூ, பார்க்கவ, ஸேட் ஹாதரஸ முதலான பெயர்கொண்ட சத்திரங்களுமிருக்கின்றன. இவைகளில்லாமல் யாத்திரீகர் பண்டாக்களிடமும் தங்கலாம். இவ்விடத்திய பண்டாக்களுக்கு 'சௌபே' என்ற பெயருண்டு. இது இப்போது ஜில்லாவின் முக்யபட்டணமாயிருப்பதனால் இப்போதைய சௌகர்யங்களெல்லாமிங்குண்டு. நகரம் அழகியதாயும் சுமார் 1 லக்ஷம் ஜனங்கள் கொண்டதாயுமிருக்கின்றது. இங்கு மோடார், பஸ், எக்கா, டாங்கா சௌகர்யமும் நன்றாயிருக்கிறது. இந்நகரத்துக்கு முதலில் மதுரபுரமென்ற பெயரிருந்ததெனவும், காலக்கிரமத்தில் அது இப்போதைய 'மதுரை' என்று மாறுபட்டதெனவும் தெரிகிறது. இப்பிராந்தியத்திலுள்ள காட்டில் மிகப் புராதன காலத்தில் மதுதைத்ய னென்பவனிருந்தான். ஸ்ரீராமன் தம்பியான சத்ருக்னன் அவனைக் கொன்று இங்கு மதுபுரமென்ற நகரைக் கட்டினனென்ற பழைய கதையொன்றுண்டு. ஆனால் அத்தைத்யனை (அரக்கன்) விஷ்ணு மதுசூதனனாய்க் கொன்றமைபற்றி இந்நகருக்கு மதுபுரமென்ற பெயரேற்பட்டதென்ற இன்னொரு கதையுமுண்டு.

மதுரை நகரின் ஆகர்ஷணை.

இந்துக்களின் தேவர்களிலெல்லாம் ஸ்ரீக்ருஷ்ணனின் மேன்மை அதிகமானது. ஸ்ரீக்ருஷ்ணனின் அவதாரத்தில் விஷ்ணுவின் பூர்ணம்சமுள்ளதெனவும், ஸ்ரீக்ருஷ்ணன் ப்ரத்யக்ஷ அன்பின் சுரூபனென்றும் மற்ற தேவர்களைக்காட்டிலும் அவனது மகாத்மியம் அதிகரித்து, இந்துக்களுக்கெல்லாம் அவன் வணங்கத்தக்கவனாயுள்ளான். ஸ்ரீக்ருஷ்ணனின் புனிதமான சரிதத்தை பாரதம், பாகவதம் முதலிய க்ரந்தங்களில் படித்துத் தெரிந்துகொள்ளாத இந்து இல்லை. மேலும்

வராஹ முதலான பன்னிரு புராணங்களிலும் அவனது லீலை விநோதங்கள் வர்ணிக்கப்பெற்றிருக்கின்றன. 'ஸ்ரீக்ருஷ்ண' நாமம் உச்சரித்தமாத்திரத்தால் ஒவ்வொரு இந்துவின் இருதயத்திலும் வர்ணிக்க முடியாததும் ஆச்சரியமுமான பக்தி நிறைந்து எப்போதும் பெருகும் அன்பின் பெருக்கை யுண்டாக்கி, மனித இருதயத்தைத் தன்னிடம் இழுத்துக் கொள்ளும். மேலும் இன்று நிகரில்லா தத்துவஞானம் நிறைந்ததான கீதையால் உலகத்தின் பண்டிதர்களது மனத்தையெல்லாம், ஸ்ரீக்ருஷ்ணன் தன்னிடத்திலாகர்ஷித் துள்ளான். இவ்விதமாய் அப்பண்டிதர்களும் அப்புனித னின் ஜீவிய சரிதத்தையறியப் பாரதம், பாகவத முதலிய க்ரந்தங்களைப் படிக்க முற்பட்டுள்ளனர். ஸ்ரீக்ருஷ்ணனின் சரிதமும், நல்லுபதேசம் நிறைந்த பகவத்கீதையும் பல பாஷைகளிலும் எழுதப்பட்டுள்ளன. அதனால் அவற்றை இங்கு சொல்லப்போவதில்லை. ஆனால் தன்னிடத்துக்கு உலகத்தையே ஆகர்ஷித்துள்ள ஸ்ரீக்ருணனின் பிறந்த விடமும் லீலாபூமியும் மதுரை-ப்ருந்தாவனங்களானபடி யால், இன்று அவ்வித லீலாபூமியில் யாத்ரீகர் காணத் தக்க காட்சிகள் இங்கு விவரிக்கபெறும்.

**வ்ரஜ மண்டலம்.**

வைதிக தர்மத்துக்கனுகுணமான புராணப் பிரசித்தி பெற்ற க்ஷேத்திரங்களில் ஸ்ரீக்ருஷ்ண விஷயமான துவாரகை, ஸ்தனேச்வரம், டாகோர், ஜகன்னாதம் முதலானவைகளில் வ்ரஜ மண்டலம் உயர்ந்ததென்னப்பட்டுள்ளது—(மதுரை க்ஷேத்ரமும் அதனக்கம்பக்கங்களிலுள்ள கோகுலம், ப்ருந் தாவனம், மஹாவனம், பலதேவன், கோவர்த்தன முதலாய யமுனைக்கரையிலுள்ள—ஸ்ரீக்ருஷ்ணன் தன் பாலலீலைகளைச்

21. மதுரையில் ஸ்ரீக்ருஷ்ணர் கோயிலின் மஹாத்வாரம்.



22. விச்ராமகாட் யமுனைநதி (மதுரை).

செய்த—ஐந்து கோச விஸ்தீர்ணமான புண்யப் பிரதேசத்துக்குப் புராண காலமுதல் வ்ரஜமண்டலமெனப் பெயரேற்பட்டுள்ளது).—எவ்விடத்தில் பசுக்கள் விசேஷமாயிருக்கின்றனவோ, அவ்விடத்தை 'வ்ரஜ' மென்பர், அல்லது 'வ்ரஜந்தி அஸ்மின் ஜநா: ஸ்ரீக்ருஷ்ண ப்ரார்ப்த்யமிதி வ்ரஜ:|' என்றால் அப்பிராந்தியத்தில் ஸ்ரீக்ருஷ்ண பகவானுடன் கலக்க ஜீவன் போவதனால் அது வ்ரஜமென்னப்படும். யிவ்ரஜமண்டல விஸ்தீர்ணத்தைப்பற்றி வராஹ புராணத்தில் இவ்விதம் சொல்லப்பட்டிருக்கின்றது:—

विंशतिर्योजनानां च मथुरं मम मण्डलम् ।
यत्र तत्र नरः स्नात्वा मुच्यते सर्व पातकैः ॥
( पदे पदेऽश्वमेधानां फलं प्राप्तोत्यसंशयम् )

(—என்ற பாடாந்தரமுமிருக்கின்றது)

என்றால் "இருபது யோஜனை விஸ்தீர்ணமுள்ள எனது மதுரை மண்டலத்திலுள்ள தீர்த்தங்களில் ஸ்னானம் செய்வதனால் மானவன் எல்லாப் பாவங்களினின்றும் விடுபடுவான்!" மேலும் அதர்வணவேதத்து கோபால தாபினியில்.—

मथ्यते तु जगत्सर्वं ब्रह्मज्ञानेन येनवा ।
तत्सारभूतं यद्यस्यां मथुरा सा निगद्यते ॥

என்றால் எந்த ப்ரம்மஞானம் மற்றும் பக்தியோகத்தால் எல்லா உலகமும் நுழையப்படுமோ அல்லது ஞானியின்-பக்தனின் மனதிலடங்குமோ அந்த சாரமான ஞானம், பக்தி எங்கு எப்போதும் நிறைந்துள்ளதோ அப்படிப்பட்ட இடம்

'மதுரை' என்னப்படும் என்று கூறியிருக்கிறது. இவ்விதமாய்ப் புராதன காலத்திலிருந்தும் பிரசித்தியான வ்ரஜ மண்டலம் அப்போது யமுனைக்கரையில் மிகுந்த இயற்கை யழகு செறிந்திருந்தது. புராண காலத்துக்குப்பிறகு அங்கு அனேக இந்து அரசர்கள் ஆண்டார்கள். புத்தயுகத்தில் நான்காம் நூற்றாண்டிலிருந்து புத்த தர்மத்தையனுசரிப் போர் இப்பிராந்தியத்தில் வசித்துவந்தனரென்பதற்கு மதுரைக்குச் சமீபமாய் அனேக பௌத்தக் கோயில்கள், விஹாரங்களின் பாழ் இப்போதும் காணக் கிடைக்கலாம். 1012ல் கஜினீ முகம்மதும், 1500ல் சிகந்தர்லூதியும் பிறகு ஔரங்கசீபும் மதுரையின்மேல் படையெடுத்துவந்து வ்ரஜ மண்டலத்தின் தேவாலயங்களை நாசப்படுத்தி அக்கற்களைக் கொண்டு தங்தம் மசூதிகளைக் கட்டினார்கள். அதனால் இப்போது வ்ரஜமண்டலத்தில் காணப்படும் அனேக தேவாலயங்கள் மொகல் சக்ரவர்த்திகளின் பிற்காலத்தில் கட்டப் பட்டனவாகும். ஆனால் இந்நகரிருக்குமிடமும் நகரமும் புராணப் பிரசித்தமாயிருப்பதோடன்றி கிருஸ்து பிறக்கு முன்னும் பின்னும் ப்ளினிஅரியன், தாலெமி (Plotemy), பாஹியான் முதலிய பூர்வீக க்ரீக், சீன யாத்ரீகரின் சரித்திரசம்பந்தமான புத்தகங்களிலும் வர்ணிக்கப்பெற் றிருக்கின்றன. தற்போதைய மதுரை நகரில் விச்ராம காட் இலிருந்து வடக்கே 12, தெற்கே 12, ஆக அழகாய்ப் படி வரிசைகளாலான 24 ஸ்னானத் துறைகள் இருக்கின்றன:- இவைகளில் முக்யமானவை:—(1) விச்ராம காட் (Ghat) (விச்ராந்தி காட்). இது இங்குள்ள துறைகளிலெல்லாம் மேலானதும், புனிதமானதுமாம். ஸ்ரீக்ருஷ்ணன் கம்ஸ வதை செய்தபிறகு இங்கு இளைப்பாறியதனால் இதற்கு

விச்ராம காட் என்ற பேயரேற்பட்டிருக்கின்றது. இது மதுரைநகரின் முக்ய மார்க்கத்துக்குச் சமீபமாயுள்ளது. கார்த்திகை (சுத்த) யமத்விதியையன்று இங்கு லக்ஷக்கணக்கான யாத்திரீகர் ஸ்னானம் செய்வர். இங்கு தினமும் பக்தர் யமுனை நதிக்கு ஆரத்தி ஏற்றி, தீபங்களை மிதக்கவிடுவர். இப்படி ஆயிரக்கணக்கான தீபங்கள் யமுனையில் மிதந்து போம்போது இருட்டுநிறைந்த இரவில் பார்த்தால், இதென்ன ஆகாசகங்கையின் கண்ணைப்பறிக்கும் காட்சியும் பூமியிலிறங்கிவந்து மனிதனின் கண்ணுக்கு விருந்தூட்டுகின்றதோ என்னும்படித் தோன்றும். அப்போதைய இயற்கையழகைச் சொல்லால் சித்தரிப்பதியலாது. (2) பங்காளி (வங்காளி) காட். இதற்குச் சமீபமாய் பி. பி. ஸி. ஐ. ரயிலின் சிறு மார்க்கத்தின் பாலமிருக்கின்றது. இப்பாலத்திலிருந்து பார்த்தால் துறைகள் மிக மனோகரமாய்த் தோன்றும். வைஷ்ணவ சம்பிரதாயத்தனான கேஸேனனென்பான் இத்துறையைக் கட்டுவித்தான். இதன்மேல் திலோயி ராணியின் தர்மசாலை இருக்கின்றது. (3) த்ருவ காட். இத்துறை 1836ல்கட்டப்பட்டது. பக்தச்ரேஷ்டனெனப்பெற்ற த்ருவகுமாரன் தவம்புரிந்து விஷ்ணு பகவானைப் பிரத்யக்ஷம் செய்துகொண்ட இடமிதுவெனப் பிரசித்தியாயிருக்கிறது. இங்கு துறையின் மேலுள்ள கோயிலில் பக்த த்ருவனின் சலவைக்கல் விக்ரஹமிருக்கின்றது. இத்துறையில் பிண்டதானம் செய்யும் வாடிக்கையுண்டு. (4) க்ருஷ்ண கங்காகாட். இதன்மேல் அனேக பார்க்கதக்க கோயில்களிருக்கின்றன. அவைகளிலொன்றில் தாவூஜி, ரேவதிமூர்த்திகளிருக்கின்றன. (5) அஸீகுண்ட காட். இத்துறைக்கு வராஹ க்ஷேத்திரமென்றும் பெய

ருண்டு. இங்கு ஒரு கோயிலில் வராஹர், கணேசர் மூர்த்திகளிருக்கின்றனர். வராஹமூர்த்தியின் தாடைகளின் மேல் பூமியின் உருவைச் சமைத்துள்ளார்கள். இது வராஹாவதார மூர்த்தியெனப் பிரசித்தியாயிருக்கின்றது. இரண்யாக்ஷனை வதைக்க விஷ்ணு வராஹாவதாரமெடுத்தன னென்பது இந்துக்களுக்கெல்லாம் தெரிந்தவிஷயம். இத் துறைகளேயன்றி இன்னம் அனேகம் துறைகள் ஆங்காங் குள்ளன.

முன் சொல்லியபடி மதுரையிலுள்ள கோயில்கள் இடைக்காலத்தவையாயினும், அவை கணக்கிலடங்கா.—

மதுரைக் கோயில்கள்.

(1) ஸ்ரீத்வாரகாதீசர் கோயில். 1815ல் க்வாலியர் அரசனின் பொக்கிஷாதி காரியும், மதுரையின் தனவந்தனுமான சேட் பாரீக் என்பான் சுமார் 2 லக்ஷ ரூபாய் செலவுசெய்து இதனைக் கட்டுவித்தான். இக்கோயில் விசாலமாயும் அழ காயும் இருக்கும். இக்கோயிலின் பகவான், ஸ்ரீக்ருஷ்ண மூர்த்தி. மூர்த்தியின் அக்கம் பக்கத்தில் வெவ்வேறு மூர்த்திகளுண்டு. இக்கோயில் வல்லப சம்பிரதாய அர்ச்ச கரின் கையிலிருக்கின்றது. இங்கு சேவை குறிப்பிட்ட காலங்களில் மட்டுமகப்படும். அதனால் அச்சமயத்தில் இங்கு ஜனநெருக்கம் அதிகமாயிருக்கும். பகவானுக்கு 'போகம்' (நிவேதனம்) ஆனபின் ப்ரசாதத்தை விற்கிறார்கள். யாத்தி ரீகர் கோயிலுக்கு வெளியிலுள்ள கடைகளில் பிரசாதத்தை வாங்கிக்கொள்வார்கள். (2) கதச்ரம நாராயணமந்திரம் விச்ராம காட்டுக்குச் சமீபமாய் த்வாரகாதீசர் கோயிலுக்குத் தெற்குப் பக்கத்தில் இக்கோயிலைக் கட்டியிருக்கின்றனர். முதலில் சிறியதாய் இக்கோயிலை 1800-ல் யாரோ கட்டு

வித்தனர். 1890-ம் வருடம் ப்ராணநாத சாஸ்த்ரி என்பார் 25,000 ரூ. செலவழித்து இதனைக் கட்டினார். இக்கோயி லில் நடுவே ஸ்ரீக்ருஷ்ணர் அக்கம் பக்கங்களில் ராதை, குப்ஜைகளின் மூர்த்திகளுண்டு. இவ்விடத்தில் ஸ்ரீக்ருஷ் ணன் தன் சிரமத்தைத் தீர்த்துக் கொண்டபடியால் இது "கதச்ரம நாராயண" மென்ற பெயரைக் கொண்டது. (3) வராஹமந்திரம். இது த்வாரகா தீச மந்திரத்தின் பின்னே யிருக்கிறது. இதனை முதலே வர்ணித்திருக் கிறது. (4) விஜய கோவிந்த மந்திரம், இது 1867-ல் கட்டப்பட்டது. மிக அழகான கோயில். (5) கோவர்த் தன மந்திரம் 1830-ல் கட்டப் பெற்ற அழகிய கோயிலிது. —இவைகளன்றி வங்காளி காட்டின் ராமேச்வரர் ராமகாட் டின் மஹாதேவர், சூர்யகாட்டின் சூர்யநாராயணர், ப்ரயாக காட்டின் வேணிமாதவர், கௌ காட்டின் ஹாடகேச்வரர், க்ருஷ்ண கங்கா காட்டின் க்ருஷ்ணேச்வர காலீந்தரநாதர், பூதேஸ்வர மஹாதேவர் கோயில்களும், மஹாவித்யாதேவி, சண்டீதேவி, அம்பரீஷ குட்டம் (குன்று) கேசவர் முதலாயி னோர் கோயில்களும் இடங்களும் பார்க்கத்தக்கன. இங் குள்ள கம்ஸன்கோட்டையை அக்பர் சக்ரவர்த்தி பலமாகக் கட்டினான். இதன் கிழக்கு தெற்குப் பாகங்களில் யமுனை ஓடுகிறது. இங்குள்ள கோகர்ண மேட்டின் மேல் கோகர் ணேச்வர ராலயமும் கௌதம ரிஷியின் சமாதியும் இருக் கின்றன. இம்மேட்டுக்குக் கைலாயமெனத் தலத்தோர் பெயரிட்டுள்ளார்கள். ரங்கபூமி ஸ்தானத்தில் ரங்கேச்வர மஹாதேவர் கோயிலும் மற்ற வேறு கோயில்களும் பார்க்கத் தக்கன. ஸ்ரீக்ருஷ்ணனுடைய ஜன்மஸ்தானத்தில் முத லிருந்த கோயிலை இடித்துத்தள்ளி அதே கற்களைக் கொண்டு

1669-ல் ஔரங்கசீப் கட்டிய சிவந்த கல் மசூதி அழகாயும் விசாலமாயு மிருக்கின்றது. இந்நகரிலுள்ள ஜும்மா மசூதி 1662-லும், ஸதீபுருஜ் 1570லும் கட்டப்பெற்றன. இந்த புருஜிலிருந்து பல ஸதிகள் ஸஹகமனத்தை யனுசரித்தனராம். மதுரையில் மிகப்புராதன மூர்த்திகளுடையவும் வஸ்துக்களி னுடையவும் சின்னங்களைப் பார்க்க ஆசைப்படும் யாத்திரீகர் தில்லி, ஆக்ராசாலையில் (Road) ட்யாம்பியர் பார்க்கிலுள்ள (Park) "கர்ஸன் ஆர்க்கியலாஜிகல் ம்யூஜியத்தை" அவச்யம் பார்க்கவேண்டும். இப்பட்டணத்தில் ஏதேனுமொரு காரணங்கொண்டு க்ருஷ்ணலீலை சம்பந்தமான உற்சவங்கள் எப்போதும் நடந்துகொண்டே யிருக்கும்.

**வன யாத்திரை, ப்ருந்தாவனம்.**

மதுரையினக்கம்பக்கத்திலுள்ள வ்ரஜமண்டல யாத்திரைக்கு வன யாத்திரை யென்று பெயர். அப்பிரதேசத்தில் பல வனங்களும், சிறு காடுகளும், கிராமங்களும் இருக்கின்றன. தவிர, அங்கு க்ருஷ்ணன் லீலையின் ஸ்தானங்களும் தீர்த்தங்களும் அனேகமிருக்கின்றன. அவைகளிலொன்றான ப்ருந்தாபனம் (வ்ருந்தாவனம்) மதுரையின் வடக்கே ஐந்து மைல் தூரத்திலுள்ளது. இங்குள்ள க்ருஷ்ணனிருந்த சோலைகளும் கோயில்களும் பலவாம். அவைகளில் கோவிந்ததேவன், மதன மோகனன், கோபீநாதன் கோயில்கள் முக்யமானவையும், தரிசிக்கத்தக்கவையுமாம். ஸ்ரீரங்கநாதர் கோயிலும் அழகாயிருக்கின்றது. இதன் பூஜை, அர்ச்சனைகளை ஸ்ரீராமாநுஜ மார்க்கத்தினர் (ஸ்ரீவைஷ்ணவர்கள்) செய்கின்றனர். இங்கும் யமுனை பாய்கிறது. இங்கு 'காலீய டோஹ' என்ற தீர்த்தமிருக்கின்றது. ஸ்ரீக்ருஷ்ணன் கோபிகைகளின் வஸ்



23. ஸ்ரீ ரங்கனுதர் கோயில், ப்ருந்தாவனம்.



24. ஸ்ரீ கோவிந்ததேவ மந்திரம், ப்ருந்தாவனம்.

திரங்களைக் கதம்ப விருக்ஷத்தில் கட்டிய இடம், கோப கோபிகைகளின் ராஸக்ரீடை நடந்தவிடம், கேசியென்ற அரக்கன் கொல்லப்பட்டவிடம், பாண்டியரின் வடம், யக்ஞ பத்நிகள் க்ருஷ்ணனுக்கு அன்னதானம் செய்த இடம், க்ருஷ்ணனின் பால லீலை ஸ்தானங்கள் இவை முதலான பல தூய இடங்களும், கோயில்களும் காளிந்திக் கரையில் மனோஹரமான இடங்களிலுள்ளன. ப்ருந்தாவனத்தில் பைராகிகளதிகம். பங்குனி மாதம் ஹோளிப்பண்டிகை (காமதகனம்) யின்போது இங்கு நடக்கும் ராமோற்சவங்கள் பார்க்கத்தக்கவையாம். இங்குள்ள 'சௌபெ' கள் யாத்தி ரீகருக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுப் பார்கள். இங்கு முனிசிபாலிடி, தபாற்சாலை இருக்கின்றன. இங்கு ப்ரேம மஹா வித்யாலயமும் குருகுலப் பள்ளிகளு மிருக்கின்றன.

**பரஸாணு, நந்த, தீரஸமீரம்.**

ப்ருந்தாவனத்துக்குச் சமீபத்திலேயே பரஸாணு வென்ற க்ஷேத்ர கிராமமிருக்கின்றது. அது ராதையின் பிறந்தவிடமெனப் பெயர்பெற்றுள்ளது. இங்கு வ்ருஷபானுவினுடையவும் அவ னது மனைவியினுடையவும் (ராதையின் தந்தை, தாய்) மர விக்ரஹங்களிருக்கின்றன. இங்கு பங்குனிமாதம் சுக்லபக்ஷ அஷ்டமியில் ஹோளி உற்சவம் நடைபெறும். தபாலாபீசும், தர்மசத்திரங்களும் இங்குண்டு. இங்கிருந்து சுமார் 3 மைல் தூரத்தில் நந்த என்ற சிறிய கிராமமிருக்கின்றது. இதன் சமீபமாயுள்ள குன்றின்மேல் நந்தன், யசோதை, க்ருஷ்ணன், பலராமர்களின் விக்ர ஹங்க ளிருக்கின்றன. பங்குனிமாத சுக்லபக்ஷ நவமி யன்று இங்கு ஹோளி உற்சவம் நடைபெறுகின்றது.

இவ்விடத்துக்கருகிலேயே யமுனையில் ராதை, க்ருஷ்ணரின் க்ரீடை ஸ்தானமெனப்பட்ட தீரஸமீரமென்ற இடமிருக்கின்றது. அங்கு கதம்ப (புன்னை) மரங்கள் ஏராளமாயுள்ளன. ஜயதேவரின் பிரஸித்தி பெற்ற கீதகோவிந்தத்தில், ப்ருந்தாவனத்தின் புனிதமான இடங்களில் நடந்த ராதாக்ருஷ்ண லீலைகள் வர்ணிக்கப்பட்டுள்ளன. அதில் ஐந்தாம் ஸர்க்கத்து அஷ்டபதியில் தீரஸமீர வர்ணனை, இவ்விடத்தை யொத்திருக்கின்றது. மதுரை - ப்ருந்தாவனங்களிடையில் மதுவன முதலான புராணப் பிரசித்தியான இடங்கள் ஸ்ரீக்ருஷ்ணனின் திருவடிகளால் புனிதமாய்க் காணத்தக்கவைகளாயிருக்கின்றன.

கோவர்த்தனம், மஹாவனம்.

மதுரையிலிருந்து பதினாறு மைல் தூரத்தில் ப்ருந்தாவனத்துக்குச் சமீபமாய் கோவர்த்தன மென்ற கிராமமும் மலையுமுள்ளன. இங்கு வரும் யாத்திரீகர் கோவர்த்தனகிரிப் பிரதக்ஷிண யாத்திரையைச் (இது சுமார் 20 மைல்களாகும்.) செய்வர். பிரதக்ஷிணத்தில் குஸுமஸரோவர தீர்த்தம், இதிகாசப் பிரசித்தியான ஸூரஜமல்ல ஜாடராஜனின் சத்ரி (குடை), சந்த்ர ஸரோவர தீர்த்தம், ராதாக்ருஷ்ணன் தீர்த்த முதலிய புனிதமான தீர்த்தங்களகப்படும். யாத்திரீகர் இவ்விடங்களில் முறைப்படி ஸ்நான, தானங்களைச் செய்வர். கோவர்த்தனத்தில் தபாலாபீஸிருக்கிறது; மானஸகங்கை என்ற புண்ணிய தீர்த்தமிருக்கின்றது. க்ருஷ்ணலீலை ஆலயங்கள் அனேகமாயிருக்கின்றன. தீபாவளி சமயத்தில் கங்கா ஸ்நானத்துக்காக அனேகம் பேர் வருவதுண்டு. கோகுலத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் மஹாவனமென்ற க்ஷேத்திர கிராமமிருக்

கின்றது. அங்கு நந்தகோபரரண்மனை, க்ருஷ்ணன் பால லீலைப் பிரதேசங்களிருக்கின்றன.

கோகுல க்ஷேத்ரம், யமுனையின் இடது கரையில், மதுரையிலிருந்து 6 மைல் தூரத்திலிருக்கின்றது. இங்கு யமுனைக் கரையில் ப்ரம்மாண்ட காட்டின் சமீபத்தில், க்ருஷ்ணன் மண் தின்றானென யசோதை அவனைத் தண்டிக்க எத்தனித்தபோது, அவன் வாயைத்திறந்து தன் தாய்க்கு வாயிலேயே ப்ரம்மாண்டம் (எல்லா உலகங்களையும்) காண்பித்தான். அப்போது யசோதைக்குத் தன் மகன் யாரென்பது தெரிந்தது. இவ்விதமே ஸ்ரீ ஹரி தன் பத்து அவதாரங்களிலும் பல அற்புதச் செயல்களைச் செய்து காட்டியருளியிருக்கிறான். அவைகளில் ராம-க்ருஷ்ணாவதாரங்களிரண்டும் முக்யமானவையெனக் கணிக்கப்பட்டுள்ளன. மேலும் இவ்விரண்டிலும் க்ருஷ்ணாவதாரம் அனேகவித லீலைகளோடு கூடியிருப்பதனால் அது விசேஷமாய்க் கொண்டாடத்தக்கதாம். ராமகாதையின் நாயகன் சுபாவம் தீரோதாத்தமாய், (தீரம், உயர்ச்சி) அவதார லீலையும் அதனையனுசரித்து கம்பீரமாயிருக்கின்றது. ஆனால் க்ருஷ்ணன் சரிதையிலோ நாயகன் சுபாவம் தீரலலிதமாய், லீலைகள் சுபாவமாய்ப் பலவித விசித்திரத்துடன் கூடியிருக்கின்றன. க்ருஷ்ணன் யசோதைக்கு விசுவரூபங்காட்டின இவ்விடத்துக்கு ப்ரம்மாண்ட காட் எனப் பெயருண்டாயிருக்கிறது. இத்தீர்த்தத்தில் ஸ்னான தானங்கள் புண்ணியந் தருவனவாம். இத்துறையின் சமீபமாய் ரமண ரேதியென்ற கொழுந்தாயுள்ள மணல் பூமியிருக்கின்றது. இங்குதான் க்ருஷ்ணன் சிறுவயதில் ஆடிப்புரண்டானென யாத்திரீகர், அங்குள்ள

கோகுலம்.

மணலையும், துறையின் மண்ணையும் கொண்டுசெல்வர். கோகுலத்தின் க்ருஷ்ணர் கோயில் பார்க்க அழகானது. அது வல்லபபந்தியாள் (மார்க்கமனுசரிப்போர்) மேற்பார்வையிலிருக்கிறது. இங்கு தர்மசத்திரமும், தபாலாபீஸு மிருக்கின்றன.

பலதேவர் கிராமம்.

இந்த கிராமம் மஹா வனத்தி லிருந்து 6 மைல் தூரத்திலிருக்கிறது. இக்கிராமத்தின் நடுவில் ஸ்ரீபலதேவ டாகூரின் கோயிலிருக்கின்றது. அதில் க்ஷீரசாகர மென்ற குளமும், பலதேவர், ரேவதி இவர்களின் அழகிய விக்ரகங்களுமிருக்கின்றன. இங்கு தபாலாபீஸ், 12 பெரிய சோலைகள் தர்ம சாலைகளிருக்கின்றன. இவை தவிர, வ்ரஜமண்டலத்தில், கணக்கற்ற கோயில்களும் தீர்த்தங்களும், பெரிய வனங்களும், உப வனங்களுமிருக்கின்றன. யாத்திரீகர்களுக்கு சாத்தியமாயும் சுலபமாயுமுள்ளவைகளை மட்டில் இங்கு காட்டப்பட்டிருக்கிறது. ப்ருந்தாவனத்துக்கு மதுரையிலிருந்து ரயில் சார்ஜ் 1 அணா. மற்றைய இடங்களுக்குப் போக மதுரையில் வண்டி முதலிய சௌகரியங்களுண்டு. வ்ரஜ மண்டலத்தின் கோயிலில் நடக்கும் உற்சவங்கள் சாமான்யமாய் நன்றாயிருக்கும். இங்கு மற்ற ருதுக்களைக் காட்டிலும், வசந்த ருதுவில் (சித்திரை வைகாசி) நடக்கும் ஹோளி உற்சவம் பார்க்கத்தக்கது. அச்சமயத்தில் ஸ்த்ரீ புருஷர்கள் க்ருஷ்ண விஷயமான கீதங்களைப் பாடிக்கொண்டு ராஸக்ரீடை முதலானதுகளை யாடுவார்கள். அப்பக்திரஸ உற்சவத்தில் வ்ரஜ (இடையர்) பாஷையின் ஹோளி கீதங்களைக் கேட்கக் கேட்க மனம் அலர்ந்து தன்னிலைக்கியப்படுமாம். இப்பாரத நாட்டில் தேச வேறு

பாட்டினுல் கீதத்தில் வேறு வேறு விதங்களிருக்கின்றன. அவை சங்கீதக்கலை யறிந்தோருக்கு மட்டிலும் தெரியும். தென்னிந்தியாவில் கீர்த்தனை, க்ருதிகள் பிரஸித்தியா யிருப்பதைப்போல் வட இந்தியாவில் கீதம் பாடும கலை அதிகமாயிருக்கின்றது. அது அத்தேசத்தை யனுசரித்து வ்ரஜபாஷையில் ஆக்கப்பட்டு லோகப்ரியமாயிருக்கிறது. வ்ரஜமண்டலம் ஹோலிகா கீதைக்குப் பிரசித்தியானது. காசியின் 'டப்பா', லக்னோ ஹைதராபாத்தின் 'கஜல்', குஜராத்தின் கர்ப்ப நாட்டியம், குவாலியர் பிராந்தியத்தில் 'க்யால்', தில்லியின் 'த்ருபதம்,' லாகூர் பிராந்தியத்தின் 'பஞ்சாபிடப்ப', இவை பிரசித்தமானவை. மதுரையின் வசந்தோற்சவம் காணத்தக்க காட்சியாம். அதேபோல அங்கு ஆவணி, கார்த்திகை மாத உற்சவங்களும் மெச்சத் தகுந்தவை. இங்கு பாலின் பண்டங்களை மிக நன்ருய்ச் செய்கின்றனர். மதுரையின் 'தூத்பேடா' மிகப்பிரசித்தி யானது. இங்கு இரண்டு பஞ்சாலைகளும் ஒரு நூலாலையு மிருக்கின்றன.

---

## 8. தில்லி (இந்த்ரப்ரஸ்தம்), குருக்ஷேத்ரம் (ஸ்தானேச்வரம்).

ராஜீய த்ருஷ்டி கொண்டாயினும் சரி, தர்ம த்ருஷ்டி கொண்டாயினும் சரி, அல்லது (பார்க்கத்தக்க) கலையின் த்ருஷ்டிகொண்டாயினும் சரி, எல்லா விதங்களிலும் ரோம் நகரம் ஐரோப்பாவில் முதன்மை பெற்ற தாக இருப்பதனுல் அங்கு, "எல்லா ரஸ் தாக்களும் ரோம் நகருக்குச் செல்வன" என்ற வழக்கிருக்கின்றது. அது

தில்லி (இந்த்ர ப்ரஸ்தம்) சரித்திரம்.

போலவே பரத வர்ஷத்தின் புராதன நகரங்களில் (தில்லி நகரம்) எவ்வித த்ருஷ்டி கொண்டு பார்த்தாலும் முக்யமானதெனப் பெற்றுள்ளது. மஹா பாரத காலத்தில், முதலில் திருதராஷ்டிரன் பாண்டவர்களுக்குப் பாதி ராஜ்யம் கொடுப்பித்த போது, அவர்கள் காண்டவப்ரஸ்தத்தின் புண்ய ஸ்தானத்தில் அழகிய மனைகள் விளங்கும் நகரொன்றை, மயனைக்கொண்டு கட்டுவித்தனர். அந்நகர் இந்திரனது நகரம் போன்று விளங்கினமையின் அதனை இந்த்ரப்ரஸ்தமெனப் பெயரிட்டழைத்தனர். இந்த இந்த்ரப்ரஸ்தம் திரிந்து இப்போது 'இந்த்ரபாத' மென்ற ரூபத்தை யடைந்திருக்கிறது. இவ் இந்த்ரப்ரஸ்தமிருக்கும் பாகம் மிகப் புராதன காலத்திலிருந்தே ராஜதானிக்கு யோக்யமெனப் பல வரசர் மனதிலும் பட்டு, அனேக அரசர்கள் தம் ராஜதானிகளை இங்கு வெவ்வேறு பெயர்களுடன் ஆக்கினர். இவ்விராஜதானிகளைக் கொண்ட பாகம் கிழக்கில் யமுனையையும் தெற்கில் குன்றுகளையும் எல்லையாகக் கொண்டு முக்கோண வடிவினதா யிருக்கின்றது. இவ்விதம் புராதன ராஜதானிகளின் அம்சங்களைக் கொண்ட தில்லியின் விஸ்தீர்ணம் சுமார் 45 சதுர மைல்களாம். இப் புராதன ராஜதானிகளில் பாண்டவர்களரசாண்ட இந்த்ரப்ரஸ்தமும், இப்போது ஆங்கிலேயர் அரசாங்கத்தாராலும் புது தில்லியும் மீகச் சமீபமாயிருப்பது தெய்வ சங்கல்பத்தாலேற்பட்டதோ அல்லது எதிரிச்சையா யானதோ தெரியவில்லை. மாறுபாடடைந்த தில்லி ராஜதானியின் விவரம் கீழ் வருமாறு:—

தில்லியினெல்லைக்குள் அசோகன் காலத்ததான, சுமார் 500 மணங்கு பாரமான பெரிய இருப்புத் தூணிருக்கின்றது. இது வார்ப்புத் தூண். "தோமர் அல்லது துவர வம்சத்து அனங்கபாலனென்பான் இங்கு ராஜ்யம் ஸ்தாபித்தபோது ஒரு பிராமணன், 'இங்குள்ள உலோகத் தூண் வாசுகியின் தலையைத் துளைத்துக்கொண்டு ஆழமாகப் போயிருக்கிறது. அது அசையாமலிருக்கும் தன்னிலும் உன் ராஜ்யமிருக்கு' மென மொழிந்தனனும். அரசனுக்கதில் நம்பிக்கையில்லாமல் அத்தூணைக் கிளப்பிப்பார்க்க, அதனடியில் இரத்த மயமாயிருந்தது கண்டு தன் அவநம்பிக்கைகொண்ட செய்கைக்காக வெட்கமடைந்து, அதனை அப்படியே நடுவித்தான். ஆனால் அது முதலிருந்ததைப்போல் கெட்டியாயிராமல் 'டீலி' யாயிற்று இதனால் இந்நகருக்கு 'டீலி' என்ற பெயராய் அது தில்லியெனத் திரிந்தது!" கொஞ்சங் கொஞ்சமாய்ச் சரித்திர தில்லியின் மகிமை குன்றிந்து-வந்தது. ஆனால் வங்காளப் பிரிவினையின்போது, 1911ல் இந்தியாவின் ராஜதானியைக் கல்கத்தாவிலிருந்து மாற்றி இப்போதைய புது தில்லி கட்டப்பட்டது. இப்பாகம் நதியின் சமீபமாயிருந்தமையால், மறுபடி நகரத்தை அங்கு நின்றும் மாற்றி, இப்போது வைஸ்ராய் அரண்மனை, செக்ரடெரியேட் ஆபீஸ்களுள்ள புது தில்லியை 20 கோடி ரூபாய் செலவில் நிருமாணித்தார்கள். இதனால் இதன் புராதனப் பெருமையைத் திரும்பவும் ஸ்தாபித்தபடியாயது. இப்படியான தில்லிநகரம் முன் சொல்லப்பட்ட எட்டு, ஒன்பதாம் நகரங்களுடன் சேர்ந்து த்ரிகூடமானற் போலுள்ளது. வடக்கிலுள்ள தில்லியின் பாகத்தை ஸிவில் லைன்ஸ் என்றும், நடுவிலுள்ளதை ஷஹர் என்றும், தென்பாகத்தை



25. தில்லியிலுள்ள ஷாஹ்ஜஹான் கோட்டை.



26. தில்லிநகரில் வைஸ்ராயினரண்மனை



27. தில்லி குதுப்மினர் ஸ்தம்பம்.



28. தில்லியிலுள்ள ஜயசிம்மன் யந்த்ர, மந்த்ர, ஜ்யோதிஷ யந்த்ராலயம்.

நவதில்லி என்றும் அழைப்பர். தில்லி நகரம் என். டப்ளியூ. ஆர். (N. W. R.), பி. பி. ஸி. ஐ., (B. B. and C. I.), ஜி. ஐ. பி., (G. I. P.), ஈஸ்ட் இன்டியன் ரயில்வே (E. I. R.) க்கள் சந்திக்குமிடமாய்ப் பெரிய ரயில் ஸ்டேஷனையுடையதாயிருக்கின்றது. இதன் பக்கத்தில் தர்மசத்திரங்களிருக்கின்றன. புது தில்லியில் லேடி ஹார்டிஞ்சு ஸராஇ இருக்கிறது. இங்கு வாடகைக்கு இடமகப்படும். தவிர பெரிய ஹோட்டல்களுமிருக்கின்றன.

**காணத்தக்க இடங்கள்.**

தில்லிநகரைப் பார்க்கக் குறைந்தபக்ஷம் மூன்று தினங்கள் வேண்டும். இங்கு பார்க்கவேண்டிய இடங்களில் முக்கியமானவை:— (1) குதுப்மினர். 1200ல் குதுப்உத்தீன் கட்டிய 238 அடி உயரமுள்ள கோபுரம். இதற்குள் மேலேறிப் போக வட்டமாகவுள்ள படிகள் சுமார் முன்னூறுக்கதிகமிருக்கின்றன. (2) ராஜாதவன ஸ்தம்பம். இது குதுப்மினரைக்காட்டிலும் பழமையானதாய் இரும்பு, தாமிரம், நாகம் (Zinc) இவைகளாலாக்கப்பட்டு, சுமார் 1500 வருஷங்களாகத் துருப்பிடியாமலிருக்கின்றது. (3) ஜந்த்ர மந்தரம் அல்லது இரண்டாம் ஜயஸிம்மன் கட்டுவித்த ஜோதிஷ யந்த்ராலயம். (4) நிஜாமுத்தீன் தர்கா. இது இந்தியாவின் முஸ்லீம்களுக்குப் புனிதமான இடமென்னப்பட்டுள்ளது. இதற்குச் சமீபத்திலேயே ஷாஹ்ஜஹான் மகளான ஜஹாம் நாராவின் சமாதியிருக்கின்றது. இது பார்க்கத்தக்கது. (5) ஹுமாயூனின் கபரஸ்தானம். 1565ல் 15 லக்ஷ ரூபாய் செலவழித்து இதனைக் கட்டினார்கள். இது கட்டி சுமார் 375 வருடங்களாயும் இப்போது கட்டியதைப் போன்றிருக்கிறது.

(6) இந்த்ரப்ரஸ்தம். இப்போதைய தில்லியில் இது மிகப் பழைமையானது. இதனைப் புராணகில்லா என்றும் அழைப்பர். (7) ஷாஹ்ஜஹானின் கோட்டை. 1739ல் நாதிர்ஷா இதனைச் சூரையாடி இதிலிருந்த ஐச்வரியத்தைக் கொள்ளைகொண்டான். 1759ல் மராட்டியர் இதனைப் பற்றினார்கள். 1857ம் கலகத்தில் (சிப்பாய்) இக்கோட்டைக்குள்ளிருந்த பல கட்டடங்கள் பாழாயின. அதனால் மொகல் காலத்தின் வைபவத்தை இதிலிருந்து அறிய முடியாவிடினும், அழியாமல் உள்ள கட்டடங்களிலிருந்து அப்போதைய அரசர்கள் கலையில் கொண்டிருந்த அன்பைக் கொஞ்சமட்டில் அறிந்துகொள்ளலாம். (8) ஜும்மா மஸ்ஜித். இது ஷாஹ்ஜஹான் கோட்டைக்கெதிரிலுள்ள கண்ணைக்கவரும் அழகிய கட்டடம். இது 1568ல் கட்டி முடிந்தது. இதற்கு ஷாஹ்ஜஹானுக்குப் பதினன்கு வருடங்களும் 10 கோடி ரூபாய்களும் செலவாயின.—லாஹோரி தர்வாஜா (வாசல்) மூலம் தலைக்கிரண்டணு கொடுத்து டிக்கெட் பெற்றுக் கோட்டைக்குள் செல்ல வேண்டும். அங்கு நௌபத் கானு, திவானே ஆம், திவானே காஸ், ஹமாம் கானு (ஸ்னானம் செய்யுமிடம்), மோதி மஸ்ஜித், காஸ்மஹல், முஸம்மின் புருஜா, ரங்கமஹல், சாஹ் புருஜ், மம்தாஜ்மஹல், சலீம்கட், முதலாய அழகும் கலை நிறம்பியவையுமான சிற்பத்திறமமைந்து ஓங்கியவையாய்ப் பார்போரின் மனதைத்தட்டிஎழுப்பி ஆச்சரியத்தினால் மெய்மறந்து கூவச்செய்யும் கட்டடங்களிருக்கின்றன. ஷஹரில் $5\frac{1}{2}$ மைல் சுற்றளவுள்ள மதிலிருக்கின்றது. இதில் 10 வாயில்களிருக்கின்றன. இத்தில்லியில் சாந்தனி சௌக் என்ற விடத்தில் சரிகை, பூவேலை, தந்தம் இவை



29. குருக்ஷேத்திரம் ஸூர்யகுண்டத்தின் ஸ்நானக்காட்சி.



30. ஸ்ரீ ஹரிபாயரி காட் (ப்ரம்மகுண்டம்), ஹரித்வாரம்.

விருந்து கீழிறங்கியதும் முதலில் அகப்படும் பட்டண மிதுவேயாம். சாஸ்திரப்படி விசாரித்தால் மேலே காட்டி யுள்ள சுலோகத்தில் கங்காத்வாரம் குசாவர்த்தம், பில்வகம், நீலபர்வதம் கநகல தீர்த்த மிவைகளில் ஸ்னானம் செய்தால் மறுபிறப்பில்லை' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவை களில் நிஜமான கநகல தீர்த்த மட்டிலும் இங்கிருக்கிருக் கின்றது. அது இங்கிருந்து இரண்டு மைல் தூரத்தில் தனியாய், கங்கைக் கரை யிலிருக்கிறது த்ரியம்பகேச் வரத்திலும் இந்தஸ்தானங்களை வர்ணித் திருக்கிறோம். நிஜமான கங்காத்வாரம் கங்கோத்ரியாம். அது இமா லயத்தின் மிக உன்னத சிகரத்திலுள்ளது. அதை 'கங்கோத்ரி' என்னுமிடத்தில் வர்ணிக்கப்படும். குசாவர்த்தம் த்ரியம்பகேச்வரத்திலும், பில்வதீர்த்தம் தென்னிந்தியாவி லும், நீலபர்வதம் (நீலகிரி) சென்னை மாகாணத்திலுமிருக் கின்றன—இமாலயத்திலும் ஒரு நீலகிரி இருப்பதாகச் சொல்லுகின்றனர். கநகலையைப்பற்றி மேலே கூறியுள்ளோம். இந்த எல்லா தீர்த்தங்களிலும் ஸ்னானம் செய்ய வேண்டுமா யின் இந்தியா பூரப் பிரதக்ஷிணம் செய்ய வேண்டும். அதனால் உண்டாகும் அனுபவத்தினால், அவ்யாத்திரையின் புனிதத் தன்மையினால் பாதகங்கள்,—மனித இருதயத்தின் துர்க் குணங்கள் நீங்க வேண்டு மல்லவா? பிறகு மறு பிறப் பெங்கிருந்து வரும். ஏனெனில் வாசனையே (பூர்வ கர்மம்) ஜன்மம். ஆனால் ஸ்தலத்தினர் இத்தீர்த்தங்க ளெல்லாம் இங்கேயே இருக்கின்றன வென்பர். யாருக்கு எவ்விதம் வேண்டுமோ அவ்விதம் அந்த சுலோகத்திற்கு அர்த்தம் சொல்வார்கள்! ஆனால் பூர்வீகர்களி னுத்தேசம் ஒரே இடத்தையே தீர்த்தமாகத் தாபிப்பதன் றென்று, அவர் களின் யாத்திரை விதியிலிருந்தகப்படும்.

ஹரித்துவாரத்தை வைஷ்ணவர் ஹரித்துவாரமென்றும், சைவர் ஹரத்துவாரமென்றும் சொல்வார்கள். ஆனால் கங்கையைப்பற்றிய மட்டில் இருவருடைய பக்தியும் ஒரேமாதிரி யிருக்கின்றது. பழைய சாகித்தியத்தில் ஹரித்வாரம், கபிலஸ்தானம், மாயாபுரமென்ற பெயர்கள் உள்ளன. மாயாபுரத்தின் சிதைவு (மிச்சம்) மட்டிலும் கநகல, ஹரித்வராமிவற்றி னிடையிலகப்படும். கநகலவும் புராதன இடமாம். காளிதாசன் இதனைத் தன் மேகதூத மென்ற காவ்யத்தில் வருணித்துள்ளான். கநகலத்தில் இப்போதும் பல பழைய ஸ்தானங்களிருக்கின்றன. தற்போதைய ஹரித்வாரம் பெரிய நகரமாயிருக்கிறது. இங்கு தந்தித்தபாலாபீஸ், மின்சாரம் (எலக்ட்ரிக்), டெலிபோன், ஆஸ்பத்ரி முதலிய தற்போதைய சௌகரியங்க ளிருக்கின்றன. யாத்ரீகர்களுக்கு இப்போது இங்கு எவ்விதக் கஷ்டமுமில்லை. யாத்ரீகர் தங்க இங்கு சுமார் 43 சத்திரங்க ளிருக்கின்றன. இவைகளைத் தவிற வாடகைக்கும் கங்கைக் கரையில் விடுதிகளகப்படும். இங்கு ஒற்றைமாட்டு வண்டி, டாங்கா சௌகரியமா யகப்படும். இங்குள்ள தேவாலயம்-மந்திரங்களுக்கு டாகுரத்வாரமென்பர். பைராகி, கோசாய்களிங்கு அதிகம். கங்கைக் கரையில் காலை, மாலைகளில் கங்கை பூஜை, ஆரத்திகள் நடக்கும் இணையற்ற காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கக் காலம் கழிவதே தெரிவதில்லை. பஞ்சாபிகள் சிக் மதத்தினராயினும் இந்த க்ஷேத்திரத்தின் பேரில், விசேஷமாய் இங்குள்ள கங்கையின் மேல் அவர்களுக்குப் பக்தியதிகம். பஞ்சாபிலிருந்து ஹரித்வாரத்துக்கு நேர தினம்

ஹரித்வாரம், ஹரத்வாரம், கங்காத்வாரம், கநகல.

ரயில் விடப்படுகிறது இங்கு ஸ்னானத்துக்கு முக்யமாய் சீக்கிய ஸ்த்ரீகள் அதிகமாய் வருகின்றனர், இவர்களில் கோஷா முறையுண்டு. ஆனால் கங்கையின் முன் முக மூடி பாவ மானதென அவர்கள் இங்கு அதனை எடுத்து விடுவார்கள். பஞ்சாப் ஸத்ரீகள் முஸ்லீம்களைப் போல் பாய்ஜாமாவையும் அதற்குமேல் ரவிக்கையும் அணிந்திருப்பர். இவ்விடத்தில் அவற்றை எல்லாம் களைந்து ஒரு வஸ்திரத்தைப் புடவையைப்போல் உடுத்திக்கொள்வார்கள். இவர்களில் பலருக்கு நீந்தத்தெரியும். பஞ்சாபிகளில் ஸ்திரீகளுக்குக்கூட காயத்திரி உபதேசமுண்டான படியினால் அவர்கள் ஸ்னானம் செய்து காயத்திரி ஜபம் செய்வர். பஞ்சாபின் சீதோஷ்ண ஸ்திதி குளிர்ச்சியாயிருப்பதனால் ஜனங்கள் அழகாயிருப்பார்கள். இங்கு ஸ்ரீ ஹரிபாதங்களினருகில் ஸ்னான விதிகளாகும்.. ஹரிபாதமென்ற பெயருள்ள காட் இது. இத்துறையின் காட்சி மிக அழகாம். இங்கு போடோ எடுப்பது நிஷேதம் (அனுமதிக்கப்படுவதில்லை). இத்துறைக்கு ஹரித்வாரம், கங்காத்வாரம், ஸ்வர்க த்வாரம், மோக்ஷத்வார மென்ற பெயர்களிருக்கின்றன. இங்கு புரட்டாசி, கார்த்திகை பௌர்ணமிகளில் பெரிய ஸ்னான மேளங்களாகும். பனிரெண்டு வருடங்களுக்கொருமுறை காசி, பிரயாகைகளைப்போன்று இங்கும் கும்பமேளம் நடக்கும். அப்போது ஒரு வருடம்வரை ஜாத்ரை (சந்தை) கூடும். அப்போது சுமார் 10-20 கோச தூரம் கூட்டம் நிறைந்திருக்கும். விசாலமானதும், விசேஷமுமான இந்தத் துறையில் சாயங்காலம் 3-4 மணிக்கு சாதுக்கள்-சந்நியாசிகள் ப்ரம்மசர்யையைப்பற்றி உபந்நியாசம் செய்வார்கள். சிலர் உயர்ந்த வியாசபீடங்களிலுட்கார்ந்து புராணப் பிர

சங்கம் செய்வர். சிலவிடங்களில் கதைகளும் பஜனைகளும் நடக்கும். தினமும் காலை 10-12 மணிவரை ஸ்னானத்தின் ஆரவாரமும், ராத்திரி 10 மணிவரை ஆரதி, பஜனை ஆரவாரமுமாகவிருக்கும். எனின் நடுவே ஓரிரண்டு மணி நேரம் சாப்பாட்டுக்காக ஒய்வு தவிற மற்ற எச்சமயத்திலும் எல்லாத் துறைகளிலும் கூட்டங்கூடியிருக்கும். சூரியாஸ்தமன சமயத்தில் ஸ்னானம், ஆரத்திகளுக்காக மறுபடி ஜனங்கள் கூடுவார்கள். முக்கிய பூசாரி 80-100 வர்த்தி (திரி) களுள்ள ஆரத்தியை ஏற்றியவுடன், மற்றைய பக்தர்களும் தந்தம் ஆரத்திகளையேற்றுவர். அவைகளின் பிரதிபிம்பம் கங்கையில் அக்கரையிலுள்ளோருக்குக் காணும். அப்போது வாத்யங்கள் முழங்கும். ஆரத்தி முடிந்தவுடன், அவைகளைக் கங்கையில் மிதக்க விட்டுவிடுவார்கள். இப்படி விடப்பட்ட ஆரதிகள், கங்கையெங்கிலும் பரவியிருக்கும் காட்சியினழகை வர்ணிக்கமுடியாது. இங்கு ஆரத்திக்காக வர்த்தி, ரோஜாப்பூக்களைக்கொண்ட ஆரத்தி தொன்னைகள் விற்கப்படும்.

தீர்த்தம்-
ஆலயங்கள்.

ஸ்ரீஹரிபாயரி (பாதம்) களின் காட் (துறை).—இங்கு ஜலம் மார்பளவு ஆழமாயுள்ளது, பிரவாஹத்தின் வேகமும் அதிகமில்லை. சிலர் இங்கு வேறொருவர் கைகளைப் பிடித்துக்கொண்டு ஸ்னானம் செய்வார்கள். சிலர் நீந்துவார்கள். பிரவாஹத்தில் மனிதர்கள் அடித்துக்கொண்டு போகப் படாவண்ணம் இங்கு வலைக்கம்பிகளைப் போட்டிருக்கின்றனர். இவ்விடத்தில், எப்படிப்பட்ட துக்கங்கொண்டவர்களாயினும் சரி, அவர்களுக்குச் சமாதானமுண்டாகாமலிராது. இவ்விடம் அவ்வளவு ரமணீயமானதாக விருக்கின்

றது. சாப்பாட்டுக்காக ஒரு இரண்டுமணி நேரம், இராத்திரி தூங்கும் சமயம், இது தவிற மற்ற வேளைகளிலிங்கிருப்பதால் அலுப்புண்டாவதேயில்லை. அங்குநின்றும் எழுந்துபோகவே மனம் வராது. மேலும் கங்கைக்கரை மற்ற இடங்களிலும் அழகாயிருக்கிறது. இங்கு கங்கையின் ஜலம் படிகத்தைப் போன்று தெளிவாயும், அதில் மஞ்சள் வர்ண மீன்கள் நம்மேல் உராய்ந்துகொண்டு சஞ்சரித்துக்கொண்டுமிருக்கும். கங்கையை நினைப்பதனால் மனிதன் மனமும், தோத்திரத்தினால் வாக்கும், ஸ்னானத்தினால் உடலும் சுத்தமாகின்றன. என்றால் கங்கை உள், வெளியிரண்டையும் சுத்தி செய்யும் தன்மைத்தாயிருக்கிறது. இதனனுபவத்தை இங்கு பெறாதவர்களுக்கு இதனைத் தெரிவிப்பது கஷ்டமானதாம். இத்துறையில் கங்காத்வார மந்திரமுளது. இங்கு ஒரு துறையின் கல்லின்மேல் விஷ்ணுபாதத்தின் குறிகளிருப்பதனால் இதற்கு விஷ்ணுபாத காட் என்ற பெயரிருக்கிறது. இங்கு கங்கைக்குள்ள சுத்திசெய்யும் குணம் பூர்வீர்களுக்கு எவ்விதம் தெரிந்து அவர்கள் எப்படி பாதகங்கள் நீங்குவதற்கென கங்கா ஸ்னானத்தை விதித்தனரென்பது, இப்போதைய மேனாட்டு விஞ்ஞானிகளுக்கும் ஆச்சரியத்தை யுண்டாக்கியிருக்கிறது. மார்க் ட்வைன் (Mark Twain) என்பான் ஆக்ராவில் அரசாங்க ஆங்கிலேய ரஸாயன சாஸ்திரியொருவனின் சில பிரயோகங்களைப்பற்றித் தன் 'More Tramps Abroad' என்ற புத்தகத்தில் கீழ்வருமாறு வர்ணித்திருக்கிறான்.—

"He added swarm after swarm of cholera germs to this (Ganges) water; within six hours they always died, to the last sample. Repeatedly he took pure well water which was barren of animal life and put into a few cholera germs;

they always began to propagate at once and always within six hours they swarmed and were numerable by millions upon millions. For ages the Hindus have had absolute faith that the water of the Ganges was utterly pure, could not be defiled by any contact whatsoever and infallibly made pure and clean whatsoever thing touched it. They still believe it, and that is why they bathe in it and drink it The Hindus have been laughed at these many generations, but the laughter will need to modify itself a little from now on. How did they find out the water's secret in those ancient ages ? Had they germ-scientists then ? We do not know. We know that they had a civilization long before we emerged from savagery."

இவ்விதமான கங்காநதியில் ஹரிபாத காட்டின் மூலையொன்றிலிருந்து மந்திரம் (கங்காத்வார) வரை ஒரு பெரிய இருப்புச் சங்கிலியைக் கட்டியிருக்கின்றனர். இத்துறையின் மேற்பக்கத்திலுள்ள ப்ரம்மகுண்டத்திலோ அல்லது அக்கம் பக்கத்திலுள்ள வேறிடத்திலோ ஸ்னானம் செய்வோர் யாராயினும் கங்கா பிரவாஹத்தில் அடித்துக்கொண்டு போகப்பட்டால், அவர்கள் இந்தச் சங்கிலியைப் பற்றிக் கொண்டு பிராணனைக் காப்பாற்றிக் கொள்ளும்பொருட்டாக இது கட்டப்பட்டுள்ளது. (2) ப்ரம்மகுண்டம். இதன் மகிமை விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இக்கங்கா தீரத்தில் பிரமன் யாகம் செய்தான். அதனால் இது மிகப் புனிதமானதாயுள்ளது. ஹரித்வாரம் வந்த யாத்திரீகரனைவரும் இங்கு ஸ்னானம் செய்து, கங்கையைப் பாத்திரங்களில் நிரப்பிக் கொண்டுபோவார்கள். இதன் கரையிலுள்ள கங்காமந்திரத்தில் இராப் பகலின்றி ஆரதி, அர்ச்சனைகள் நடந்த வண்ணமிருக்கும். இத்துறைக்குப் பக்கத்தில்

அனேக உபந்நியாசம், கதை, பஜனைகள் நடந்துகொண்டிருக்கும். இத்துறையிலுள்ள பல தேவதைகளினாலயங்களில், சிலவற்றில் கங்காதேவி, சிவன், மஹாவீரமூர்த்திகளும், வேறு சிலவற்றில் ராம, லக்ஷ்மண, ஸீதையின் மூர்த்திகளுமிருக்கின்றன. (3) குசாவர்த்தம். ஹரிபாதத்துக்கு வலதுபக்கத்தில் கொஞ்சதூரத்தில் இப்பிரசித்தி பெற்ற துறையிருக்கின்றது. இதற்குச் சமீபமாயும் பல தர்மசாலைகளிருக்கின்றன. இங்கு யாத்திரீகர் பிண்டதானம் செய்வர். மேஷ ஸங்க்ராந்தி (வருடப் பிறப்பு) சமயத்தில் இங்கு ஸ்னானத்துக்கும் பிண்டதானத்துக்கும் அனேக யாத்திரீகர் வருவார்கள். இவ்விடத்தில் ஸ்னானம், தானம், ஜபம், ஹோமம், பிண்டதானம், தர்ப்பண முதலியவற்றைச் செய்வோருக்கு மிகுந்தபலன் கிடைக்குமென ஸ்காந்த புராணத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. மேலும் ஸ்காந்த புராணம் இதைப்பற்றிக் கூறுவதாவது.—“இங்கு மஹா முனி தத்தாத்ரேயர் 1,000 வருடகாலம் ஒரு காலில் நின்று தவம் செய்துகொண்டு தருப்பை, புஷ்பங்கொண்டு அர்ச்சனை புரிந்துவந்தார். ஒருநாள் கங்கையில் பிரவாஹம் வந்து தவத்தில் மூழ்கியிருந்த முனியின் பூஜைத் திரவியங்களை அடித்துக்கொண்டு, தத்தாத்ரேயரின் தபோ பலத்தினால் முன்னே செல்லமாட்டாமல் அவ்விடத்திலேயே பம்பரம் மாதிரிச் சுழலவாரம்பித்தது. குசம் (தர்ப்பை) முதலிய வஸ்துக்கள் அதிலகப்பட்டுச் சுழன்றன. முனி கண்ணைத் திறந்து இதைப் பார்த்துக் கோபங்கொள்ளவும், பிரமன் முதலானோர் வந்து பிரார்த்தித்தார்கள். அப்போது முனி சந்தோஷமடைந்து—“என் குச முதலிய திரவியங்களைக் கங்கை இங்கேயே வைத்துக்கொண்டிருப்பதனால், இன்று

முதல் இது குசாவர்த்த தீர்த்தமெனப் பெயர்பெற்று, இங்கு தர்மவிதிகளைச் செய்வோரின் மனோரதங்களெல்லாம் பூர்த்தியாகட்டும், மேலும் தேவதைகளெல்லாம் இத்தீர்த்தத்தில் வாசம் செய்யட்டும்"—என்று வரங்கொடுக்கப் பிரமன் 'ததாஸ்து' (அப்படியே ஆகுக) என்றான்".— இத் துறைக்குச் சமீபமாய் ச்ரவணநாத காட், விஷ்ணுகாட் இவையிருக்கின்றன (4) பில்வகேச்வரம் — இதொரு குன்று. ஹரித்துவாரத்துக்கு மேற்கிலிருக்கின்றது. இதற்குப் பின்னால் கௌரிகுண்டமிருக்கின்றது. இங்கு யாத்திரீகர் ஸ்னானம் முதலியன செய்து, குன்றின்மேலுள்ள பில்வகேச்வரரைத் தரிசிக்கச் செல்வர். இங்கு மகரிஷி ரிசீகனாச்ரமமிருக்கின்றது. சமீபத்திலேயே ஒரு குகையில் துர்க்கையின் விக்ரஹமிருக்கின்றது. இவ்விடம் பழைய தபோபூமியாய் மிக ரமணீயமானதாகவிருக்கிறது. (5) நீல பர்வதம் — கங்கையின் அக்கரையிலுள்ள குன்று. இக் குன்றின் சமீபத்தில் ஓடும் நீலகங்காதாரையே நதியின் முக்ய தாரையாம். ஹரித்வாரத் துறைகளிலோடுவது கங்கா நதியின் கால்வாய்கள். நீலபர்வதத்தின் மேல் சண்டியின் ஆலயமிருக்கின்றது. ப்ரம்மகுண்டத்தில் ஸ்னானம் செய்வோருக்கு இவ்வாலயம் தென்படும். குன்றினடியில் நீலேச்வரமென்ற லிங்கம் நீலனென்ற பக்தனால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாயுள்ளது. (6) கநகலதீர்த்தம். இது ஹரித்வாரத்துக்குத் தெற்கே மூன்று மைலிலிருக்கின்றது. இங்கு ஸ்னானம் செய்யும் எந்த கலனும் (கீழோன்) முக்தியடைவானென்று சொல்லப்பட்டிருக்கின்றமையின் இதற்கு கநகல தீர்த்தமெனப் பெயர்வந்தது. இங்கு லண்டௌர ராணியின் சத்திரியிருக்கிறது (குடை). அதில்

ஸ்ரீக்ருஷ்ணனின் அழகிய விக்ரஹமிருக்கின்றது. கநகலம் மிகப் பழமையான இடம். இங்கு ஸனற்குமாரர் தவம் செய்துகொண்டிருந்தார். இவ்விடத்தில்தான் தக்ஷப் பிரஜாபதி யக்ஞம் செய்தபோது, ஸதி (பார்வதி) யக்ஞ குண்டத்தில் பிரவேசித்து, மஹாதேவன் தக்ஷப் பிரஜா பதியின் யாகத்தை அழித்தான். இங்கு தெற்குப்பக்கத்தில் தக்ஷேச்வர மந்திரமிருக்கின்றது. இதில் வீரபத்திரருடை யவும் பத்ர காளியினுடையவும் மூர்த்திகளிருக்கின்றன. அதனைச் சேர்ந்ததாய் ஸதீகுண்டமுள்ளது. இதில் யாத்தி ரீகர் ஸ்னானம் செய்வர். ஸீதாகுண்டமென்றதொரு தீர்த்தமும் சமீபத்திலிருக்கின்றது. இதற்குப் பக்கத்தி லுள்ளதொரு குன்றின்மேல் ஸ்ரீசங்கரரின் த்ரிசூலமிருக் கிறது. கநகல கிராமவமைப்பு மிக அழகாயிருப்பதோடன்றி நதிக்கரையில் தோட்டங்களுமிருப்பதால், இங்கு இயற்கைக் காட்சி ரமணீயமாயிருக்கும்—மேற்கூறியவைகளன்றி ஹரி த்வாரத்தில் தரிசிக்கத்தக்க ஆலயங்களில் முக்கியமானவை பின்வருமாறு:—ச்ரவணநாத மஹாதேவ மந்திரம். இங்கு பஞ்சமுகி சிவமூர்த்தியுண்டு. அதன்முன் 5 அடி நீளம் 4 அடி உயரமான நந்தியிருக்கின்றது. கங்கா மந்திரம். 24 அவதார மந்திரம், பீம கோடா (பீமன் தவம் செய்த இடம்.), அஸாதேவி மந்திரம், மாயாதேவி மந்திரம். பழைய மாயாபுரம்.—ஹரித்வாரத்திலிருந்து ஒருமைல் தூரத்தி லுள்ள இவ்விடத்தில் பழைய சின்னங்களைமட்டிலும் காண லாம். மேலும் ஹரித்வாரத்துக்குச் சமீபமாய் ஜ்வாலாபுரம், சத்யநாராயண சட்டிஎன்ற காணத்தக்க இடங்களிருக்கின் றன. இங்குள்ள ஸனாதன தர்மிகளின் ரிஷி குலமும், காங்கடி கிராமத்தி னருகேயுள்ள ஆர்ய சமாஜத்தினரின் குருகுல

விச்வ வித்யாலய (சர்வ கலாசாலை) மும் பார்க்க வேண்டியவை. ஹரித்வாரத்திலிருந்து ஹிமாலயத்திலுள்ள பதரி, கேதாரநாத் முதலிய யாத்திரை செய்வோர் அங்கே வேண்டிய கம்பளித்துணி, வாகனங்கள் முதலியவற்றை ஹரித்வாத்திலிருந்தே கொண்டு செல்வர்.

ஹரித்வாரத்துக்கு வடக்கில் சுமார் 17 மைல்தூரத்தில் ரிஷிகேசமென்ற பிரசித்தி பெற்ற இடமிருக்கிறது.

**ரிஷீகேசம்.**

இதனை ஹ்ருஷீகேசமென்றும் அழைப்பதுண்டு. இதுவும் மாயாக்ஷேத்திரத்தோடு சேர்ந்ததெனச் சொல்வர். இவ்விடம் கங்கைக்கரையில் அரண்ய நடுவே மிக ரமணீயமாயுள்ளது. ரயில் மார்க்கமாக ஹரித்வாரத்தி லிருந்து இதன் தூரம் 23 மைல்களாம். இது தபோவன மானமையின் யோகிகளும் சன்யாசிகளுமிங்கு வசிக்கிறார்கள். இப்போது இங்கு பல தர்மசாலைகளும் தேவாலயங்களு மிருக்கின்றன. அவைகளின் பாபா காலீ கம்பளிவாலாவின் க்ஷேத்திரமும் தர்மசாலையும் முக்கியமானவையாம். இங்கு பரத மந்திரமென்ற பழைய ஆலயமிருக்கின்றது. அதனிருப்பிலிருந்து அதனைப் பௌத்தர் காலத்ததெனக் கொள்ளலாமாயினும் அவ்விடத்தில் பரதன் தவம் செய்துகொண்டிருந்தானெனச் சொல்வார்கள். ஹிமாலய யாத்திரீகர் இங்கு நின்றும் கூட வேண்டியவைகளைக் கொண்டு செல்லலாம்.

ஹரித்வார—ரிஷிகேசயாத்திரை முடித்துக்கொண்டு பிரயாகையை நோக்கிப் புறப்படும். யாத்திரீகர்களுக்கு

**நைமிசாரண்யம் நேமிஸாரம்.**

நடுவில் சீதாபுர ஜில்லாவில் கோமதி நதிக்கரையில் நேமஸாரமென்ற ஸ்டேஷனகப்படும். இதே நைமிசாரண்ய

க்ஷேத்ரம். இப்போது இங்கு ஒரு பெரிய கிராமமிருக்கின்றது. இது பிரசித்தியான 51 பீடஸ்தானங்களிலொன்றும். நேமி என்றால் சக்கரத்தின் வட்டம், ஷ என்றால் இடம், அரண்யமென்றால் காடு, இவ்விதம் இதற்கு நைமிஷாரண்ய மெனப் பெயர் வந்துள்ளது. ஸத்ய யுகத்தின் ஆரம்பத்தில் பிரமன் சிருஷ்டியை (படைப்பை) முடித்த பின் ரிஷிகளெல்லோரும் கூடி பிரமனைப் பார்த்து, "இவ்வுலகில் நாங்கள் தவம், யக்ஞ முதலியவற்றைச் செய்ய மிக மேலானதும் புனிதமாயதுமாகிய இடமெது?" எனக் கேட்டனர். அப்போது பிரமன் தன் சங்கற்பத்தால் சக்கரமொன்றை யுண்டாக்கி, "எந்த இடத்தில் இச்சக்ரவட்டம் தானாகவே போய் விழுமோ, அப்பிரதேசம் தவத்துக்கு மிகச்ரேஷ்டமாயும் யோக்யமானதாயுமாவதோடன்றி, அதே பூமிக்குக் கேந்த்ரம் (மத்யம்) என்னப்படும்" என்று சொன்னான். அச்சக்கரவட்டம் இவ்வனத்தில் வந்து விழுந்தமையின் அன்று முதல் இதற்கு நைமிசாரண்யமெனப் பெயரேற்பட்டது.—(சிவ புராணம்). அந்தச்சக்கரம்விழுந்த இடத்துக்கு சக்ரதீர்த்தமென்ற பெயராயிற்று. சத்யயுகத்தில் ஸ்வாயம்புவ மனுவும் அவன் மனைவியான சதரூபையும் அனேகாயிரம் மகரிஷிகளும் சேர்ந்து யக்ஞம், தவங்களைச்செய்த இடமுமிதுவேயாம். திரேதா யுகத்தில் ஸ்ரீராமசந்திரன் அச்வமேதம் செய்ததும் இவ்விடத்தில் தானென்பர். இங்கு ஸ்ரீராமசந்திரன் யாகம் செய்துகொண்டிருக்கையில் வால்மீகி முனிவர் லவகுசர்களுடன் வந்து ஸீதாதேவியை அழைத்துக் கொள்ளவேண்டுமென்னவும், ஸ்ரீராமன் "ஸீதை சுத்தமானவளென்றும் பாபமற்றவளென்றும் முனிவர்களுக்கு

விளக்கட்டும்” என்றான். அப்போது இராமனுணையால் வசிஷ்டர், வாமதேவர், ஜாபாலி, காச்யபர், விச்வாமித்ரர், தீர்க்கதமர், துர்வாஸர், புலஸ்த்யர், சக்தி, பார்க்கவர், வாமனர், மார்க்கண்டேயர், மிகக்கீர்த்திசாலியான மௌத்கல்யர், கர்கர், ச்யவனர், தர்மவானுன சதானந்தர், பரத்வாஜ, தேஜஸ்வி, அக்னிபுத்ரர், நாரதர், பர்வதர். கௌதமர் முதலிய முனிவர் பலரும் ஸீதையின் பிரமாண வசனங்களைக்கேட்க வந்திருந்தனர். ஸீதாதேவி இங்குவந்து “நான் மனோவாக்குக் காயங்களால் ஸ்ரீராமசந்திரனையே பூஜித்துக்கொண்டிருந்தவளாயின் பூமாதேவி தானுகவே என்னைத் தன்மடியில் சேர்த்துக்கொள்ளட்டும்!” எனச் சொல்லிக்கொண்டிருக்கையிலேயே பூமிபிளவுபட்டு, அதற்குள்ளிருந்து ஒரு திவ்ய சிம்மாசனம் வெளிப்பட, அதில் வீற்றிருந்த பூமாதேவி ஸீதையைப் பற்றித் தன் மடியில் உட்காரவைத்துக்கொண்டாள். அப்போது நான்கு திக்குகளிலிருந்தும் பூமாரி பொழிந்தது. ஆனல், அச்சிம்மாசனத்தின் மேல் வீற்றிருந்த பூமாதேவி ஸீதாதேவியுடன் பூமியினுள் பிரவேசித்தாள். இப்போதுள்ள ஸீதாகுண்டமெனப்படுவதே அவ்விடமெனக் காட்டுவார்கள். பிறகு ஸ்ரீராமன் ஸீதையின் உருவத்தை மனதில் பதித்துக்கொண்டு அயோத்தி திரும்பினன். மேலும் இங்குள்ள தசாச்வமேத காட் என்றவிடத்தில் ஸ்ரீராமசந்திரன் இடையூறு யாதுமின்றிப் பத்து அச்வமேதங்களைச் செய்ததாகச் சொல்வர். த்வாபரயுகத்தில் பாண்டவர்கள் அக்ஞாதவாஸம் செய்தபோது இங்குள்ள விராடராஜனிடம் இருந்தனரென விராடராஜனது கோட்டையின் பழைய சின்னங்களை இங்குள்ளோர் காட்டுவார்கள். மேலும் இங்குள்ள ஸுதகத்தி

சக்தி உண்டாயிற்று. அதையே லலிதா தேவி என்ற பெயருடன் இங்கு ஸ்தாபித்தனர். சக்கர தீர்த்தத்தில் நீராடி லலிதாதேவியை ஆராதிப்பவர்களுக்கு ஆயிரம் அச்வமேதம் செய்த பலனும், ஆயுராரோக்கியாபிவிருத்தியுமுண்டாமெனச், சக்தியாமல தந்த்ரத்தில் சொல்லப்பட்டுளது. (3) ஸ்ரீஸூத கத்தி—இது சக்கர தீர்த்தத்தின் சமீபமாயுள்ளது. இவ்விடத்தில்தான் ஸூதபுராணிகர் 80,000 ரிஷிகளுக்குப் புராணம் சொல்லியதெனவும், ஸத்யநாரயணர் கதை இங்குதான் எழுதப்பட்டதாகவும் பிரசித்தம். (4) ஸ்ரீவ்யாச கத்தி. இது கோமதிநதிக்குச் சமீபமாயும், சக்கர தீர்த்தத்திலிருந்து இரண்டு பர்லாங்கு தூரத்திலுமிருக்கின்றது. இங்கு பழைய ஆலமரத்தோடு சேர்ந்த கோயிலொன்றுண்டு. இந்த ஸ்தலத்தில் வியாசமஹாரிஷி உட்கார்ந்து பூர்வீக பாரதநாட்டின் இதிகாச, கலை, ஸம்ஸ்க்ருதி வைபவங்களைக்கொண்டு இதிகாச ஸ்வரூபமாக 18 புராணங்களையும் மஹாபாரதத்தையும் இயற்றினரெனப் பிரசித்தம். இவைகளன்றி நைமிசாரண்யத்தின் சுற்றிலும் $1\frac{1}{2}$ கோச அளவிற்குள் சுமார் 20 தீர்த்த-தேவாலயங்களகப்படும். 84 கோசத்தின் 12 (தின) சுற்றளவில் வேறு தீர்த்தங்களும் ஆலயங்களுமிருக்கின்றன. அது பங்குனிமாத அமாவாசைதினம் ஆரம்பமாகிப் பௌர்ணமி தினம் முடிவடையும். அப்போது யாத்திரீகரின் பின்னோடு கடை முதலியவை சஞ்சரிக்கும். இப்பரிக்கிரமத்தில் திருடர்களின் பயமதிகமாதலால் யாத்திரீகர் கூட்டங்கூடி பிரயாணம் செய்வர். இங்கு யாத்திரை முடித்துக்கொண்டவர்கள் முன்னால் அயோத்தி வழியாக லக்னோ செல்வர்.

## 10. லக்னோ (லக்ஷ்மணபுரி), அயோத்தி, நந்திக்ராமம்.

லக்னோ, லக்ஷ்மணபுரி.

கோமதி நதியின் வலக்கரையில் புராதனமும் சரித்திரப் பிரசித்திபெற்றதுமான லக்னோ நகரம் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. முதலில் இது அயோத்தி பிராந்தியத்தின் முக்ய பட்டணமாயிருந்தது. 1857ம் சிப்பாய் கலகத்துக்குப்பிறகு, இது ஐக்கிய மாகாணத்துடன் சேர்க்கப் பட்டது. இப்போது இதில் ஐக்கிய மாகாணச் சட்ட நிருபண சபை (Legislative Council), லக்னோ சர்வ கலாசாலை இவை இருக்கின்றன. விஸ்தீர்ணத்தில் (கல்கத்தா, பம்பாய், சென்னையைவிட்டு) இது நான்காவது பட்டணமாகும். இங்கு ஆங்கிலேயரின் தண்டு (சைனியமிருக்குமிடம்) இருக்கிறது. இவ்விடத்தில் 6 ரயில் மார்க்கங்கள் சந்திக்கின்றன. அதனால் இங்கு லக்னோ ஜங்ஷன், ஸிடி என்ற இரு ரயில்வே ஸ்டேஷன்களுண்டு. இரண்டிலும் வண்டி முதலிய சௌகரியங்களிருக்கின்றன. இதன் ஜனத் தொகை 2,73,659. இந்நகரின் நடுவில் கோமதியாறு ஓடுவதனால் அதன்மேல் நடமாட அங்கங்கு பாலங்களைக் கட்டியுள்ளார்கள். சஹர் (ஸிடி), கண்டோன்மெண்டினூடே ரயில் மார்க்கமுளது. இப்பட்டணத்தின் பழைமை இராமாயண காலத்திலிருந்து ஆரம்பமாகிறதெனத் தெரிகிறது. இராமன் பட்டாபிஷேகமானபிறகு கோமதிநதிக்கரையிலுள்ள பிராந்தியத்தை லக்ஷ்மணனுக்குக் கொடுத்து, அங்கு இராஜ்யத்தைத் தாபித்து இருக்கும்படிக் கூறினான். அப்போது லக்ஷ்மணன் கோமதிக்கரையிலொரு நகரத்தை ஏற்

படுத்தி, அதனைத் தன் ராஜதானியாக்கி, அதற்கு லக்ஷ்மண புரி என்றபெயரிட்டான். காலக்கிரமத்தில் அது 'லகனூர்' என்ற ரூபத்தையும் இப்போது லக்னோ (Luknow) என்ற ரூபத்தையும் கொண்டிருக்கிறது. இந்நகரமும் இதன் நவாப்களும் இந்திய சரித்திரத்தில் பிரசித்தியடைந் துள்ளனர். நவாப் ஷுஜா உத்தௌலாவின் வம்சத்தி னரிடம் லக்னோ சிம்மாசனமிருந்தது. அவ்வம்சத்து நான்காம் நவாபான யுஸபுத்தௌலா என்பவன் காலமுதல் இது விசேஷமாய் அபிவிருத்தியடையவாரம்பித்தது. அவன் 1784ல் வருடப் பஞ்சத்தில் ஜனங்கள் ரக்ஷணைக்காக அதிக செலவின்பேரில் இமாம் பாரா, பீஜாபுரமஹல் முதலிய கட்டடங்களைக் கட்டினன். 1798ல் நவாப்பின் ஸஹாயத் துக்கு ஆங்கிலேயர் 10,000 சிப்பாய்கள்கொண்ட சைனி யத்தை லக்னோவிலிருத்தி, அதன் ரக்ஷணைக்காக வருட மொன்றுக்கு 76 லக்ஷம் ரூபாய் கொடுக்கவேண்டுமென ஒப்பந்தம் செய்துகொண்டு அதற்காக நவாபினிடமிருந்து முராதாபாத், பரைலி இடாவா, பரூகாபாத், அலகாபாத், கான்பூர் ஜில்லாக்களைப் பெற்றுத் தம் ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டனர். 1857ல் நவாபாகவிருந்த வாஜீத் ஆலிஷாவின் கொடுங்கோன்மையினின்றும் ஜனங்களைக் காப்பாற்ற, அயோத்தியை லக்னோவுடன் ஐக்கிய மாகாணத் தோடு சேர்த்தனர். லக்னோவில் இப்போதும் மொகலாயர், நவாப் காலத்து வைபவத்தைக் காட்டக்கூடிய கட்டடங் களும், உத்யானங்களும் பார்க்கத்தகுந்தன. இவைகளில் ரெஸிடென்ஸி, பேலிகார்ட் கேட், மார்ட்டினியர் காலேஜ், மச்சி பவனம், இமாம் பாரா, ஹுஸேனபாத் என்ற விளக் கரண்மனை, பிங்க் பீல்ட் பார்க், ம்யூஜியம், ஆப்ஸர்வேடரி,

ஆலம்பாக், தில்குஷ், கைசர்பாக், ராஜப்ராஸாதம், சத்தா மஞ்சில, இருப்புப் பாலம்—முதலியவை பார்க்கவேண்டியவை. இந்நகரின் சில இந்து தேவாலயங்களிருக்கின்றன. இங்கு கோமதி தீர்த்தம் முக்யமானது. பிரயாணிகளுக்கு இங்கு தர்மசாலை, ஓட்டல், கடை சௌகரியங்களிருக்கின்றன. ஜங்ஷன் ஸ்டேஷனிலிருந்து ஸிடி ஸ்டேஷனுக்கு 3 மைல் தூரம். லக்னோவைப் பார்த்த பிறகு யாத்திரீகர் பைஜாபாத் (Faizabad) தினருகிலுள்ள அயோத்திக்குப் போவார்கள்.

## ஸப்தபுரிகளிலொன்றென்னப்பட்டுப் பிரசித்தியானது அயோத்தி நகரம்.

अकारो वासुदेवःस्यात् यकारस्तु प्रजापतिः॥
उकारो रुद्ररूपस्तु तां ध्यायन्ति मुनीश्वराः॥

என்றால் அயோத்தியில் எல்லா தேவர்களும் வசிப்பதனால் அதனை முனீச்வரர்கள் தியானம் செய்வார்கள்" என்றும் மேலும் அது ஜெயிக்க முடியாததாகையால் அது 'அயோத்யை' என்னும் பெயரைக் கொண்டதெனச் சொல்லப்பட்டுள்ளது. புராணங்களில் அயோத்தி விஷ்ணுவின் சீர்ஷஸ்தானம் (தலைப்பாகம்) எனச் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு ஸரயூ நதி கோக்ரா, ஸரயூ என்ற இரு பிரிவுகளாய்ப் பாய்கிறது. இந்த இதிகாசப் பிரசித்தியான நகரம் இப்போது ஒரு பெரிய கிராமத்தைப்போலிருக்கிறது. இங்குள்ள பழைய கட்டடங்களின் சின்னங்களால் முதலில் இந்நகரம் எவ்வளவு விஸ்தாரமாயிருந்ததென்று யூகிக்கலாம். இராமாயண காலத்தில் அயோத்தியைப்

அயோத்தி.

போன்று பெரிய பிரஸித்த நகரம் வேறில்லை. இராமாயணத்தில் அயோத்தியின் விஸ்தீர்ணம் 12 யோஜனை (96 மைல்) என வர்ணிக்கப்பட்டுளது. சூரியவம்சத்து ரகு, திலீபன், தசரதன், ராமன் முதலாய சூரர்களான அரசர்களுக்கு அயோத்தி ராஜதானியாகவிருந்தது. சூர்ய வம்சத்தரசர்களுக்குப் பிறகு காலகதியால் இவ்விராஜதானி கீழ்த்திசையடைந்தது. ஆனால் பிற்காலத்தில் விக்ரமாதித்தன் அதனை மறுபடியும் நல்ல நிலைக்குக் கொண்டு வந்து நகரத்திலுள்ள ஆலயங்களையும் இடங்களையும் புதுப்பித்தான். ஹுயென்த்ஸாங் என்ற சீன யாத்திரீகன் 7ம் நூற்றாண்டில் இங்கு வந்திருந்தபோது அயோத்தியில் 20 புத்தக் கோயில்களையும் 3,000 பேருக்கு மேற்பட்ட புத்த பிக்ஷுக்களையும் தான் பார்த்ததாக எழுதியுள்ளான். பிறகு மொகலாயர் காலத்தே இங்கு பாபரும் ஔரங்கசீபும் மசூதிகளைக் கட்டினர். இந்த க்ஷேத்திரத்தில் யாத்திரீகர்களுக்குத் தங்கச் சத்திரங்களிருக்கின்றன. வேண்டுவோர் பண்டாக்களிடமும் தங்கலாம்.

இந்த க்ஷேத்திர மகத்துவத்தில் ஸரயூநதி முக்கியமாகக் கொள்ளப்பட்டு, அதில் ஸ்வர்க்கத்வார தீர்த்தமென்பதிருக்கிறது. இத்தீர்த்தத்தில் யாத்திரீகர் தீர்த்தவிதிகளைச் செய்வர். ஸ்ரீராமபத்ரன் தன் அவதார காரிய முடித்து ஸ்வர்க்கம் போம்போது, தன்னோடு ஸ்வர்க்கலோகம் வர இச்சையுள்ளோர் இப்புண்யமான ஸரயூநதியில் ஸ்நானம் செய்து வரவேண்டுமெனச் சொல்லவும், அயோத்திவாசிகளெல்லாம் அந்நதியில் ஸ்நானம்

தீர்த்தம், ஆலயங்கள், நந்திக்ராமம்.

செய்தனர். பிறகு எல்லாரும் விமானமேறி ஸ்வர்க்க மடைந்தனர். அன்றுமுதல் அப்பாகத்துக்கு ஸ்வர்க்க த்வார தீர்த்தமென்ற பெயர் வந்ததென அயோத்தி மகாத்மையில் சொல்லப்பட்டுளது இந்நதிக்கரையில் சுப மானதும் அழகானதுமான வரிசையாகக் கட்டப்பட்டுள்ள துறைகள் ராமகாட், நாகேச்வர காட், தர்மகாட் முதலிய பெயர்களுடன் பேர்பெற்றிருக்கின்றன. இந்நதியில் பெரிய ஆமைகளும் மீன்களும் விசேஷமாயிருக்கும். இதன் கரையில் பல ஆலயங்களிருக்கின்றன. யாத்திரீகர்களுக்கு இது ஒரு கோயில்களின் ஊரெனத் தோன்றும். அவை களில் முக்கியமானவை இவையாம்:—ஹனுமான் கடீ (குன்று) என்ற உயர்ந்த இடத்திலுள்ள மாருதி கோயில். இங்கு சாதுக்களும் பைராகிகளும் விசேஷமாயிருப்பர். (2) ராம ஜன்மஸ்தானம் என்றவிடத்தில் பாபர் கட்டுவித்த மசூதியொன்றிருக்கிறது. (3) நாகேச்வரநாத மஹாதேவ மந்திரம் பார்க்கவேண்டியது. இங்கு ஸாதுக்களின் டாகுர் (தேவாலயங்கள்) கள் அனேகமிருக்கின்றன. இவையன்றி ராமகோட்டை, மணிபர்வதம், தர்சனசிங்க தேவாலயம், சீதா காட்டில், ஸீதாதேவியினுலயம் முதலியவைகளிருக்கின்றன. இங்கு ராமர் கோயில்கள் விசேஷமாயிருப்பது சுபாவமாயிருக்கிறது. ஆனால் இங்குள்ள தேவாலயங்களில் 30 மஹாதேவர் (சிவன்) கோயில்கள், 63 விஷ்ணு கோயில்கள் முக்யமானவை. இங்கு அனேக புனிதமான இடங்களையும் தீர்த்தங்களையும் காட்டுவார்கள். அவைகளில் சக்ர தீர்த்தம், க்ஷீரஸாகர தீர்த்தம், திலோத்ம தீர்த்தம், பாப மோசன தீர்த்தம், ருணமோசன தீர்த்தம், மனோரமா தீர்த்தம், வித்யாகுண்டம், ராமகுண்டம், ஸுவர்ணகுண்டம்,

கைளசல்யாகுண்டம், ஸுமித்ராகுண்டம் வசிஷ்டகுண்டம், ப்ருஹஸ்பதிகுண்டம், பரதகுண்டம், ராமரேகாஸ்தானம், ராமப்ரஸாதஸ்தானம், கௌசலாமஹ்ருஸ்தானம், கைகயீ மந்திரஸ்தானம், ஸுமித்ராமந்திரஸ்தானம், ரத்ன கனக ஸிம்மாஸனஸ்தான மென்று சில தீர்த்தங்களையும். கோயில் களையும், சின்னங்களையும் காட்டுவார்கள். சில விடங்களில் இப்போது பாழடைந்தசுவர், அஸ்திவாரம், கற்களையன்றி வேறு எவ்வித வைபவத்தின் அடையாளமு மகப்படாது. அயோத்தியின் அக்கம் பக்கங்களில் ராம லீலை சம்பந்தமான பல இடங்களில் பார்க்கத் தக்கனவாயுள்ளன. அயோத்தி யின் பிரதக்ஷிணம் நான்கு விதமாக வுள்ளது. அவைகளில் சிறியது 6 மைல் தூரம். பெரியது 84 கோச தூரம். சில யாத்ரீகர் இந்த பரிக்ரமத்தைக் (பிரதக்ஷிணம்) கைக் கொள்ளுவர். அவ்விதமே ஸரயூநதியின் பரிக்ரமம் 14 கோச அளவினது. மேலும் இங்கு ஸரயுக் கரையில் குசனால் ஸ்தாபிக்கப்பட்ட சிவலிங்கமிருக்கிறது. அதன்மேல் சந்தர கலை, பிநாகதனுஸ், த்ரிசூலம், கங்கை முதலிய எல்லாச் சின் னங்களு மிருக்கின்றன. சிவலிங்கத்தின்மேல் இவ்விதச் சின்னங்களிருப்பது அபூர்வம். இங்கு ஸரயுவின் விசால மான கரையில் கங்கா ம்ருத்திகை (மண்) முதலான ப்ர ஸாதங்களின் கடைக ளிருக்கின்றன. இங்கு ஆகார முத லானதின் பண்டங்கள் மலிவாய்க்கிடைக்கும். இந்நகரம் முதலில் இப்போதுள்ள பைஜாபாத் (இங்கிருந்து 5 மைல் தூரத்திலுள்ளது) வரையில் பரவி யிருந்ததாகத் தெரிய வரு கிறது. அங்கிருந்து தெற்கே 6 மைல் தூரத்தில் நந்தி க்ராமம் (அயோத்தியிலிருந்து 11 மைல்) இருக்கிறது. அங்கு பரதகுண்டமென்ற ஏரியும், பரதன் கோயிலும் இருக்

கின்றன. ஸ்ரீராமன் அரண்யத்தில் வசித்தபோது பரதன் இங்கு ராமத்யானம் செய்துகொண்டு இங்கு அவனது பாதுகைகளைப் பூஜித்து வந்தான். அயோத்தியின் ராம காட்டிற்கு கிழக்கில் 8 மைலில் ஸரயுக்கரையில் தசரத ராஜனின் உடலைத் தகனம் செய்த இடமிருக்கிறது. அயோத்தியில் குரங்குகளின் உபத்திரவ மதிகமாயிருப் பதனால் அங்கு கடைகளில், எந்த வஸ்துவையும் வெளியில் வைப்பது கிடையாது. சில கூடை, தடிகள் வைத்திருப்பதே கடைகளின் குறிப்பாம். இங்கு ஸ்னானம் முதலிய வற்றை முடித்தபின் யாத்ரீகர் பைஜாபாத்தின் வழியாய் ப்ரயாகைக்குப் புறப்படுவர்.

---

## 11. பிரயாகை (அலஹாபாத்), சித்ரகூடம் (சிகரம்).

श्रुतिः प्रमाणं स्मृतयः प्रमाणं पुराणमप्यत्र परं प्रमाणम् ।
यत्रैव गङ्गा यमुना सरस्वती सतीर्थराजो जयति प्रयागः ॥
—प्रयाग माहात्म्य.

ततस्तौ पादचारेण गच्छन्तौ सह सीतया ।
रम्यमासेदतुः शैलं चित्रकूटं मनोरमम् ॥
इति सीताच रामश्च लक्ष्मणश्च कृताञ्जलिः ।
अभिगम्याश्रमं सर्वे वाल्मीकि मभ्यवादयन् ।
—श्रीमद्रामायणे.

ப்ரயாகை தார்மிக, இதிகாச, புராண, அரசியல் திருஷ்டிகளில் மிகப் பிரசித்தி பெற்றதான தீர்த்தராஜ ஸ்தானமாம். அதனால்தான் யாத்திரீகர் "ச்ருதி, ஸ்ம்ருதி புராணங்களின் பிர மாணங்களைக் கொண்டதாயும் கங்கா,

ப்ரயாகையின் தொன்மை.

யமுனா, ஸரஸ்வதி நதிகள் சங்கமஸ்தானமுமாய்ப் புனிதமாய தீர்த்த ராஜ ப்ரயாகைக்கு ஜயமுண்டாகட்டும்!” என கோஷிப்பர். துருஷ்கர்களின் காலத்தே இதற்கு ‘இலாஹாபாத்’ என்ற பெயரேற்பட்டது. இந்நகரம் எந்த யுகத்தில் யாரால் ஸ்தாபிக்கப் பட்டதெனத் தெரியா விடினும் புராணம், புராதன இதிகாசக்கிரந்தங்களை ஆதாரமாகக் கொண்டு, இதன் காலத்தை ஸத்ய யுகத்தின் ஆரம்ப மென யூகிக்கலாம். சங்கர ஸ்ூர ளிடமிருந்து வேதங்களை மறுபடி பெற்ற பின்பு பிரமன் இவ்விடத்தில் பத்து அச்வமேதங்களைச் செய்தான். அவன் யாகம் செய்த இடத்துக்கு தசாச்வமேத காட் என்ற பெயருண்டாயிற்று. இதற்குச் சமீபத்தில் ஒரு மஹாதேவர் கோயிலிருக்கிறது. ராமாயணம், மகாபாரதங்களில் இந்நகரம் அழகாகவும் மனோஹரமாயும் வர்ணிக்கப் பெற்றிருக்கிறது பகவான் ஸ்ரீராம சந்த்ரன் அயோத்தியினின்று வனவாசம் செய்யப் புறப்பட்டு இங்குள்ள பரத்வாஜ முனிவரி ளுச்ரமத்தில் தங்கினான். தர்மபுத்ரன் தன் தம்பிகள், தாயாகிய குந்தியுடன் இங்கு வந்திருந்தனன். இந்நகரின் சமீபமாய்த்தான் துரியோதன் பாண்டவர்களனைவரையும் கொல்லவென லாக்ஷாக்ருஹத்தைக் (அரக்குமாளிகை) கட்டுவித்தான். மஹாபாரத யுத்தம் முடிவடைந்த பிறகு மஹாராஜா தருமன் யுத்தத்தி லேற்பட்ட பாவங்களைப் போக்கும் பிராயச்சித்தத்துக்குத் தம்பிமார்களுடன் இங்கு வந்தான். இவைகளினாலும்,

“यत्र गङ्गा च यमुना यत्र प्राची सरस्वती ।
यत्र सोमेश्वरोदेवो तत्र मामृतं कृधीऽद्रायेन्द्रो परिश्रवा ॥”

ऋग्वेदे ७।५।२८.

என்றதான ச்ருதி வசனத்தாலும் இந்நகரின் பழைமையைப் பற்றிச் சந்தேகமேற்படாது. புராதனக் கிரந்தப்படி இந்த க்ஷேத்திரம் அந்தர்வேதி, மத்ய வேதி, பஹிர்வேதி தீர்த்தங்களின் விவரணத்துடன் சதாத்யாயீ, மத்ஸ்ய புராணங்களில் மூன்று பாகமாக வர்ணிக்கப்பட்டுள்ளது.

இன்றைய ப்ரயாகை, அலஹாபாத்.

இப்போது அலஹாபாத் என்ற பெயரோடு பிரசித்தியானதாய், ஐக்கிய மாகாண அரசாங்கத்தின் இராஜதானியாகவுள்ள ப்ரயாகை க்ஷேத்திரம் சுமார் 2 லக்ஷம் ஜனத்தொகை கொண்டதாய், ஆதரஸாயியா, அஹியாபுரம், முட்டீகஞ்ஜ், கீடகஞ்ஜ், தாராகஞ்ஜ் கர்னல்கஞ்ஜ், கடரா, ஸிவில் லைன்ஸ், லூகர் கஞ்ஜ் என்ற முக்ய பாகங்களாகப் பிரிக்கப்பட்டுளது. அலஹாபாத்தில் குளிர் காலத்தில் குளிர் மிக அதிகமாய் உஷ்ணமானி (Thermometer) 40 டிக்ரிக்கு இறங்கும். வெய்யிற் காலத்தில் வெயிலும் அதிகமாய் 120 டிக்ரிவரை உஷ்ணம் ஏறுவதுமுண்டு. இங்கு வருடமொன்றுக்குச் சராசரி 38 அங்குல மழை பொழியும். இவ்விடத்துக்கு யாத்திரையாய் வரும் ஜனசங்கியை விசேஷம். ஆகையால் யாத்திரை காலங்களில் ரயில்வே கம்பெனியார் யாத்திரீகர்களின் சௌகரியத்துக்காக 8 ப்ளாட்பாரங்களைக் கட்டுவர். அவை பின்வருமாறு:—
(1) அலஹாபாத் ஜங்ஷன். (இ. ஐ. ரயில்வே). இது அலஹாபாத் நகருக்குச் சமீபமாயுள்ளது. அங்கு வரும் யாத்திரீகர்கள் விசேஷமாக இங்கே இறங்குவர். இங்கிருந்து ஜபல்பூர், கல்கத்தா, அயோத்தி, தில்லிக்கு ரயில் போக்கு வரத்துண்டு. (2) நைனீ ஸ்டேஷன். அலஹாபாத் ஸ்டேஷனுக்கு 4 மைல் தூரத்தில் யமுனையின் அக்

கரையிலிருக்கிறது. பம்பாய், கல்கத்தாவிலிருந்து வரும் யாத்திரீகர் இங்கிறங்குவர். இங்கிருந்து ஸங்கமம் மூன்று மைல். கிழக்கு, மேற்கு, தெற்கிலிருந்து வரும் வண்டிகள் இங்குசேரும். இங்கிருந்து அலகாபாத்துக்குப் போக யமுனையின் மேலுள்ள பாலத்தில் ரயில் வண்டிகள் செல்லும். நடந்தும் போவதுண்டு. இதன் மேலிருந்து கங்கை-யமுனை சங்கமக் காட்சி மிக மனோஹரமானதா யிருக்கும். (3) ப்ரயாகை ஸ்டேஷன். அலஹாபாத் ஜங்ஷனிலிருந்து அயோத்தி, பைஜாபாத் பக்கம் போகும் போது 2 மைலில் அகப்படும் ஸ்டேஷனிது. இதற்குப் பக்கத்தில் கங்கைக்குப் பாலங் கட்டியிருக்கின்றனர். அயோத்தி வழியாய் வரும் யாத்திரீகர் சாமான்யமாய் இங்கு இறங்குவர். இந்த ஸ்டேஷனிலிருந்தும் லக்னௌ, ஹரித்துவாரம், காசி முதலிய இடங்களுக்குச் செல்லலாம். (4) ப்ரயாகைகாட் ஸ்டேஷன். இது மாக (மாசி) மேள சமயத்தில் மட்டிலும் கங்கா ஸ்னானத்துக்கு வரும் யாத்திரீகர்களின் சௌகரியத்துக்காகவே கட்டிய ஸ்டேஷன். இங்கிருந்து தாராகஞ்ஜுக்கு நேரப் போகலாம். (5) த்ரிவேணி ஸங்கம ஸ்டேஷன். 1930ம் வருடம் ஸங்கமத்துக்குச் சமீபமாய் இ. ஐ. (ஈஸ்ட் இண்டியன்) ரயில்வேக் காரர்கள் கட்டிய சிறிய ஸ்டேஷன். அலஹாபாத் ஜங்ஷனிலிருந்து இவ்விடத்துக்கு வண்டிகள் விடப்படுகின்றன. (6) அலஹாபாத் ஸிடி (ராம்பாக்) ஸ்டேஷன். இ பட்டணத்தின் மத்தியில் பி. என். டப்ளியூ ரயில் கம்பெனியார் கட்டியுள்ள ஸ்டேஷன். இங்கிருந்து பனாரஸ் பக்கம் ரயில்கள் நேரப்போகும். காசிப் பக்கத்திலிருந்து சிறிய ரயிலில் வரும் யாத்திரீகர் தாரா கஞ்ச் (இஜ்ஜத் ப்ரிட்ஜ்)

ஸ்டேஷன் அல்லது அலஹாபாத் ஸிடியில் இறங்க வேண்டும். இந்த ஸ்டேஷனிலிருந்து கோரக்பூர், ஆஜம் கட், காசி, ரக்ஸௌல் (நேபாளத்துக்குப் போம்போது இறங்கும் ஸ்டேஷன்) முதலிய இடங்களுக்கு ரயில்கள் போகும். (7) இஜத் ப்ரிட்ஜ் (தாராகஞ்ச்) ஸ்டேஷன். இது அலஹாபாத் ஸிடி ஸ்டேஷனிலிருந்து மூன்று மைல் தூரத்தில் காசிக்குப் போகும் மார்க்கத்திலிருக்கிறது. (8) ஜஸிம்ஸி ஸ்டேஷன். இது இஜத் ப்ரிட்ஜ் ஸ்டேஷனிலிருந்து கங்காநதியைத் தாண்டியதும் வருகிற ஸ்டேஷன். இது கங்கையின் அக்கரையிலுள்ளது.—ப்ரயாகையில் முக்ய இடங்களிலும், மேற்கூறிய எட்டு ஸ்டேஷன்களுக்குச் சமீபமாயும், யாத்திரீகர்களுக்கனுகூலமாய்த் தர்மசத்திரங்களிருக்கின்றன. இவைகளன்றி இங்கு சுமார் 1,400 பண்டாக்களின் வீடுகளுள்ளன. அவர்களுக்குப் 'ப்ரயாக வால' ரெனப் பெயர். அவர்கள் சாமான்யமாய்த் தாராகஞ்ஜ், கீட்கஞ்ஜ் முதலிய இடங்களில் விசேஷமாயிருப்பர். யாத்திரீகர்களனேகர் அவர்களுடன் தங்குவர். யாத்திரீகர்களுக்குத் தீர்த்தவிதிகளைச் செய்வித்து, கடவுள் தரிசனமும் செய்வித்தபின் அவர்களிடமிருந்து சம்பாவனை பெறுவதே பண்டாக்களின் முதன்மையான தொழிலாம். ஆனால், யாத்திரீகர் அவர்கள் வார்த்தைக்குச் செவிகொடாமல் முதலிலேயே தம் சக்திக்குத்தக்க செலவு செய்ய நிச்சயங் கொண்டு, அதனை அவர்களிடம் தெரிவித்துத், தம் வேலைகளெல்லாம் முடிந்தபின் அத்தொகையை அவர்களிடம் சம்பாவனையாகக் கொடுப்பது நல்லது. யாத்திரீகர்களிடமிருந்து கூடியவரையில் பறிப்பதே பண்டாக்களின் ஜீவனோபாயம்.

ப்ரயாகையில் செய்யவேண்டிய தர்ம விதிகளில் க்ஷௌரம் ஸ்னனம், தேவதர்சனம், வேணிதானமிவையே முக்யமானவையாம் இங்கு யாத்ரீகர் ஒரு நாள் உபவாச மிருக்க வேண்டும். பிறகு கங்காதீரம் போய், அங்கு க்ஷௌரம் செய்து கொள்ளவேண்டும். राजोवा राजपुत्रोवा लक्ष्मीपतिरेववा। प्रयागे वपनं कुर्यादन्य क्षेत्रे कदाचन ॥

தீர்த்தவிதி ப்ரயாகை மகத்துவம்.

என்றபடி இங்கு வருவோன் அரசனாகட்டும், அரசிளங் குமரனாகட்டும் அல்லது கடவுளே யாகட்டும், ப்ரயாகையில் த்ரிவேணிக்குச் சமீபத்தில் க்ஷௌரம் செய்து கொண்டே தீரவேண்டும். வேறு க்ஷேத்திரங்களில் வேண்டுமானல் க்ஷௌரம் செய்து கொள்ளலாம் இல்லாவிடில் செய்து கொள்ளாமலுமிருக்கலாம். மற்ற க்ஷேத்திரங்களில் தந்தை தாய் உயிருட னுடையவர்களுக்கு க்ஷௌரமில்லை. ஆனல் இங்கு தகப்பன், மகன், அண்ணன், தம்பி எல்லோருக்கும் ஒரே காலத்தில் க்ஷௌரமாக வேண்டும். அதிகமேன்? பெண்களுக்குக் கூட இங்கு அவ்விதி யுண்டு! விதவைகள் இங்கு முண்டனம் செய்து கொள்வர். சுமங்கிலிகளுக்கு இங்கு வேணீதானத்தை விதித்திருக்கின்றனர். இங்கு வந்த யாத்திரீகர் முதல் நாள் கங்கா பேட்டி (கங்கை தரிசனம்), பூர்வாங்க, உத்தராங்கப் பிராயச்சித்தம், ஸசைல (உடுத்த வஸ்திரத்துடன்)—க்ஷௌரஸ்னனம், உபவாசம், இரண்டாநாள் தீர்த்தச்சிராத்தம், பிண்டத்துடன் கோ தானம், ஸுபலம்; மூன்றுநாள் ஸௌபாக்யவாயனம், வேணீதானம், ஸுவாஸிநி (சுமங்கலிகள்) ப்ராம்மண போஜனம் இவற்றைச் சாமானியமாய் அனுசரிப்பது வழக்கமாயிருக்கிறது. முதல் நாள் எல்லா விதிகளும் சுத்த பாகிரதி

(கங்கை) நதிக்கரையில் நடக்கும். க்ஷௌரம், பிராயச்சித்தங்கள் புருஷர்களுக்கு மட்டிலும் விதித்திருப்பினும், கங்கா தரிசனம், உபவாச முதலான கர்மங்களை எல்லாரும் ஆசரிக்கவேண்டும். இங்கு நதி விசாலமாயிருப்பதனாலும், பிரவாஹம் மழைகாலத்தைத் தவிர மற்றக் காலங்களில் கரைக்கு தூரமாக விருப்பதனாலும் ஹரித்வாரம், காசி முதலிய இடங்களிற் போன்று இங்கு படிக்கட்டுகளைக் கட்டவில்லை. மணல் நிறைந்த நதித்தரையில் (River bed) பலகை முதலியனவற்றைக் கொண்டு பண்டாக்கள் (கங்கா புத்ரர்) தம் தம் இருக்கை யமைத்துக் கொள்வர். நதிக்கரையில் க்ஷௌர விதியானபின்பு, பிராயச்சித்தத்துக்குச் சங்கல்பம் செய்விக்கும் புரோகிதர் எந்தச்சிறிய விஷயத்தையும் விடாமல் "இவ்வெல்லாப் பாவங்களினின்றும் என்னை உன் ஸ்னானம் கரை யேற்றட்டும்" என்ற கங்காப்பிரார்த்தனை செய்விப்பார். க்ஷௌரம், ஸ்னானமான பின்பு உடுத்தியுள்ள ஈரவேஷ்டி (துணி) யைப் புரோகிதருக்குக் கொடுக்க வேண்டுமென்ற வழக்கமுண்டு. உபவாஸம் செய்ய முடியாதோருக்குப் பலஹாரம் செய்ய வேண்டியது அங்கு கிடைக்கும். பிறகு கடவுள் தரிசனத்துக்கும் இவ்விடத்தில்,

"त्रिवेणीं माधवं सोमं भारद्वाजं च वासुकीम् ।
वन्देऽक्षयवटं शेषं प्रयागं तीर्थनायकम् ॥"

என்றமாதிரி தரிசன விதியுண்டு. த்ரிவேணி என்றால் கங்கா, யமுனா ஸரஸ்வதி நதிகளின் ஸங்கமம். இங்கு எல்லா யாத்திரை விதிகளும் நடைபெறும். அதனால் த்ரிவேணியின் தரிசனம் தானாகவே ஆனமாதிரியாம். இத்தீர்த்த மஹிமை அபாரமானது. தினம் இங்கு லக்ஷக்கணக்கான ஜனம் சேரும். அந்த ஸ்த்ரீ புருஷர்களின் தலைமயிர்

வண்டிக்கணக்காக நீரிற் சேரும். ஆனால் ஸ்னானம் செய்யும் போதாகட்டும், மருந்துக்கு வேண்டுமென்று தேடினாலும் ஒருமயிரிழைகூட அகப்படுவதில்லை! ஜலம் எப்போதும் நிர்மலமாயிருக்கும். இல்லையாயின் தினமுபயோகப் படும் ஜலத்தில் மயிர் நிரம்பி யிருப்பின், 'ஸானிடரி' கிரமத்துக்குத் தாயகமென்னப்பட்ட இப்போதைய அரசாங்கத்தார் பேசாமலிருப்பதேது? தர்ம ஸம்ஸ்காரமென்று அவ்விதியை ஒரு மூலையில் செய்யுமாறு கட்டளை யிடப்பட்டிருக்கும்! இங்கு அப்படியல்ல. இவ்விடத்தில் க்ஷௌரம் அசுபகரமானதன்று. எல்லாம் மங்களமுண்டுபண்ணத் தக்கவை. கங்கையின் இவ்வசுத்தத்தைப் போக்கும் குணத்தை யெண்ணியே, மயிர்க்கால்களிலுள்ள மலத்தினால் கங்கை தடுக்கப்படாமல் நேர மூளைக்குள் சென்று, புத்தியை சுத்தமாக்க வேண்டுமென்ற உத்தேசங் கொண்டு தான் பூர்வீகர் இங்கு க்ஷௌரத்தை விதித்திருக்கலா மெனத் தோன்றுகிறது. சுமங்கலிகள் இங்கு வேணீ தானம் செய்யும்போது எண்ணை ஸ்னானம் செய்து பின் கணவன் மார் மனைவிகளுக்குத் தலை பின்னுவார்கள். பிறகு இருவரும் வாத்ய கோஷத்துடன், ஸௌபாக்ய வாயனத்தைக் கொண்டு த்ரிவேணி ஸங்கமத்தை யடைவர் அங்கு பூஜை, ப்ரார்த்தனை யானபின்பு, தோணியில் உட்கார்ந்து கணவன் மனைவியைத் தன் தொடையின் மேல் உட்கார வைத்துக் கொண்டு தன் கையாலேயே பின்னலின் நுனியில் (நான்கு விரலளவு) ஆபரணத்தைப் பூட்டி கத்தரித்து மனைவியின் கையிற் கொடுப்பான். மனைவி அதனை ஸங்கமத்தில் சேர்ப்பாள். அதனை கங்காபுத்ரன் ஸ்வீகரிபான். இதற்கு வேணீ தானமென்று பெயர். இத்தானத்தினால் சுமங்கலிகளின்

ஜன்மம் ஸபலமாகு மெனவும் அவர்களின் சௌபாக்ய மதி கரிக்குமெனவும் சொல்லப் படுகிறது. இவ்விதம் ஸ்நான முதலியவிதிகளைச் செய்த பின்பு கோயில்களைத் தரிசிக்கச் செல்லவேண்டும். மாதவ மந்திரம் யமுனைக் கரையிலுள்ளது. பரத்வாஜாச்ரமம் இரண்டு நதிகளின் நடுவிலிருக்கின்றது. அங்கு கோஸாய்கள் விசேஷம். வாஸுகியின் நாகமந்திரம் கங்கைக் கரையிலுள்ளது. அக்ஷய வடம் யமுனைக் கரையில் கோட்டைக்குள்ளிருக்கின்றது. இத்தல தரிசனத்துக்குப் போகும்போது அகப்படும் கங்கையினது மனோஹரமான பலவிதக் காட்சிகளால் மனதுக்கு ஆனந்தமேற்பட்டு அவைகளைப் பார்த்துக்கொண்டே அவ்விடத்திலேயே உட்காரலாமெனத் தோன்றும். ஸோமேச்வரராலயம் யமுனையினக்கரையிலிருப்பதால் அவ்விடத்திற்குப் படகேறிப் போகவேண்டும். ஸோமேச்வரர் தரிசனத்தைச் செய்யாவிட்டால் பிரயாகை யாத்திரைப் பலனேற்படாதென முன்பே சுருதிப் பிரமாணங்களால் காட்டப்பட்டிருக்கின்றது. இதன் இரகசியம் இவ்விதமாயுளது.—இத்தரிசனத்துக்காகப் படகிலுட்கார்ந்து ஸங்கமத்தில் ஸுமார் ஒருமைல் தூரம் செல்லவேண்டும். அப்போது இதுவரை பார்த்த தரிசனத்தைக்காட்டிலும் இச்சங்கம தரிசனம் விசேஷமாய் மனதைக் கவருவதானது. பிரயாகையின் மகத்துவமெல்லாம் ஸங்கமத்திலடங்கியுள்ள தென்னலாம். ஸங்கமத்தைப் பலவேறு கவிகள் தம்தம் அனுபவத்திற் கண்டபடி அழகாய் வருணித்திருக்கின்றனர். காளிதாஸ கவியும் ரகுவம்சம் 13ம் சர்க்கத்தில் இதனை மிக அழகாய் வருணித்துள்ளான். விஸ்தார பயத்தாலதனை இங்கு சொல்லவில்லை. தர்க்கிப்போரதனை அவச்யம் படிக்க

வேண்டும். இங்கு நதிகளிரண்டு சேர்ந்தாலும் கங்கை, யமுனை ஜலங்களிரண்டும் ஒன்ருய்க் கலக்கவில்லை. ஸோமேச்வரத்திற்கப்பால் அவை ஒன்ருயிருக்கின்றன. அதுவரை வலப்பக்கம் யமுனையும், இடதுபக்கம் கங்கையும் இரு சிநேகிகள் கூடப்போவதைப்போன்று பிரவஹிக்கின்றன. கங்கையின் ஜலம் தெளிவானது, யமுனையின் நீர் நீலவர்ணமானது. இவையிரண்டும் சங்கமமாகுமிடத்தில் யமுனைப் பிரவாஹத்தில் கங்கா ஜலத்தின் பெருங்குமிழ்கள் எழும்பிய வண்ணமிருக்கும்! அவை ஜலத்தோடுகூடி மறையும். இவ்விரண்டு ஜலங்களும் வெவ்வேறு நிறத்தவையாதலின் இக்காட்சி நன்ருய் மனோஹரமாய்க் காணப்படும். யமுனைப் பிரவாஹமும் தீர்க்கமாகவிருப்பதால் அந்நீர்க் குமிழ்கள் கங்கையில் எழுவதையும் பாக்கலாம்! அவையிரண்டையும் பார்ப்போருக்கு அது பின்னல் கால்கள், மேலிருந்து கீழ் கீழிருந்து மேல் வந்திருப்பதைப் போன்று தோன்றுவதல்லாமல் அப்பிரவாஹங்களிரண்டும் வெவ்வேருயோடுமிடம்வரை பூமித்தாய் தலை பின்னிக்கொண்டிருப்பதைப் போல் தோன்றும்! அவ்வேணியில் தம் வேணியைச் சேர்ப்பதனல்—வேணிதானம் செய்வதனல்—பூமியின் தலையில் தம் தலையை வைத்தமாதிரியாம், என்ருல் பூமியின் தீரமும் உதாத்தமுமான குணங்கள் தம் அங்கத்திலுண்டு அல்லது வரும் எனற இம்மனேபாவம் இவ்யாத்திரையால் ஸ்த்ரீகளிடையுண்டாமேல் அதனல் ச்ரேயஸ் (மேன்மை) யுண்டாகுமென்பதிற் சந்தேகமில்லை. அப்படிப்பட்ட குணத்தால் ஸ்த்ரீகளின் ஜன்மமும் சார்த்தகம் (பிறப்பின் பயன்) எய்தல் ஆனதாகும். மேலும் விதியில் கிடைக்கும் புண்யம் கிடைத்தே தீரும். (இந்த பாவனையால் நிஜமான ஸாத்விக,

ராஷ்ட்ரீய புண்யம் கிடைப்பதில் சந்தேகமில்லை). அதனுல் தான் வேணிதானத்தால், பூமிகுணந் தரிப்பதனுல் ஸ்த்ரீகளின் சம்சாரம் நன்முறையில் செல்லும் என்ற நினைவு ஸ்த்ரீகளின் மனத்தில் நிலைப்பது சகஜம். தோணியில் போம்போது எழுந்துநின்று பார்த்தால் வெண்மையான (கங்கையின்) நீரில் நீலத்தாமரை, நீல (யமுனையின்) ஜலத்தில் வெண்டாமரைகள் குமிழ் ரூபமாய் எழுவது மனோஹரமாய்த் தோன்றும். "மறைந்து பிரவஹிக்கும் சரஸ்வதியானவள் மறைந்தவண்ணம் கங்கை யமுனை ஜலத்தை மேலே தள்ளுவதனுலிப்படியாகிற" தெனச் சமாதானம் சொல்லுகிருர்கள். எப்படியாயினுமாகட்டும், இவ்வித சங்கமக்காட்சி உலகிலெங்கணும் காணக் கிடைக்காது. இச்சங்கமத்தில் ஸ்னனம், தானம், கங்கைபூஜை பார்க்க ரம்மியமாயிருக்கும். கங்காபூஜை விஷயம், பால், பஞ்சாமிர்தம், பூ, தூபம், தீபம், கற்பூரம், வஸ்திரங்கள் இங்கு விலைக்குக் கிடைக்கும். கடைக்காரர் சாமான் கொடுக்கவும் பண்டாக்கள் சங்கற்பம் சொல்வதற்கும் எப்போதும் தயாராயிருப்பார்கள். யாத்திரீகரில் பலர் ஸ்னனம் செய்வர்; பலர் பூஜை செய்துகொண்டிருப்பர். கங்கையில் பலவித புஷ்பங்களும், கற்பூர ஜோதியும் மிதக்கும். சிலவிடங்களில் தோணியில் வாத்ய முழக்கத்துடன் வேணிதானம் நடக்கும். கங்கையில் போட்ட தேங்காய்கள் பண்டாக்களின் கை தப்பிப்போயின் அவைகளைத்தாம் கொள்ளச் சிறு சிறு தோணிகளில் ஓடக்காரர் முழுகியவண்ணமிருப்பர். யாத்திரீகரின் கூட்டம் எறும்புபோல் சாரிசாரியாய்ப் போய் வந்து கொண்டிருக்கும்; இவ்விடத்துக்கு இந்தியாவின் எல்லாப் பாகங்களினின்றும் வரும் யாத்திரீகரின் பலவித உடைகளின்

காட்சி, நடை, பாஷைகள் சூர்யோதய காலத்தில் இங்கு பார்க்க மனோஹரமாயிருக்கும். அதனை வர்ணிப்பது அசாத்தியம். இத்தீர்த்த மகிமையும், சங்மத்தின் பெருமையும் புராதன காலத்திலிருந்தே பிரஸித்திபெற்றவையாம். அதனால் இங்கே ஸ்னானம், தானம் இவற்றின் மகிமை விசேஷமாயிருக்கிறது. இச்சங்கமத்தில் ஸ்னானம் செய்வதனால் மனிதனுக்கு தத்வஞானமேற்படாவிடினும் மோக்ஷம் கிடைக்குமெனச் சொல்லப்பட்டிருக்கிறது! என்றால் வேறிடங்களில் 'ஜ்ஞானதேவது கைவல்யம்' ஆனால், இங்கு 'ஸ்னானதேவ' (ஸ்னானத்தினாலேயே) முக்தியகப்படுமென்பதாய் ஸ்ரீராமசந்த்ரன் லங்கையினின்றும் புஷ்பக விமானத்தில் அயோத்திக்குத் திரும்பிவரும்போது சீதாதேவிக்கு இச்சங்கமத்தைக் காட்டிச் சொல்லியிருக்கிறான். இவ்விடத்தில் தசாச்வமேத காட்டின்மேல் கங்கா பூஜை உற்சவம், பஜனை ஆரதிகள் காலை மாலை விசேஷ வைபவத்துடன் நடைபெறும்.

ப்ரயாகை ஸ்னான மகிமையினால் இங்கு சங்கமத்தில் வருடந்தோறும் மாக (மாசி) மாதத்தில் பெரிய ஜாத்ரை சேர்ந்து அது ஒருமாதம் வரை நடக்கும். அதற்கு வெகு தூரத்தினின்றும் யாத்திரீகர் வருவர். மகர (தை) ஸங்கிராந்தியிலிருந்து இது ஆரம்பமாய்க் கும்ப ஸங்கிராந்திவரை நடக்கும். அதிலும் மகர சங்கிராந்தி, அமாவாசை, வசந்தபஞ்சமி, மாகபௌர்ணமி, கும்பசங்கராந்தி தினங்கள் ஸ்னானத்துக்கு முக்யமானவையாம். மாக (மாசி) அமாவாசை தினம் சங்கம ஸ்னானத்தினால் ஜென்ம ஜென்மாந்திரப் பாபங்களெல்லாம் நிவாரணமாய், பிரம்மலோகப்

**மாக-(மாசி) கும்ப மேளங்கள்.**

பிராப்தியாகுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. மாக மாஸம் பூராவும் சங்கம ஸ்னானம் செய்வதனால் மனிதன் ஜெனன மரண பந்தனத்தினின்றும் விடுபட்டுப் பிரம்ம லோகத்தில் ஆனந்தமயனாய்ச் சஞ்சரிப்பானெனப் பத்ம புராணங் கூறும். ஸ்னான வ்ரதமானபின்பு பிராமண போஜனம், எக்ஞங்களைச் செய்து யாத்திரீகர் தந்தம்மிடத்துக்குத் திரும்புவர். சங்கமத்தில் வ்ரதத்துடன்கூடி மாக மாதம் — ஒருமாதம் — வசிப்பதற்குக் கல்பவாஸ மெனப் பெயர். வருடந்தோறும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் இங்கு குடிசைகளைக் கட்டிக்கொண்டு கல்பவாஸம் செய்வார்கள். பன்னிரண்டு வருடங்களுக்கொருமுறை குரு ரிஷப ராசிக்கு வந்தபோது இங்கு கும்பமேளம் நடக்கும். அப்போது இந்தியாவின் பல பாகங்களிலிருந்து யாத்திரீகர், சாது ஜனங்கள், சன்னியாசிகள் கூட்டங்கூட்டமாய் வருவார்கள். அச்சமயத்தில் அவர்களின் தின ஸ்னான யாத்திரை மிகவழகிய காட்சியாகும்.

**வேறு தீர்த்தம், கோயில்கள்.**

முதலில் சொல்லப்பட்ட சுலோகத்தில் உள்ள த்ரிவேணி, மாதவன், சோமன், பரத்வாஜர், வாசுகி, அக்ஷய வடங்களிவையன்றி, ப்ரயாகை க்ஷேத்திரத்தில் வேறு பல தீர்த்தங்களும், கோயில்களும், பார்க்கத்தக்க இடங்களுமிருக்கின்றன. அவைகளில் கீழ்வருவன முக்யமானவையாம்:—(1) மாதவ மந்திரம். 'சதாத்யாயீ' என்ற க்ரந்தத்தில் 73ம் அத்யாயத்தில் ப்ரயாகையின் முக்ய தேவதை வேணீமாதவனென்றும், அக்ஷயவடத்தில் தெற்குப் பக்கத்தில் தேவர்களாலும் ரிஷிகளாலும் சேவிக்கப்பெற்று மனிதருக்கு எல்லாச் சித்தியையுமளிக்கும் உயர்ந்த

வைஷ்ணவ பீட முண்டென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. முதலில் இங்கு 13 மாதவ க்ஷேத்ரங்களிருந்தன. இப்போதோ 5 மாதவஸ்தான தரிசனமட்டில் செய்யலாம். அவை யெவை யெனில்.—(1) த்ரிவேணி சங்கமத்தில் வேணீ மாதவன் (ஜல ரூபத்தில்.) (2) வட வ்ருக்ஷத்துக்குச் சமீபமாய் வடமாதவன் (மூலமாதவன்.) (3) யமுனை-கங்கை நதியின் தெற்கில் சோமேச்வரர் கோயிலுக்குப் பக்கத்தில் வேணீமாதவன் (ஆதிமாதவன்) புராதனக் கோயில். (4) ஜான்ஸி-சதநாக மத்தியில் கங்கையின் வடகரையிலுள்ள பிந்துமாதவன் (5) தாராகஞ்சிலுள்ள ஸ்ரீவேணீ மாதவர் கோயில்.—அக்ஷயவடம். இது யமுனைக் கரையிலுள்ள கோட்டையில், சங்கமத்துக்குக் கொஞ்சதூரத்தில் ஒரு குகையிலிருக்கின்றது. இது ஒரு உலர்ந்த மரத் துண்டைப் போன்றிருக்கிறது. இது வடவ்ருக்ஷத்தின் வேறென்றும் இதன் நடுப்பாகம் காசியிலும் நுனி இலைகளுடன் கயையிலுமிருக்கிறதாகச் சொல்கிறார்கள். இதனைச் சுமார் 6000 வருடங்களுக்குப் பிந்தியதென்பர். இவ்வட வ்ருக்ஷமிருக்கும் கோயிலில் தர்மராஜன், அன்னபூர்ணி, சங்கடமோசனன், மஹாலக்ஷ்மி, கௌரிகணேசன், ஆதி கணேசன், பாலமுகுந்தன், ப்ரம்மசாரி, ப்ரயாக ராஜேச்வர மஹாதேவன், சூலகண்டகேச்வரன், கௌரீசங்கரன், ஸத்ய நாராயணர், யமதண்டமஹாதேவர், தண்டபாணிபைரவர், லலிதாதேவி, கங்கை, யமுனை, கார்த்திகஸ்வாமி, நரஸிம்ம பகவான், சரஸ்வதி, விஷ்ணு, தத்தாத்ரேயர், கோரக்நாதர், சூர்யநாராயணர், அனஸூயாதேவி, வேதவ்யாசர், வருண தேவதை, பவன (வாயு) தேவதை, மார்க்கண்டேயரிஷி, ஸித்தநாதர், குபேரன், அக்னிதேவன், பார்வதி, தூர்வாஸர்,

ஆதிசேஷன், ராம லக்ஷ்மணர், யமராஜ அனந்தமாதவர், சாக்ஷிவிநாயகர், கணேசர் முதலாய மூர்த்திகளுண்டு. ஹர்ஷ வர்த்தன மகாராஜன்காலத்தில் முக்தி கிடைக்கவேண்டி இவ்வக்ஷயவடத்தினின்றும் கீழேகுதித்துப் பிராணனை விடும் வழக்கம் பலமாயிருந்ததெனஹ்யூன் த்ஸாங்க் எழுதியுள்ளான். அக்பர் சக்ரவர்த்தி இப்போதுள்ள கோட்டையைக் கட்டுவித்தபின் இவ்வழக்கம் நின்றுவிட்டது. மனகாமேச்வர மந்திரம்:—இது அக்ஷயவடத்துக்குக் கொஞ்ச தூரத்தில் கோட்டையின் மேற்கிலிருக்கின்றது. இம் மகேச்வர பூஜையால் மனோபீஷ்டங்கள் நிறைவேறும். கோட்டையிலிருந்து தோணியேறி இங்கு செல்லவேண்டும். வழியில் ஸரஸ்வதி கூபம் (ஸரஸ்வதிநதியின் மூலம்) அகப்படும். ஸோமநாதர் (ஸோமேச்வரர்) இதனை முதலே வர்ணித்திருக்கிறது. பிந்துமாதவர்.—சோமேச்வரர் தரிசனத்தின்பின் யாத்திரீகர் கங்கையைத் தாண்டி அதனிடக் கரையிலுள்ள பிந்து மாதவத்துக்கு வரவேண்டும். அங்கிருந்து கிழக்கே இரண்டு மைல் தூரத்திலிருக்கும் சதநக க்ராமத்துக்கு வந்து அங்கு நாகேச்வர மகாதேவராலயத்தைத் தரிசிப்பார்கள். ஜான்ஸி. இது புராதன காலத்தில் ப்ரதிஷ்டானபுரமென்ற பெயருடன் விளங்கிற்று. மஹாபாரதத்தில் இதனை ப்ரம்மவேதி என வர்ணித்திருக்கிறது. இலன் மகன் புரூரவன் இங்கு பலவருஷகாலம் ராஜ்யமாண்டானெனவும் அவன் மகன் ஆயு, ஆயுவின் மகன் நகுஷன், நகுஷனது பிள்ளை யயாதி — இவர்களுக்கு ப்ரதிஷ்டானபுரமே ராஜதானியாயிருந்ததென லிங்க புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இங்குள்ள ஒரு பழைய கோட்டையில் சாது, ஸன்யாசிகள் வசித்துவரு

கிறார்கள். மேலும் இங்கு சமுத்ரகூபம், ஹம்ஸகூப மென்ற பிரஸித்தமான தீர்த்தங்களிருக்கின்றன. சமுத்ர கூபத்தினருகே மூன்று நாள் ப்ரம்மசரிய விருதத்தோடு கோபத்தை ஜெயித்து வசித்தால் ஆத்ம சுத்தியேற்பட்டு அச்வமேத பலன் கிடைக்குமெனச் சொல்லப்பட்டிருக் கிறது. ஹம்ஸகூபத்தில் யோக சாதனத்தின் எல்லாக் காரியங்களையும் கல்லில் சித்தரித்திருக்கின்றனர். இங்கு ஸ்னானம் செய்து, ஹம்ஸ (ஆத்ம) த்யானம் செய்வோர் ஹம்ஸத்தைப்போன்ற நிர்மல ஜ்ஞானமுண்டாகப் பெறுவ ரென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குச் சமீபத்தில் ஸந்த்யாவடமென்ற தீர்த்தமிருக்கின்றது. இங்கு ஸந்த்யா வந்தனம் செய்வதனால் விஷ்ணு பிராப்தியாகுமெனச் சொல்லியிருக்கிறது. இவையன்றி திவாரியின் சிவாலயம், தசாச்வமேத மஹாதேவர், பலதேவர் கோயில், சிவகுடி, அலோபிதேவி ஆலயம், ருணமோசன தீர்த்தம், அக்னி தீர்த்தம், ஸோமதீர்த்தம், சூரியதீர்த்தம் வருணதீர்த்தம், கௌகாட், அத்ரிமுனிதீர்த்தம், ஜலதீர்த்தம், நள தீர்த்தம், யக்ஞதீர்த்தங்கள் பார்க்க வேண்டியவையாம்; மேலும் சரித்திர த்ருஷ்டியில் கோட்டை (கிலா), அக்பர்கட்டை, குஸ்ராபக் ஹைகோர்ட்டு, ஸர்வகலாசாலை, ஆல்ப்ரெட்பார்க், மிண்டோ பார்க், புருஷோத்தமதாஸ் பார்க், ஹிந்தி வித்யா பீடம், ஹிந்தி ஸாஹித்ய ஸம்மேளனக்கூடம், ஹிந்துஸ்தானி அகாடெமி, ஆனந்தபவனம் இவைகளும் பார்க்க வேண்டிய வை. பிரயாகை முனிஸிபாலிடியின் மாஜித் தலைவரான—பிரசித்த தேசபக்தரான புருஷோத்தமதாஸ் தாண்டன் பெய ரைக் கொண்டுள்ள புருஷோத்தமதாஸ் பார்க்கில் ப்ரயாகை யின் பொதுக் கூட்டங்கள் சாமான்யமாய் நடைபெறும்.

ஆனந்தபவனம் காலஞ்சென்ற பண்டித மோதிலால் தம் சொந்த வாசத்துக்காகக் கட்டிய மாளிகை. இப்போது பண்டித ஜவஹர்லாலும் அவரைச் சேர்ந்தோரும் வசிக்கிறார்கள். இதன் பின்னால் மோதிலாலின் பழைய அழகிய மாளிகைஇருக்கின்றது. அதனை அவர் காங்கிரஸுக்குத் தானம் செய்துவிட்டார். அதற்கு ஸ்வராஜ்யபவனமென்ற பெயர்.—இத்தீர்த்தம், கோயில்களைத் தரிசித்து யாத்திரீகர் காசிக்குப் போகுமுன் சித்ரகூடம் போய் வருவர்.

**சித்ரகூடம்.**

அனேகாயிர வருடங்களுக்கு முன், த்ரேதாயுகத்தில் பகவான் ஸ்ரீ ராமசந்த்ரன் தன் புனிதமாய பாதங்களால் பரிசுத்தமாக்கிய சித்ரகூடம் இன்று இந்தியாவி னெல்லா இந்துக்களுக்கும் மிகப் புனிதமான இடமாம். இந்த ரமணீயமான மலைச்சிகரம் பிரயாகையிலிருந்து சுமார் 60 மைல் தூரத்தில் ஜான்ஸி, மாணிக்பூர் (ஜி. ஐ. பி.) மார்க்கத்தில், அதே பெயர் கொண்ட ஸ்டேஷனுக்குச் சுமார் 3½ மைலில் பிரசித்தி பெற்ற இந்து க்ஷேத்திரமாகும். இப்பர்வத தீர்த்தத்தில் அத்ரி, வால்மிகி முதலான ரிஷிகள் ஜபம், தவம், யோகங்களைச் செய்து வந்தனர், ரகுநந்தனின் தம்பியான பரதன் முதன் முதலில் இத்தீர்த்த யாத்திரையைச் செய்தான். மேலும் கலியுகத்தில் மாருதி அவதாரமெனப் பெற்ற, 'ராமசரிதமானஸ' மென்ற பெயருடன் பிரசித்தி பெற்ற இராமாயணத்தை இயற்றியுள்ள ஸ்ரீ துளசிதாஸர் இங்கு வாசம் செய்து இதன் புனிதத் தன்மையை அதிகரிக்கச்செய்துள்ளார். வால்மீகி ராமாயணத்தில் ரகுநாதன் ஸ்ரீ சீதாதேவிக்கு இச்சிகரத்தைக் காட்டி இவ்விதம் வர்ணித்துள்ளான் "ஏ மங்கள

கரமானவளே! பலவித பட்சிக்கூட்டங்களுடனும், பலவித தாதுக்களுடன் விளங்கக் கூடியதும், உயரமான சிகரங்களைக் கொண்டதுமான இப்பர்வதத்தைப்பார்! அவைகளிற் சில வெள்ளியைப்போன்று வெண்மையாயும், சில இரத்தத்தைப் போல் சிவந்தும், சில மஞ்சளாயும், சில அரக்கு வர்ணமுள்ளவையும், சில இந்த்ர நீலக்கல்லைப்போன்றும் சில புஷ்பராகத்தையும் சில படிக மணியையும் போன்றும், சில கேதகிப்புஷ்பத்தையொத்தும், சில நக்ஷத்திரங்களைப்போன்றும், சில பாதரஸத்தைப்போன்றும் பிரகாசிக்கின்றன"—இவ் வர்ணனையினால் இப்பர்வதத்திலுள்ள தாதுக்களைக்கொண்டே இதற்குச் சித்ரகூட மென்ற பெயருண்டாயிருக்கலாமென யூகிக்கப்படுகிறது. இப்பர்வதத்தின் சிலபாகம் இப்போது ஐக்கியமாகாணத்தைச்சேர்ந்த பாந்தா ஜில்லாவுக்கும், வேறு சிலபாகம் ஏஜென்ஸி அரசாட்சிக்கும் சேர்ந்ததாயுள்ளது. ஸ்ரீராமசந்திரன் ஸீதாலக்ஷ்மண சமேதனாய் வால்மீகி முனியைத் தரிசித்தது இச்சித்ரகூடத்தில் தானென்று மேலே சொல்லப்பட்ட சுலோகத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. இவ் யாத்திரையில் சித்ரகூட மலைப்பிரதக்ஷிணமே (பரிக்ரமம்) முக்யமான அம்சமாம். இதற்கு பஞ்சகோசி பரிக்ரம மெனப்பெயர்.

यानिकानि च पापानि जन्मान्तर कृतानि च ।
तानि तानि प्रणश्यन्ति प्रदक्षिण पदे पदे ॥

என்றால் இச்சென்மம், முன் சென்மப் பாவங்கள் பிரதக்ஷிணத்தின் ஒவ்வோரடியிலும் நாசமாகின்றன வெனப் பிரதக்ஷிணை பிரஸித்தமாயிருக்கிறது. சித்ரகூடப்பிரதக்ஷிணையினால் நான்கு திக்கிலும் விஸ்தாரமான அதனெல்லை தெரிய

பரிக்கிரமம் விதி

வரும். இப்பரிக்ரமத்தில் 33 புண்ய தீர்த்தங்களகப்படும். இவை யெல்லாவற்றினுடையவும் பரிக்ரமம் 5 தினங்களில் முடியும். அத்தீர்த்தங்களில் சில அக்கம்பக்கத்திலுள்ள குன்றுகளின்மேலும், சில மந்தாகினீ நதிக்கரையிலும், சில குன்றுகளி னடியிலு மிருக்கின்றன. இப்ரதக்ஷிணையின் ஐந்து நாட்களில் மூன்று நாள் ராகவப்பிரயாகையில் மந்தாகினி நதியில் ஸ்னானம் செய்து, மற்றிரண்டு நாட்களில் குப்த (மறைந்த) கோதாவரி, பரதகூபத்தில் ஸ்னானம்செய்து யாத்திரீகர் தினமும் பரிக்ரமத்தை யாரம்பிப்பார்கள். இதன் விவரம் பின்வருமாறு:—முதல் நாள், 6 மைல் ராகவப்பிரயாகையில் ஸ்னானம்செய்து, காமதாகிரிப்பிரதக்ஷிணம் செய்து ஸீதாபுரத்துக்குத் திரும்புவார். இரண்டாம் நாள் கிழக்கே 12 மைல். ராகவப்பிரயாகையில் ஸ்னானம்செய்து கோடிதீர்த்தம், அங்கிருந்து, தேவாங்கனு, ஸீதாரஸோயி, ஹனுமான்தாரா இவைகளின் யாத்திரையைச் செய்து ஸீதாபுரம் திரும்புவர். மூன்றுநாள் தெற்கே 10மைல் ராகவபிரயாகை சங்கமகாட்டில் ஸ்னானம்,—ராமதாபம், கேசவகட், ப்ரமோத வனம், ஜானகிகுண்டம், ஸிரஸாவனம், படிகசிலே, அனஸூய தீர்த்தங்களைத் தரிசித்து பாபுபுரத்தில் தங்குவர். நான்காம் நாள் நைருதியில் 10 மைல். பாபுபுரத்தினின்று குப்தகோதாவரி போய் ஸ்னானம் செய்து கைலாசபர்வதத்தைத் தரிசித்து சௌபே புரத்தில் தங்குவர். ஐந்தா நாள் வடக்கே 12 மைல். சௌபே புரத்திலிருந்து பரதகூபம்போய் அங்கு ஸ்னானம்செய்து, பரதமந்திரம், ராமசையை (படுக்கையிடம்) களைத்தரிசித்துப் பின்பு ஸீதாபுரம் திரும்புவார்கள். இப்பிரதக்ஷிணத்தில் சேர்ந்த தீர்த்தங்களைத் தவிற அக்கம் பக்கங்களில் புஷ்கரணி, சரபங்கம்,

மார்க்கண்டேயம், விராதகுண்டம், தாராகுண்டம், வால்மீகி ஆச்ரம முதலான தீர்த்த ஸ்தானங்களிருக்கின்றன. இப் பரிக்ரமத்தின் முக்ய தீர்த்தங்களின் சுருக்கம் பின் வருமாறு. (1) ஸீதாபுரம். இது பயோஷ்ணி நதியின் இடது கரையிலுள்ள கிராமம். இங்கு ஸ்ரீ ராமன் பர்ணசாலை கட்டிக் கொண்டு வசித்திருந்தான். இங்கு நதியில் 24 துறைகளிருக்கின்றன. அவைகளில் ராகவப்பிரயாகை காட், கைலாச காட், ராம காட், மந்தாகினி காட் முக்யமானவை. இவைகளினருகே அழகிய பல ஆலயங்களிருக்கின்றன. இக்கிராமத்துக்கு $1\frac{1}{2}$ மைல் தூரத்தில் ராமதாகிரியிருக்கின்றது. இக்கிராமத்தில் பண்டாக்கள் வசிக்கிறார்கள். (2) ராகவ ப்ரயாகை. இது ஸீதாபுரத்தின் முக்ய தீர்த்தம். பயோஷ்ணி நதியின் வில்லைப்போன்றுள்ள ஒரு கால்வாய் இங்கு நதியோடு கலக்கிறது. அனஸூயா தீர்த்தத்திலிருந்து இவ்விடம்வரை இதற்கு மந்தாகினி என்ற பெயரிருக்கிறது. இந்தக் கால்வாய்-நதிகளின் சங்கமத்தில் இன்னொரு மஹாநதியான காயத்ரி (ஸாவித்ரி) இங்கு அத்ருச்ய (காணாத) உருவத்துடன் பயோஷ்ணி-மந்தாகினிகளுடன் சேருவதாயும், இவ்விடத்திற்றான் ரகுநந்தனன் தந்தையின் மரணவார்த்தையைக் கேட்டுப் பித்ரு தர்ப்பணம் செய்தானெனவும் இதற்கு ராகவப்ரயாகை என்ற பெயரேற்பட்டிருக்கின்றது. இதன் கரையில் மத்தகஜேந்த்ரேச்வர ராலயமுளது. ராகவப் பிரயாகை காட்டினெதிரில் மந்தாகினி காட் இருக்கின்றது. மத்தகஜேந்த்ரேச்வர ராலயத்துக்கு வடக்கே ஸ்ரீராமனின் பர்ணசாலையிருந்த விடமிருக்கிறது. இங்குள்ள துறைக்கு ராகவ காட் என்ற பெயர். இவ்விடத்தில்தான் ஸ்ரீ துலஸிதாஸருக்கு ராமன்



33. மந்தாகினிக்கரையின் மனோஹரதோற்றம்.



34. ஸ்ரீ துலஸீதாஸரின் பர்ணசாலை.

ப்ரத்யக்ஷமானது. (3) ஸ்ரீதுலஸீ தாஸின் பர்ணசாலை. பரமபக்தரான கோஸ்வாமி துலஸீதாஸர் ராமகாட்டினெதிரிலே ஒரு பர்ணசாலை கட்டிக்கொண்டு வசித்துவந்தார். இங்குதான் அவருக்கு ராமனின் ப்ரத்யக்ஷம். அங்கு இப்போதுள்ள கோயிலில் ஸ்ரீராமர், லக்ஷ்மணர், ஸீதை விக்ரஹங்களு முண்டு. பரிக்ரம வழியிலகப்படும் துலஸிதாஸின் குடீரத்தில் இப்போது மண்ணாலாய அவரது உருவமிருக்கின்றது. (4) ஜானகீகுண்டம். பர்ணசாலையிலிருந்து மந்தாகினியோரமாய்ப் போம்போது ஜானகி குண்டமகப்படும். இது இயற்கை யழகோடுங்கூடி மிக ரமணீயமாயிருக்கின்றது. இங்கு குண்டத்திலுள்ள சிலையின்மேல் ராமனின் அடி யடையாள மிருக்கின்றது. (5) படிகச்சிலை. ஒருநாள் ஸ்ரீராமன் ஜானகியோடுங்கூடச் சித்ரகூடத்திலிருந்து அத்ரிமுனியி னாச்ரமம் நோக்கிச் செல்லும்போது வழியில் மந்தாகினிக் கரையிலொரு வெள்ளைக் கல்லின் மேலுட்கார்ந்திருந்தான். அதற்கு இப்போது படிகச்சிலையெனப் பெயரிட்டிருக்கிறார்கள். இச்சிலை இப்போது இருகூறாகவிருக்கின்றது. அதன்மேல் ஸ்ரீராமன் பாதக்குறிகளிருக்கின்றன. (6) காமதாகிரி. சித்ரகூடத்திலடங்கியுள்ள தீர்த்த ஸ்தானங்களில் இது முக்யமானதொன்று. முன்னால் ஸ்ரீராமன் இங்குச் சிலகாலம் வசித்திருந்து பிறகு தெற்கே சென்றானென இராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இது ஸ்ரீராமனின் சிம்மாசனமென்று பிரசித்தியாயிருப்பதனால் யாத்திரீகர் இதன்மேலேறாமல் இதனைப் பிரதக்ஷிணம் செய்வர். இதிலுள்ள மரங்களையும் வெட்டுவதில்லை. இதன் சுற்றளவு மூன்று மைல். 1725ல் சத்ரசால ராஜனின் பத்நியான ராணி

சாந்த்குமாரி இப்பிரதக்ஷிணத்தைச் (வழியை) செய்வித்தாள். 1897ல் ஆங்கிலேய அரசாங்கத்தார் இதனை ஜீர்ணோத்தாரணம் செய்தார்கள். அதனால் இது யாத்திரீகருக்கு அனுகூலமாயிருக்கிறது. (7) முகாரவிந்தம் (குறைத்வாரம்). ஸீதாபுரத்திலிருந்து காமதாகிரிக்கு வரும்போது முதலில் முகாரவிந்தமகப்படும். இக்குறை துவாரத்திலிருந்து முதலில் பால் பிரவஹித்துக்கொண்டிருந்ததாம். இதில் ஸ்ரீராமனும்சீதையும் வசித்திருந்ததாக ஊகிக்கப்படுகிறது. (8) சரணசின்னம் (பாதக்குறி) ஸ்ரீராமனின் பாதக்குறிகளிருக்குமிடங்களில் படிகச்சிலை, ஜானகிகுண்டம், சரணபாதுகை என்ற இம்மூன்று ஸ்தலங்கள் முக்யமானவையென்னப்பட்டுள்ளன. சரணபாதுகையென்பது காமதாகிரிப் பரிக்ரமத்திலகப்படும். இங்குள்ள சிறிய பெரியபாதக்குறிகள் ஸீதை, ராமன், இலக்ஷ்மணன், பரதன் இவர்களுடையவையென்பர். தூரப்பார்வைக்கு யாரோ சேற்றில் காலடி வைத்திருப்பதைப்போன்று, கல்லின்மேல் நடந்து காலடிவைத் திருப்பது தெரியும். ஸ்ரீராமர் முதலானோர் கல்லின்மேல் நடந்தபோது அது மெழுகைப்போல் மெதுவாயிற்றெனச்சொல்வர். இச்சின்னங் (அடையாளம்) களைப் பற்றிக் கவி காளிதாஸன் தன் மேகதூதமென்ற காவ்யத்தில் "वन्द्यैः पुंसां रघुपतिपदैरङ्कितं मेखलासु" என்றால் சித்ரகூடத்தின் மேகலை உலகம் வணங்குந் தன்மையனான ஸ்ரீரகுநந்தனின் பாதச் சின்னங்களால் பொறிக்கப்பட்டுளது" எனச் சாற்றியுள்ளான். (9) ராமசையை (படுக்கை). மிருதுவான படுக்கையின்மேல் இருவர் படுத்திருந்து, எழுந்தபின் காணக்கூடிய வண்ணம் கல்லின்மேல் அடையாளங்கள் இங்கிருக்கின்றன, அன்றியும் நடுவே

வில்லினதடையாளமுமுளது. இப்போது இதனைச்சுற்றிச் சுவரெழுப்பியுள்ளார்கள். இங்கு ஸ்ரீஸீதாராமர் படுத்திருந்ததாகச் சொல்வர். (10) பரதகூபம். இதே பெயர் கொண்ட ஸ்டேஷனிலிருந்து இது ஒருமைல் தூரத்திலிருக்கின்றது. காமதாகிரியிலிருந்து இதன் தூரம் 6 மைல். பரதன் இராமனது பட்டாபிஷேகத்திற்காகப் பல புண்ணிய தீர்த்தங்களைக் கொண்டுவந்தான். ஆனல் அப்போது பரதன் ப்ரார்த்தனைக்கு இராமனிணங்காமையால் அத்ரி முனிவர் சொல்படி அத்தீர்த்தங்களை அவனொருகிணற்றில் சேர்த்தான். அக்கிணறே பரதகூப மெனப் பெயர்பெற்றுள்ளது. (11) ஹனுமான்தாரா. இங்கு மாருதி விக்ரஹத்துக்கெதிராக ஒரு குன்றிலிருந்து ஓடிவரும் நீரோடை ஒரு குண்டத்தில் வீழ்கிறது. இதில் யாத்திரீகர் ஸ்னனம் செய்வர். (12) ஸீதாகீ ரஸோஈ ஹனுமான்தாரா குன்றின் மேல் ஸீதை சித்ரகூடத்திலிருந்தபோது சமையல் செய்து கொண்டிருந்த இடமென இங்கு கட்டியிருக்கும் ஒரு மேடையைக் காட்டுவார்கள். (13) அனுஸூயா மந்திரம் இது காமதாகிரியிலிருந்து 8 மைல் தூரத்திலுள்ள ஒரு குன்றின்மேலிருக்கின்றது. இக்கோயிலில் அத்ரி ரிஷி, அனுஸூயாதேவி, அவர்களின் பிள்ளைகள் தத்தாத்ரேயர், தூர்வாஸர், சந்த்ரன் இவர்களின் மூர்த்திகளிருக்கின்றன. ப்ரம்மனுக்கு 8 பேர் மானஸ புத்ரரிருந்தனர்.— ப்ருகு, ஆங்கிரஸ், மரீசி, அத்ரி, வசிஷ்டர், புலஸ்த்யர், புலகர், க்ருது. அவர்களில் புலஸ்த்யன் வம்சத்தில் ராக்ஷஸர், வானரர், கின்னரர், யக்ஷர் முதலானோர் பிறந்தனர். புலகரினின்றும் கிம்புருடர், பிசாசர், ஸிம்மம், புலிகளுதித்தனர். க்ருது வாலகில்யரையுற்பத்தி செய்தவனெனச் சிலர் சொல்வர்.

மரீசியினின்றும் கச்யபர் பிறந்தார். ப்ருகு மற்றும் அவர் மகன் உசனஸர் வம்சத்தில் பரசுராமன் பிறந்தான். உசனஸர் அஸுர குருவாகவிருந்தார். ஆங்கிரஸனின்றும் ப்ருஹஸ்பதி பிறந்தான். ப்ருஹஸ்பதி தேவகுருவாயினன். வசிஷ்டர் விஷயம் அயோத்யை சரித்ரத்தில் இருக்கின்றது. அத்ரியின் மக்களில் தத்தாத்ரேயர் கிருபையினல் ஹைஹய வம்சத்தனை கார்த்தவீர்யார்ஜுனனுக்குத் தங்க விமான மும், ஆயிரங் கைகளும், எல்லாவித ஐச்வர்யங்களும் கிடைத்தன. துர்வாஸர் மிகுந்த முன்கோபி. சந்த்ரன் புத்திரனை புதனல் ஐல வம்சமேற்பட்டது. இருபது பேர் தர்மசாஸ்திரக்காரர்களில் அத்ரிமுனியுமொருவரெனப் பிரசித்தம். சித்ரகூடத்தில் ஸ்ரீராமநவமி, தீபாவளி ஸமயங் களில் விசேஷமாய்த் திருநாள் நடக்கும். யாத்திரீகருக்கு அவச்யமான சௌகரியங்களிங்கு கிடைக்கும். இவ்யாத் திரையை முடித்தபின், இங்கிருந்து நேராகவோ, ப்ரயாகை யில் இறங்கியோ யாத்திரீகர் காசிநோக்கிச் செல்வர்.

---

## 12. மோக்ஷபுரி காசி (பனரஸ், வாரணசி), சாரநாத்.

न गायत्रिसमो मंत्रो न काशीसदृशी पुरी ।
न विश्वेशसमं लिङ्गं सत्यं सत्यं पुनः पुनः ॥
कलौ विश्वेश्वरो देवः कलौ वाराणसी पुरी ।
कलौ भागीरथीगङ्गा कलौ दानं विशिष्यते ॥
—काशीखण्डे अ. ३२. श्लो. २५.

'முக்திதரும் நகரேழி' லொன்ருய், ஸ்ரீவிஷ்ணுவின்

நாஸிகை (மூக்கு) ஸ்தானமெனப் பிரசித்திபெற்றதாய் உத்தர வாஹினியான பாகீரதியின் மேற்குக்கரையில் வெகு பழைய கால முதல் இந்த க்ஷேத்திரம் நிலைத்துள்ளது.

**காசியின் பழைமை.**

இங்கு கங்கையுடன் சேரும் வருண, அஸீ என்ற நதிகளின் மத்தியிலிது இருப்பதனால் இதற்கு முற்காலந்தொட்டே வாரணாசியென்ற பெயரிருக்கிறது. பரதகண்டத்து எல்லா க்ஷேத்ரங்களிலும் இதுவே ஆதி க்ஷேத்ரமென்றும் வித்யா விலாசமந்திர மென்றும், சற்புருடர்களின் வாஸஸ்தான மென்றும், பலவகை ஞானக்களஞ்சிய மென்றும் பெயர் பெற்றுள்ளது. காசி க்ஷேத்ர மகாத்மியத்தின் வர்ணனை காசி காண்டமென்ற க்ரந்தத்தில் 100 அத்யாயங்களாக உள்ளது. சுமார் 1,000 வருடங்களுக்கு முன் பனார னென்ற வரசன் இந்நகரைக் கட்டியதனா லிதற்கு பனாரஸ் என்ற பெயர் வந்ததெனச் சொல்வர். ச்ருஷ்டியின் உதய காலத்தில் நிர்குணப்ரம்மனின்றும் ஸகுணப்ரமன், ப்ரக்ருதி (இயற்கை) முதலாயவை ஒவ்வொன்றாய் வெளிப்பட்டு உலகமுண்டாயது. இச்சாதனங்களில் முக்யமான மூலப்ரக்ருதி எங்கு முதல் வெளிப்பட்டதோ அந்த க்ஷேத்ரத்துக்குக் காசி யென்ற பெயராயிற்றென்பர். இதற்கு ஆனந்தவன மென்ற வேறுபெயரும் பழைய நூல்களில் காணப்படுகிறது. வாரணாசியில் சக்கரதீர்த்தம் ஆதி தீர்த்த மென்னப்பட்டுள்ளது. இத்தீர்த்தத்தை ஸ்ரீ விஷ்ணு தன் சக்ராயுதத்தினாலுண்டாக்கி அவ்விடத்தில் விஷ்ணுவே வெகுகாலம் தவம் செய்திருந்தான். பிறகு சக்தியுடன் ஸ்ரீவிச்வநாதன் ப்ரத்யக்ஷமாய் சக்ரபுஷ்கரிணி தீர்த்தத்தைப் பார்த்து ஆனந்தங்கொண்டு தாண்டவம் புரியலானான். அப்போது விஸ்வ

னுதன் காதிலிருந்த மணி யொன்று அத்தீர்த்தத்தில் விழுந்தது. அன்று முதல் அதற்கு மணிகர்ணிகா என்ற பெயராயிற்று. பிறகு கங்கை காசிக்கு வந்தது. இந்நதி ஜன்ஹு முனியினுச்ரமத்தி லிருந்து கிழக்கு முகமாய்ப் பிரவஹித்தமையா லிதற்கு ஜான்ஹவி யென்ற பெயரும், பகீரதனுடைய பிரயத்தினத்தினுல் பூலோகம் வந்தமையால் பாகீரதி யென்ற பெயரும் ஏற்பட்டது. இதற்காக பகீரதன் பெரிய ப்ரயத்னம் செய்தானென்பது உலகப் பிரசித்தமான விஷயம். இதைக் கொண்டு ஹிமாலயத்தி லிருந்து இந்தியாவின் பக்கம் இந்நதியைத் திருப்பிய பகீரதன் அக்காலத்தில் பெரிய 'இஞ்ஜினீராக' இருந்திருக்க வேண்டு மென இக்காலத்தோர் யூகிக்கின்றனர். அது எப்படியாயினு மாகட்டும். இந்த க்ஷேத்திரத்தில் ப்ரம்மா, விஷ்ணு, மகேச்வரன் இம்மூவரும் நிலைத்த பின்புதான் உலகம் முன்னுல் விஸ்தாரமாயிற்று. இக்கதைக்கனுகுண மாய்க் காசியில் அண்டஜேச்வரர், ஸ்வேதஜேச்வரர், உத்பி ஜேச்வரர், ஜாரஜேச்வரர், ப்ருத்வீச்வரர், ஜீவேச்வரர், தே ஜேச்வரர், வனஸ்பதீச்வரர் முதலாய பீஜதேவர்களின் பெயர் கொண்டு சிவலிங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. அதன்பின் இந்த க்ஷேத்திரத்தின் வடக்கில் வருணாநதி, தெற்கில் அஸி நதிகளுற்பத்தியாயின. மேற்குப்பக்கத்தில் தில்லி விநாயகர் ஸ்தாபிக்கப்பட்டார். இவ்வாரணுசியில் காலபைரவர், தண்ட பாணி மற்றும் ஜ்ஞானவாபி தீர்த்தங்கள் மேல் கூறப்பட்ட ஸ்தானங்களைப்போலவே மிகப்புராதனமானவை. ப்ரம்ம தேவன் ஒரு அபராதம் செய்தபோது—(இதன் கதை நாவிக் ப்ரகரணத்தில் சொல்லப்பட்டுள்ளது)—அவனுக்குச் சிக்ஷை செய்யச் சிவன் காலபைரவனை யுண்டுசெய்தான். பைரவன்

சிவனாணைப்படி ப்ரம்மனின் ஐந்தாந்தலையைக்கிள்ளி யெறிந்தான்! ஆனால் அப்பாவத்தின் பலனாய்ப் பைரவனுக்கு ப்ரம்மஹத்தி தோஷம் சம்பவித்தது. அதனைப்போக்கிக் கொள்ளு நிமித்தம் பைரவன் அனேக தீர்த்தங்களைத் தரிசித்துக் கடைசியில் காசிக்குவந்து சேர்ந்தான். இங்கு க்ஷேத்ர மகிமையாலேயே அவனுக்கு ப்ரம்மஹத்தி தோஷம் நீங்கவும், பைரவன் நிலையாய்க் காசியிலேயே நின்றுவிட்டான். காசியில் க்ஷேத்ரபாலன் பைரவனையும், முக்யதேவதை விச்வேச்வரனையுமுள்ளார்கள். தண்டபாணியைப்பற்றிய வரலாறிவ்வித மிருக்கின்றது.—சங்கரனது கிருபையினால், பூர்ணபத்ரனென்னும் யக்ஷனது மனைவியான கனககுண்டலை என்பவளிடம் மஹாபக்தனான ஹரிகேசவனென்ற பிள்ளை பிறந்தான். அவன் சிறுவயதினனாயிருக்கும் பொழுதே இந்த க்ஷேத்திரத்துக்கு வந்து விச்வேச்வரனை யாராதித்தான். சிவன் ப்ரஸன்னனாய்ப் பாவிகளைத் தண்டிக்கத் தண்டபாணி என்ற பெயருடன் ஹரிகேசவனை ஸ்தாபித்தான். துன்மார்க்கத்தில் செல்வோரைச்சிட்சைசெய்து, நன் மார்க்கத்தை யனுசரிப்போருக்கு ஞானத்தையும் மோக்ஷத்தையும் கொடுக்கும் அந்த யக்ஷராஜ புத்ரனே தண்டபாணியாயிருக்கிறான். மேலும் க்ருதயுகத்தில் ஜடிலனென்ற யோகி புண்யதீர்த்தங்களைத் தரிசித்துக்கொண்டு காசி வந்து சேர்ந்தான். அங்கு விச்வேச்வரரை ஆராதிக்கவேண்டுமென்ற மனமுண்டாகவும், தேவாலயத்துக்குப் பக்கத்தில் ஜலமில்லாதிக்கத் தன்னிடமிருந்த த்ரிசூலத்தைக்கொண்டு கிணறொன்றை யுண்டாக்கி அதினின்றும் நீர்கொண்டு தினப்படி பூஜைசெய்து வந்தான். அப்போது ஈச்வரன் பிரஸன்னனாய், "இத்தீர்த்தம் இனி ஜ்ஞானவாபி என்று பிரசித்தி

யாய், இதில் ஸ்நானம் செய்து சிவனை யாராதிப்போர் ஞானசம்பன்னர்களாய் மோட்சமடைவர்" என்று வர மீந்தான். அதற்குப் பிறகு சிவனுணையினுல் திவோதாஸ னென்னுமரசன் வாரணுசியில் சிலகாலம் ஆண்டுவந்தான். அவன் மகா பராக்ரமசாலியும் தர்மிஷ்டனுமாவான். அவ னுக்குச் சங்கரன் ராஜ்யமளித்தபின் அவிமுக்தேச்வரரென்ற லிங்கத்தை ஸ்தாபித்து, தேவகணங்களோடும் மந்தராசலத் தில் வசிக்கச் சென்ருன். கொஞ்சகாலமானபின் அரசனது ஸத்வத்தைப் பரீக்ஷிக்கவெனச் சிவன் சௌஷஷ்டி யோகினி களை இந்த க்ஷேத்ரத்துக்கு அனுப்பினுன். ஆனுல் அவர்கள் அரசனையொன்றும் செய்யமாட்டாமல், இங்கேயே நிலேத்துவிட்டனர். பின்பு த்வாதசாதித்யரும் இங்குவந்து அரசனிடம் ஒருதோஷமும் காணமாட்டாமல் இவ்விடத்தி லேயே நிலேத்தனர். ப்ரம்மதேவன் அரசனிடமிருந்து வேண்டியது கற்றுக் காசியில் ருத்ர தீர்த்தத்தருகில் பத்து அச்வமேதங்களைச் செய்து, அங்கு லிங்கஸ்தாபனை செய் தான். துண்டிராஜன் (கணபதி) சோதிடனுருத்தாங்கி அரசனுக்கு முன்வருவனவற்றைச் சொல்லி, உலகமுய்ய வேண்டி இவ்விடத்திலேயே எட்டுத் திசைகளில் நிலேத் தான். கடைசியில் விஷ்ணு வந்து அரசனைப் பரிசுத்த ஞக்கிச் சுவர்க்கமனுப்பினுன். அப்போது விஷ்ணு முதலில் பாகீரதி-வருணு நதிகளின் சங்கமத்தில் தோன்றியபடியால், அவ்விடத்துக்கு விஷ்ணுபாதோதகதீர்த்த மென்று பெ ராய், அவ்விடத்தில் விஷ்ணு ஆதிகேசவனென்ற பெய ருடன் வசிக்கலாயினன். திவோதாஸன் சிவாராதனைக்காக பஞ்சகங்கை தீரத்தில் ஸ்தாபித்த திவோதாஸேச்வர லிங்கமும் அழகாயிருக்கிறது. திவோதாஸன் சுவர்க்கம்

போம்போது விச்வேச்வரன் பிரத்யக்ஷமாகி அவனுக்குத் தரிசனமளித்து, முமுக்ஷுக்கள் ஈடேறும்படியாய் எல்லாத் தேவகணங்களுடனும் காசி விச்வேச்வரனென்னும் நாமத்துடனிங்கே தங்கினான். காசிகண்டத்தில் வர்ணிக்கப்பட்டுள்ள புராணகால விஷயமிவ்வண்ணமுள்ளது.

காசி க்ஷேத்ரத்தில் ஆர்யாவர்த்தத்தின் பெயர் பெற்ற தீர்த்தங்களின் ப்ரதியாகவுள்ள பல தேவதைகளின் கோயில்கள் முற்காலத்திலேயே ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அதனால் காசியாத்திரையொன்றினாலேயே அனேக க்ஷேத்ரங்களின் தேவதர்சன பலனில் கொஞ்ச அம்சமேனும் கிட்டுமென்ற உத்தேசத்துடனே காசியாத்திரை மகிமையைப்பற்றி முற்காலந்தொட்டு இந்துக்கள் பெருமையாய்ப் புகழ்கின்றனர். இராமாயண மஹாபாரதங்களிலும் இதன் பெயரைக் காணலாம். புராண காலத்துக்குப் பிறகும் அனேக அரசர்களும், சீமான்களும் இங்கு வந்து அபாரமான பணச்செலவுசெய்து கட்டிவைத்த தேவாலயங்கள், ஸ்னான கட்டங்கள், தங்குமிடங்கள், அன்னசத்திரங்கள், வித்யாபீடங்கள் முதலாய தர்மகார்யங்களாலும் இந்நகருக்கு விசேஷ மகிமை யேற்பட்டிருக்கிறது. முன் இங்கு அனேகம் பெரிய வேதசாஸ்த்ரம் வல்லோர் வசித்துவந்து தேசத்தின் பல பாகங்களிலிருந்தும் வரும் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு வித்யாதானம் செய்து வந்தனர். இங்கே வசித்து, ஸாங்கமாய் வித்யை அப்யசித்தவர்க்கு முன்னே பரதகண்டத்தி லெங்கும் பெரிய மரியாதை கிடைத்துவந்தது. 12ம் நூற்றுண்டுக்குப் பிறகு 500-600 வருடங்கள் வரை முஸ்லீம் அரசர்களாளுகையில்

**இப்போதைய காசி, யாத்திரை விதி.**

இந்த க்ஷேத்திரத்துக்கு மிகுந்த ஹானி யுண்டாயிற்று. அவர்கள் இங்கிருந்த பல கோயில்களை இடித்துத்தள்ளி, அவ்விடங்களில் மசூதிகளைக் கட்டினார்கள். மராடா அரசர்கள் தலையெடுத்தபின் இன்றுவரை இந்நகரம் மறுபடி நிலைத்து உன்னத ஸ்திதிக்கு வருகிறது. இப்போது இந் நகரம் இப்பெயரைக்கொண்ட ஜில்லாவுக்கு நடுநாயகமாய் ஆங்கிலேயர் தண்டிருக்கும் இடமாயிருக்கிறது. இங்கு பி. என். டப்ள்யூ. ரயில்வே, இ. ஐ. ரயில்வேக்கள் சந்திக் கின்றன. இங்கு பனாரஸ் கன்டோன்மேன்ட், பனாரஸ் சிடி, (பி. என். டப்ள்யூ. ரயில்வே), காசி (ராஜகாட்) (இ. ஐ. ரயில்வே) என்று மூன்று ஸ்டேஷன்களிருக்கின்றன. ஸ்டேஷனில் வண்டி முதலான சௌகரியங்களிருக்கின்றன. ஆயினும் இங்கு கூலிகளுக்கோ, வண்டிக்காரர்களுக்கோ பேசிய வாடகையைக் கொடுத்தபின்னும் அவர்கள் இனும் கேட்பதை விடுவதில்லை. யாத்திரீகர்களிடமிருந்து ஆன மட்டில் பணத்தைப் பிடுங்குவதே க்ஷேத்ரவாசிகளின் நோக்கம். அதனை லக்ஷியம் செய்யக்கூடாது. வண்டிகளில் இந்த இந்த இடங்களுக்கு இவ்வளவிவ்வளவென்று முனிசி பாலிடியாரால் நியமிக்கப்பட்ட கட்டணப் பட்டியல் உண்டு. அதனைப்பார்த்து அனுசரிப்பது உத்தமம். இங்கு தங்க நூற்றுக்கணக்கான சத்திரங்களுண்டு. மேலும் இங்கு தினமொரு அன்ன சத்திரத்தை நிச்சயம்செய்துகொண்டால் ஒரு வருடம் வரை முதல் சத்திரத்துக்கு வரவேண்டிய அவசியமில்லாதவளவு அன்ன சத்திரங்களிருக்கின்றன. யாத்திரீகர் அவரவருடைய க்ஷேத்திரோபாத்தியாயர்களிட மோ, பண்டாக்களிடமோ தங்குவர். இங்கு யாத்திரை விதியை அவரவர் புரோகிதர் மூலமாய்த்தெரிந்துகொண்டு,

தந்தம் சக்திக்குத்தக்கபடி அனுசரிக்கலாம். இவ்விதிகள் புருஷர்களுக்கு மட்டிலுமுண்டு. ஸ்த்ரீகள் ஸ்னானம், தானம், கடவுள் தரிசனமட்டும் செய்யலாம். இங்கு தரிசன விதி இவ்வாறுள்ளது.

"विश्वेशं माधवं धुण्डीं दण्डपाणिं च भैरवम् ।
वन्दे काशीं गुहां गङ्गां भवानीं मणिकर्णिकाम ॥"

இங்கு சிறிய பெரிய காட்டுகள் சுமார் 64 இருக்கின்றன. அவைகளில் முக்யமானவை:—(1) வருணசங்கமகாட், இங்கு வருண நதி கங்கையுடன் சங்கமமா யிருக்கிறது. (2) ப்ரஹ்லாதகாட் கோஸ்வாமி துலசிதாஸ் இங்கு இராமாயணத்தை எழுத வாரம்பித்ததாகச் சொல்வர். (3) ப்ரம்மா காட். இங்கு ஒரே முகமும் ஆறு கைகளுடனும் பகவான் ஸ்ரீதத்தாத்ரேய மூர்த்தி யுண்டு (4) பஞ்சகங்காகாட் இங்கு கங்கை, யமுனை, ஸரஸ்வதி, கிரண, தூதபாயா நதிகள் கூடுவதனால் இதற்குப் பஞ்சகங்காகாட் என்ற பெயருண்டாயிற்று. மொகல் சக்ரவர்த்தி ஷாஹ்ஜாஹானின் ஆஸ்தான கவியான ஜகன்னாத பண்டிதன் லவங்கி என்றும் யவன அழகியைக் கல்யாணம் செய்து கொண்டதற்காகப் பிராமணர் அவனைப் பகிஷ்காரம் செய்தனர். அப்போது அவர்களுக்குத் தன் தோஷ மில்லாத் தன்மையை நிரூபித்துக் காட்ட இக்காட்டி லுட்கார்ந்து பண்டிதராஜனான ஜகன்னாதன் 'கங்காலஹரி' யென்ற காவ்யமியற்றத் தொடங்கவும், ஒவ்வொரு லஹரி (ச்லோகம்)க்கும் ஒவ்வொரு லஹரி (படி) கங்காஜலம் ஏறி, 52ம் லஹரி முடியும்போது அவனது பாதத்தைக் கழுவிப் போனதாய்ச் சொல்வர். (5) மணி கர்ணிகாகாட். இது காசியில் பிரசித்தியான 5 துறைகளு

ளொன்று. இதனை முதலே வர்ணித்திருக்கிறது. இதற்குச் சமீபத்தில் மஹாராணி அஹல்யாபாய் கட்டுவித்த தாரகேச்வராலய மிருக்கின்றது (6) சிதாகாட் இது பூர்வத்தில் அரிச்சந்திரனை விலைக்கு வாங்கிய மயானம் காப்போன் வம்சத்தைச் சேர்ந்தது. இது புனிதமான இடமாகையால் சவ தகனத்துக்கு அவரவர்கள் அந்தஸ்துக்குத்தக்க பணந் தர வேண்டும். இதனால் இதனையுடையார் மிகுந்த செல்வவான்களாக விருக்கின்றனர். (7) லலிதாகாட் இங்கு லலிதா தீர்த்தமும் லலிதாதேவி கோயிலுமிருக்கின்றன. அக்கோயிலுக்குக் கிழக்கில் காசிதேவி, மற்றும் பல தேவதைகளின் மூர்த்திகளிருக்கின்றன. (8) தசாச்வமேத காட், இது காசி நகரின் மத்தியிலிருப்பதனால் இங்கு யாத்திரீகரின் கூட்டம், ஸ்னானம் செய்வோர் கும்பலதிகம். அன்றியும் இது வியாபார கட்டமாகையால் இங்கு படகுகளும் சஞ்சரித்துக்கொண்டிருக்கும். ப்ரம்மன் அச்வமேதங்களை இங்குதான் செய்தது. (9) துலஸீகாட். கோஸ்வாமி ஸ்ரீதுலசிதாஸர் இங்கு வசிக்கையில் அனேக காவியங்களை இயற்றினர். அவர் இங்குதான் வைகுண்டவாசியாயினர். இங்கு துலசிதாஸரின் கோயிலிருக்கிறது. அங்கு அவரின் ஞாபகார்த்தமாய் அனேக வஸ்துக்களை வைத்திருக்கின்றனர். அவரின் பாதுகைகளு மிருக்கின்றன. மேலும் ஸ்ரீதுலஸிதாஸராலேயே ஸ்தாபிக்கப்பட்ட அனுமான்மூர்த்தி இங்கிருக்கிறது. இக்கோயிலினொருமூலையில் சாங்கிய சாஸ்த்ரம் செய்தோரான கபில முனிவரின் மூர்த்தியுமிருக்கிறது. (10) அஸீ ஸங்கமகாட். இது துலஸீகாட்டின் தெற்கேயுள்ளது. இங்கு அஸீ நதி கங்கையுடன் கலக்கிறது. இது 40 அடி அகலத்துக்குமேலில்லை. மழைகாலத்தில்

மட்டும் பிரவாஹம் அதிகமிருக்கும். காசியில் எல்லா பஞ்ச க்ரோசிகளும் சேர்ந்து 24 யாத்திரைகளாகும். அவைகளை முடிக்க 4-5 நாட்கள் வேண்டும். அங்கு ச்ராத்தங்களைச் செய்யவேண்டும். அங்கங்கு தர்மசாலைகளும் கிணறுகளும் இருக்கின்றன. மேலும் ச்ராத்தத்துக்குத் தேவையான சாமான் கடைகளும் ஆங்காங்குள்ளதனால் பஞ்சக்ரோசி யாத்திரைக்கு ஒரு வண்டியையும், ஒரு ப்ராம்மணனையும் கூடக் கூட்டிப்போய் யாத்திரையை முடித்து வரலாம். ச்ராத்தம் செய்யும்போது அலுத்துக்கொள்ளுதல் கூடாது. காசியாத்திரையால் எல்லா யாத்திரைப் புண்யமும் கிட்டுமெனச் சொல்வது இந்தப் பொறுமைக் குணத்துக்காகவேதானெனத் தோன்றுகிறது. இங்கு "முதலில் தீர்த்த ச்ராத்தம், பிறகு (ஐந்து) பஞ்சக்ரோசி ச்ராத்தம் மறுபடி பஞ்சதீர்த்த ச்ராத்தம், பன்னிரண்டாம் பிசாசமோசன ச்ராத்தம்" செய்யவேண்டுமென்ற விதியிருக்கிறது. இவைகளானபின் காலபைரவாஷ்டகம், காலபைரவர் பிரஸாத ஸ்வீகரணம், பிராம்மணர்களுக்குத் தானம், காசி விச்வேச்வரருக்கு ருத்ராபிஷேகம், பிராம்மண-ஸுமங்கலிகளுக்கு போஜனம் இவை இங்கு முக்ய யாத்திரை விதிகளென்னப் பட்டுள்ளன. அனுகூலமுள்ளோர் மந்த்ரஜாகரம், விச்வேச்வரனுக்கு மஹாபூஜை, லகு அல்லது மஹாருத்ர முதலியவற்றைச் செய்வர். காசியில் இப்போதும் எல்லா வேதங்களையுமறிந்த மகான்களான ச்ரோத்ரீயர்களிருக்கின்றனர். ஆஸேது ஹிமாசலபர்யந்தம் இப்பண்டிதர்களின் சாஸ்த்ர நிர்ணயம் தலைவணங்கத்தக்கதாயுள்ளது. இக்காசியில்தான் புத்தன் தன் தர்மத்தை முதலில் பிரஸ்தாபித்தான். குமாரில பட்டன் வைதிக கர்ம காண்டத்தைச் சொன்னதுமிவ்

விடத்தில்தான். ஸ்ரீசங்கராசாரியார் அத்வைதம் பிரசாரம் இங்கிருந்தே செய்யத் தொடங்கியது. இன்றும் இங்கு அனேகம் ஸாதுக்களும்,பக்தர்களும், பரம்பரையாய்க் கர்மிஷ்டர்களாய் வணங்கத்தக்கவர்களுடன் சேர்ந்தோர்களும் அனேகரிங்கு வசிக்கின்றனர். மேலும் ப்ராசீன சாஸ்திரங்களோடு தற்காலத்தைய பௌதிக சாஸ்திர ஞானத்தைச் சேர்க்கவெனப் பண்டித மதனமோஹன மாளவியா இங்கு இந்து சர்வகலாசாலையைத் தாபித்திருக்கின்றனர்.

காசி க்ஷேத்திரத்தில் பல பிரசித்தியான பொதுக்கோயில்களிருக்கின்றன. அவைகளில் பிரசித்தமானவை கீழ் வருமாறு:—விச்வேச்வர ராலயம். இது காசியில் முக்யமான கோயில். இங்கு விச்வேச்வருக் கெதிரில் குறுக்காயுள்ள சிவப்புக்கல்லாலான நந்தியுண்டு. முதலில் விச்வேச்வர லிங்கம் இதனெதிரிலிருந்தது. ஆனால் ஔரங்கசீப் இங்கிருந்த கோயிலை இடித்து, அதிருந்தவிடத்தில் மசூதியைக் கட்டினன். அப்போது பக்தர்கள் தேவனைப் பிரார்த்திக்கவும், அவர் முக்ய குருக்களான நாராயணபட்டரென்பாரின் சொர்ப்பனத்தில் பிரசன்னமாய் "நான் மணிகர்ணிகையிலிருக்கிறேன். நீ முதல் முழுக்குப் போட்டதும் உன் கையிலகப்படுவேன். நீ ஒருகர்ப்ப கிருஹமட்டிலும் கட்டிவைத்து, அங்கு நிலத்தில் கர்ப்பூரத்தைப்போடு. எந்த இடத்தில் அது தானகவே எரிகிறதோ அங்கு என்னை ஸ்தாபி" எனச் சொன்னர். அப்படியே செய்யவும் வலது பக்க மூலையில் கர்ப்பூரம் பற்றிக்கொண்டது. அவ்விடத்திலேயே விச்வேச்வர லிங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இக்கோயிலில் சதுர்வணத்தோரும் போய்த் தேவனைத் தொட்டுப்

பிரஸித்திபெற்ற ஆலயங்கள்.



35. ஸ்ரீ விச்வநாதர் கோயில், காசி.



36. பண்டித மதனமோஹனமாளவியாஜியின் இந்து விச்வ (சர்வகலாசாலை) வித்யாலயத் தோற்றம்.

பூஜிப்பர். இக்கோயிலின் பிராகாரத்துக்குள் ஞானவாபி தீர்த்தமிருக்கின்றது. இதனை முதலே வர்ணித்திருக்கிறது. இப்போது இதன்மேல் துணியைப் போர்த்தியிருக்கின்றனர். இதன் கரையிலொருவன் உட்கார்ந்து ஒவ்வொரு கரண்டி ஜலம் கொடுத்துக் கொண்டிருப்பான். ஸ்னானத்துக்கு வேண்டியவளவு ஜலம் வேண்டுமானால் 1½ ரூபாய் கொடுக்க வேண்டும். இக்கோயிலில் தாழவிருக்கும் சிவலிங்கத்தைச் சுற்றிலுமுள்ள கட்டுக்கு வெள்ளித் தகடடித்திருக்கின்றனர். இக்கோயில் 51 அடி உயரமானது. சிகரத்துக்கு தாமிரத்தகடு போர்த்தித் தங்க முலாம் பூசியிருக்கின்றனர். கதவுகளுக்கு மிவ்விதமே தங்க முலாம் பூசப்பெற்ற தாமிரத் தகடுகளடித்திருக்கின்றனர். கோயிலில் 9 மணிகளைக் கட்டியுள்ளார்கள். அவைகளில் நேபாள மஹாராஜன் ஸமர்ப்பித்த மணி விசித்திர வேலைப்பாடமைந்தது. இங்கிருந்து சுமார் 500 அடி தூரத்திலுள்ள 60 அடி உயரமான ஆதிவிச்வேச்வர ராலயம் பார்க்கத் தகுந்தது. பிந்து மாதவராலயம்:—பஞ்சகங்கா காட்டிலிருக்கிறது. காலபைரவ ராலயம்:—பிந்து மாதவத்தின் நைருதி திக்கில் சுமார் 1 மைல் தூரத்திலிருக்கின்றது. இது சாதாரணமாயிருப்பினும் ரமணீயமானது. இதற்குக் காசி ரக்ஷக பைரவநாதனெனவும் பெயருண்டு. பைரவநாதன், சிகரத்தோடுகூடிய இவ்வாலயத்தில் சிம்மாசனத்தின்மேல் விளங்குகின்றான். கோயிலுக்கு மூன்றுபக்கங்களில் வாயில்களிருக்கின்றன. வாயிலுக்குக்கிடது பக்கம் கல்லினாலான பெரிய நாயிருக்கிறது. இருமருங்கிலும் கையில் தடிகளைப் பூத்தவண்ணம் காலபைரவ கணபுருஷரினிரண்டு விக்ரகங்களிருக்கின்றன. இவ்வாலயத்தை 1825ல் புனாவின் பாஜீ

ராவ் பேஷ்வா கட்டினன். இங்குள்ள குருக்கள் மயில் தோகை விசிறிகொண்டு யாத்திரீகரின் முதுகைத் தட்டு வான். இக்கோயிலின் பக்கத்தின் பைரவர் கயிறு விற்கப் படும். அக்ஷயவடம்.— விச்வேச்வராலயத்தின் பெரி வாசலிலிருந்து மேற்கே துண்டிராஜ மந்திரம்வரை ஒரு சந்திருக்கிறது. அதில் இடதுபக்கத்தில் முதலில் சனீச்வர மந்திரமுளது. அம்மூர்த்தியின் முகம் வெள்ளியாலாயது, உடலில்லை. இம்மந்திரத்தி னொருபக்கலில் மஹாவீர மூர்த்தியுண்டு; இன்னொரு பக்கத்தில் ஒரு அக்ஷய வடமிருக்கின்றது. யாத்திரீகர் அதனைத் தரிசிப்பர். அன்ன பூரணி.—அக்ஷயவடத்துக்கு மேற்கிலுள்ள சந்தில் இடப் பக்கத்தில் இத்தேவியினுலயமிருக்கின்றது. கி.பி. 1725ல் பேஷ்வா முதலாம் பாஜீராவ் இதனைக் கட்டுவித்தான். இங்கு பிராகார மத்தியிலுள்ள கோயிலில் வெள்ளிச் சிங்காதனத்தின் மேல் ஸ்ரீஅன்னபூர்ணிதேவி விளங்கு கிறுள். மூர்த்தி பித்தளையாலானது. பிராகாரத்தில் வேறு கோயில்களிருக்கின்றன. அவைகளில் விஷ்ணு, கணேசன், ஹநுமான், குபேரன் முதலான தேவர்களிருக் கின்றனர். துண்டிராஜகணேசரும் தண்டபாணியும். இவற் றைப்பற்றி முதலே பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இங்கு துண்டிராஜ கணேசமூர்த்திக்கு வெள்ளிக் கவசமணிவித் திருக்கின்றனர். துண்டிராஜனுக்குச் சமீபமாய் வடக்குப் பக்கத்திலொரு அறையில் தண்டபாணி மூர்த்தி யிரு கிறது. அம்மூர்த்தியினிருமருங்கிலும் சுப்ரம், விப்ரம் என்ற இரண்டு கணமூர்த்திகளுண்டு. கோபால மந்திரம். சௌகாம்பா மொஹல்லாவில் வல்லப சம்பிரதாயத்தினரது பிரசித்தி பெற்ற ஆலயமிது. அழகாயும் விசாலமாயு

மிருக்கின்றது. காசியில் வல்லப சம்பிரதாயத்தின் வேறு கோயில்களில் ரணசோடஜீ மந்திரம், படேமஹாராஜ்ஜீகா மந்திர், பலதேவ்ஜிமந்திர், தாவூஜி மந்திரங்கள் பிரசித்த மானவை. நேபாளிமந்திரம் லலிதாகாட்டின் மேற்பாகத்தில் இச்சிவாலய மிருக்கின்றது. இதன் வடிவும் அமைப்பும் சீனக் கோயில்களைப்போன்றுள்ளன. இக் கோயிலினெதிரில் பெரிய நந்தி யுண்டு. இதற்குச் சமீபத்தில் நேபாளத் தாருக்கென தர்மசாலை யொன்றிருக்கிறது. துர்க்காமந்திரம். இது நகரத்தின் தெற்கு மூலையில் துர்க்கதீர்த்தத் தருகிலுள்ளது. இதன் பிரகாரம் பெரிதாயிருப்பதுடன் இதற்குப் போய்வரும் விசாலமான ராஜபாட்டை மேற்கு திக்கி லிருக்கின்றது. இக் கோயிலில் நௌபத்கானு சிறந்ததாயிருப்பதோடு, இங்கு கல் கட்டின் மேலுள்ள சிம்ம விக்ரஹங்கள் அழகியவையா யிருக்கின்றன. இவ்வாலயத்தின் பிராகாரத்துள் பலதேவர்களின் மூர்த்திகளுண்டு. நவராத்ரி, செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் இங்கு தரிசனத்துக்கு வருவோர் கூட்ட மதிகமாயிருக்கும். கங்கையின் கிழக்குக்கரையில் நின்று பார்த்தால், நதியின் விசாலமான பிரதேசம், அஸீசங்கம முதல் வருணசங்கம வரையிலுள்ள துறைகள், அவைகளின் மேல் சூர்ய வெளிச்சத்தால் பிரகாசிக்கும் சிகரங்களுடன் விளங்கும் அழகிய தேவாலயங்கள், அவைகளுக்குப் பக்கத்திலுள்ள சிறந்த மாளிகைகள், துறைகளில் 'ஜைமாதா', 'ஜைக்கங்கா', 'ஜை பாகீரதி' எனக் கோஷித்துக்கொண்டு ஸ்னன முதலியவற்றுக்காக நிறைந்திருக்கும் ஸ்த்ரீ புருஷர்களின் கூட்டம், கங்கையில் இங்கிருந்து அங்கு போய் வந்து கொண்டிருக்கும் தோணிகள், இவற்றை

யெல்லாம் அழகு படுத்தும் காலைவேளைச் சூரியனின் கிரணங்கள் இவை மிக மனோஹரமாயும் சந்தோஷ முண்டுசெய்பவையாயும் தோன்றும்.

ராம மந்திரம். க்வாலியர் ஸம்ஸ்தான திவானாயிருந்த தினகர்ராயர் இவ்வாலயத்தைக் கட்டியவர். காசியில் தரிசிக்கத்தக்க ஆலயங்களிலொன்று. இக்கோயிலில் தங்கத்தாலான சிம்மாசனத்தின்மேல் மிக விலைபெறும் வஸ்திர அலங்காரங்களுடன்கூடி ஸ்ரீராமர், லக்ஷ்மணர், சீதையின் மிக அழகிய, மனோஹரமான மூர்த்திகளிருக்கின்றன. கோயிலின் நான்கு பக்கங்களிலும் சிற்ப நுட்பங்காட்டும் கம்பங்களிருக்கின்றன. நாககுண்டதீர்த்தம். இது நகரின் வாயவ்யத்தி (வடமேற்கு) லிருக்கின்றது. இங்கு ஸ்னானம் செய்தால் பாம்புக் கடியாலுண்டாகும் அபாயம் நீங்கும். கோரகநாத மந்திரம். மந்தாகினி மொஹல்லாவில் உயரமான மேட்டின்மேல் ஒரு கோயிலில் பாபா கோரகநாதரின் பாத அடையாளங்களிருக்கின்றன. இங்கு கோரக்—ஸம்பிரதாயிகளான சாதுக்கள் வசிக்கின்றனர். கபீரசௌரா. இங்கு கபீர்-பந்தியர்களின் (வழியினர்) பிரசித்தியான கோயிலிருக்கின்றது. கோயிலில் கபீரின் காலடிகளை வைத்திருக்கின்றனர். கோயிலின் ஒரு பக்கத்திலுள்ள இரண்டடுக்குக் கட்டடத்தில் கபீரினாசனமுளது (பீடம்). அதற்குப்பக்கத்தில் கபீரின் குல்லாயை வைத்திருக்கிறார்கள். ராமானந்தஸ்வாமி, கபீர் இவர்களின் உருவப்படத்தை அங்கு மாட்டியிருக்கிறார்கள். கோயிலைச் சுற்றியுள்ள இடத்தில் பூ-பழச் செடிகளின் உத்யான வனத்தைச் செய்திருக்கின்றனர். இப்பீடத்துக்

வேறு தற்போதைய-பூர்வீக ஸ்தலங்கள்.

கிதுவரை 20 பேர் மஹந்துக்களாயிருக்கின்றனர். மாதவராம் கோபுரம். மாதவராம் காட்டில் உயரமான ஓரிடத்தில் ஔரங்கசீப் கட்டுவித்த அழகிய கல்மசூதியொன்றிருக்கிறது. அதற்கு முன்னால் அக்கம் பக்கத்தில் 142 அடி உயரமான இரண்டு கோபுரங்களிருக்கின்றன. கீழே அவைகளின் குறுக்களவு $8\frac{1}{4}$ அடி; மேலே $7\frac{1}{2}$ அடி. மேலேறிப்போக உள்ளே வளைந்த படிக்கட்டுகளுண்டு. இங்கிருந்து காசி நகரத்தோற்றம் அழகானதாம். இதனைக்கட்டிய மாதவராம் என்ற சிற்பியின் பெயரால் இக்கோபுரம் பிரசித்தியடைந்துள்ளது. அடாயீ கங்கூரா மஸ்ஜித். காசியின் பிரசித்தியான மசூதிகளிலொன்று. இதில் இந்து, பௌத்த, இஸ்லாமியரின் ஆலய வடையாளங்களைக் காணலாம். ஔரங்கசீபின் மசூதி. விச்வநாதரின் பழைய கோயிலினொருபாகம் இதனை யொட்டியிருக்கிறது. மசூதியின்முன் வேலைப்பாடமைந்த கம்பங்களிருக்கின்றன. பழைய விச்வநாதராலயத்தை இடித்து அங்கிருந்து இக்கம்பங்களைக் கொண்டுவந்து வைத்தனர். வேதசாலை.—ஆகாயத்திலுள்ள கிரகங்கள், உபகிரகங்கள், நக்ஷத்திரங்கள் இவைகளைப்பற்றிய ஞானமடைவதற்கென ஜெய்பூர் மஹாராஜாவாயிருந்த ஸவாய் ஜயஸிம்மன் காசியில் மானமந்திரத்தின் மாளிகையின் பேரில் ஒரு வேதசாலை (observatory) கட்டுவித்தான். ஜயஸிம்ம மஹாராஜன் ஜோதிஷ சாஸ்திரத்திலன்பு பூண்டவன். அவன் தில்லி, மதுரை, உஜ்ஜயினி, ஜெய்பூர் காசி நகரங்களில் வேதசாலைகளைக் கட்டியிருக்கிறான். காசியிலுள்ள வேதசாலை சீர்கெட்டநிலை (ஜீர்ணம்) யிலிருக்கிறது. இங்கு ஏழு யந்திரங்களைக்கொண்டு எல்லா கிரகமண்டலங்கள் நக்ஷத்திரங்களைத் தெரிந்துகொண்டிருந்தனர். ஸ்ரீசிவ

ப்ரஸாதகுப்தரின் கோடி. காசியில் நகவா மொஹல்லாவில் ஸ்ரீசிவப்ரஸாதகுப்தரின் கோடியிருக்கிறது. இங்கு பாரத மாதாவின் ஒரு பெரிய படத்தைச் சலவைக்கல்லின்மேல் தயாரித்துவைத்துள்ளனர். அது பார்க்கத்தக்கது. ராம நகர் இது கங்கையின் இடக்கரையில் அஸீசங்கமத்துக்கு ஒரு மையிலும், டப்ரின் பாலத்திலிருந்து 4 மைலிலுமிருக்கிறது. இங்கு போக நகவா காட்டில் தோணிகள் கிடைக்கும். ராமநகர் இப்போதைய காசி அரசரின் இராஜதானியாயிருக்கிறது. கி.பி. 1750ல் ராஜா பலவந்தசிம்மன் இந் நகரையும் கோட்டையையும் கட்டினன். பலவந்தசிம்மனுக்குப் பிறகு சேதசிம்மன் தன் தந்தையாரம்பித்த வேலையைப் பூர்த்திசெய்து நகரையழகுபடுத்தும் பிரயத்தனமும் செய்தான். இங்குள்ள அரண்மனைக்கு ஒருமைல் தூரத்தில் சேதசிம்மன் ஒருவரியையும் ஒரு ஆலயத்தையும் கட்டினன். அவையும் பார்க்கத்தகுந்தவை. அங்கு ஆச்வீஜ (ஐப்பசி) மாதத்தில் ஒருமாதம் 'ராமலீலா' திருநாள் நடக்கும். பனாரஸ் ஹிந்து சர்வகலாசாலை (விச்வ வித்யாலயம்). இது பெரியாரான பண்டித மதனமோஹன மாளவியாவின் பிரயத்தனத்தாலும் அனேக அரசர்கள்-சீமான்களின் உதவியைக்கொண்டும் 1916ல் தாபிக்கப் பட்டது. காசி யாத்திரீகர் இதனை அவசியம் பார்க்க வேண்டும். க்வீன்ஸ் காலேஜ். இதனை 1852ல் கட்டினார்கள். இதிலுள்ள சிற்பவேலை பார்க்கவேண்டியது. இக்காலேஜ் புத்தகாலயத்தில் (Library) அனேகம் பழைய சம்ஸ்க்ருத க்ரந்தங்களிருக்கின்றன. காசி வித்யாபீடம். இது 1921ல் மஹாத்மா காந்தி, பிரபலமான சட்டமறுப்புத் தொடங்கியகாலத்தில் ஸ்தாபித்த ராஷ்ட்ரீய வித்யாலயம்.

தர்சனம், அர்த்தசாஸ்த்ரம், இதிகாசம், ராஜநீதி, ஸம்ஸ்க்ருதம், ஹிந்தி- இவைகளே இங்கு முக்யமாய்க் கற்பிக்கப் படுபவை. எல்லாம் ஹிந்தியிலேயே போதிக்கப்படுகின்றன. இப்பீடத்தின் மூலம் ஹிந்தீ ஞானமண்டலியின் க்ரந்த மாலேயும் வெளியாகின்றது. மேலும் உயர்ந்ததான மூன்று மாதத்திற்கொருமுறை வெளியிடும் பத்திரிகையும் இங்கு நடத்தப்பெற்றுவருகிறது. ஸ்ரீ சிவப்ரஸாதகுப்தா, தம் 10 ஆயிரம் க்ரந்தங்கள் கொண்ட புத்தகாலயத்தையே இதற்களித்துள்ளார். இங்கு மாணவர்கள் வசிப்பதற்கும் வித்தைக்கும் ஒன்றும் கொடுக்கவேண்டியதில்லே. சாப்பாட்டுச் செலவைமட்டிலும் கொடுக்கவேண்டும். சிவப்ரஸாதகுப்தரது உதாரக்கொடையான 10 லக்ஷ ரூபாயை மூலதானமாகக்கொண்டு இது நடைபெற்று வருகிறது. இவைகளன்றி நாகரீ ப்ரசாரிணீ சபை, ஸ்ரீபாரத தர்ம மஹா மண்டலம், காராமைகேல் லைப்ரரி முதலியவைகளும் பார்க்க வேண்டியவை. பனாஸி லிருந்து வடக்கே 4 மைல் தூரத்தில் ஸாரநாத் என்ற இடமிருக்கின்றது. பி. என். டப்ள்யூ (B. N. W.) ரயில் மார்க்கமாயும் ஸாரநாத் ஸ்டேஷனுக்குச் செல்லலாம். ஆனல் ஸாரநாத்துக்கு ஸ்டேஷனிலிருந்து ஒருமைல் தூரம் போகவேண்டும். முற்காலத்தில் மஹாத்மாவான புத்த தேவன் வெகுகாலம் இங்கு வசித்திருந்தான். புத்தனது ஆணைப்படி காசியரசனொருவன் மிருகங்களே வேட்டையாடு வதையொழித்தான். புத்தபகவான் இவ்விடத்திலேதான் தர்ம-சக்ர-பரிவர்த்தன-ஸூத்ரத்வாரா (மூலியமாய்) தன் ஐந்து சீடர்களுக்கு பௌத்த தர்மோபதேசம் செய்தான். இது அப்போது பௌத்தர்களுக்கு முக்ய ஸ்தானமா

யிருந்தது. இங்கு அனேக பௌத்த விஹாரங்களும் ஸ்தூபங்களும், பாடசாலைகளும், புத்தகாலயங்களும், தர்ம சாலைகளுமிருந்தன. அசோக சக்ரவர்த்தியின் காலத்திலும் ஸாரநாத் நகரம் விசேஷமாய்ப் பிரசித்தியடைந்திருந்தது. காணிஷ்க ராஜனின் காலத்திய 9 அடி உயரமான புத்தனின் சிலை விக்ரஹமும், ஒரு பெரிய கல் குடையுமிருக்கின்றன. குப்தவம்ச அரசர்கள் காலத்திய அனேக வஸ்துக்கள் ஸார நாத்தில் கிடைக்கும். கி.பி. 634லிருந்து 645வரை இந்தியா வில் சஞ்சரித்த ஹுயன்ஸ்தாஸ் ஸாரநாத்தின் அபூர்வமான கலை வைபவத்தைக் கண்ணாரக்கண்டு வருணித்துள்ளான். 12ம் நூற்றாண்டின் கடைசியில் மகம்மத்கோரிஸாரநாத் நகரத்தைச் சூறையிட்டான். அங்கிருந்து வெள்ளி தங்க வஸ்துக்களைக் கைக் கொண்டு, புத்தனின் அற்புதமும் அழகியவையுமான விக்ரஹங்களைத் துண்டங்கண்டான். யவன அரசர்கள் காலத்தில் இது பூராவும் நாசமடைந்து அழகிய நகர மிருந்த இடத்தில் மண்-கல் மேடாயிற்று! 20ம் நூற்றாண்டின் முதலில்புராதத்வ சோதனையார் இங்கு நிலத்தைத் தோண்டிச் சோதனை செய்ய வாரம்பித்தனர்' அப்போது பல சரித்திர ஆராயச்சியாளரின் த்ருஷ்டியும் இப்பக்கம் திரும்பியது. இன்று ஸார நாத்தின் தோற்றம் மிக ரமணீயமாயிருக்கின்றது. இங்கு ஒரு பக்கத்தில் ஜைனக் கோயில், அற்புத பொருட்காட்சிசாலை, பௌத்த தர்மசாலை களும் மற்றொரு பாகத்தில் ப்ரதானமான ' தமேக—ஸ்தூபி' மூலகந்தகுடி, நவீனவிஹாரம், கண்டஹாரம் முதலியவை இருக்கின்றன. இங்கு அசோகனின் சதுர்புஜ ஸிம்ம ஸ்தம்பம், புத்ததேவன் ப்ரதான மந்திரம், தமேஸ்தூபம், சௌகண்டிஸ்தூபம், ஸாரநாத் பழைய வஸ்துக்காட்சிசாலை, ஜைனக்கோயில் முதலானவை பார்க்கவேண்டியவையாம்.

இன்றைய காசி பட்டுவஸ்திரங்கள், பீதாம்பரம், ருத்திராக்ஷம், படிகம், பலவித லிங்கங்கள் முதலியவைகளின் வியாபாரத்துக்குப் பிரசித்தமானது.

இன்றைய காசி. இங்கு கரும்பைக்கொண்டு செய்யும் முரப்பா பிரசித்தியடைந்துள்ளது. இது வாயிலேயே கரைந்துவிடுகிறது. அல்வா முதலிய பதார்த்தங்களுக்கும் இவ்விடம் பேர்போனது. ஏகாதசி உபவாசம் செய்வோருக்குக்கூடத் தேவையான பலகார முதலிய எல்லாம் இங்ககப்படும். இங்கு கங்கைக்குக் கட்டியிருக்கும் 3,308 அடி நீளமான பாலத்தின்மேல் ஒரே சமயத்தில் ரயில், மாட்டுவண்டி, மனிதர் செல்லலாம்படியிருக்கிறது, இங்கு 'காச்யாம் மரணன் முக்தி:' என்றிருப்பதனால், இவ்விடத்தில் தேகத்தைவிட்டுத் தம் அஸ்தி கங்கையில் விழவேண்டுமென்ற அபேக்ஷையினால் அனேகம் முதியவர்கள் இங்குவந்து வசிக்கின்றனர். இங்கு குளிர்காலத்தில் குளிரும் வெய்யிற்காலத்தில் வெய்யிலும் அதிகம். அதனால் இங்குள்ள ஜனங்களுக்கு பங்கிரஸம் சாப்பிடும் வழக்க மேற்பட்டுள்ளது. காசியில் இகபரஸாதக சாதனங்கள் நிறைந்துள்ளன. தினமும் ஏதேனுமொரு தெய்வ உற்சவம் நடந்துகொண்டேயிருக்கும். தீர்த்தவாசம் செய்வோருக்கு இதனைப்போல் சுலபமான, மலிவான வாஸஸ்தலம் வேறு இல்லை. ப்ரம்மசாரி, க்ருஹஸ்தன், வானப்ரஸ்தன் சன்னியாசி, ஆகிய நான்கு ஆச்ரமத்தாருக்கும் இங்கு சௌகரியங்களிருக்கின்றன. மனுஷ்ய ஜன்மத்தில் கொஞ்சகாலமேனும் காசியில் வாசம் செய்யவேண்டுமென்றிருக்கிறது. இந்நகரைச் சரியாய்ப் பார்க்கவேண்டுமாயின் 2-3 மாதகாலம் வேண்டுமானவளவு விஸ்தாரமாயிருக்கிறது. யாத்திரீகர் இன்

னொரு விஷயத்தை மறத்தலாகாது. ராத்திரியோடு பகல், இருளுடன் வெளிச்சம், நல்ல ஜனங்களிடையே துர்ச்சனர் இவ்விதம் உலகம் பரஸ்பரம் விரோதமான இரண்டு வஸ்துக்கள் நிறைந்ததாயுள்ளது. அதேபோல் காசியில் மேலோரின் பெருமையையழிக்கும்படியான திருடர்கள், முடிச்சுமாறிகள், மோசக்காரர் நிறைந்துள்ளார்கள். அவர் கள் 'காசிக் குண்டர்கள்' என்றதாய்ப் பெயர் பெற்றிருக் கின்றனர். இவர்கள் ஒருகாலத்தில் தம் சௌர்ய முதலிய குணங்களால் பிரசித்தியடைந்திருந்தவர்கள். ராஜா சேத சிம்மனின் மெய்க் காப்பாளரனைவருமிக் குண்டர்களேயாம். அக்காலத்தில் இவர்களுக்குச் சைனியத்தில் முதன்மைத் தானம் கிடைத்துவந்தது. ஆனால் இன்று யுத்தமில்லை; இயந்திரங்கள் வந்து கைத்தொழில் மூலையிலொதுக்கப் பட்டது. அதனால் அவர்கள் வேலையற்றுப்போய், அக் காலத்துக் குண்டர்களின் வீர முதலாய குணங்களுமற்று மோசம், திருட்டு (முடிச்சவிழ்த்தல்) முதலியவைகளாய் மாறியிருக்கின்றன. மொகல் ஸராயி ஸ்டேஷனிலிருந்து கயைக்குப் போம்போது இவர்களது குசலவித்தைப் பிர தாபத்தை அஜாக்ரதையாயிருக்கும் யாத்திரீகரனேகர் அனு பவித்தறியலாம்! காசியில் யாத்திரை விதியை முடித்துக் கொண்டு புரோகிதருக்குச் சம்பாவனை சமர்ப்பித்து, கயை தரிசனத்துக்காக யாத்திரீகர் கயை க்ஷேத்திரத்துக்குப் பிரயாணப்படுவர்.

## 13. கயை, புத்தகயை க்ஷேத்திரங்கள்.

पञ्चक्रोशं गया क्षेत्रं क्रोशमेकं गयाशिरः ।
यत्र यत्र स्मरेन्नित्यं पितृणां दत्तमक्षयम् ॥
मगधेषु गया पुण्या नदी पुण्या पुनः पुनः ।
च्यवनस्याश्रमः पुण्यः पुण्यं राजगृहं स्मृतम् ॥

இப்பிராந்தியத்துக்குப் புராதன காலத்தில் மகததேச மென்ற பெயரிருந்தது. இத்தேசத்தில் கயை, புனஃ புன, ச்யவனுச்ரமம், ராஜக்ருஹமென்ற புண்ய க்ஷேத்திரங்கள் புராண காலத்திலிருந்தே பிரசித்தியானவை. இதனை இராமாயணம், மஹாபாரதங்களில் வருணித்திருக்கின்றனர். இந்நகரைச் சூரியனின் பிரபௌத்திரனு (பேரனது பிள்ளை) ம் சுத்யும்னன் பிள்ளையுமான கயன் கட்டிவைத்தானென்பர். இங்கு கயன் 100 அச்வமேதங்களைச் செய்து உலகில் அழியாப் புகழடைந்தான். அக்னி புராணத்தில் இத்தீர்த்தத்தின் உற்பத்தியைப் பற்றிக் கீழ்க் கண்டவாறு சொல்லப்பட்டுள்ளது:—பூர்வத்தில் கயாஸுரனென்ற மிகப் பராக்ரமசாலியான தைத்யனிருந்தான். அவன் தேவனுகும் உத்தேசத்தோடு விஷ்ணுவைக் குறித்துக் கடுமையாகத் தவமியற்றத் தொடங்கினுன்—தேவர்கள் அவனது உக்ர தபஸ்ஸைக் கண்டு, பயங்கொண்டு, விஷ்ணுவிடம் சென்று இவ்விதம் முறையிட்டனர்—"பகவானே! கயாஸுரனென்னும் தைத்யன் எங்களை நாசப்படுத்துவதற்காகவும், தான் அமரனுகவேண்டியும் உக்ரமான தவம் செய்துகொண்டிருக்கிருன். அவனின் தவம் முடிவடையுமாயின் தேவர்களின் குலம் நாசத்தையடையும். ஆனமையின் இப்பயங்கரமான

*கயை க்ஷேத்திரம்.*

குலநாச பயத்தினின்றும் எங்களைக் காக்கவேண்டும்". விஷ்ணுபகவான் தேவதைகளின் பிரார்த்தனையைக் கேட்டுக் கயாஸுரனிடம் போய், "நான் உன் தவத்தை மெச்சினேன். உனக்கு வேண்டிய வரத்தைக்கேள்" என்றான். அப்போது கயாஸுரன், "ஹே பகவானே! என் இடமானது எல்லா தீர்த்தங்களிலும் ச்ரேஷ்டமானதாகட்டும்!" என்றான். விஷ்ணு, 'ததாஸ்து' எனச் சொல்லிப் பிரமனிடம் வந்து 'நீ கயாஸுரனிடம் போய் யக்ஞம் செய்யப் பூமிகேள். யக்ஞத்துக்காக அவன் பூமியைத் தரும்போது, உன் சரீரத்தையே யக்ஞத்துக்காகக் கொடு என்று சொல்' எனச் சொல்லியனுப்பினான். பிரம்மதேவன் பிராமண வேடம் பூண்டு கயாஸுரனிடம் வந்து, "ஏ தைத்யராஜனே! நான் அதிதியான பிராமணன். உன்னிடம் பிக்ஷைவாங்க வந்திருக்கின்றேன் தயவுசெய்து உனது உடலை யக்ஞம் செய்வதற்காகத் தரவேண்டும்" என்றான். தர்மாத்மாவான தைத்யராஜன் பிராமணன் வார்த்தையைக் கேட்டுப் பூமியின் மேல் படுத்தவனாய், 'ஏ பிராம்மணா நீ இச்சரீரத்தின்மேல் யக்ஞத்தைச் செய்யலாம்' என்றான். பிரமன் அஸுரனது தலையின்மேல் யக்ஞத்தைச் செய்தான். ஆனால் பூர்ணாஹுதி கொடுக்கும் சமயத்தில் அத்தலை புரண்டுவிடும். இவ்விதமாய்ப் பிரமனது யக்ஞம் முடிவடையாதிருக்கவும் அப்போது விஷ்ணு தானே அவன் தலையின்மேல் விளங்கி, சகல தேவர்களுடனும் வசிக்கத் தொடங்கினான். அன்று முதல் இப்பூமி கயன்பேரால் புகழ்பெற்றது. மேலும் 'गयातीर्थं सर्वदेशे तीर्थेभ्योऽप्यधिकंश्रुणु" என்றால் 'எல்லாத் தேசங்களின் தீர்த்தங்களிலும் கயைதீர்த்தமே மிகப் புனிதமானதென அறி' என்பதாய்ச் சொல்லப்பட்

டுள்ளது. இந்த கயைதீர்த்தம் இப்போதைய பீஹார் பிராந்தியத்தில் இ. ஐ. ரயில்வே மார்க்கத்தில் அதே பெயர்கொண்ட ஸ்டேஷனினருகிலிருக்கின்றது. இங்கு பல்கு நதிக்கரையில் ச்ராத்தம் செய்து, விஷ்ணுபாதத்தில் பிண்டதானம் செய்வதனுல் பித்ருருணம் தீருமென்ற தர்ம சிரத்தை ஆதிகாலத்திலிருந்துமிருப்பதனுல், தேசத்தின் பல பாகங்களிலிருந்தும் யாத்திரீகர் இங்கு வந்துகொண்டிருக்கின்றனர். ஸ்டேஷனில் வண்டி முதலிய சௌகரியங்களுண்டு. யாத்திரீகர் தங்க ஐந்து சத்திரங்களிருக்கின்றன. ஸ்டேஷனிலிருந்து ஊர் ஒருமைல் தூரத்திலிருப்பதனுல் யாத்திரீகர் ஊருக்குள் சென்று பண்டாக்களிடம் தங்கும் வழக்கமதிகமிருக்கின்றது. இப்போது கயை விசேஷமாய்ப் பெருகி, இரண்டுபாகமாய் ஸாஹபகஞ்ச் அல்லது புது கயை என்றும் பழைய கயை என்றும் பெயர் கொண்டுள்ளது. ஸ்டேஷனுக்குப் பக்கத்திலுள்ள பாகமே ஸாஹபகஞ்ச். இங்கு கட்டடங்களும் பாதைகளும் நவீனரீதியன. பழைய ஊர் இங்கிருந்து ஒருமைல் தூரத்திலுள்ளது. நடுவில் கோர்ட்டு-கச்சேரி, ஆஸ்பத்திரி, தபாற்சாலே, பாங்குகள், ஐரோப்பிய இந்திய அதிகாரிகளின் பங்களாக்களிருக்கின்றன. பழைய ஊரில் பல்குநதி, கயை தீர்த்தம், பண்டாக்களின் வீடுகள், கடைகளிவையிருக்கின்றன. இங்கு பால், தயிர், நெய், காய்கறிகள், அரிசிமுதலியவை மலிவாய்க் கிடைக்கும். கயையின் கிழக்கில் நககூடக்குன்று, நைருதியில் பஸ்மக்கூடக்குன்று (முரலி பஹாடி), ப்ரம்மயோகினிக் குன்று, வடக்கே ராமசிலேக்குன்று, வாயுமூலேயில் ப்ரேத சிலேக்குன்று இவை எல்லேகளாயிருக்கின்றன.

ச்ராத்தம், பிண்டதானங்களுக்குக் கயை மிகப் பிரசித்தி

யானது. இங்கு முக்ய விதியும் ச்ராத்தமும் பிண்டதான முந்தான். கயை க்ஷேத்ரம் முதலில் ஐந்து கோச விஸ்தீர்ணமிருந்தது. அதில் ஒரு கோசப் பிரதேசம் கயையின் சிரம். இச்சிரத்தின் மேலேயே ச்ராத்தம் செய்யவேண்டுமென்றும் இக்கயாசிரமே ச்ராத்த பூமியெனவும் சொல்லப்பட்டுள்ளது.

**ச்ராத்த மகாத்ம்யம்.**

இங்கு தரிசனவிதி "गदाधरं विष्णुपदं अष्टादशपदानपि। वन्देऽक्षयवटं फल्गुं लक्ष्मीं गौरीं गयेश्वरीम् ॥" எனச் சொல்லி யிருக்கிறது. புனःபுனநதி, பல்கு நதிகளின் கரையில் வெவ் வேறிடங்களில் இவ்வாலயங்களிருக்கின்றன. மேலும் இங்கு கயாகயா, ப்ரம்மகயா, விஷ்ணுகயா, ருத்ரகயா, காசி விச் வேச்வரகயா, என்ற வேறு வேறு கயைகளுண்டு. தவிறவும் கயாதித்யன், காயத்ரி, கதாதரர், கயா, கயாசிரம் என்ற ஆறும் மோக்ஷந் தருவனவாமெனச் சொல்லப்பட்டுள்ளது. கயை ச்ராத்த பூமி. அதனால் "श्राद्धभूमौ गयां ध्यात्वा ध्यात्वा देवं गदाधरम्। वस्वादींश्च पितॄन् ध्यात्वा ततः श्राद्धं प्रवर्तते ॥" என்று ச்ராத்த சங்கற்பத்தில், கயை, கதாதர விஷ்ணு, வஸ்வாதிக பித்ருகணங்களின் த்யானத்தைச் செய்து, பிறகு எங்காகிலும் ச்ராத்தம் செய்யவேண்டுமென்றிருக்கிறது. புராதன காலக் குருகுல வித்தைப்பிரகாரம் முடிக்கவேண்டியதான காசி யாத்திரையில் கயா யாத்திரையுமடங்கியதாம். அதனால் அப்படிப்பட்டவருக்கும் பூர்வீகர்கள் கயைத் தியானத்தை விதித்தது ஸஹஜமானது. ஆனால் ஒன்றுமறியாதார், கயையை என்றும் பார்க்காதவர்கள் கயையைத் தியா னிப்ப தெவ்விதம்? அதனால் இவ் யாத்திரையை அவச்யம் செய்யவேண்டும். என்றால் அப்போது நாம் கயையி லேயே இருக்கிறோமென்ற பாவனையுண்டாகும். மேலும்

कुरुक्षेत्रं गयां गङ्गां प्रभासं पुष्करं तथा । एतानि पुण्य तीर्थानि श्राद्धकाले सदापठेत् ॥ மேலும் "ईशान विष्णुकमलासनकार्तिकेय वह्नित्रयादिरजनीश गणेश्वराणाम् । क्रौञ्चामरेन्द्रकलशोद्भवकश्यपानां पादान्नमामि सततं पितृमुक्तिहेतून ॥" என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. முக்ய விஷ்ணுபதம் தேவாலயத்துள் கர்ப்பக்ருஹத்திலிருக்கின்றது. அது தவிற மேல் கூறப்பட்ட 18 விஷ்ணுபதங்கள் வேறிடங்களிலுள்ளன. அங்கும் வேறு ச்ராத்தம் செய்யவேண்டும். ஒவ்வோரிடத்திலும் பிண்டதானம் செய்யவேண்டும். கயையில் பிண்டதானம் ச்ரேஷ்டமாம். இங்கு பிண்டதானம் செய்தால் பிறகு பிண்டதானம் செய்யவேண்டியதில்லை. விஷ்ணுபதத்தில் பித்ருக்களின் பெயரைச் சொல்லிப் பிண்டம் போட்டால் பித்ருக்கள் விஷ்ணுலோகம் சேர்வர். பூர்ண ஸாயுஜ்ய பதவிகிட்ட பதரீநாராயணத்திலுள்ள ப்ரம்மகபாடத்தில் பிண்டத்தைப் போடவேண்டும். கயையில் பிண்டப்ரமாணம் எலுமிச்சங்காயளவிருக்கவேண்டுமென்றும், ப்ரம்ம கபாடத்தில் இலந்தைப் பழவளவிருக்கவேண்டுமென்றும் விதியிருக்கிறது. குருக்ஷேத்ரம், பிரபாஸ முதலியவற்றையும் ச்ராத்த காலத்தில் ஸ்மரிக்க (நினைக்க) வேண்டுமெனவும் சொல்லப்பட்டுள்ளது. இதிலிருந்து ச்ராத்தத்தினுத்தேசம் விளங்கும். குருக்ஷேத்திரத்தில் பாரத யுத்தத்தின்போது பரதகண்டத்தின் எல்லா அரசர்களும் தம் சைன்யங்களுடன் இருந்தமையின், ஆர்யாவர்த்தத்தின் எல்லா பித்ருக்களுமங்கு பலியாயினரானமையின், அதுவும் ச்ராத்த பூமியெனப்பட்டுள்ளது. அவ்விதமே பிரபாஸத்தில் யாதவகுலமழிந்தது! கங்கை, புஷ்கரங்கள் புனிதமாய தீர்த்தங்களாகும். அதனால் அவைகளை ச்ராத்தத்தின்போது ஸ்மரிக்கவேண்டும்! ஆர்யர்

பித்ருக்களின் நினைவை இவ்விதம் அழியாமல் ஸ்தாபித்துள்ளனர். எங்கு பெரிய யுத்தம் நடந்ததோ, எங்கு தேசவீரர்களிருந்தனரோ அவ்விடங்களில் ஞாபகச் சின்னங்களைக் கட்டுவது, அவைகளின் சரிதத்தைக் கதையாகவோ காவ்யமாகவோ இயற்றிப் பின்வருவோர் அதனைப் படித்து மனத்துளிருத்திப் பெரியோரின் பராக்ரமங்களை ஸ்மரித்துக் கொண்டிருக்கும்வண்ணம் எல்லா தேசத்தினரும் செய்துள்ளார்கள். அதனால் ராஷ்ட்ரீய பாவனை ஸ்திரமாய் நிலைக்கும். இவ்வழக்கம் மேல் நாட்டாரிடமுமுண்டென்பதை தர்மாபில் (Thermopile) யுத்தவர்ணனையைப் படித்தோர் யாவருமறிவர். பூர்வீகரின் பராக்ரமச் செயல்களை ஸ்மரித்து தேசாபிமானம் ஒவ்வொரு குடும்பத்திலும் நிலைக்கவேண்டும். ஸ்மரித்து அதனை நிலைக்கச்செய்ய டேமாஸ்தனிஸ் (கிரேக்கச் சொல்லாளர்) போன்ற சொல்லாளர் வேண்டுவதில்லை. ஒவ்வொருவனும் நான்குபேர் பிராமணர்களையும் இஷ்டபந்துக்களையும் கூப்பிட்டு அவர்கள்முன் அன்னத்தின்மேல் (பிண்டம்) கையிட்டு, பித்ருக்களின் பெயர்களையுச்சரித்து, "நான் என் பூர்வீகரை மறப்பதில்லை. தேசாபிமானியாகிறேன்" என்று ப்ரமாணம் செய்வதே நிஜமான ச்ராத்தமெனப்படும்! அச்சமயத்தில் வெளியோர் வந்திருப்பதனல் அவர்களுக்குச் சாப்பாடு ஏற்பாடு செய்வது சகஜம். அச்சாப்பாடு பித்ருக்களின் காரணங்கொண்டகப்படுவதனல் அதனைப் பித்ரு ப்ரஸாதமெனவும் சொல்வர். இதனை ஒவ்வொருவனும் ஒவ்வொரு வருடமும் செய்யவேண்டும். ஒவ்வொரு தீர்த்தத் தலத்திலும் ஸ்னனம் செய்யும்போதும், சாப்பிடும்போதும் பித்ருக்களை ஸ்மரிக்கவேண்டும். ஒவ்வொரு பித்ருவினுடையவும் பெயரையுமுச்சரித்து, கையில் பிண்டத்

தைக்கொண்டு 'நான் அவர்களையனுசரித்துள்ளேன்' என அங்குள்ளோரெதுரில் சபதம் செய்வதோடன்றி, ஒவ்வொரு தீர்த்த ஸ்தலத்திலும் தன் பித்ருக்களின் மகிமையைக் சொல்வதே தீர்த்த ச்ராத்தமென்னப்படும்! சாப்பாடு, தட்சணைகள் — ஜனங்கள் சேரவேண்டும் — க்ருஹஸ்தன் பிக்ஷுகர்களின் யோகக்ஷேமத்தைக் கவனிக்கவேண்டும்— என்ற உத்தேசத்துடன் விதிக்கப்பட்டிருக்கவேண்டும். அவர்களின் யோக க்ஷேமத்துக்கு தட்சணை, தானங்க ளவசியம். இது முக்ய ஹேதுவல்ல. பித்ருக்கள் ஆரம்பித்த கார்யத்தை அபிமானத்துடன் கீர்த்தியோடு முடிப்பத ைலேயே பித்ருக்கள் முக்தியடைவார்களேயன்றிக் கேவலம் ச்ராத்தத்தினுலேயே அவர்களுக்கு முக்தியகப்படாது. ச்ராத்தமென்பது ஸமரணை செய்வதற்கும், தன் குலாபி மானங் காட்டுவதற்குமான குறிப்பாம். எல்லா சங்கற்பமு மானபின்.—

आब्रह्मस्तम्भपर्यन्तं देवर्षिपितृमानवाः ।
तृप्य तुंपितरस्सर्वे मातृमातामहादयः ॥
अतीतकुलकोटीनां सप्तद्वीपनिवासिनाम् ।
आब्रह्मभुवनालोकानिदमस्तु तिलोदकम् ॥
மேலும் येकेचास्मत्कुलेजाता अपुत्रागोत्रिणोमृताः ।
तेगृण्हन्तुमयादत्तं सूत्रनिष्पीडनोदकम् ॥

என்று எல்லா பித்ருக்களுக்கும் தர்ப்பணம் விட்டுக் கடைசியாக எல்லா பித்ருஸ்வரூபியான ஜனார்த்தன-வாஸுதேவனைப் பிரார்த்திக்கும் விதியிருக்கின்றது. இப் பித்ரு ருணம் (கடன்) அவரவர் யோக்யதைக்குத் தக்கபடி சுமக்கவேண்டுமென அதன் மரியாதையை ஆபஸ்தம்ப

வரையிட்டுள்ளார்கள். என்றால் மனிதன் கர்மத்துக்கு எல்லை யில்லை! மேற்கண்ட சுலோகத்தினால் அது தெளியப்படும். இதனையே கீதையிலும் சொல்லியிருக்கிறது. இவ்வெல்லா திருஷ்டிகொண்டும் பூர்வீகர்கள் ச்ராத்தத்தில் எந்த ரகஸ் யத்தை இட்டுள்ளனர் என்பதை ஒவ்வொருவரும் நன்றாய் ஆலோசிக்கவேண்டும். மேலும் கயை க்ஷேத்திரமே பித்ருக் களின் முக்திக்குக் காரணமாய் ஏன் ஆயிற்றென்பதற்குக் கயாஸுரன் அவ்வளவு தவத்தைச் செய்து, வேறெதையும் வேண்டாமல் அழியாத விஷ்ணுலோகமடைந்ததே எனச் சொல்லலாம். அங்கு ச்ராத்த ஸங்கற்பம் செய்யும்போதும் “ पुनरावृत्तिरहित अक्षयविष्णुलोकप्राप्त्यर्थं आत्मनासहउद्धारार्थं अमुकपितृश्राद्धंकरिष्ये ” என்று சொல்லவேண்டும். மேலும் அங்கு கயாவர்ஜனம் செய்வதனால் கர்த்தாவின் முன் பதினொரு, பின் பதினொரு தலைமுறைகளும் ஈடேறும் எனச் சொல்லப்பட்டிருக்கின்றது. அவ்வளவோடன்றிக் கர்த்தாவும் ஈடேறவே வேண்டும். இங்கு இப்போது முக்ய மாய் மூன்றிடங்களில்.— ஒன்று பல்குநதியில், ஒன்று விஷ்ணுபதத்தில், அக்ஷயவடத்திலொன்று இப்படி ச்ராத்தம் செய்யவேண்டுமென்ற விதியிருக்கிறது. அக்ஷய வடத்தில் ச்ராத்தம் செய்தபின் கயார்ஜனமாகவேண்டும். அதன் பிறகு பண்டாக்களிடம் ஸுபலம் கிடைக்கும். பின் தமக் கிஷ்டமான ஏதேனுமொரு பல (பழ) த் தியாகமும் மேலும் ஆலிலையில் சாப்பிடுவதையும் ஸங்கற்பத்தோடு விதிப்படி விட்டுவிடவேண்டும். எனின் அன்று முதலப்பழத்தைச் சாப்பிடக்கூடாது. அதனால் முக்திக்குக் காரணமாமெனவும் கூறுவர். ஆனால் அதன் மூல உத்தேசம் வேறு. பல த்யாகம்—கர்ம பலத்யாகத்—தால் முக்திக்கு மார்க்கமகப்

படுமேயன்றி கேவலம் வ்யவஹாரிக பலத்யாகத்தினாலல்ல. ஆனால் இதன் ஸ்மரணையினாலேனும் முன்னால் கர்மபலத் யாகத்துக்கவகாசமேற்படலாமென்பதே பலவர்ஜன (விடுதல்) விதியின் மூலஉத்தேசமாம்.

முன் சுலோகத்தில் சொல்லப்பட்டுள்ள தரிசனங்களில் பல்குநதி தரிசனம் முதலே கிடைக்கும். பிறகு விஷ்ணு பாத தேவாலயத்தில் சங்கு, சக்ரம், கதை பத்மம் தரித்த கதாதர மூர்த்தியுண்டு. சமீபத்தில் லக்ஷ்மி தேவியிருக்கிறாள். கயேச்வரி, கௌரி தேவர்கள் அக்ஷய வடம் போகும் வழியில் இருக்கின்றனர். கௌரிதேவியை மங்களகௌரி என்றழைப்பர். அக்ஷய வடமிருக்குமிடம் உயரமானதாயிருக்கிறது. அதற்குக் கோட்டையைப்போன்ற உயரமான சுவர் கட்டியிருக் கின்றனர். மஹாத்வாரத்துக்குப் போக 10-12 படிக ளேறிப் போகவேண்டும். உள்ளே நடுவில் ஒன்றின்முன் ஒன்றாகவுள்ள நான்கு ஆலமரங்களிருக்கின்றன. அவை களின் அடி-வேர் காணப்படுவதில்லை. அதனை அங்குள்ள புரோகிதர்கள் 'ப்ரயாக வட' மெனச் சொல்வர். மேலும் பக்தர்களின் பக்தியைப் பெருக்க அவற்றைச்சுற்றிப் பல தேவதைகளை ஸ்தாபித்துள்ளார்கள். அங்கு பஞ்சபாண்ட வர்களின் மூர்த்திகளையும் காட்டுவார். இவ்வடச் சாயை (அடி) யில் கடைசியாய் ச்ராத்தம் செய்யவேண்டும். ச்ராத்த மானபின் கயாவாளி வந்து கணவன் மனைவியரின் கைகளைப் பூக்கொண்டு கட்டுவான். அப்போது அவன் 'தேரே பிதர் ஸ்வர்க்க கயோ' என ஆசீர்வதிப்பான். யாத்திரீகரின் புரோகிதரெவராயினும் சரி, ஆசீர்வாதமட்டும் கயாவாளியே

*தரிசிக்க வேண்டிய ஆலயங்கள், கயாவாளிகள்.*

செய்யவேண்டும். இது அவர்களது அதிகாரம். இதற்காக அவர்கள் யாத்திரீகரிடமிருந்து அதிகப் பணங்கேட்பர். ஆனால் இப்போது இக்காலத்தறிவவர்களுக்கு மேற்பட்டுள்ளது. முதலில் இதனைப்பற்றித் தம் புரோகிதர்மூலம் நிச்சயம் செய்துகொண்டால் ஆசீர்வாதம் தடங்கலின்றி நடைபெறும். பிறகு முன்சொல்லப்பட்ட பலவர்ஜனை செய்யவேண்டும். விஷ்ணுபதத்திற்குப் பக்தர் ஷோடசோபசார பூஜை செய்வர். சிலர் ஸஹஸ்ரதுலஸீ அர்ச்சனை செய்வர். அங்கு ஒவ்வொரு காரியத்துக்கும் எட்டணா கட்டணம் வசூலிப்பர். கயையில் கயாவாளிகளின் ஆசைக்கு எல்லையே இல்லை. அது மிகப் பிரசித்தியானது. துவாபரயுகத்தில் ஸ்ரீராமசந்த்ரன் தன் பித்ருக்களையுத்தேசித்து இங்கு தான முதலியவற்றைச் செய்தான். அப்போது இங்குள்ள கயாவாளிகளுக்கு வெள்ளி, தங்கத்தாலான இரண்டு பர்வதங்களையும், மது (தேன்), பாலாகிய இரண்டு நதிகளையும் தானமாகக் கொடுத்தான். ஆயினும் அவர்களுக்குச் சந்தோஷமேற்படவில்லை. அப்போது ராமசந்த்ரனது சாபத்தால் வெள்ளி, தங்க பர்வதங்கள் பாஷாண (கல்) ரூபமடைந்தன. நதிகளிரண்டும் மறைந்தன. அதனால் பால் நதியான பல்குநதியில் வெறும் மணல்மட்டிலுமிருக்கின்றது. மணலைக் கொஞ்சம் பறித்தால் நீர் ஊறும். இவ்விதம் மணலடியில் ஜலம் பிரவஹிப்பதே இங்கு தீர்த்த மஹிமையாம். மதுநதியும் மறைந்தது; ஆனால் அப்பிரவாஹம் எங்கிருந்து புறப்பட்டதோ அவ்விடத்துக்கு மதுச்ராவமென்ற பெயருண்டு. இப்போது ப்ரேதபர்வதம், ராமபர்வதமென்றவிரண்டு வெள்ளி, தங்க மலைகளில் வெள்ளி, தங்க ரேகைகள்மட்டிலும் காணப்படுகின்றன. விஷ்ணுபத

மந்திரம்.—இவ்வாலயத்தைப் பிரசித்த மஹாராணி அஹல்யாபாய் ஹோள்கர் லக்ஷரூபாய் செலவுசெய்து 1766ல் கட்டுவித்தாள். அதில் ஒரு கல்லின்மேல் இச்சுலோகத்தை எழுதியிருக்கிறது:—

वन्देविष्णुरमेशं सकलसुरगणैः सेव्यमानं समंतात्
सर्वाभीष्टान्ददन्तं सुरुचिरमुखं पङ्कजाक्षं विशालम् ।
फल्गूनद्यातटस्थं सकलपितृगणान्मुक्तिभावंनमन्तम्
धर्मानर्थंचकामं सकलभुविजनान्मुक्तिमन्तेददन्तम् ॥

இத்தேவாலயக் கட்டடம் கல்லாலாயது. இதன் சபா மண்டபத்தில் இரண்டுபக்கம் மேலிருந்து ஜலம் கனிந்து துளித்துளியாய்ச் சொட்டிக்கொண்டிருக்கும். கீழே நீர் சொட்டியபோது சப்தமுண்டாய்க் காணப்படும். ஆனால் அது எங்கிருந்து விழுகின்றதென்பதை எவ்வளவு பொழுது காத்திருந்து பார்த்தாலும் தெரியவராது. கீழ் விழுந்த துளி உலர்ந்ததும் இன்னொரு துளி விழுகின்றது. மேலே பார்த்தால் எல்லாவிடமும் உலர்ந்தேயிருக்கும்! இங்கு இதொரு ஆச்சர்யவிஷயம். கயையில் இத்தீர்த்தங்களன்றி முன்னே சொல்லப்பட்டுள்ள பலவித கயைகள், கயாசிரம், கயாகூபம் (கிணறு), முண்டப்ருஷ்டதேவி மந்திரம், தௌதபதம், சூர்யகுண்டம், ஜிஹ்வாலோல தீர்த்தம், ஸீதா குண்டம், ராமசிலை, ராமகுண்டம், ப்ரேதசிலை, ப்ரம்ம குண்டம், உத்தரமானஸம், ப்ரம்ம ஸரோவரம், வ்ருத்த ப்ரபிதா மஹேச்வரமந்திரம், கதாலோலன், மங்கள கௌரி மந்திரம் (குன்றின் மேலுள்ளது), ஆகாசகங்கை, வைதரணி, பீமகயை, கோப்ரசாரம், காயத்ரி தேவிமந்திரம், ஸங்கட தேவிமந்திரம், ப்ரம்மயோகினிபர்வதம், ஸரஸ்வதி-ஸாவித்ரி

குண்டம், ஸரஸ்வதிநதி, மாதங்கவாபி, (கிணறு) முதலான தரிசிக்கத்தக்க இடங்களிருக்கின்றன.

கயையிலிருந்து 6 மைல் தூரத்தில் தர்மாரண்யமென்ற ஸ்தானமிருக்கிறது. இங்கு ஒரு கோயிலில் தர்மபுத்திரனின் மூர்த்தியும் இன்னொரு கோயிலில் பீமனின் மூர்த்தியுமுண்டு. இங்கு இரண்டு கூப தீர்த்தங்களிருக்கின்றன. முதலில் தர்மபுத்ரர் பித்ரு ச்ராத்தம் செய்யக் கயைக்கு வந்தபோது இங்கு சிலகாலம் தவம் செய்தாரெனவும், அன்றுமுதல் இவ்விடத்துக்கு தர்மாரண்யமெனப் பெயர் வந்ததெனவும் சொல்வர். புத்தகயை.—கயையிலிருந்து 7 மைல் தூரத்திலும் தர்மாரண்யத்திலிருந்து 1 மைல் தூரத்திலும் போதகயை—அல்லது புத்தகயைக் கோயிலுள்ளது. இத்தலம் புத்த தேவனின் தபோபூமி. இவ்விடம் மிக ரமணீயமாய், புத்தனுக்குப் பிரியமானதானமையின் அவன் கடைசிகாலத்தின் அதிக பாகத்தை இங்கு கழித்தான். புத்ததேவன் நிர்வாணமடைந்தபின் அசோக சக்ரவர்த்தி—அதே இடத்தில் இப்போதுள்ள கோயிலைக் கட்டினான். புத்தகயை ஆலயம் ப்ராசீன ஹிந்துக் கலையின் அழகிய மாதிரியாயுள்ளது. வட இந்தியாவில் இவ்வித ஆலயம் அதொன்றுதான். இதன் உயரம் 170 அடி. ஆலயத்தில் கிழக்குமுகமாய் தியானத்திலிருக்குமாதிரி புத்தபகவானின் பெரிய மூர்த்தியுண்டு. கோயிலின் பின்பக்கத்தில் சுவரோடு சேர்ந்ததாய்ச் சுமார் 5 அடி உயரமான பௌத்த ஸிம்மாசனத்தின் கல் மேடையிருக்கிறது. அங்கு ஒரு போதி விருக்ஷமிருக்கின்றது. புத்ததேவன் இங்கேயே உட்கார்ந்து தவம் செய்து கொண்டிருந்தான். இம்மேடையிலிருந்து மூன்று கஜ தூரத்தில்

தர்மாரண்யம், புத்தகயை.

37. கயையிலுள்ள விஷ்ணுபத மந்திரம்.



38. ஸ்ரீபுத்தகயைக் கோயில், கயை.

மேற்கே ஓர் ஆலமரமிருக்கின்றது. கோயிலின் வடக்கிலும் ஒரு ஆலமரமுள்ளது. அதனை இந்துக்களின் பூஜைக்காக வளர்த்திருக்கின்றனர் கயாவாளிகள் இங்கும் யாத்திரீகர்களிடம் பிண்டப்ரதானம் செய்விப்பர். புத்ததேவன் தவம் செய்த இடம் மேற்கிலுள்ள வடவிருக்ஷமே என்பர். கோயிலுக்குத் தெற்கிலுள்ள மைதானத்தில் அனேக பௌத்த மூர்த்திகளிருக்கின்றன. அங்கு ஒரு ஸங்க்ரஹாலமுமிருக்கின்றது. கோயிலுக்கு மேற்கே கொஞ்சதூரத்தில் பௌத்தர்களுக்காகக் கட்டிய சத்திரமிருக்கின்றது. அங்கு கேவலம் பௌத்த சந்நியாசிகளிருக்கின்றனர். பலப்பல தேச பௌத்தர்கள் இங்கு தங்குவார்கள். பரதேச யாத்திரீகர்களுக்காக வேறொரு தர்மசாலையுமிங்குள்ளது. புத்தர் கோயிலின் கிழக்கே சுமார் 50 கஜ தூரத்தில் சிறு பேட்டையும், ஈசானியத்தில் மூன்றடுக்குள் புத்த மஹந்துவின் மாளிகை, தோட்டங்களுமிருக்கின்றன. மஹந்து தனவந்தன். அவனுக்கு வருடமொன்றுக்கு 80 ஆயிர ரூபாய் வரும்படியுண்டு. இவ்விடத்துக்கு நேபாளம், பர்மா, இலங்கை, ஜப்பான், சீனா முதலிய தேசங்களிலிருந்து யாத்திரீகர் வருகின்றனர். கோயிலின் அதிகாரம் இப்போது இந்துக்கள் வசமுள்ளது.

கயையில் கல்வட்டில், பஞ்சபாத்திரம், தேவதைகள், ஸ்படிகமணி முதலான மிக அழகிய கல் சாமான்கள் கிடைக்கும். யாத்திரீகர் வேண்டியதை வாங்கிக்கொண்டு, ஊரிலிருந்து ஸ்டேஷனுக்கு வரும்போது வழியிலகப்படும் டிக்கெட் ஆபீஸில் டிக்கெட்டை வாங்கிக்கொள்ளவேண்டும். ஸ்டேஷனில் சிரமமதிகம். இங்கிருந்து முன்னால் கல்கத்தா செல்லலாம்.

## 14. அரண்மனைகளின் ஊர் கல்கத்தா (காளிகாட்).

सर्वत्रसुलभा गङ्गा त्रिषुस्थानेषुदुर्लभा ।
गङ्गाद्वारे प्रयागेच गङ्गासागरसङ्गमे ॥

இப்போது ஸுமார் 30 வருடங்களுக்கு முன்பு பரத வர்ஷத்தின் ராஜதானியாயிருந்து, இப்போது வங்காளத்தின் ராஜதானி யென்றும், அரண்மனைகளூரென்றும், இந்தியாவில் சணல், நிலக்கரி வியாபாரத்துக்கு முக்யஸ்தானமென்றும், இந்துஸ்தானத்தின் பட்டணங்களில் முதலாவதெனவும் பெயர்பெற்ற கல்கத்தா நகரம் ஹுக்ளிநதியின் இடக் கரையில் விளங்குகின்றது. கல்கத்தா நகரினொருபாகம் ஹெளராவென்ற பெயர்கொண்டு பிரசித்தியாயிருக்கிறது. நகரத்தின் இவ்விரண்டு பக்கங்களுக்கும் போய்வர வண்டி முதலானவைகளுக்கனுகூலமாய் ஒரு பாலத்தைக் கட்டியிருக்கின்றனர். இங்குள்ள மஹாகாளியின் தேவாலயத்தைக் கொண்டு இந்நகரமுள்ள பிரதேசத்துக்குப் புராதன காலத்தில் "காளிக்ஷேத்ரம்" என்ற பெயர் பிரசித்தமாயிருந்தது. மேலும் இங்கு காளிகாட்டிலுள்ள மஹாகாளி கோயிலினாலேயே இந்நகருக்கு 'காளிகாட்ட' மாறுபட்ட 'கல்கத்தா' என்ற பெயரேற்பட்டது. 16ம் நூற்றாண்டின் கடைசியில் அக்பர் சக்ரவர்த்தியின் காலத்தில் ப்ராசீன கல்கத்தா கிராமம் கட்டப்பெற்றது. ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் இங்கு தம் பண்ட சாலையைத் தாபித்து, இதனைத் தம் வாஸஸ்தானமாக்கிக் கொண்டனர். இங்குள்ள பழைய விலியம் போர்ட் (கோட்டை) 1700ல் மதராஸிலிருந்த ஆங்கில அதிகாரி

அரண்மனைகள் ஊர்.

களின் மேற்பார்வையினுல் கட்டப்பட்டது. இப்போதுள்ள கோட்டையை 1752ல் க்ளைவ் கட்டவாரம்பித்து, 1773ல் முடித்தான். அதனைக்கட்ட 20 லக்ஷம் பௌன் செலவாயிற்று. 1756ல் வங்காள நவாபான சுராஜுத்தௌலா இதனை வசப்படுத்திக்கொண்டதும் 1757ல் க்ளைவ் இதனைத் திருப்பிப் பிடித்துத் தன் அதிகாரத்தை நிலைநாட்டியதும் சரித்திரப் பிரசித்தியாயிருக்கிறது. விக்டோரியா மஹாராணியின் காலத்தில் கல்கத்தா நகரம் விசேஷமாக அபிவிருத்தியடையவாரம்பித்தது. கல்கத்தாவின் நடுவில் 2 மைல் நீளம் $1\frac{1}{4}$ மைலகலமான மைதானத்தில் ஒரு உத்யானவனமிருக்கின்றது. இங்கு காற்றுவாங்க ஜனங்கள் வருவார்கள். இதற்கு வடக்கே வைஸ்ராய் வந்தபோது தங்கும்படியான 'பேல்வேதர்' என்ற அழகிய மாளிகையும் தெற்கில் கவர்னர் வசிக்கும்படியான 'கவர்னமேன்ட் ஹௌஸ்' என்ற மாளிகையுமிருக்கின்றன. உத்தியானத்தின் கிழக்கில் நடுவே 'இன்டியன் ம்யூஜியம்' (பல பொருட்சாலை), ஏஷ்யாடிக் இன்ஸ்டிட்யூட், ஸென்ட் பால் கெதீட்ரல், (கிருஸ்துவ ஆலயம்) மேலும் பல கடைகள், பெரிய ஹோட்டல்கள், உள்ள சௌரங்கி ரஸ்தா இருக்கின்றது. வாயு மூலையில் 'ஈடன் கார்டன்ஸ்', நைருதி மூலைப்பக்கம் குதிரைப் பந்தய மைதானம் (Race Course), இதிகாச சித்திரங்களடங்கிய விக்டோரியா மெமோரியல் கட்டடமும் பார்க்கத் தகுந்தவையாம். கல்கத்தா நகர் விசேஷ விசாலமாய்ப் பரவி அதன் முக்யபாகம் சுமார் 9 லக்ஷம் ஜனசங்கியையுடைத்ததாயும், வேறு பாகங்களில் ஹௌரா (1,80,000), காஸீபுரம், சித்தபூர் (சுமார் 50,000), மாணிக்தோலா (46,000), கார்டன் ரீச் (45,000), வேறு பாகங்

களின் ஜனத்தொகை—ஆகமொத்தம் 14,85,582 ஜனங்கள் கொண்டது. குளிர்காலத்தில் இது கவர்னரது வாஸஸ் தலமாயும், பல பெரிய தொழிற்சாலைகளுள்ள பெரிய வியாபாரஸ்தலமாயும் இருப்பதனுல் பல அரசாங்கக் கட்டடங்கள், ஹைகோர்ட், சட்ட நிரூபணை சபைக் கட்டடம், பல ஜமீன்தாரர்களின் அழகிய மாளிகைகளையும் உடைத்ததாயிருக்கிறது. இங்கு ராயல் மிண்ட் (Royal Mint) (ஸ்ட்ராண்ட் ரோட்) (நாணயமச்சடிக்குமிடம்), ராயல் பொடானிகல் கார்டன்ஸ் (Royal Botanical Gardens) (சிப்பூர்), ஜுவலாஜிகல் கார்டன்ஸ் (Zoological Gardens), அலிப்பூர் ராயல் அக்ரிகல்சரல் — ஹார்ட்டிகல்சரல் கார்டன்ஸ் (Alipore Royal Agricultural and Horticultural Gardens), ஸ்டூஅர்ட் ஹாக் மார்கெட் (Stewart Hogg Market), தாகூரியா லேக்ஸ் (Dhakuria Lakes), மார்பல் பாலெஸ் (Marble Palace), கிங் ஜார்ஜ் ராக்ஸ் (King George Rocks) முதலியன பார்க்கத்தக்கன.

கேவலம் தார்மிக, யாத்திரீக திருஷ்டியில் கல்கத்தாவில் கங்கா—ஸாகர ஸங்கம ஸ்னானமே முக்யமானதென முன் சுலோகத்தில் சொல்லப்பட்டுள்ளது.

**யாத்திரீகர் கல்கத்தா.**

கயையிலிருந்து புறப்பட்ட யாத்திரீகர் கல்கத்தாவின் ஹௌரா ஸ்டேஷனி லிறங்குவர். இங்கு ஈஸ்ட் இன்டியன், பெங்கால் நாக்பூர் ரயில்கள் சந்திக்கின்றன. அதனுல் ஸ்டேஷன் பெரிதாய் 10 ப்ளாட்பாரங்களை யுடைத்ததாயுமிருக்கிறது. ஒவ்வொரு ப்ளாட்பாரத்திலும் எவ்வெவ்விடங்களுக்குப் போகும்—வரும் வண்டிகளெங்கெங்குள்ளன வென்பதை நன்கு தெரியும்வண்ணம் அங்கங்கு பலகைகளின் மேலெழுதி

யுள்ளார்கள். ஹௌரா கடைசி ஸ்டேஷனானபடியால் டிக்கெட்டுகளையெல்லாம் பின் ஸ்டேஷனிலேயே வசூலித்துக் கொள்வார்கள். ஹௌராவில் கூலி, வண்டி, மோடார் முதலிய சௌகரியங்களுண்டு. யாத்திரீகர் இங்கிருந்து ஹுக்ளி பாலத்துக்குச் சமீபமாயுள்ள தர்மசாலைக்குப் போவார்கள். இங்கிருந்து சமுத்திரம் சமீபமாயிருப்பதனால் கங்கை (ஹுக்ளி) ஜலம் உப்புக் கரிக்கும். ஹுக்ளி பாலத்தின்மேல், வண்டி, மோட்டார், பிரயாணிகள் செல்ல வெவ்வேறு விசாலமான மார்க்கங்களிருக்கின்றன. மேலும் பாலத்தினடியில் தோனிகள், படகுகள் எங்கெந்தக் கண் வழியாகப் போகவேண்டுமென்பதையும் முறைப்படுத்தி யுள்ளார்கள். ஸ்னானத் துறையினேற்பாடும் சௌகரியமா யிருக்கிறது. மார்பளவுக்குமேல் ஆழமாயிருக்கும் பாகத்தில் கம்பிவலை போட்டிருக்கின்றனர். இதனால் பிரவாஹம் வேகமாயிருக்கும்போது ஸ்னானம் செய்யப் புகுவோர் முன்னாலடித்துக்கொண்டு போகப்படுவதில்லை. கம்பிவலை யுள்ளவரை நதியில் படிக்கட்டுகளைக் கட்டியிருக்கின்றனர். அதனால் ஒவ்வொருவரும் தமக்கிஷ்டமான ஆழத்திற்குப் போகலாம். இங்கு கங்கா-சமுத்திர சங்கம ஸ்னான மகிமை யைப் புராணங்களில் விசேஷமாய்ச் சொல்லப்பட்டுள்ள படியால், ஸ்னான கட்டத்துக்குச் சமீபமாய்த் தர்ம சத் திரத்தைக் கட்டியுள்ளார்கள். அங்கு கங்கா பூஜைக்கு வேண்டிய சந்தனம், துலஸி, புஷ்பங்கள் விலைக்குக் கிடைக்கும். ச்ராத்தத் திரவியங்களும் அங்கு கிடைக்கும். வங்காளப் பிராமணர் சங்கற்பம், பூஜை செய்விக்கத் தயா ராகவிருப்பர். இங்கு ஸ்னானம், பூஜைகளை முடித்துக் கொண்டபின் யாத்திரீகர் மஹாகாளி தரிசனத்துக்குச்

செல்வர். இவ்விடத்திலிருந்து மஹா காளிகோயில் சுமார் மூன்று மைல் தூரத்திலிருக்கிறது. டிராம் வண்டியிலும் அவ்விடத்துக்குச் செல்லலாம். ஆனால் வண்டியை அங் கங்கு மாற்றவேண்டும். டிராமில் போம்போது நகரத்தி னுடையவும், தெருக்களினுடையவும், ஏறி இறங்கும் பல வித ஜனங்கள், பெரிய பெரிய கடைகள், அழகிய மாளிகை வரிசைகளினுடையவும் அழகைப் பார்க்கலாம். ஆரோக்ய திருஷ்டிகொண்டு பார்த்தால் இந்நகர், பம்பாய்நகர முனிசி பாலிடியார் ஏற்பாட்டைப்போன்று அவ்வளவு திருப்தி கரமானதாயில்லை யென்னலாம். நகரம் பம்பாயைக் காட்டிலும் விசாலமானது. இங்கு தெரிந்த மனிதனொரு வனைக் கூடஅழைத்துச் சென்றால் நகரம் பூராவையும் நன்றாய்ப் பார்த்துத் திரும்பலாம். இங்குள்ள முக்கியக் கோயில்களில் கிதர்பஜாயின் பூமிகைலாஸ சிவமந்திரம், பதரீதாஸ ஜைனமந்திரம், மஹா காளிமந்திரம் இவை முக்கியமானவை. இங்கு டாங்காக்காரரிடம் $1\frac{1}{2}$-2 ரூபாய் கொடுத்தால் அவர்கள் நகரத்தில் பார்க்கவேண்டிய இடங் களையெல்லாம் சுற்றிக் காட்டுவார்கள். மஹா காளிகோயில் காளிகாட் டிராம் நிற்குமிடத்துக்குச் சுமார் அரை மைல் தூரத்திலிருக்கின்றது. இக்கோயிலுக்கருகில் பல பழங்கள், பூ, மிட்டாய், பால், தயிர், வேறு சாமான்கள் கடைகளிருக் கின்றன. காலை தரிசன வேளையானபடியால் அப்போது தரிசிப்போர் கூட்டம்திகமாயிருக்கும். ஆனால் பண்டாக்க ளிடம் 1-2 அணுக் கொடுத்தால் வேறு வழியாகச் சென்று தேவியைச் சமீபத்தில் தரிசித்துவரலாம். மூர்த்தி க்ருஷ்ண சிலை (கருங்கல்) யினதாய் 3-4 அடி உயரமானது. தேவிக்கு வங்காள வழக்கப்படி அலங்காரம் செய்வர். நாக்கு முன்

நீண்டு சிவந்ததாய்த் தொங்கிக்கொண்டிருக்கும். அது சிவப்புக் காகிதத்தில் செய்யப்பட்டிருப்பதாகத் தோன்றும். நிஜமான நாக்கு அதற்குள்ளிருக்கலாம். மூர்த்தியின் சுரூபம் உக்ரமானது. கழுத்தில் முண்டமாலை, மஹிஷாஸுர மர்த்தனம், கையில் பலவகை ஆயுதங்கள், மண்டையோடுகளுமிருக்கின்றன. மூர்த்திக்குச் செந்தூரம் பூசப்பட்டில்லை. கைகள்மட்டில் வஸ்திரத்துக்கு வெளியே இருப்பதனால் செந்தூரம் பூசி யிருக்கின்றனர் கோயிலின் வெளியில் பிராகாரத்திலேயே சந்தனம், பூ, குங்கும முதலானவை விற்கும் கடைகளுள்ளன. மஹா காளியின் பெயரில் யாரேனும் ஹோமம் செய்விப்பதாயின் ஒரு உலையில் தணலை வைத்துக்கொண்டு பக்கத்திலேயே பொரி நெய் முதலிய ஹோமத்திரவியங்களை வைத்துக்கொண்டு அவ்விடத்திலேயே ஜனங்கள் உட்கார்ந்திருப்பர். வேண்டுவோர் ஹோமம் செய்விக்கலாம். தவிர மஹாகாளி ஆதிசக்தியின் உக்ரம், ரௌத்ரம், தமோகுணமாகிய முக்குண ரூபமாகவிருப்பதனால் கோழி ஆடு முதலியவற்றைக் கொடுப்போரை எதிர்பார்த்த வண்ணம் மதுபானம் செய்து தயாராய் உட்கார்ந்திருப்போருமங்குண்டு. பிராமணர்களின் பூஜை முதலியனவும் நடக்கும். மஹா லக்ஷ்மி, மஹா ஸரஸ்வதிகள் முறையே ஆதிசக்தியின் ரஜோகுண மற்றும் ஸத்வகுண ரூபமாக விருப்பதனால் அங்கு தமோ குணத்ததான பலி முதலியன இல்லை. இம்மஹாகாளிஸ்தானம் மிகப்புராதனமானது. தேவி புராணத்தில் இதன் மகத்துவம் விசேஷமாய்ச் சொல்லப்பட்டுள்ளது. இங்குள்ள ஆலயம் பெரியதாயில்லை. ஆயினும் 300 வருடங்களுக்குப் பிந்தியது. இதுள்ள இடம் ஒரு பழய கிராமத்தைப்

போன்றுள்ளது. இங்கு சமீபத்தில் கங்கை பிரவஹிப்பதனல் ஸ்னனத்துறைகள் கட்டப்பெற்றிருக்கின்றன. மஹாயாத்திரையின் முக்யஸ்தான மாகையால் இங்கு எப்போதும் கூட்டமதிகமுண்டு. தவிற இங்கு வேறு தீர்த்தங்களும், ஆலயங்களும், தர்மசாலைகளு மிருக்கின்றன. இங்குள்ள பிராமணர் மாமிச போஜனம் செய்பவர்களாகையினல் மரக்கறி புசிப்போர் சத்திரத்தில் தனியே சமையல் செய்து கொள்ளலாம். இவ்விடத்தில் நல்ல தயிர் பால் அகப்படும். சத்திரத்தில் தங்கலாமே யொழிய, சமையல் செய்து கொள்ளவோ சாப்பிடவோ அவகாசமில்லை. அப்படிச் செய்ய 2 அணு வாடகை கொடுக்க வேண்டும். இவ் யாத்திரையை முடித்துக் கொண்டு இங்கு சமீபமாயுள்ள, ஸ்ரீராமக்ருஷ்ணரின் தபோ பூமியான தக்ஷிணேச்வரம், பேலூரின் ஸ்வாமி விவேகானந்தர் மடங்கள், கவிச்ரேஷ்டர் ரவீந்த்ரநாத் தாகூரின் (விச்வபாரதி) சாந்தி நிகேதநத்தையும் பார்த்து வரவேண்டும். சாந்தி நிகேதனத்துக்குக் கல்கத்தாவி லிருந்து போன்பூர் ஷ்டேஷனில் இறங்கவேண்டும். இங்குள்ள விச்வபாரதி வித்யாலயம் கவிச்ரேஷ்டர் ரவீந்த்ரரால் ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு வேற்று நாட்டினருக்கும், இந்தியருக்கும் தகுந்த முறையில் அதிதி, வசதி இடங்களைக் கட்டியுள்ளனர். இச்சர்வ கலாசாலை உலகின் பல பெரிய கவிகள், வித்வான்களால் நாளுக்குநாள் விருத்தி யடைந்து கொண்டிருக்கிறது. வங்காளத்திலுண்டா யிருக்கிற நவீன கலை, ஸம்ஸ்க்ருதிகளின் பயனுயுண்டானதிது. இங்கு பெரியபுத்தகாலயமும், சத்திர முதலியவைகளைக் கொண்டுள்ள ஓர் கலாபவனமு முள்ளன. விச்வபாரதி என்ற மூன்று மாதத்துக்கொரு முறை வெளிவரும்



41. இ. ஐ. ரயில்வே கம்பெனியின் ஹௌரா ஸ்டேஷன், (கல்கத்தா).

42. புவனேச்வ[illegible]தேவாலயங்களின் காட்சி.

ஆங்கிலப்பத்திரிகை இவ் விச்வவித்யா நிலையத்தாரால் வெளி யிடப்பட்டு வருகிறது. இங்கு போக விரும்பு வோர் முதலே மானேஜர், 'கெஸ்ட்ஹௌஸ்' போஸ்ட் அண்ட் டெலிக்ராப் ஆபீஸ், சாந்திநிகேதனுக்கு எழுதவேண்டும்.—கல்கத்தாவைப் பார்த்துக் கொண்டு யாத்திரீகர் இங்கிருந்து ஜகன்னாதம் (பூரி) போக லாம். இந்நகரில் டிக்கெட் விற்குமிடங்கள் அனேகமா யிருப்பதனால் யாத்திரீகர் தமக்கு வேண்டிய டிக்கெட்டை இவைகளிலொன்றில் வாங்கிக்கொண்டு ஸ்டேஷன் செல்வது நலம். ஸ்டேஷனில் டிக்கெட் வாங்க மிகப் பிரயாசைப் படவேண்டும். அங்கு ஜன நெருக்கமதிகமாயிருப்பதோடு, முடிச்சவிழ்ப்போரதிகம். கல்கத்தாவிலிருந்து தினமும் ஜகன்னாதத்துக்கு நேரப்போகும் பெங்கால் நாக்பூர் ரயில் வேயின் ஒரு மெயிலும், ஒரு பாசஞ்சரும் உண்டு. யாத்தி ரீகர் அவ்வண்டிகளிலேறினால் மாற்ற வேண்டியதில்லை. மதராஸ் மெயிலிலேறினால் குர்தா ரோட் ஜங்ஷனில் வண்டி மாறவேண்டும்.

---

## 15. புவனேச்வரம், ஜகன்னாதபுரி (பூரி).

**புவனேச்வர மந்திரங்கள்.**

பாரதவர்ஷத்தின் கீழ் சமுத்திரக் கரையில் ஜகன்னாத புரி, புவனேச்வரம், ஜஜபுரம் (ஜயபுரம்), கோணார்க்கம் என்ற க்ஷேத்திரங்கள் ஸ்ரீவிஷ்ணுவின் சதுராயுதங்களில் முறையே சங்கு, சக்ரம், கதை, பத்ம, க்ஷேத்ரங்களெனப் பிரசித்தியாயுள்ளன. இவைகளில் யாத்திரீகர் கல்கத்தாவி லிருந்து பூரிக்கு வரும் வழியில் அகப்படும் ஜஜபுரத்தி

விறங்கி விஷ்ணுவின் கதைக்ஷேத்ரமெனப் பெயர்பெற்ற ஜயபுரத்தைத் தரிசிக்கலாம். ஒரிஸ்ஸாவில் கேஸரிராஜ வம்சத்தினர் காலத்தில் 11ம் நூற்ருண்டுவரை இது பிர சித்திபெற்ற நகரங்களிலொன்ருயிருந்தது. இப்போது இது ஒரு தாலுக்காவாயிருக்கிறது. இங்கு சைவ மதத்தி னரின் குருமடமொன்றிருக்கிறது; வைதரணியென்ற நதி யிருக்கிறது. இவ்வூரில் பவானிதேவியினுலயமும் வேறு சைவக் கோயில்களும், அழகிய மூர்த்திகளும் புராதன ஓட்ர சிற்பத்தைக் காட்டுவன. இங்கு வாருணியென்ற ஜலதேவதையை யுத்தேசித்து வருடா வருடம் பெரிய ஜாத்ரை சேரும். இங்கு தபாலாபீஸ், சத்திரம் முதலாய சௌகரியங்களுண்டு. இங்கிருந்து பூரிக்குச் செல்லுமுன் யாத்திரீகர் புவனேச்வரமென்ற சக்ரக்ஷேத்திரத்தி லிறங்க வேண்டும். சிலர் சங்கக்ஷேத்திரமான புரியைத் தரிசித்துக் கொண்டு இங்கு வருவர். ஆனல் பிரயாண சௌகரியத்தைப் பார்த்தால் கல்கத்தாவிலிருந்து தக்ஷிணம் நோக்கிப் புறப் பட்ட தக்ஷிண தேசத்தார் இந்த க்ஷேத்திரத்தில் முதலில் இறங்கவேண்டும். 5ம் நூற்ருண்டின்கடைசியில் பௌத்தர் காசியில் நிலேத்துத் தம் மதப்பிரசாரத்துக்கு அதனே மத்திய ஸ்தானமாகக் கொண்டபோது உடியா (ஓரிஸா) தேசக் கேஸரி வம்சத்து முதலாமரசன் தர்மத்தை மீண்டும் நிலேக்கச்செய்ய வேண்டுமெனக் கங்கணம் கட்டிக் கொண் டான். அதன் பயனுயும் அக்காலத்தில் தேசத்திலெல்லாட் பரவியிருந்த பக்தி ப்ரவாஹத்தி னலேகளின் ஞாபகார்த்த மோவென்பனவாய் புவனேச்வரத்தில் பார்ப்போர் அதி சயிக்கும் வண்ணம் மனதைக் கவரும் அழகியவை யான தேவாலயங்கள் கூட்டம் கூட்டமாய்க் கட்டப் பட்டன.



43. ஸ்ரீபுவனேச்வரர் (லிங்கராஜர்) கோயில், புவனேச்வரம்.

44. ஸ்ரீகேதாரேச்வரர் ஆலயம், புவனேச்வரம்.

அன்று ராஜதானியாய் விபவம், ஐச்வர்யம் நிறைந்திருந்த புவனேச்வரம் இன்று சுமார் 4,000 ஜனங்கள் வசிக்கும் ஒரு குக்கிராமமாயிருக்கிறது. இங்கு தர்ம சத்திரமும், போஸ்டாபீஸு மிருக்கின்றன. ப்ராசீன காலத்தில் இது விஷ்ணுவின் சதுராயுத க்ஷேத்திரங்களில் சக்ர க்ஷேத்திர மென்றும் முக்தி தரக் கூடியதெனவும், பிரசித்தி யாயிருந்தது. அப்போது இவ்வோரிடத்திலேயே 7,000 சிவாலயங்க ளிருந்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் காலதர்மத்தினால் இன்று இங்கு சுமார் 500-600 கோயில் களே எஞ்சியுள்ளன். இவைகளில் ஸ்ரீபுவனேச்வர (லிங்க ராஜ) பார்வதி தேவாலயம், புரசுராமேச்வரர், முக்தேச் வரர் பாஸ்கரேச்வரர் அனந்தவாஸுதேவர் முதலி யவர்களின் . கோயில்கள் முக்யமானவை யென்னப் பட்டுள்ளன. இக்கோயில்களில் ஒரே விதமான கல்-சிற்பம் தென்படும் இவைகளில் புவனேச்வர (லிங்க ராஜ) ராலயம் விசாலமாயும் 180 அடி உயரமாய் த்ரிசூலமான கோபுர முள்ளதாயு மிருக்கிறது. இதனைக் கட்டுவதில் காரை உபயோகிக்கப் படவில்லை. இதன் சிற்பம் கண்ணுக்கு விருந்தூட்டுவதாயுள்ளது. இங்குள்ள கோயில்களின் நிர்மாணம், கலை, இதிகாச திருஷ்டிகொண்டு பார்த்தால் ஜகன்னாதத்தின் கோயிலைக் காட்டிலும் புராதனமானவை. புவனேச்வரராலயத்தில் 9 அடி உயரம் 8 அடி குறுக்களவுள்ளதாய் ப்ரம்மா, விஷ்ணு, மஹேச்வரரின் சாயைகளுள்ளதான பெரிய லிங்க மிருக்கின்றது. உடியா தேச வழக்கப்படி இக்கோயிலினும் வேதி, ஜகமோஹன, ந்ருத்யமந்திர, போகமந்திரமென நான்கு பாகங்களிருக்கின்றன. கோயிலின் நான்கு பாகங்

களிலும் துவாரங்களுண்டு. இக்கோயிலுக்கு 520 அடி நீளமும் 465 அடி அகலமுமான பிராகாரமிருக்கின்றது. இக்கோயிலின் சிம்மத்வாரத்தில் இரண்டு சிம்மங்களுண்டு. பிராகாரத்திலேயே பார்வதிதேவி, சூர்யனுலயங்களிருக்கின்றன. இதனைக் கேசரிவம்ச யயாதிராஜன் 9ம் நூற்ருண்டில் கட்டினுனெனத் தெரிகிறது. இவ்விதம் இது சுமார் 1,100 வருடங்களுக்குப் பிந்தியதாம். இங்குள்ள கோயில்களிலெல்லாம் பரசுராமேச்வரராலயம் 5ம் நூற்ருண்டில் கட்டப்பெற்றதாய் மிகப் புராதனமானதென்னப்பட்டுள்ளது. இதன் நிர்மாணம், மாதிரியெல்லாம் தக்ஷிணத்தின் திராவிடர்களுடையதை யொத்திருக்கின்றது. புவனேச்வரராலயத்துக்குச் சுமார் அரை மைல் தூரத்திலுள்ள ஸித்தாரண்யமென்ற வனத்திலுள்ள ஸ்ரீமுக்தேச்வரராலயம் 6ம் நூற்ருண்டிலாயது. இவ்வாலயத்தின் சிற்பம் சித்திரங்கள் மேலானவையாயிருப்பதோடு இதனக்கம் பக்கத்திலுள்ள இயற்கைத் தோற்றம் மிக ரமணீயமாயு மழகாயுமிருக்கிறது. இதனைச் சலவைக் கல்லினுலியற்றியிருப்பின் ஆக்ராவின் தாஜ்மஹலுக்குச் சிற்பநுட்பத்திலாகட்டும், அழகிலாகட்டும் கொஞ்சமும் குறைவானதாயிராதெனச் சிற்ப சாஸ்திரிகளபிப்பிராயப்படுகின்றனர். இதன் சிற்பம் உடியா சிற்பத்தின் மிக உன்னதியின் மாதிரியாயுள்ளது. புவனேச்வரராலயத்துக்கு வடகிழக்கில் 6ம் நூற்ருண்டில் கட்டப்பட்டதாய், இப்போது ஈன தெசையிலிருக்கும் பாஸ்கரேச்வர சிவாலயமிருக்கின்றது. பாஸ்கரேச்வரராலயத்துக்கு மேற்கில் பூர்வத்தில் அழகுடன் விளங்கின ராஜாராணி கோயிலுளது. அங்கிருந்து 300 கஜ தூரத்திலுள்ள மாந்தோப்பில் பல கோயில்களுள்ளன. முக்தேச்வர

ராலயத்துக்கு மேற்கில் கௌரீகுண்டமென்ற பல வர்ண மீன்களுள்ள அழகிய ஏரியிருக்கிறது. அதற்குச் சமீபத்தில் கேதாரேச்வர ராலயமிருக்கின்றது. அதற்குச் சமீபத்தில் 8 அடி உயரமான மாருதி விக்ரஹமுள்ள கோயிலுளது. அங்கு ஒரு பக்கத்தில் சிம்மாசனத்தின்மேல் நின்றிருக்கும் துர்க்கா தேவியின் பிரதிமையுண்டு. இக்கோயில் மிகப் பழைமையானது. மேலும் இங்குள்ள ஸித்தேச்வரர், அலம்புகேச்வரர் கோயில்களும் பார்க்கவேண்டியவையாம்.

புவனேச்வரத்தில் சுமார் 5-6 ஏரிகளுண்டு. அவைகளில் 'பிந்து ஸரோவரம்' முக்யமானது. இது 1,300 அடி நீளமாயும் 700 அடி அகலமாயும்

ஏரி, கிரி (மலை).

இருப்பதன்றி நடுவில் ஒரு சிறு கோயிலைக்கொண்ட தீவுடன் கூடியிருக்கிறது. உற்சவ காலங்களில் உற்சவ மூர்த்திகளை இங்கு எழுந்தருளச் செய்வார்கள். ஏரியின் சமீபத்தில் வாஸுதேவர் (ஸ்ரீக்ருஷ்ணன்) மற்றும் அனந்தன் (பலதேவர்) கோயிலிருக்கின்றது. இங்கிருந்து 2 பர்லாங்கு தூரத்தில் கோடிதீர்த்தேச்வர ராலயமிருக்கிறது. அதற்குச் சமீபமாய் சிற்ப நுட்பம் வாய்ந்த ப்ரம்மேச்வர மந்திரமுளது. அதற்குப் பக்கத்தில் ப்ரம்மகுண்டமென்ற குளமுண்டு. புவனேச்வரத்திலிருந்து நேர 5 மைல் தூரத்தில் மேற்கே உதயகிரி கண்டகிரியென்ற இரண்டு குன்றுகளிருக்கின்றன. அங்கு போகப் புவனேச்வரத்திலிருந்து நேர சாலையிருக்கிறது. இக்குன்றுகளில் கி.மு. 50 முதல் கி.பி. 500 வரை குடைந்து செய்யப்பட்ட குகைக் கோயில்களும், விக்ரஹங்களும், கல் வெட்டுக்களுமுள்ளன. அவைகளில் உதயகிரி 110 அடி உயரமும், கண்டகிரி 133 அடி உயரமுமானது.

குகைக் கோயில்களில் உதயகிரியின் ராணீநூர் குஹை, ஆனைக்குஹை, ஸர்ப்ப குஹை, வ்யாக்ர குஹைகளும் கண்டகிரியின் அனந்த குஹை, கலாசந்த்ர-பாலசந்த்ர குஹைகளும் முக்யமானவையென்னப்பட்டுள்ளன. கண்ட கிரியின் உச்சியில் 18ம் நூற்றுண்டதாய பாரஸநாத மந்திர முளது. அதன் பக்கத்தில் 150 அடி குறுக்களவுள்ள தேவஸபா என்ற ஸ்தானமிருக்கிறது. அதற்குச் சமீபமாய் ஆகாயகங்கையென்ற குளமுண்டு. குளத்துக்குக் கீழ் ஓர் குஹையிருக்கிறது.

ப்ராசீன ஜகன்னதம்.

பரதவர்ஷத்தின் பிரசித்திபெற்ற நான்கு தாமங்களி லொன்றெனவும், முக்தி தரும் ஏழுநகரங்களுலொன் றெனவும் பிரசித்திபெற்றதான ஜகன் னதபுரி சமுத்திரக் கரையிலுள்ளது. மிகப் புராதன காலமுதல் ஒற்றுமை, சமத்தன்மை, அன்பு, பேதமில்லா மனமிவற்றின் கலப்பு இங்ககப்படுவதைப் போன்று வேறு எந்த தீர்த்தஸ்தானத் திலும் கிடைக்கப் பெறுதெனவும் இங்கு கேவலம் பக்தி அன்பு ஞானப்பிரவாஹம் பெருகுகிறதெனவும் பக்தர்களின் பாவனையாம். இதற்குப் பழைய காலத்தில் புருஷோத்தம க்ஷேத்ரமென்றும், ஸ்ரீக்ஷேத்ரமென்றும் பெயரிருந்தது. ஸ்காந்தபுராணம் உத்தரகண்டம் முதலத்தியாயத்தில் இவ் விதம் கூறியிருக்கிறது.—“கீழ் சமுத்திரக் கரையில் புனித மாய புருஷோத்தம தீர்த்தம் ஆச்சரியமானதாம். இதன் நடுவில் நீலாசலம் அல்லது நீலகிரியென்ற பர்வதமுளது. படைப்பி னரம்பத்தில் இப்பர்வதத்தின்மேல் விஷ்ணு பிரம்மனுக்கு பிரத்யக்ஷ மானன். அப்போது பிரமன் அவனைத்துதிக்கவும், விஷ்ணு பிரஸன்னனய் இவ்விதம்



45. பிந்துஸரோவரத் (ஏரி) தின் நடுவிலுள்ள ஆலயங்கள், புவனேச்வரம்.



46. ஸ்ரீ ஸத்யாவதி கோயில், சாக்ஷிகோபால்.

சொன்னான்.—“ஏ சதுரானன! சமுத்திரத்துக்கு வடக்கிலும் மஹாநதிக்குத்தெற்கிலுமுள்ள பிரதேசம் மிகப்புனிதமானது. அங்கு வசிக்கும் மனிதனுக்குச் சகல தீர்த்தபலன்களும் கிடைக்கும். நான் அங்கு எப்போதும் வசிப்பேன். அந்தஸ்தானம் பிரளய காலத்திலும் நசிக்காது. நீலகிரியின் மேல் ஒரு வட (ஆல) விருக்ஷமிருக்கிறது. அதன் மூலத்திற்கு மேற்கில் ரோஹிணிகுண்டமென்ற ஸரோவரமொன்றிருக்கிறது. அதன் கரையில் நான் நிலையாயிருப்பேன். அக்குண்டத்தில் ஸ்னானம் செய்து என் தரிசனத்தைச் செய்யும் மனிதனுக்கு முக்தியகப்படும். நீ அங்கு சென்று என்னைத் தியானித்திரு. என் அனுக்கிரஹத்தினால் அங்கு உனக்கு எல்லாம் தானே கிடைக்கும்.” இவ்விதம் ஸ்காந்த புராணப்படி இந்த க்ஷேத்திரம் மிகப்புராதனமானதாம். மேலும் இதன் மகிமை பத்மபுராணம் அக்னிபுராணம் ப்ரம்மபுராணங்களில் விசேஷமாய் வருணிக்கப்பட்டுள்ளது. இங்கு வந்து ஸ்னானம் செய்து நீலகிரியின் மேலுள்ள பகவானைத்தரிசித்துப் பிரசாதம் பெற்று, உட்கொண்டோர் பகவான் ஸ்ரீவிஷ்ணுவைப்போல் சதுர்புஜராவரென மிகஸ்வாரஸ்யமான கதை பத்மபுராணம் 17ம் அத்தியாயத்தில் சொல்லப்பட்டுள்ளது. இப்போதைய ஜகன்னாதபுரியின் விளக்கமும் அழகும் வேறெந்தத் தீர்த்தத்துக்கும் குறைந்ததன்று. நகரிலிருந்து சுமார் ஒரு மைலில் சமுத்திரமிருக்கின்றது. ஜகன்னாதபுரி க்ஷேத்திரமட்டுமன்றி ஆரோக்யஸ்தளமென்றும் பிரசித்தியாயிருப்பதனால் இங்கு சமுத்திரக்கரையில் சுமார் 3-4 மைல் தூரம் வரை பலர் அழகிய விடுதிகளைக் கட்டியுள்ளனர். யாத்திரீகர் பூரியிலிறங்க அநேக அழகிய தர்ம சாலைகளுண்டு.

பண்டாக்களோடும் பலர் தங்குவர். யாத்திரீகருக்கு வேண்டி யன எல்லாம் இங்கு கிடைக்கும். இங்கு ஸ்னானம், பகவத் தரிசனம், பிரசாதஸ்வீகாரம் முக்கியவிதியாம். இங்கு பிரஸாதஸ்வீகாரம் செய்யாதவனுக்கு முக்தியில்லை யெனக் கூறப்பட்டுள்ளது.

நகர நடுவே சுமார் 20 அடி உயரமான ஒரு குன் றிருக்கின்றது. அதனை ஜனங்கள் நீலகிரி யெனவழைப்பர்.

**பூரியின் ஆலயங்கள்**

இம்மேட்டின்மேல் ஜகன்னாதரின் விசால மான ஆலயமிருக்கின்றது. பூரியின் அதிகாம்ச பாகத்தில் ஆலயம் விஸ்தரித் துள்ளது. பூரி சுமார் 3 மைல் நிகளமும் $1\frac{1}{2}$ மைல் அக லமுமானது. இங்கு மதுரை, காசி, பிரயாகைகளைப் போன்ற பல தேவாலயங்களில்லை. இது அவ்விடங்களைப் போன்ற வியாபார ஸ்தலமு மன்று. ஜகன்னாதனே பூரியின் எல்லாமுமாயிருக்கிறான். அக்கோயிலொன்றைக் கொண்டே இது பூரி யெனப் பிரசித்தியாயுள்ளது. ஜகன் னாதர் கோவிலிலிருந்து ஜனகபுரம் வரை பூரியில் விசால மான சாலை யிருக்கிறது. இதன் இரு பக்கங்களிலும், பண்டாக்களி னில்லங்களும், மஹந்து, பல மடாதிசரின் மடங்களுமிருக்கின்றன. இங்குள்ள வீடுகளெல்லாம் சாதா ரணமானவை. சமுத்திரக் கரையில் வாசம் செய்ய அனேக அழகிய மாளிகைகளுண்டாய் நகரம் வளர்கிறது. பூரி பள்ளத் தாக்கிலுள்ளது. ஊருக்கும் சமுத்திரத்துக்குமிடையே மணல் மேடிருக்கிறது. அதனால் ஊரின் அழுக்குஜலம் பெருகி சமுத்திரம் சேரமுடியாது. பூமியில் ஈரமிருப் பதனால் ஆனைக்காலுண்டாக அவகாசமுண்டு. எல்லாப் பிராந்திய ஜனங்களுமிங்கிருக்கின்றனர். உடியா ஜனங்க

ளதிகம். அவர்களின் உடை, ஆபரணங்கள் வங்காளிகளதையொத்தவை. ஜனங்கள் முக்ய தர்மம் வைஷ்ணவம். சைவரும் சக்தி மதத்தினரும் இங்குள்ளனர். ஜகன்னாதராலயத்தின் விஸ்தீர்ணம் 665 அடி நீளம், 640 அடி அகலம். பிராகாரச் சுவர் 20 அடி முதல் 24 அடி உயரமானது. பிராகாரத்தில் நான்கு திக்குகளிலும் நான்கு மஹாத்வாரங்களுள்ளன. அவைகளில் கிழக்கிலுள்ளது அழகாயும் விசாலமாயுமிருக்கின்றது. இதே முக்யத்வாரம். மேற்படிகள் கருங்கல்லினாலாயவையாய்ச் சித்திர வேலைப்பாடமைந்துள்ளன. கதவு ஸால விருக்ஷத்தின் பலகையினால் உறுதியாயும் அழகாயும் செய்துள்ளார்கள். கதவினிரு பக்கங்களிலும் சிம்ம விக்ரஹங்களுள்ளன. அதனாலிதற்கு சிம்மத்வாரமென்ற பெயர். தெற்கிலுள்ள மகாத்வாரம் 15 அடி உயரமாயது. அதன்மேல் அனேக தேவர்களின் விக்ரஹங்களைச் செதுக்கியுள்ளனர். இங்கு தேவாலயப் பிராகாரச் சுவர்களின்மேலும், கோபுரங்களின் மேலும் உள்ளும் புறமும் அனேகம் தேவர்களின் அழகிய சித்திரங்களுள்ளன. அவைகளிற் சில மிகுந்த ச்ருங்காரத்தையும் சில பயத்தையும் காட்டுவனவாம். சில பக்தர்கள் அதிலேயே கண்வைத்து மெச்சுவர். இதெல்லாம் தெய்வ லீலை. யாத்திரீகர் அப்பக்கம் கவனிக்காமல் கடவுளின் வேறு குணங்களை அதே ஆசை, பக்திகளோடு பார்த்து, அவற்றை அனுசரித்திருக்க வேண்டுமென்றே இவற்றைச் செய்துள்ளனரென்பதை மறத்தலாகாது. பிராகாரத்தைச் சுற்றி 45 அடி அகலமான சாலையிருக்கிறது. ஸிம்மத்வாரத் தெருவில் கருங்கல்லாலான 35 அடி உயரமாய் 16 மூலைகளுள்ள ஒரே அழகிய "அருணஸ்தம்ப" மிருக்கிறது.

கம்பத்தின்மேல் சூர்யன் அருண மூர்த்திகளிருக்கின்றனர். பூரிக்கு 20 மைல் தூரத்திலுள்ள கோணார்க்கத்தின் சூர்ய மந்திரத்திலிருந்து 18ம் நூற்றாண்டில் மராட்டியர் அதனைக் கொண்டுவந்திட்டனர் எனச் சொல்வர். சிம்மத்வாரத்தின் எதிரிலுள்ள மைதானத்தில் ஜகன்னாதனின் பிரஸாதம் விற்கும் கடைகளிருக்கின்றன. ஸிம்மத்வாரத்தினுட் சென்றால் உள்ளே இன்னொரு பிராகாரமகப்படும். அது 420 அடி நீளமும் 315 அடி அகலமுமானது. அதற்கும் நான்கு திக்குகளிலும் வெளிப் பிராகாரத்து த்வாரங்களுக்குச் சரியாக நான்கு த்வாரங்களிருக்கின்றன. பிராகார மதிட் சுவர் வெளிமதிலளவே உயரமானது. இதனை 15ம் நூற்றாண்டில் புருஷோத்தம தேவராஜனென்பான் கட்டினான் இவ்வுட் பிராகாரத்தில் ஜகன்னாதராலயமன்றி வேறு சிறு சிறு கோயில்களிருக்கின்றன. அவைகளில் பாதாளேச்வராலயம் பிரசித்தியானது. ஜகன்னாதராலயம் முக்யமாய் விமானம், ஜகமோகனம், நட அல்லது ந்ருத்ய மந்திரம். போக மண்டபங்களென நான்கு பாகங்களாயுள்ளது, விமானஸ்தானத்தில் தேவர் மூர்த்திகள் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. விமானத்தெதிரில் (கிழக்கே) ஜகமோஹன ஸ்தானமுள்ளது அதற்கெதிராக நடமந்திரமும் அதன் முன்னால் போக மந்திரமு மிருக்கின்றன. விமானம்.— இது ஸ்ரீஜகன்னாதனின் முக்யஸ்தானமாய், கோயிலின் முக்ய மூர்த்திகளெல்லாம் இங்கேயே இருக்கின்றன. இதன் உயரம் 214 அடி, நீளம் அகலம் 80 அடிகள் இக் கோயிலின் மேல் நீல சக்கரமும் அதன்மேல் த்வஜமுமிருக்கின்றன. இச் சக்கரத்தின் குறுக்களவு 18 அடியெனச்சொல்வர். ஆனால் தூரத்திலிருந்து பார்ப்போருக்கு

அது $1\frac{1}{2}$ அடிகளளவே இருப்பதாய்த்தோன்றும். இச்சக்கரமும் த்வஜமும் 4-5 மைல் தூரத்திலுள்ள துலஸீ குண்டஸ்டேஷனிலிருந்தே காணப்படும். கோயிலின்மேல் பலவித தேவதைகளின் விக்ரஹங்களைச் செதுக்கியுள்ளனர். விமானத்தின் மூன்று பாகங்களில் ஸ்ரீநரசிம்ம, வாமன, வராஹ மூர்த்திகளுண்டு. கோயிலின் ப்ரதான மூர்த்திகள் 4 அடி உயரம் 16 அடி நீளமான ஓர் கல் மேடையின் பேரில் ஸ்தாபிக்கப் பெற்றுள்ளனர். இம்மேடைக்கு 'ரத்னவேதி' என்று பெயர். இவ்வேதியின் மூன்று பக்கங்களிலும் நாலடி அகலமான சந்திருக்கிறது. யாத்திரீகர் இதன் மூலம் ஜகன்னாதனைப் பிரதக்ஷிணம் செய்வர். ரத்னவேதியின் மேல் வடக்கில் 6 அடி உயரமான ஸுதர்சன சக்ர மிருக்கிறது. ஸுதர்சன சக்ரத்துக்குத் தெற்கில் ஸ்ரீஜகன்னாதன், ஸுபத்ரை, பலபத்ரனின் மூர்த்திகள் நின்றவண்ண மிருக்கின்றனர். ஜகன்னாதனினொரு பக்கத்தில் லக்ஷ்மியும், இன்னொரு பக்கத்தில் ஸத்யபாமையும், எதிரே இந்த்ரத்யும்ன ராஜனின் உலோகப் பிரதிமையு முண்டு. பலபத்ரன் பிரதிமை 6 அடி உயரமாயும் வெண்மையாயு மிருக்கின்றது. ஜகன்னாதர் 5 அடி உயரமாய் (ச்யாம) நீல வர்ணமாயுள்ளனர். சுபத்ரையின் பிரதிமை 4 அடி உயரமாய் மஞ்சள் வர்ணமானது. மூன்று மூர்த்திகளும் மரத்தாலாயவை. இவை பெரிதாயிருப்பினும் பார்க்க விசேஷ அழகாயில்லை. இதைப்பற்றி இவ்விதமான கதையிருக்கிறது.—"பூர்வத்தில் ஒருகாலத்தில் சமுத்திரத்தில் மரத்துண்டுகள் மிதந்து வந்தன. அப்போது இங்கு அரசனின் கனவில் கடவுள் தோன்றி, "நீ அம்மரத்துண்டுகளைக் கொண்டு

என் மூர்த்தியைச் செய்வித்து ஸ்தாபி" எனச் சொன்னார். அவ்வேலைக்காக விச்வகர்மா தச்சவேஷம்பூண்டு வந்து "ஹே ராஜன்! நான் மூர்த்திகளைத் தயார் செய்கிறேன். அதற்கு 30 நாள் அவகாசம் வேண்டும். அது முடியும் வரை நான் வேலை செய்யும் கர்ப்ப கிருஹத்தின் கதவுகளை மூடியே யிருக்க வேண்டும்" என்றான். இது முடிய இன்னம் ஓரிரண்டு நாளிருக்கையிலேயே உள்ளே வேலை யெம்மட்டிலாகி யிருக்கிறதெனப் பார்க்க வேண்டுமென்று அரசன் கதவைத்திறந்தான். அப்போது மூர்த்தி தயா ராய்க் கை, கால், கண் மூக்குக் கண்களை மட்டும் செதுக்க வேண்டி யிருந்தது. கதவு திறக்கப் பட்டமையால் வேலை அப்படியே நின்றுவிட்டது. அதனால் இம் மூர்த்திகள் மரமுண்டங்களைப் போன்றிருக்கின்றன. இப்போதும் 36 வருடங்களுக் கொருமுறை இரண்டு ஆஷாட மாதங்கள் (ஆடி) வரும்போது மூன்று மரத் துண்டுகள் சமுத்திரத்தில் மிதந்து வருகின்றனவாம். அவை களைக்கொண்டு புது மூர்த்திகளை அவ்விதமே தயாரித்து பழைய மூர்த்திகளிடையில் ஸ்தாபிப்பார்கள். அப்போது பழைய மூர்த்திகளின் நடுவிலுள்ள ஒரு வஸ்துவைப் புது மூர்த்திகளிலிடுவார்களாம். இம்மூர்த்திகளைச் செய்வோரும், ஸ்தாபிப்போரும், அக்காரியத்தில் முக்ய பாகம் வஹிப் போரும் காரியமானபின் சீக்கிரத்திலேயே பரலோகமடைவ ரெனச் சொல்வர். ஜகன்னாதமூர்த்தி வெளியில் பார்வைக்கு இவ்விதமிருப்பினும் உள்ளே சாலக்ராமமிருக்கிறது.— இங்கு மூர்த்திகளுக்கு எப்போதும் பல சமயங்களில் ஆரதி யலங்காரம், அவகாசாலங்காரம், ப்ரஹராலங்காரம், சந்தன அலங்காரம், ச்ருங்காராலங்காரம், தாமோதராலங்காரம்,



47. ஸ்ரீஜகன்னாதராலய மஹாத்வாரம்.



48. ஸ்ரீ ஜகன்னாதர் கோயில் காட்சி, பூரி.

வாமனாலங்காரம், பௌத்தாலங்காரம், கணேசாலங்காரம், முதலாய வலங்காரங்களைச் செய்வர். மூர்த்திகளையலங்காரம் செய்தபின்பு திரையை நீக்குவார்கள். அப்போது யாத்திரீகர் தரிசனம் செய்யலாம். பகல் இரண்டாந்தருவாயிலும் இரவிலும் யாத்திரீகர் ரத்னவேதிக்குள் சென்று பகவத் தரிசனம் செய்ய அவகாசமகப்படும். மற்ற வேளைகளில் யாத்திரீகர் ஜகமோஹனத்திலிருந்தே தரிசிக்கவேண்டும். இவ்வேளைகளில் ரத்னவேதியின் சமீபத்திலிருந்து ஸேவிக்க வேண்டுமாயின் 8 அணா காணிக்கையும் ஒரு ரூபாய் வேறு சிலவுக்காகவும் கொடுக்கவேண்டும். ஜகமோஹனம்.—விமானஸ்தானத்துக் கெதிரிலுள்ளதிது. இது 120 அடி உயரம் 80 அடி அகல நீளங்கொண்டது. இதற்கு மூன்று த்வாரங்களிருக்கின்றன. யாத்திரீகர் இங்குநின்றுகொண்டு தரிசனம் செய்வர். ந்ருத்ய மந்திரம்.—ஜகமோஹனத்தைச் சார்ந்ததாய்க் கிழக்கே ந்ருத்ய மந்திரமிருக்கின்றது. இது உள்ளே 69 அடி நீளம் 72 அடி அகலமானது. இதன் மேற்குத்வாரத்தில் ஜயவிஜயரின் விக்ரஹங்களிருக்கின்றன. கிழக்கே கம்பமொன்றிருக்கிறது. அதன்மேல் கருட மூர்த்தியுண்டு. இங்கு நடனம், வாத்யகோஷ முதலானவை நடப்பதாலிதற்கிப்பெயர் வந்தது. போக மந்திரம்.—ந்ருத்யமந்திரத்துக்குக் கிழக்கில் 120 அடி உயரம் 60 அடி சதுரமாய், அடியிலிருந்து மேல்வரை ஆயிரக் கணக்கான விக்ரஹங்களுள்ளதான கட்டடமே போக மந்திரமாம். இதனை 15ம் நூற்றாண்டில் புருஷோத்தம தேவராஜன் கட்டுவித்தானெனச் சிலரும், வேறு சிலர் 18ம் நூற்றாண்டிறாரம்பத்தில் மராட்டியர் கோணார்க்க மந்திரத்தின் கற்களைத் தருவித்து, லக்ஷக்கணக்கான ரூபாய் செலவில் கட்டு

வித்தனரெனவும் சொல்வர். இதற்குச் சமீபமாய் மடைப் பள்ளியிருக்கிறது. போக பதார்த்தங்களை அங்கு செய்து போக மந்திரத்திலிடுவார்கள். மடைப்பள்ளியில் நூற்றுக் கணக்கான அடுப்புகளைப் படிகளைப்போல் கட்டியிருக்கின்றனர். ஒவ்வொரு படியின்மேல் ஒவ்வொரு பானையாக வரிசையாய் எவ்வேழு பானைகளைச் சமைக்கவைத்து எல்லாப்பக் கத்துக்கும் தீ சமமாய்ப் பரவும் வண்ணம் பார்த்துக் கொள்வர். மேல் பானை வெந்தபோது கீழ்ப்பானையிலும் சாதம் பக்குவமா யிருக்குமென எல்லாவற்றையும் அப்போது இறக்குவார்கள். தீ எல்லாப் பக்கங்களுக்கும் சரியாகச் செல்வதனு லிவ்விதமாகும். மடைப்பள்ளிக்குள் ஒருவரையும் அனுமதிக்க மாட்டார்கள். இங்கு பிரஸாதத்தை மடி, இல்லை யென்ப தில்லாமல் எல்லோரும் கொள்வார்கள். ஜகன்னுத ராலயத்தில் ஒரு ஆலமர மிருக்கின்றது. அதற்குச் சமீபமாய் முக்திமண்டப மிருக்கிறது. அங்கு பண்டிதர்கள் சேர்ந்து பூஜை, பாடம், சாஸ்த்ரார்த்த வாத விவாதங்களைச் செய்வர். அக்ஷய வடத்துக்கருகில் பிரளயகால விஷ்ணுவின் பாலமூர்த்தி யிருக்கிறது. இதற்குப் பாலமுகுந்த னென்ற பெயர். அதற்குச் சமீபமாய் ரோஹிணி குண்டமென்ற சிறிய குள மிருக்கிறது. அதற்குப் பக்கத்தில் மிகப் பிராசீன மென்னப்பெற்ற, தாந்த்ரிகர்களுக்கு முக்யமான விமலாதேவியி னுலயமுளது. இவ்விமலா'தேவியே ஜகன்னுத புரியின் முக்ய தேவதை என்றும் ஜகன்னுதன் க்ஷேத்ரபாலனென வும் தாந்த்ரீகர் சொல்வர். இங்கு கணேசன், தேவராஜ மாதவன், மங்களாதேவி லக்ஷ்மி, கர்மாபாய், தர்மராஜன், பாதாளேச்வரன், சிவன், சூர்யன், அனுமான், ந்ருஸிம்மன்

காக முதலாய தேவர்களும், அவர்களின் கோயில்களு முள்ளன. ஸ்ரீஜகன்னாதராலயத்தில் தினம் காலை மாலைகளில் நடக்கும் ஸேவை, போகங்கள் பார்க்க வேண்டியவை. தவிர ஆஷாட (ஆடி) சுத்த (சுக்ல) துவிதியை முதல் நடக்கும் ரதோற்சவம் மஹத்தானதாம். அப்போது ஸ்ரீஜகன்னாதன் தேரிழுக்க 4,200 கூலிகள் வருவர். வருடத்திற்கெல்லாம் அக்கூலிகளுக்கு இஃதொரே வேலையாயினும் இதற்காக அவர்களுக்கு இனாம் நிலங்கள் விடப்பட்டுள்ளன. யாத்திரீகர் ஜகன்னாத தரிசனம், பிரஸாத மானபின்பு மார்க்கண்டேய குளம், சந்தணஸரோவரம், இந்த்ரத்யும்ன குளம், லோகநாத மஹாதேவ மந்திரம், ச்வேத கங்கா குண்டம், சக்ரதீர்த்தம், ஸ்வர்க்கத்வாரம், மலூகதாஸ ஆச்ரமம், ஜனகபுரி என்ற தீர்த்தஸ்தானங்களைத் தரிசிக்கலாம்.

ஜகன்னாதபுரி யாத்திரையை முடித்துக் கொண்டு திரும்பும் போதோ அல்லது அங்கு செல்லும்போதோ வழியிலேயே பூரியிலிருந்து 20 மைலிலுள்ள 'சாகி கோபால'மென்ற ஸ்டேஷனிலிறங்க வேண்டும். இங்கு கோயிலில் ஸ்ரீக்ருஷ்ணன், ராதையின் அழகிய மூர்த்திகளுண்டு. இக்கோயிலைத்தவிர வேறு தேவர்களினாலயங்களு மிங்குண்டு.

**சாக்ஷீ கோபாலம் கோணார்க்க.**

ஸ்ரீஜகன்னாதபுரியி லிருந்து வடகிழக்கில் 18 மைல் தூரத்திலும், சமுத்திரக் கரையிலிருந்து 2 மைல் தூரத்திலும் ஸ்ரீசூரியநாராயண தீர்த்த மென்னப்பட்ட கோணார்க்க (கோனரக) மென்ற ஸ்தல மிருக்கிறது. அங்கு செல்ல வண்டி, குதிரை, மோட்டார் வசதி யுண்டு. அங்கு போகும் யாத்திரீகர் தமக்கு வேண்டிய ஆஹாரத்தை

ஜகன்னாதத்திலிருந்தே கொண்டு செல்வர். கோணார்க்கத்தில் 'சந்த்ரபாகை' யென்ற சிற்றாறிருக்கிறது. இங்கு 13ம் நூற்றாண்டில் ராஜா நரஸிம்மதேவனால் கட்டப்பெற்ற சூர்யபகவானின் விசித்ரமும் பிரசித்தமுமான புராதன ஆலயமிருக்கின்றது. இவ்வாலயச் சிகரம் இப்போது விழுந்திருக்கிறது. இப்போதுள்ள பாகம் 90 அடி சதுரமாய் 124 அடி உயரமாயிருக்கிறது. கோயிற் சுவர் 60 அடி உயரமானது. இதன் சிகரம் உயரமாயிருப்பதால் இரவில் கடலில் சஞ்சரிக்கும் கப்பல்களுக்கு வழிகாட்டியான கலங்கரை விளக்கத்தையங்கு கட்டியிருக்கின்றனர். இக்கோயிலுக்கு முன்பிருந்த 16 மூலை 'அருணஸ்தம்பத்தை' மராட்டியர் ஜகன்னாதம் கொண்டு சென்றனரென முன்னமே சொல்லப்பட்டுள்ளது. ப்ராசீன காலத்தில் இந்த க்ஷேத்திரம் மைத்ராவனமென்ற பெயரோடும் விஷ்ணுவின் சதுராயுதங்களிலொன்றான பத்ம க்ஷேத்திரமென்ற பெயரோடும் பிரசித்தியாயிருந்தது. பூர்வத்தில் இங்கு க்ருஷ்ணனின் பந்துவான ஸாம்பனென்பான் வெகு காலம் நாராயணார்ச்சனையைச் செய்துவந்தனெனச் சொல்லுகின்றனர். இதனைப் பார்த்துக்கொண்டு தக்ஷிணதேச யாத்திரீகர் பூரி திரும்பி அங்கிருந்து தம்மூர் செல்வது வழக்கம்.

இத்துடன் வட-இந்திய யாத்திரையை நிறுத்தி, இனி முன்னால் தென்னிந்தியா யாத்திரையைப் பற்றி இன்னொரு பாகத்திலெழுதி நாட்டன்பர்கள் முன்னிடலாமென்பதாகக் கொண்டு, இவ்விதம் ப்ரார்த்திக்கின்றேன்.

सर्वे च सुखिनः सन्तुसर्वेसन्तु निरामया : ।
सर्वे भद्राणि पश्यन्तु माकश्चिद्दुःखभाग्भवेत ॥

# அனுபந்தம்

பன்னிரு ஜ்யோதிர் லிங்கங்கள்:—(1) ஸோமநாதர் (சௌராஷ்ட்ரம்) காதேவாருக்கு தக்ஷிணத்தில், வேராவள பந்தரிலிருந்து கிழக்கே 4 மைலிலுள்ளது. (2) மல்லிகார்ஜுனர்— எம். எஸ். எம். ரயில்வே நந்தியால் ஸ்டேஷனிலிறங்கி 32 மைலிலுள்ள ஆத்மகூருக்கு பஸ்ஸில் போய் அங்கிருந்து 32 மைல் நடந்து செல்லவேண்டும் (ஸ்ரீசைல க்ஷேத்ரம்). (3) மஹாகாளேச்வரர்.— உஜ்ஜயினிலுள்ளது. (4) ஓங்கார அமலேச்வரர்.—ஓங்கார மாந்தாத பி. பி. ஸி. ஐ. ரயில்வேயின் சிறு பாதையில் உஜ்ஜயினி-காண்டவா மார்க்கத்திலுள்ள மோரடக்கா ஸ்டேஷனிலிறங்கி அங்கிருந்து 10 மைல் தூரத்திலுள்ள நர்மதைக்கரையின் இக்கோயிலுக்குச் செல்லவேண்டும். ஸ்டேஷனில் பண்டாக்களும் வண்டிகளுமுண்டு. (5) பரளி வைஜநாதர்.—கோதாவரி மெயிலில் பானமாடத்திலிருந்து புறப்பட்டு பரபணி ஸ்டேஷனிலிறங்கி அங்கிருந்து 12 கோச தூரம் தெற்கே சென்று இதனைத் தரிசிக்கவேண்டும். (6) பீமாசங்கரர்.— ஜி. ஐ. பி. ரயில்வேயில் நேரளத்திலிருந்து 8 கோச தூரத்திலுள்ள காண்டஸத்துக்குப் போய் அங்கிருந்து 4 கோசம் மலைமேலேறிப் போகவேண்டும். (7) ராமேச்வரம்.—தென்னிந்தியாவிலுள்ள இதனைத் தெரியாதவர்களில்லை. (8) நாகநாதர்.—கோதாவரி-வேலிரயிலில் சௌண்டி என்ற ஸ்டேஷனுக்கு மேற்கே 14 கோச தூரத்திலுள்ளது. (9) விச்வநாதர்.—காசியிலுள்ள இதனைத் தெரியாதாரார்? (10) த்ரியம்பகேச்வரர்.—நாஸிக்குக்கு மேற்கே 20 மைல் தூரத்திலுள்ளது. (11) கேதாரேச்வரர்.— ஹிமாலயத்தில். (12) க்ருஷ்ணேச்வரர்.—கோதாவரி-வேலி ரயிலில் தௌலதாபாத் ஸ்டேஷனிலிறங்கி 10 மைல் தூரத்திலுள்ள வெருள குகைகளைக் கடந்து முன் செல்லவேண்டும். இங்கு ஆங்கில நாணயம் செலாவணியிலிருக்கிறது. நைஜாம் நாணயமும் செல்லும்.

ஸப்தபுரிகள்.—(1) அயோத்தி, (2) மதுரை (வட), (3) மாயை (ஹரித்வாரம்), (4) காஞ்சி, (5) அவந்திகா (உஜ்ஜயினி), (6) பூரி (ஜகன்னாதம்), (7) த்வாராவதி (த்வாரகை).

அஷ்டவினாயகர்.— ஸ்வஸ்தி ஸ்ரீக₃ணநாயகோ க₃ஜமுகோ₂ (1) மோரேச்வர: ஸித்தி₄தோ₃ (2) ப₃ல்லாளோ (3) முருடே₃வினாயகா (4) மடே₄ சிந்தாமணி: (5) ஸ்தை₂வரே| லேண்யாத்₃ரௌ கி₃ரிஜாத்மக (6) ஸ்து வரத₃ம் விக்₄னேச்வரோ (7) ஓஜ₂ரே| க்₃ராமோராஞ்ஜண ஸம்ஸ்தி₂தோ க₃ணபதி: (8) குர்யாத்ஸத₃ா மங்க₃ளம்.

நான்குதாமங்கள்.—(1) பதரிநாராயணம், (2) துவாரகை, (3) ஜகன்னாதம், (4) ராமேச்வரம்.

த்ரிஸ்தளி.—ப்ரயாகை, காசி, ப்ரயாகை.

பஞ்ச மஹாஸரோவரங்கள்.—(1) பிந்து ஸரோவரம்.—பி. பி. ஸி. ஐ. ரயிலின் ஸித்தபுர ஸ்டேஷனுக்கு $1\frac{1}{2}$ மைல் தூரத்திலுள்ளது. இதற்குப் பக்கத்தில் கபில முனிவரின் ஆச்ரமமிருக்கின்றது. (2) நாராயண ஸரோவரம்.—(கச்) மாண்டவி பந்தரிலிருந்து 40 கோச தூரத்தில் மேற்கே சிந்த் ப்ராந்தியத்துக்குச் சமீபமாயுள்ளது. (3) பம்பா ஸரோவரம்.—எம். எஸ். எம். ரயில்வே ஹொஸ்பேட் ஸ்டேஷனிலிருந்து 10 மைலில் ஹம்பியிருக்கிறது. அங்கிருந்து 5 மைலில் பம்பாஸரஸ், அஞ்சனி பர்வதங்களிருக்கின்றன. (4) புஷ்கரம். ஆஜ்மீருக்கு மேற்கே 6 மைல் தூரத்திலுள்ளது. (5) மானஸ ஸரோவரம்.— ஹிமாலயாவின் வடக்கேயிருக்கின்றது.

பஞ்சகேதாரம்.—(1) கேதா₃ரம் (2) மமத₃ம் (3) துங்க₃ம் (4) ருத்₃ரம் (5) கோ₃மேச்வரம் ததா₂| கேதா₃ர பஞ்சகம் நித்யம் ஸ்மரேத் பாதக நாசகம்| எல்லாம் கேதார-பதரி வழியிலிருக்கின்றன.

பஞ்சபதரி.—(1) யோக₃ (2) ராஜ (3) ஆதி₃ (4) வ்ருத்த₄ (5) த்யானம். பதரிநாராயண மார்க்கத்திலுள்ளன.

பஞ்சப்ரயாகை.—(1) நந்த (2) ஸ்கந்த (3) ருத்ர (4) தேவேந்த்ர (5) கர்ண. எல்லாம் பதரிநாராயண மார்க்கத்திலிருப்பவை.

பஞ்சமஹாதத்வம்.—(1) ப்ருதிவி-கஞ்சி (2) அப்பு-ஜம்புகேச்வரம் (2) தேயு-அருணாசலம். (4) வாயு-காளஹஸ்தி. (5) ஆகாயம்-சிதம்பரம்.

சதுராயுத க்ஷேத்திரங்கள்.—(1) சங்கக்ஷேத்ரம்-ஜகன்னாதம்-கிழக்கு சமுத்திரக் கரையில் பிரசித்தியாயுள்ளது. (2) சக்ரம்-புவனேச்வரம், கல்கத்தா குர்தா ரோட் ஸ்டேஷன்களுக்கு மத்தியிலுள்ளது. (3) கதை-ஜஜபுரம் ஜகன்னாதவழியிலுள்ளது. (4) பத்மம்-மைத்ராவண கோணார்க்க. ஜகன்னாதத்திலிருந்து 20 மைல்.

தேவியின் மூன்றறைப் பீடங்கள்.—(1) துளஜாபுரம்-ஷோலாபூரிலிருந்து 9 கோசத்திலிருக்கின்றது. (2) கோல்ஹாபுரம்.—மீரஜ்லிருந்து (எம். எஸ். எம்.) ரயில் போகிறது. (3) மாஹூரம்.—மாதாபுரம், ஜி. ஐ. பி. ரயிலில் தாரவ்ஹா ஸ்டேஷனிலிருந்து 18 கோச தூரத்திலுள்ளது. (4) ஸப்தச்ருங்கி.—(அரை-மாத்திரை) நாஸிக்கிலிருந்து 18 மைலிலுள்ள குன்றின்மேல். சிலர் ஹிமாலயத்திலுள்ள காமரூப காமாக்ஷியே அரை-மாத்திரை ஸ்தானமென்பர்.

தத்தக்ஷேத்திரங்கள்.—ஸ்ரீ தத்தாத்ரேயரின் ஜனனம் சித்ரகூட பர்வதத்தில் அத்ரிமுனிவரின் ஆச்ரமத்தில். (1) காணகாபுரம்.—புனாவிலிருந்து ராய்ச்சூர் போகும் மார்க்கத்திலிருக்கின்றது. அங்கிருந்து ஊர் 7 மைலிலிருக்கின்றது. (2) நரஸோபவாடி.—மிரஜ்லிருந்து கொல்ஹாபூர் போகும்போது சிரோள ரோட் ஸ்டேஷனுக்கு 5 மைல் தூரத்திலுள்ளது. (3) ஔதும்பரி.—மிரஜ்லிருந்து புனா போகும்போது தாஸகாம் ஸ்டேஷனுக்கு மூன்று மைல் தூரத்தில் க்ருஷ்ணா நதிக்கரையிலிருக்கின்றது.